2883

T.N.L.A. Debates

Official Report

Vol XIII. No 3 & 4

15, 16th July, [illegible]

D
K1211, 31 N85
N85.13.3 & 4 i1
136425

678/86

வெளியீடு 20-3-1986

Issued 20—3—1986

2883

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜூலை 15, 1985 - தொகுதி XIII எண் 3

Monday, the 15th July 1985 - Volume XIII No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly, Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-00 காசுகள்]

[Price Rs. 3-00 paise

Y211,31 N85
N85-13-3 44
136425
சென்னை-600 008

உள்ளடக்கம்.

15-7-1985.

பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் 446-492

2. தகவல் கோரல் :

(அ) காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழா 491-492

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் 493

(இ) ரெயில் நிலையத்திலிருந்து உறுப்பினர்கள் விடுதிக்கு வர ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மறுப்பது 493-494

(ஈ) மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வழங்குதல் 494

(உ) தனியார், விளம்பரப் பலகைகளை அரசு மேற்கொள்ளுதல் 495

3. ஒத்திவைப்புத் தீர்மானம் :

சென்னை, பல்லாவரம் மலைப் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்து 495-504

4. அறிக்கை அளித்தல் :

(அ) விதி 111-இன் கீழ் போக்குவரத்துத்துறை அமைச்சரின் அறிக்கை 504-505

(ஆ) விதி 111-இன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை 514-515

(இ) விதி 111-இன் கீழ் கூட்டுறவுத்துறை அமைச்சரின் அறிக்கை 516

[1985 ஜூலை 15

தற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இடமும் அளிக்கப்பட்டு நடவடிக்கைகளில் இருப்பதாகத்தான் நான் அறிந்த வரை செய்தி. ஆனால், இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலில் அப்படி இல்லை என்று தெரிகிறது. நான் இதற்கு முந்தி கூட சட்டசபையில் இது குறித்து கேள்வி கேட்ட போது அப்படி ஒரு யோசனை இருப்பதாகத்தான் எனக்கு அறிவித்தார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப்பேட்டையில் இதுவரையில் பேரூராட்சியின் மூலமாக பேருந்து நிலையம் துவங்குவதாக ஏற்பாடுகள் இல்லை. ஆனால், அப்படி ஒரு யோசனை இருந்தது உண்மைதான். அருள்மிகு மந்திரபுரீஸ்வரர் திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் 1.70 ஏக்கர் நிலம் இதற்காக எடுக்கலாம் என்று அதைப் பார்வையிட்டார்கள். ஆகவே, நிலத்தை கையகப்படுத்துவதற்கான வேலைகள் முடிவு அடைந்ததற்குப் பிறகுதான், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப்பேட்டையில் இதற்கு முன்னதாகவே ஊர் கமிட்டி கூடி ஒரு இடத்தை இதற்காக தயார் பண்ணிக்கொடுத்தார்கள். அந்த இடம் சரியாக இல்லை என்றுதான் மறுபடியும் ஊர் எல்லாம் சேர்ந்து ஒற்றுமையோடு இப்போது புதியதாக ஒரு இடத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைத்தான் அதிகாரிகளும் தேர்ந்தெடுக்க ஆய்ந்து வருகிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், அந்த இடத்தைக் கொடுக்க கோவில் நிர்வாகமும் சம்மதித்து விட்டார்கள். எனவே, முத்துப்பேட்டையில் வாழக்கூடிய அந்த மக்கள் வெய்யிலினாலும், மழையினாலும், பேருந்துகளுக்காக நிற்கும் போது பாதிக்கப்படாமல் இருக்க, துரிதமாக ஒரு பேருந்து நிலையத்தை கட்ட ஏற்பாடு செய்வார்களா ? அதற்காக 7 இலட்சம் ரூபாய் கூட ஒதுக்கியிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். ஆகவே, அமைச்சர் அவர்கள், அப்படி ஏற்கெனவே ஏற்பாடுகள் இல்லாவிட்டாலும் கூட, இந்த ஆண்டிலாவது பேரூராட்சிகளுக்கு ஒதுக்கக்கூடிய விசேஷ நிதியிலிருந்து ஏற்பாடு செய்து, அந்தப் பகுதியில் பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தப்பட்டதற்குப் பிறகுதான், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தப் பேருந்து நிலையம் கட்டுவதற்கான நடவடிக்கை தொடங்க ஆய்வு செய்யப்பட்டு கட்டப்படும்.

1985 ஜூலை 15]

சேலம் மாவட்டத்தில் வேலை வாய்ப்புத் திட்டப் பணிகள்.

635—(*வினா எண். 182):— திரு. செ. செம்மலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சேலம் மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கென்று ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் (R.L.E.G.P.) எத்தனை தொகுதி வீடுகள் (Group Houses) கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டில் 1,560 வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக கட்டப்படுகின்ற வீடுகளைப் பொறுத்த வரையில் இது ஒரு கம்யூனிட்டி அசெட்ஸ் என்ற வகையில் இதற்கு நல்ல வரவேற்பு இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. சென்ற ஆண்டிலே எத்தனை வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது ஒரு யூனியனுக்கு 25 வீடுகள் தான் ஆண்டுக்காண்டு ஒதுக்கப்பட்டு கட்டப்படுகின்றன. அதை ஆண்டுக்காண்டு குறைந்தபட்சம் 100 வீடுகள் என்றாவது அதிகப்படுத்திக் கட்ட, அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற வீடுகள் ஆகும். மத்திய அரசுதான் இதற்குப் பண ஒதுக்கீடு செய்ய வேண்டும். மத்திய அரசு சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாகப் பணம் ஒதுக்கியிருக்கிறது. இந்த நிலையில் சென்ற ஆண்டு எடுத்த வேலைகளை முடிப்பதற்கே அந்தப் பணம் போதாத நிலையில் இருக்கிறது. இது குறித்து மத்திய அரசிடம் எழுதி தொகையை அதிகமாக்கித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதிகப் பணம் வந்தால்தான் ஒதுக்க முடியும். ஆனால், சென்ற ஆண்டு ஒதுக்கிய வேலைகளை முடிப்பதற்கே இந்த ஆண்டு ஒதுக்கிய பணம் போதாமல் இருக்கிறது.

[1985 ஜூலை 15

சென்னை மாநகராட்சி திரை அரங்கம் கட்டும் திட்டம்:

636—(*வினா எண். 1569):—திரு. சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி நிதி வருவாயை அதிகரிக்க மாநகராட்சி மூலம் திரை அரங்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் இப்பணிகள் துவக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : சென்னை மாநகராட்சியின் நிதி வருவாயைப் பெருக்குவதற்காக திரை அரங்கம் கட்டுவதற்கான செயற் குறிப்பினை சென்னை மாநகராட்சி அரசுக்கு அனுப்பியிருந்தது. இத் திட்டம் வர்த்தக ரீதியில் வெற்றியடைவது சாத்தியமல்ல என்று தமிழ்நாடு திரைப்பட அரங்கு கழகம் கருத்துத் தெரிவித்தது. அரசு இது குறித்து ஆழ்ந்து பரிசீலனை செய்தது. இதற் கிடையில், திரை அரங்கு கட்டுவதைவிட இலாபகரமானதாக அங்காடி மற்றும் அலுவலகத்திற்கான புதிய பன்மாடிக் கட்டிடம் கட்டலாம் என்றும், திரையரங்கு கட்டும் திட்டத்தினைக் கைவிட லாமென்றும் முடிவு செய்திருப்பதாக மாநகராட்சி தனி அதிகாரி அரசுக்குத் தெரிவித்துள்ளார். இதற்கான திட்டம் மாநகராட்சி யிடமிருந்து அரசுக்கு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, திரை அரங்கங்கள் கட்டுவதில்லையென்ற அரசின் கொள்கை முடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்குப் பதிலாக அங்காடிகள் கட்டப்படுமென்றும் தெரிவித்தார்கள். அந்த முடிவு வரவேற்கத்தக்கது தான். அப்படி கட்டப்படுகிற அங்காடிகள் எந்தெந்த பகுதிகளில் கட்டப்படுகின்றன என்ற செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ? திரை அரங்கங்கள் எந்தெந்தப் பகுதிகளில் கட்டப்படுவதாக இருந்ததோ அந்தப் பகுதிகளில் அங்காடிகளைக் கட்டுவதற்கு முடிவு எடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, திரை அரங்கங்கள் கட்டுவது சாந்தோம், கோடம்பாக்கம் பகுதி களில் கட்டுவதாக இருந்தது. ஆனால் புதிய பன்மாடிக் கட்டி டம் எந்த இடத்தில் கட்டலாம் என்பது இன்னும் முடிவு செய் யப்படவில்லை.

1985 ஜூலை 15]

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களில் நாம் இன்றைக்கு நடைபாதை அங்காடிகளை அகற்றி இருக்கிறோம். மாநகராட்சிக்குச் சொந்தமான பல இடங்கள், குறிப்பாக பார்க்குகள் போன்றவைகள் சரியான பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. ஆகவே பார்க்குகளின் காம்பவுண் டைச் சுற்றிலும் கடைகளைக் கட்டினால் மாநகராட்சியின் வருவாயையும் பெருக்கலாம், அதேநேரத்தில் அந்தப் பார்க்கு களையும் நல்லமுறையில் பராமரிப்பதற்கு வாய்ப்பு ஏற்படு மென்பதால், இதனை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பூங்காக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இடங்களில் பன்மாடிக் கட்டிடங்களைக் கட்டுவது பொருத்தமாக இருக்காது. பூங்காக் களைப் பராமரிப்பதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். சென்னை நகரத்தில் பல இடங்களில் பூங்காக்கள் பாழடைந் திருப்பதாகச் சொல்லப்படுவது உண்மை தான். அவற்றை பல தொழிலதிபர்களுக்குக் கொடுத்து பராமரிக்கச் சொல்லலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிற போது, அங்கே பன் மாடிக் கட்டிடத்தைக் கட்டுவது பொருத்தமாக இருக்காது.

குமரி மாவட்டத்தில் வேலை வாய்ப்பு திட்டப் பணிகள்.

637—(*வினா எண். 2870):—திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (N.R.E.P.) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (I.R.D.P.) தேசிய வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் (R.L.E.G.P.) ஆகியவைகளுக்கு 1984–85 ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு ?

(ஆ) நடப்பு ஆண்டுக்கு இதை அதிகப்படுத்தும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, (அ) 1984–85 இல் ஒதுக்கப்பட்ட தொகைகள் பின்வருமாறு :—

	(ரூபாய் இலட்சத்தில்.)
(1) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (N.R.E.P.)	164.91
(2) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (I.R.D.P.)	72.0
(3) ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் (R.L.E.G.P.)	40.39

[1985 ஜூலை 15

(ஆ) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்திற்கு மாத்திரம் 1985–86-இல் அதிக அளவு நிதி, அதாவது ரூ. 52.63 இலட்சம், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ரூ. 4.10 இலட்சம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ. 66.24 இலட்சம் மட்டுமே இம்மாவட்டத்திற்கு இவ்வாண்டில் ஒதுக்க முடிந்தது.

திரு. எஸ். எம். இராசரத்தினம் : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் 1984–85-ம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் போன்றவைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை சரிவர செலவழிக்கப் படாமல் ஊராட்சி ஒன்றியங்களால் திருப்பியனுப்பப்பட்டிருக் கிறதா ? அப்படி அனுப்பப்பட்டிருந்தால் அவர்களிடம் அதற் கான காரணம் கேட்டு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருப்பதால், ஊராட்சி ஒன்றியங்கள் சரிவர அந்தத் தொகையைச் செலவு செய்தார்களா என்பதற்கான விவரப் பட்டியல் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அந்தத் தகவலைத் தருகிறேன். அப்படி யாராவது செலவு செய்யாமல் திருப்பி அனுப்பியிருப்பார்களானால் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. எஸ். எம். இராசரத்தினம்: தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் வளர்ச்சியடையாத, வருமானம் இல்லாத குளச்சல் நகராட்சி, மற்றும் பராமரிப்பதற்கு எந்த வசதியும் இல்லாத பேரூராட்சிகளை பொறுத்தவரையில் இந்தத் திட்டங் களின் மூலமாக கூடுதல் நிதி ஒதுக்கீட்டைப் பெற வாய்ப்புகள் ஏதேனும் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு இந்தத் திட்டங்கள் பொருந்தாது. நகராட்சி களுக்கு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தான் பணம் ஒதுக்கப் படும். இந்தத் திட்டங்களின் கீழ் பேரூராட்சிகளுக்கு 10 சத வீதம் பணம் ஒதுக்கலாமென்று அந்த ஆண்டு முடிவு செய்யப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பணம் ஒதுக்கிய பிறகு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

1985 ஜூலை 15]

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த என். ஆர். இ.பி. திட்டத்தின் மூலமாகப் பணம் ஒதுக்கீடு செய்கிறபோது சிறிய ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரே தொகை, பெரிய ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரே தொகை என்று மாவட்ட அளவிலே ஒதுக்கி வருகிறார்கள். அதை மாற்றி ஊராட்சி ஒன்றியங்களில், இருக்கின்ற ஊராட்சி மன்றங்கள், அந்த ஊராட்சியினுடைய நிலப்பரப்பு இவைகளை எல்லாம் கணக்கில் எடுத்து, பெரிய ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதலாக தொகை ஒதுக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, மொத்தம் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும், சரியாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. ஆனால் அப்படி பகிர்ந்து அளிக்கப்பட்டது சரியில்லை என்றும், மத்திய அரசு அது தவறான காரியம் என்று சுட்டிக்காட்டியிருப்பதோடு மட்டுமின்றி, எப்படிப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தை கைட்லைன்களை அரசுக்குக் கொடுத்து இருக்கிறது. அதன் மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுடைய எண்ணிக்கையையும், தாழ்த்தப்பட்ட மக்களுடைய எண்ணிக்கையையும் கணக்கில் கொண்டுதான் பணத்தை பிரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் நமது அரசு எந்த ஊராட்சி ஒன்றியத்திற்கும் எந்தக் காரணத்தைக் கொண்டும், குறைந்தபட்சம் 5 லட்சத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்ற கணக்கில் வைத்து, மீதம் இருக்கிற பணத்தை மத்திய அரசு தந்திருக்கிற கைட்லைன்படி பிரிப்பதாக முடிவு எடுத்து இருக்கிறது.

கோபிச் செட்டி பாளையத்தில் வீடுகளுக்கு அங்கீகாரம்.

638—(*வினா எண் 1353):— திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட 2 செண்டுக்கு குறைவாக வீடு கட்டியுள்ளவர்களுக்கு நகராட்சி அங்கீகாரம் அளிக்க அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இல்லை.

[1985 ஜூலை 15

நாகநாதபுரம் நெசவாளர் பட்டறையிலிருந்து வெளிப்படும் நீர்.

639—(*வினா எண் 1815):— திரு. எஸ். பி. துரைராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

காரைக்குடி நாகநாதபுரம் நெசவாளர் பகுதியில் உள்ள சாயப்பட்டறையிலிருந்து வெளிவரும் கழிவுநீரால் ஏற்படும் சுகாதாரக் கேட்டைத் தடுக்க எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக காரைக்குடி நகராட்சியில் உள்ள நாகநாதபுரம் பகுதியில் நெசவாளர்களால் சாயப்பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன. சாயப்பட்டறைகளிலிருந்து வெளி வரும் சாயம் கலக்கப்பட்ட கழிவுநீர் அந்தந்தத் தெருக்களிலுள்ள பொது சிமெண்ட் வாய்க்கால்களின் மூலம் வெளியேற்றப்படு கிறது. மேற்கூறப்பட்ட கழிவுநீர் குடியிருப்பு பகுதிகளில் எங்கும் தேங்கி நிற்கவோ குடிநீருக்குக் கெடுதல் விளைவிப்பதாக வோ இல்லை. மேலும் மேற்காண் பகுதிகளில் குழாய்களின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்கூறப்பட்ட சாயப்பட்டரைகளின் மூலமாக பாதிப்புகள் ஏற்பட்டதாக புகார்கள் ஏதும் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை.

நெல்லிக்குப்பத்தில் தன்னிறைவுத் திட்டம்.

640—(வினா எண் 3767)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் நகராட்சிக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) மேலும் இந்நகராட்சிக்குத் தொகை ஒதுக்க உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே,

(அ) ரூ. 16 இலட்சம்.

(ஆ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

1985 ஜூலை 15]

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் பேரூராட்சியாக இருந்து, 1–10–66 ஆம் ஆண்டு நகராட்சியாக மாறிய ஒரு ஊர்—அந்தப் பகுதி எந்தவித சூழ்நிலையிலும், முன்னேற்றம் அடையவில்லை என் பதை தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்டுவதோடு அங்கே கழிவு நீரை அகற்றுவதற்கு வேண்டிய வண்டியும், மலஜலங்களை எடுப்பதற்கு வேண்டிய வண்டியும் இல்லாத ஒரு துர்பாக்கியமான நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு நகராட்சி அது. அந்த நகராட்சியை மேலும் சீர்ப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசின் மூலமாக வருகின்ற அல்லது நடக்கின்ற நிதியாண்டுகளில் நிதி ஒதுக்கித் தருவாரா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதற்குத்தான் பதில் சொன்னேன். நெல்லிக்குப்பம் நகராட்சி நிதி நிலை சரியில்லை என்பது அரசுக் குத் தெரியும். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப் பினர்கள், வந்ததற்குப் பிறகு, புதிய நகராட்சி அமைந்ததற்குப் பிறகு, அந்த நகராட்சியின் நிதிநிலையை சரி செய்து கொள் வார்கள் என்று நம்புகிறேன்.

சேரன்மாதேவி ஒன்றியப் பகுதியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி

641—(*வினா எண் 1524)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவி ஒன்றியம் பகுதியைச் சார்ந்த பொதுமக்களிடமிருந்து பெண்கள் மேல் நிலைப்பள்ளி வேண்டுமென்று கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் தொகுதியாக இருக்கின்ற அந்த சேரன்மாதேவித்

தொகுதியில் 7 பேரூராட்சி மன்றங்கள் வரிசையாக இருக்கின்றன. அதிலே பெண்களுக்கு என்று மேல்நிலைப் பள்ளி இல்லாத சூழ்நிலையில் அங்கேயுள்ள பெண்கள் எல்லாம் வெகு தூரம் சென்று மேல்நிலைக் கல்வியைப் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அதைக் கருத்திலே கொண்டு அங்கேயுள்ள பெண்களுக்கு ஒரு மேல்நிலைப் பள்ளியை அமைப்பதற்கு வருகின்ற ஆண்டுகளிலே அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவிப் பகுதியில் ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து பயிலும் அரசினர் மேல்நிலைப் பள்ளி மட்டும் உள்ளது. மகளிர் உயர்நிலைப்பள்ளி எதுவும் இல்லை. உயர்நிலைப் பள்ளிகள் தான் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப் படுகின்றன. இந்தத் தொகுதியில் பெண்களுக்கு என உயர்நிலைப் பள்ளி துவங்கப்பட்ட உடன் மேல்நிலைப்பள்ளி துவங்குவதற்கு பரிசீலிக்கப்படும். உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த உரிய படிவத்தில் விண்ணப்பம் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். பொதுமக்கள் பங்குத்தொகை கட்டவேண்டும். அதற்கான முறையான விண்ணப்பங்கள் வந்தால் பள்ளிக் கல்வி இயக்குநர் பரிசீலித்துப் பரிந்துரைப்பார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய கருத்து என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பணத்தைக் கட்டிவிடுகிறோம். இந்த ஆண்டே கொடுத்துவிடுங்கள்.

தனியார் பொறியியல் கல்லூரிகளில் அனுமதி.

642—(*வினா எண் 1910) : டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பொறியியற் கல்லூரிகளில் வெளிநாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்களா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டில் எத்தனை மாணவர்கள் இதனால் பயன் பெற்றார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இந்திய அரசு ஒதுக்கீடு மற்றும் இலங்கை இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு தான் ஒதுக்கீடு இடங்கள் தவிர பிற இடங்களில் வெளிநாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்திய அரசுக்கென 28 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் சில வெளிநாட்டு மாணவர்கள் இந்திய அரசால் அனுப்பப் பெறுவர். இலங்கைத் தமிழ் மாணவர்களுக்காக சென்ற ஆண்டும் இவ்வாண்டும் 40 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

திருப்பூர் நகரில் விளையாட்டு அரங்கம்.

643—(*வினா எண் 2398): திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தில் ஸ்டேடியம் கட்டும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மற்றும் மாநில அளவில் பலதரப்பட்ட விளையாட்டுக்கள் திருப்பூர் நகரத்தில் அடிக்கடி நடைபெறுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். தேசிய அளவிலும் மாநில அளவிலும் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான இட வசதி திருப்பூர் நகரத்தில் இதுவரையில் இல்லை. எனவே நிலைமையின் அவசியத்தை கணக்கில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேடியத்தை அங்கே உருவாக்குவதற்கான திட்டத்தை இனிமேற்கொண்டாவது பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைமை இடங்களில் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டத்தின் அடிப்படையில் மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. திருப்பூர் நகரம் மாவட்ட தலைமை இடம் இல்லை. ஆதலால் இங்கே விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை. மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்ட மாநில அரசு மத்திய அரசு மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டு அரங்கம் கட்டுகிற பணி விளையாட்டு வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு

[1985 ஜூலை 15

இருப்பதால் இனிமேற்கொண்டு கட்ட இருக்கின்ற விளையாட்டு அரங்கங்கள் பற்றிய முடிவை விளையாட்டு வளர்ச்சி வாரியம் எடுக்கும்.

திரு. கு. ஈப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில், கோவைக்கு அடுத்தப்படியாக பெரிய நகரமாக விளங்குவது திருப்பூர் ஆகும். திருப்பூர் நகரம் மிக வேகமாக வளர்ந்து வருகிற ஒரு கமர்ஷியல் சென்டர் என்ற முறையிலேயும், விளையாட்டு ஆர்வம் மிக அதிகமாக இருக்கிற பகுதி என்ற முறையிலேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விசேஷ கவனம் செலுத்தி முன்முயற்சி எடுத்து விரைவாக அங்கே ஒரு ஸ்டேடியத்தை உருவாக்குவதற்கான திட்டத்தை மேற்கொள்வார்களா என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் விளையாட்டுக்கு ஓரளவுக்கு ஆர்வம் எடுத்துக் கொண்டு செயல்படுகிறார்கள் என்பது உண்மை தான். ஆகவே, விளையாட்டு அரங்கம் வேண்டும் என்ற இந்த கோரிக்கையை விளையாட்டு வளர்ச்சி வாரியத்திடம் அவர்கள் சமர்ப்பிப்பார்களானால் அவர்கள் பரிசீலிப்பார்கள். அரசு என்ன உதவி செய்ய வேண்டுமோ அதைச் செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பொதுவாக விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு இடங்களிலிருந்து வந்து கொண்டு இருக்கின்றன. விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று சொல்லுகின்ற அளவுக்கு நாம் காட்டுகிற ஆர்வம் விளையாட்டு உணர்வை வளர்ப்பதற்கு அதில் பலரை ஈடுபடுத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வது போதுமானதாக இல்லை. ஆகவே, அது குறித்தும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைக்கப் பெற்ற வினாக்கள் 538 முதல் 542 வரை தற்போது எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

கும்பகோணத்தில் விளையாட்டு அரங்கம்.

538—(*வினா எண். 1475) : திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம் எதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும்?

1985 ஜூலை 15]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திண்டிவனம் நகராட்சியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

539—(*வினா எண் 1980)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகராட்சியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே : (அ) மற்றும் (ஆ) திண்டிவனம் நகராட்சியில் உள்ள முருங்கப்பாக்கம், நகராட்சி நடுநிலைப் பள்ளியை அரசு பெண்கள் உயர் நிலைப்பள்ளியாக உயர்த்த வேண்டும் என்ற கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வில் உள்ளது.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்ற காலம் மாறி சட்டங்கள் செய்யவும் பட்டங்கள் பெறுவதும் பெண்கள் என்ற நிலைமை வந்து இருக்கிறது. இந்த ஆண்டு பெண்கள் உயர்நிலைப்பள்ளி அங்கே துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவு போடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—20).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குக் கல்வி தேவை என்பதிலே கருத்து வேறுபாடு யாருக்கும் இல்லை. பெண்களுக்கு கல்வி தருவதிலே இந்த அரசு இதற்கு முந்தைய நிலையை விட அதிகமான அளவுக்கு ஆர்வம் காட்டி, பல்வேறு காரியங்களைச் செய்து வருகிறது. இப்போது இருக்கிற பிரச்சினை, முறையாக அவர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்களா, முறையாக கட்ட வேண்டிய பணத்தைக் கட்டி இருக்கிறார்களா என்பது தான்.

பொதுவாக இந்த அரசைப் பொறுத்த வரையில், மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் புதிய பள்ளிகள் துவங்குவதற்கு முன்னுரிமை தந்து செயல்பட்டு வருகிறோம். அங்கே ஜனத்தொகை வளர்ந்துக் கொண்டே இருக்கிற காரணத்தால்,

[[1985 ஜூலை 15

மாணவர்கள் அதிகமாக இருப்பார்கள் என்ற அடிப்படையில் கடந்த ஆண்டுகளில் செய்து வருகிறோம். இந்த பள்ளியைப் பொறுத்தவரையில், உரிய தொகை கட்டி, முறையாக விண்ணப்பித்து இருக்கிறார்களா என்று சரியாகத் தெரியவில்லை. அந்த விவரம் இங்கே இப்போது இல்லை.

திறமையுள்ள மாணவர்களுக்கான உதவித் தொகை.

540—(*வினா எண் 2912) : திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு திறமையின் அடிப்படையில் (Merit Scholourship) வழங்கும் உதவித் தொகைக்காக அந்த மாணவர்களின் பெற்றோர்கள் ஆண்டு வருமான உச்சவரம்பை உயர்த்த அரசிடம் கருத்துரு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வருமான உச்சவரம்பு எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத் தரப்படுகிறதா ? அல்லது பார்வர்டு, பேக்வோர்டு என்று பாகுபாடோடு தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தகுதி அடிப்படையிலே தரப்படுகிற இந்த உதவித் தொகையானது, ஏழை மாணவர்கள் என்கிற அடிப்படையில், அவர்களுக்குள் திறமையாக இருக்கிற மாணவர்களுக்குத் தருவது ஆகும். இது பள்ளி இறுதி வகுப்பு, மெட்ரிகுலேஷன், மேல் நிலைப்பள்ளி, இந்தியக் கல்விச் சான்றிதழ் ஆகிய அந்த வகுப்புக்களுக்கான மாணவர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்படுகிறது. கல்லூரிகளைப் பொறுத்தவரையில், பட்ட மேற்படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கு படிக்க உதவித் தொகை அனுமதிக்க பெற்றோர்களுக்கு வருமான உச்சவரம்பு ஏதும் இல்லை. படிப்புதவித் திட்டம் மத்திய அரசின் திட்டமாகையால், ஆண்டு வருமான உச்சவரம்பை உயர்த்துவதோ, அல்லது இந்தத் திட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டுமானால், மத்திய அரசு தான் முடிவு செய்ய வேண்டும் என்று இங்கே விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருமான உச்சவரம்பின் மூலமாக 1984-85 ஆம் ஆண்டில் எத்தனை மாணவர்கள் பயன் அடைந்து

1985 ஜூலை 15]

இருக்கிறார்கள்? திறமையின் அடிப்படையில் எவ்வளவு மாணவர்கள், பயன் அடைந்துள்ளார்கள்? அகில இந்திய அளவில் ஏதேனும் சாதனை புரிந்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த விவரங்கள் இங்கே தரப்படவில்லை. தனியாக ஒரு கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

கோவை—ஈரோடு மின்சார இரயில் திட்டம்.

645—(*வினா எண் 2076) : திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும்—ஈரோட்டிற்கும் இடையில் மின்சார இரயில் விடும் செயற் குறிப்பு ஏதேனும் மத்திய அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நெடுஞ்சாலையில் கழிப்பிட வசதி.

646—(*வினா எண் 2289) : திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள தேசிய மாநில நெடுஞ்சாலைகளில் குறைந்தது 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு கழிப்பிடம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு செலவாகும் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளிலே கழிப்பிடம் கட்டுவதற்கு அரசிடம் எவ்வித ஆய்வும் இல்லை என்று அமைச்சர்

அவர்கள் தெரிவித்தார்கள். நம்முடைய இந்திய வரலாற்றைப் பார்த்தால் அசோகர் காலத்திலிருந்து வழி வழியாக வந்த அரசர்கள் எல்லாம் சாலை ஓரங்களிலே நடமாடுகிற மக்களுக்கு இளைப்பாறுவதற்கு, நிழல் தரும் மரங்களையும், அதே போல், சாலையினுடைய ஓரங்களிலே சத்திரம், சாவடிகளையும், தலைச் சுமை எடுத்துச் செல்பவர்களுக்கு ஒய்வு எடுப்பதற்காக, சுமை தாங்கி போன்ற பல காரியங்களை எல்லாம் செய்து இருக்கிறார்கள். ஆகவே, இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு நம்முடைய தமிழகத்தில் நடந்து செல்கிற, பயணம் செய்கிறவர்களுக்கு, குறைந்தது 100 கிலோ மீட்டர் என்ற தூரத்திற்காவது, கட்டணக் கழிப்பிடம் அல்லது கட்டணம் அல்லாத கழிப்பிடம் வசதி செய்தால் பெருவழிகளில் செல்வோருக்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு, இனிமேலாவது, ஆய்விலே எடுத்து, அதைச் செயல்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிறுவனங்கள் அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றன. எனவே, அப்படி இருக்கின்ற சூழ்நிலையில் நெடுஞ்சாலைத் துறை அதைச் செய்ய வேண்டும் என்ற நிலை இல்லை. அதற்குப் பதிலாக, இப்போது போக்குவரத்துக் கழகங்களுடைய சார்பாக 100 கிலோ மீட்டருக்கு ஒரு இடத்திலே மோட்டல்கள் அமைக்க வேண்டும் என்ற முடிவின்படி, முதல் கட்டமாக, 6 மாத காலத்திற்குள்ளாக மோட்டல்களை அமைக்க வேண்டும் என்று அந்தக் காரியங்கள் தற்போது நடந்துக் கொண்டிருக்கின்றன. எனவே, இவைகள் எல்லாம் வருகிற போது, நெடுஞ்சாலைத் துறையிலே தனிப்பட்ட முறையிலே இப்படிச் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்ற முறையில் இந்த பதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஆங்காங்கே நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள் இந்தச் சாலைகளிலே குறுக்கிடுகின்ற காரணத்தினால், அவர்கள் செய்து இருக்கின்ற வசதிகளைக் கூட பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நிலையில் விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

திரு. க. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிர்வாகத்தின் மூலமாக ஊராட்சிகளுக்கு கழிப்பிடங்கள் கட்டுவதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அப்படி கட்டப்படுகின்ற கழிப்பிடங்கள் நெடுஞ்சாலைகளுக்கு பக்கத்திலே இருக்கின்ற ஊராட்சிகளில் கட்டுவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு, அந்த ஊர்களிலே இருக்கின்ற சாலை ஓரங்களிலே அந்தக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அதோடு, மோட்டல்கள்

கட்டுவது கார்களிலே அல்லது நல்ல வசதி படைத்தவர்கள் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஆனால், பேருந்துகளிலோ அல்லது வேன்களிலோ செல்பவர்களுக்கு வாய்ப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வதற்கு உரிய நடவடிக்கையை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே சாலை ஓர நகராட்சிகளிலே இவை இருக்கின்றன. பல இடங்களிலே இந்த நகராட்சிகள் சாலைக்கு தள்ளி இருக்குமானால், அங்கே இந்த வாய்ப்பு இருக்காது. மோட்டல்களைப் பொறுத்தவரை கார்களில் வருகின்றவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் இந்த வாய்ப்பு இருக்கிறது. பஸ்களிலே வருகின்றவர்களுக்கு இது முக்கியமாக கட்டப்படுகிறது. வேன்களிலே வருகின்றவர்களுக்கும், கார்களிலே வருகின்றவர்களுக்கும், சைக்கிள்களிலே வருகின்றவர்களுக்கும் பயன்படுகின்ற வகையில் அமைக்க இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை ஓரங்களில் மோட்டல்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? மோட்டல்கள் எந்த அடிப்படையில் கட்டப்படுகின்றன? அப்படியிருந்தால், வேலூருக்கும், சித்தூருக்கும் இடையே உள்ள நெடுஞ்சாலையில் திருவண்ணாமலைப் பகுதியில் மோட்டல் கட்டுவது பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அந்த இடத்தில் இப்போது இருக்கிறதா, இல்லையா என்று சொல்ல முடியாது. தனிப்பட்ட முறையில் கேள்வி கேட்டால் அல்லது நேரடியாக கேட்டால், அதைப் பார்த்து அவர்களுக்குப் பதில் சொல்ல முடியும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஒருசில இடங்களிலே நெடுஞ்சாலை ஓரங்களிலே கழிப்பிடங்களை அமைத்திருக்கிறார்கள். அங்கே தண்ணீர் வசதியோ அல்லது துப்புரவு செய்ய ஆட்களோ இல்லாமல் அவைகள் அசுத்தமாக இருக்கின்றன. அதை சீர்செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அப்படி அமைக்கப்பட்ட இடங்கள் நெடுஞ்சாலைத் துறைக்கோ அல்லது போக்குவரத்துத் துறைக்கோ சொந்த

மானதாக இருக்காது. அது யாருக்குச் சொந்தமானது என்பதைப் பார்த்து, அவர்களிடத்திலே கேட்டால் சரியாக இருக்கும். போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக அமைக்கப்பட்ட மோட்டல்களில் எல்லா வசதிகளையும் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு மோட்டல் அமைக்கவேண்டுமென்கிற திட்டம் வரவேற்கக்கூடிய ஒன்றுதான். அப்படி அமைக்கப்படுகின்ற அந்த மோட்டல்களுக்கு அருகில் ஒரு பெட்ரோல் பங்கும், ஒரு சர்வீஸ் ஸ்டேஷனும், அதைப்போல் சிறுசிறு உபயோகத்திற்காக சிறுசிறு சாதனங்கள், அதாவது சின்னசின்ன ஸ்பேர் பார்ட்ஸ் விற்கக்கூடிய ஒரு சின்னக்கடையும் ஒட்டுமொத்தமாக, யாராவது வந்தால் ஒரு மணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரமோ ஓய்வு எடுத்துக்கொண்டு, வெளிநாடுகளில் இருப்பது போல் ஸ்பேர் பார்ட்சுகளை மாற்றி, ரிப்பேர் செய்த பிறகு செல்லக்கூடிய வகையில் அமைக்கும் உத்தேசம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, பெட்ரோல் பங்குகளைப் பொறுத்தவரை அவ்வளவு சுலபமல்ல; சிரமமான காரியம். எனவே, அந்த உத்தேசம் அரசுக்கு இல்லை. ஆங்காங்கே வழிகளில் பெட்ரோல் பங்குகள் இருக்கின்றன. ஆனால், மோட்டல்களிலே சிறிய சிறிய பாகங்களை மாற்றுவதற்கு அல்லது சின்ன ரிப்பேர்களைச் செய்வதற்கு வசதி செய்கின்ற வகையிலே நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். சர்வீஸ் ஸ்டேஷன் அமைப்பது என்பது கடினம். காரணம், வண்டிகள் சர்வீஸ் செய்வதற்கு அதிக இட வசதி தேவைப்படும். லாரிகளை மட்டும் கழுவுவதற்கு சில இடங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த அளவுக்கு முன்னேற்றலாமா என்பதற்காக நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டு வருகிறோம். இடத்தைத தேர்ந்தெடுக்கும் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

சேத்தியாத் தோப்பில் வெள்ளாற்றுப் பாலம்.

647(* வினா எண் 2749)—திரு. இ. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னாற்காடு மாவட்டம், சேத்தியாத்தோப்பு கிராமம் அருகில் வெள்ளாற்றின் மீதுள்ள பழைய குறுகிய பாலத்திற்குப் பதில் புதிய அகலமான பாலம் போட்டு சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலையினை விஸ்தரிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலையில் கி.மீ. 215/10-216/2ல் வெள்ளாற்றின் குறுக்கே சேத்தியாத் தோப்புக் கிராமத்தின் அருகே ரூ. 2.20 கோடி செலவில் புதிய அகலமான பாலம் கட்டும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இச்சாலை ஏற்கனவே இருதடப் பாதையாக அமைந்துள்ளதால் அதை அகலப்படுத்த வேண்டியதில்லை.

(முற்பகல் 9-30)

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, சென்னை-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையில் டிராபிக் அதிகமாக இருக்கிற காரணத்தினாலும் பிஸி டிராபிக் அங்கே இருக்கிற காரணத்தினாலும் நேற்றைய தினம் இரவு கூட நான் வருகிறபோது பார்த்தேன். வெள்ளாற்றுப் பாலத்தின் மீது ஒரு பஸ் வந்தால் இன்னொரு பஸ் வரமுடியவில்லை. ஒரு பஸ் வருகிறபோது இன்னொரு பஸ் எதிரே வந்தால் லைட்டுகளை பிளிக்கர் செய்து அந்த பஸ் போகிறவரையில் இந்த பஸ்ஸை நிறுத்திவிடுகிறார்கள். ஆகவே அந்தப் பாலத்தை அகலப்படுத்தி இரண்டு பஸ்களும் ஒரே நேரத்தில் போய்வரக்கூடிய முறையிலே ஒரு பஸ்ஸை இன்னொரு பஸ் கிராஸ் பண்ணவும், ஒரு பஸ்ஸை ஓவர்டேக் பண்ணவும் வசதியாக அந்தச் சாலை விரிவுபடுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை ஏற்கனவே அகலமாகத்தான் இருக்கிறது. அந்தப் பாலம்தான் குறுகலாக இருக்கிறது. அதற்காகத்தான் 2.20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலை துவங்க இருக்கிறோம்.

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர்-கும்பகோணம்-சென்னை சாலையில் இந்த இரண்டு பாலங்களைத்தவிர லோயர் அணைக்கட்டு பாலம் இருக்கிறது. சேத்தியாத் தோப்பு பாலம் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நான் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே வெள்ளாற்றுப் பாலம், லோயர் அணைக்கட்டுப் பாலம், லோயர் அணைக்கட்டையொட்டிய பாலங்கள் விரிவுபடுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, நிலைமைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

[1985 ஜூலை 15

புதிய விமான நிலையங்கள்.

648—(*வினா எண் 2807):—திரு. என். எஸ். வி. சித்தன்: மற்றும் திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிய விமான நிலையங்கள் ஏற்படுத்துவது குறித்து மைய அரசுக்குக் கோரிக்கை ஏதும் அனுப்பப் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் இந்திய விமான போக்குவரத்தில் சேராத சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த, மற்றும் மாவட்டங்களின் தலை நகரங்களை இணைக்கும் குறுகிய தூர விமானப் போக்குவரத்து சர்வீஸ்களை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு மைய அரசை மாநில அரசு கோரியது. இக்கோரிக்கைக் கிணங்க முதற்கட்டமாக தூத்துக்குடி அருகில் வாகைக்குளம் என்ற இடத்தில் விமான நிலையம் அமைத்தல் பொருளாதார ரீதியாக லாபகரமாக இருக்குமா என்பதைக் கணிக்க சர்வே ஒன்றை நடத்த மத்திய அரசு தீர்மானித்துள்ளது. சேலம் அருகே ஒரு விமான நிலையம் அமைக்க கமலாபுரம் என்ற இடத்தில் 200 ஏக்கர் நிலம் இலவசமாக கையகப்படுத்தித் தர இயலுமா என மைய அரசு கேட்டுள்ளது. இதுபற்றி சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலேயும் விமானநிலையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை நியாயமாக இருந்தாலும்கூட வெகு விரைவிலே இந்த தூத்துக்குடி, சேலம் போன்ற ஊர்களிலே, இன்னும் தஞ்சையிலே விமான நிலையம் வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது—விரைவிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, நாம் வலியுறுத்தி வருகிறோம். அதற்குப் பின்னாலே அவர்கள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலே நாம் செய்ய இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் டெல்லி போகின்ற போது வாய்ப்புக் கிடைக்கிறபோது இதைப்பற்றிப் பேசுவார்களால் வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1985 ஜூலை 15]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புதிய விமான நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை ஒருபுறம் இருக்க சில ஊர்களுக்குச் செல்கிற விமானங்களைப் பொறுத்தவரையிலே பொருத்தமான நேரம் இல்லாமல் இருக்கிறது. மதுரையை எடுத்துக் கொண்டால் விமானத்தின் நேரம் பகலிலே வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல் காலையிலோ அல்லது மாலையிலோ அந்த நேரத்தை வைத்தால் வசதியாக இருக்கும். ஆகவே, இதுபோன்ற கோரிக்கைகளை மத்திய அரசிடம் எடுத்து வைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அந்த வழித் தடத்தை மட்டும் வைத்து அவர்கள் நேரத்தை நிர்ணயிப்பதில்லை. மற்ற விமானப் போக்குவரத்துக்களிலே என்ன நேரம் இருக்கிறதோ, அதையெல்லாம் ஒட்டி அவர்கள் அதை வைக்கிறார்கள். பொது மக்களுக்கு எது வசதியாக இருக்கிறது என்று பார்த்து அதைக் கேட்பதிலே நமக்கு ஒன்றும் தயக்கம் இல்லை.

திரு. தி. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, புதிய விமான நிலையங்கள் அமைப்பது சம்பந்தமாக இரண்டு இடங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அண்ணா மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல் இருக்கிறது, அதற்கு அருகாமையிலே சுற்றுலா மையமான கொடைக்கானல் பகுதி இருக்கிறது, அதைப் போன்றே ஊட்டி சுற்றுலா மையமாக இருக்கிறது, ஆகவே அதுபோன்ற இடங்களிலேயும் புதிதாக விமான நிலையங்களை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எடுத்த முயற்சிகள் வெற்றியடைகிறபோது இதைப்பற்றி நாம் யோசிக்கலாம்.

திரு. எ. தெய்வநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, மதுரை விமான நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றிய குறிப்பு தற்போது என்னிடத்திலே இல்லை. பின்னாலே தனியாகக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் சொல்லக்கூடும்.

திரு. கு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்த சோழவரம் பகுதியில் புதிதாக விமான நிலையம் ஏற்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்கெனவே இருந்த

[1985 ஜூலை 15

தாகக் கூறப்படுகிறதே ; ஏற்கெனவே அங்கே விமான தளம் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. எனவே, சோழவரத்தில் புதிய விமான நிலையத்தை ஏற்படுத்துவதற்கு அரசிடம் குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, இதைப்பற்றிய குறிப்பு தற்போது என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதிலே பதில் சொல்ல முடியும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் புதிதாக விமான நிலையம் அமைக்கும் இடங்களைப் பற்றிச் சொல்லி, தூத்துக்குடியையும், சேலத்தையும் சொன்னார்கள். ஆனால் எப்படியோ ஈரோட்டை மறந்துவிட்டார்கள். ஈரோட்டிலே விமான நிலையம் அமைப்பதற்கு அரசு முயற்சித்தால் மாண்புமிகு அமைச்சரவர்களை, ஈரோட்டு மக்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில்தான் அங்கே விமான நிலையம் வந்தது என்று அந்தப் பகுதி மக்கள் என்றென்றைக்கும் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். ஆகவே, ஈரோட்டில் விமான நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் தனிப் பட்ட முறையில் கவனம் எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலத்திலோ, ஈரோட்டிலோ இவற்றில் ஏதாவது ஒரு இடத்திலேதான் அமைக்க முடியும். சேலம்தான் பொருத்தமாக இருக்கும் என்று அதைத் தேர்ந்தெடுத் ததற்குக் காரணம், கோவையிலே ஏற்கனவே விமான நிலையம் இருக்கிறது; ஈரோடு அதற்கு மிக அருகாமையில் இருக்கிறது என்ற எண்ணத்திலேதான் சேலத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். நான் சேலத்துக்காரர்களிடம் கெட்ட பெயர் வாங்கிக் கொள் ளக்கூடாது. எனவே தான் ஏற்கனவே இருக்கின்ற முறையைத் தொடர்ந்து அமலாக்கலாம் என்ற உணர்வில் இருக்கிறேன்.

திரு கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உத்தேசிக்கப்பட்டுள்ள விமான நிலையங் களில், சேலம் மாவட்டம் கமலாபுரத்தில் நில ஆர்ஜிதம் செய்து கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். ஆகவே, உத்தேசிக்கப்பட் டுள்ள விமான நிலையங்களில் சேலம் மாவட்டம் கமலாபுரத் திற்கு முன்னுரிமை தந்து முதலில் அதை எடுத்துக் கொள்வதற் குப் பரிந்துரை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1985 ஜூலை 15]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நாம் பரிந்துரை செய்கிறோம். ஆனால் மத்திய அரசு எது முக்கியம் என்று கருதுகிறதோ, அதைத் தான் எடுக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் இரண்டையும் ஒன்றாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசைப் பொறுத்த வரையில் அவர்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டு மென்று நினைக்கிறார்களோ, சில வசதிகளை முன்னிட்டு அதை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த அடிப்படையில் எடுக்கப் படுகிறது. சேலத்தில் உடனடியாக அமைக்கப்பட வேண்டு மென்பதில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறதோ அதைப்போல எனக்கும் இருக்கிறது.

திரு. பொ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சரவர் களும், நம்முடைய வீட்டு வசதித் துறை அமைச்சரவர்களும் தஞ்சை மாவட்டத்தில் விமான தளம் அமைக்கப்படுவதற்கான இடத்தைப் பார்த்துவிட்டு வந்ததாகத் தெரிய வருகிறது, அதைப் பற்றி அரசினிடத்தில் ஏதேனும் குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதைப்பற்றிய குறிப்பு இங்கே இல்லை. வேண்டுமானால் ஏதாவது குறிப்பு இருந்தால் அதை வாங்கி அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே இரண்டாவது உலக யுத்தத் தின்போது ஒரு மிலிட்டரி விமான தளம் இருந்ததாகச் சொல்லப்படு கிறது. தற்போது பார்லிமெண்டரி கன்சல்டேட்டிவ் கமிட்டி மூலம் தஞ்சையில் கூடியவிரைவில் ஒரு விமான தளம் அமைக்க இருப்ப தாகச் செய்தி வந்ததே. அது குறித்து மாண்புமிகு அமைச்சரவர் களிடத்தில் தகவல் உள்ளதா ? தஞ்சையில் விமான நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது நட வடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே அங்கே இருக்கின்ற வசதி களை விஸ்தரித்தால் அதை நடைமுறைப்படுத்த முடியும். மத் திய அரசினிடத்தில், தூத்துக்குடி, சேலம் பற்றிச் சொல்லியிருக் கிறோம். அவைகளே இன்னும் முடிவிற்கு வராத நிலையில்

[1985 ஜூலை 15

இருந்துகொண்டிருக்கின்றன. எங்கேயெல்லாம் விமான நிலையம் வைக்கலாம் என்ற ஆலோசனைகளை வைத்து அவர்களிடத்திலே கேட்பதற்கு நமக்குத் தயக்கமில்லை. ஆனால் செய்வதற்குத் தான் காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உச்சிப் புளியில் இந்தியாவின் பாதுகாப்பும் அடங்கியிருப்பதால் அதை விரிவுபடுத்துகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனித்தனியாகத் கேள்வி போட்டால் ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனியாக பதில் சொல்ல முடியும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனியார்கள் போக்குவரத்துக் கழகங்களை நடத்துவதைப்போல, தனியார்கள் விமானப் போக்குவரத்தையும் நடத்துவதற்குத் தமிழக அரசிடம் யாரேனும் அனுமதி கேட்டிருக்கிறார்களா ? அப்படி அனுமதி கேட்டால் அதை மத்திய அரசுக்கு சிபார்சு செய்து அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, இதுவரையில் அப்படி யாரும் கேட்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படி ஏதாவது யோசனை இருந்தால் அனுமதி கேட்கலாம்.

திரு. கோ. கனிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் சொல்கின்ற பொழுது இரண்டு புதிய விமான நிலையங்களை அமைப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே செயல்பட்டு வந்த உளுந்தூர்பேட்டை விமான நிலையம் தற்போது மூடப்பட்டு உள்ளது. அதை மத்திய அரசுக்கு வலியுறுத்தி மீண்டும் அந்த விமான நிலையம் செயல்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. பூ. மு. நரசிம்மன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தின் சார்பாக விமான நிலையம் அமைக்கும் உத்தேசம் உண்டா ?

1985 ஜூலை 15]

(முற்பகல் 9-40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்வியை ஒட்டி கேட்க வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் மாநிலம் முழுவதும் தனித்தனியாகக் கேட்டால் எப்படி ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கென்று கேட்க ஆரம்பித்து இப்பொழுது ஊருக்கென்று கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நேரம் போனால், வீட்டுக்கென்று கேட்கின்ற நிலைவரும் போல் இருக்கிறது. செங்கற்பட்டைப் பொறுத்தவரை ஏற்கனவே நாம் பார்த்து சில முடிவுகள் எடுக்கப்பட்டு, சில இடங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோம். மொத்த மாக அவற்றிற்கு அனுமதி கிடைத்த பின்புதான் மற்ற இடங்களைப் பற்றி நாம் ஆலோசிக்க முடியும்.

திரு. சைதை கா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை விமான நிலையத்தில் வெளி நாட்டுப் பயணிகள் வருகின்ற நேரங்களில் அங்கே இருக்கிற டாக்சி டிரைவர்கள் பல்வேறு முறைகேடுகளைச் செய்து, அதிக அளவிலே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : புதிய விமான நிலையங்கள் அமைப்பது சம்பந்தப்பட்ட மூலக் கேள்வியில் இதெல்லாம் எப்படி வரும் ?

தென் பெண்ணை ஆற்றில் தரைப் பாலம்

649 —(*வினா எண் 3772): திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லிக்குப்பம் நகரத்தையும், புதுவை மாநிலத்தையும் இணைக்கும் வகையில் நெல்லிக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வான்பாக்கம் பகுதியில் தென் பெண்ணையாற்றில் தரைப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வியிலே குறிப்பிட்டிருக்கின்ற, தென் பெண்ணை யாற்றிலே கட்ட வேண்டுமென்று சொல்கிற அந்தத்

தரைப் பாலம் அமையுமேயானால் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைக்கு வருகின்ற கரும்பு வண்டிகள், லாரிகள்; டிராக்டர்கள்: இதர வண்டிகள். தரைப்பாலம் இல்லாத காரணத்தால் ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் சுற்றி வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்தத் தரைப் பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களானால், அதனாலே அந்த நகர வளர்ச்சியும் சிறப்புறும், அங்கேயிருக்கிற விவசாயப் பெருமக்கள் மத்தியிலேயும் நமக்குப் பெயரும் கிடைக்கும் என்ற காரணத்தினாலே, வருகின்ற நிதி ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரைப்பாலம்அமைத்துத் தர முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, தரைப் பாலத்தைப் பற்றி இப்பொழுது குறிப்பு இல்லை. ஆனால், அதிலே நல்ல மேம்பாலமாகக் கட்ட வேண்டுமென்றால் ரூ. 55 இலட்சம் செலவாகும் என்று இங்கே கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அதற்காக இங்கே எந்தத் திட்டமும் தீட்டப்படவில்லை, அதற்குக் காரணம் நகராட்சியின் சார்பாக நகராட்சி நிதியிலிருந்து கட்டப்பட வேண்டும் அல்லது தமிழகத்திற்கும் புதுவைக்கும் மத்தியிலே அந்த ஆறு இருக்கிற காரணத்தால் புதுவை அரசினுடைய பங்கோடு நாம் கட்ட வேண்டும். எனவே, எதிர்காலத்திலே அதைப்பற்றி ஆலோசித்து சிறந்த முடிவு எடுக்கப்படும்.

திரு. நுரை அன்பரசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் கட்டப்படுமேயானால் புதுவை மாநிலத்தை இணைக்குமே தவிர, அந்தப் பாலம் இருக்க வேண்டிய பெண்ணையாறு நம்முடைய மாநிலத்திலேதான் ஓடிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகராட்சி நிதி உதவியோடு கட்டலாம் என்று சொல்கிறார்கள், நகராட்சியே நிதி இல்லாத சூழ்நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே இருக்கிற சர்க்கரை ஆலையை அணுகி, அவர்கள் தருகின்ற நிதி உதவியோடு அந்த பாலத்தை கட்ட முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிக்கு எப்படி நிலையோ, அதைப்போல ஒவ்வொரு துறையிலும் பணிகள் அதிகமாக எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், நிலை ஏற்படுகிறது, நகராட்சி ஏதாவது இடங்களிலே கடன் வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதை வைத்து செய்ய முடியுமா என்பதை நகராட்சியோடு பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும், அங்கே சர்க்கரை ஆலையிலே பணம் கொடுக்க முடியும் என்ற நிலை இருக்குமானால், அதைப் பார்த்து, அதிலே கிடைக்கும் என்ற நிலை இருக்குமானால், அந்தப் பணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எதிர்காலத்திலே எடுக்கலாம்.

சேலத்தில் சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம்

644—(*வினா எண் 177): திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே கணபதி துறை என்ற இடத்தில் சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலை யாது?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டு, வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாலம் கட்ட அனுமதி வழங்கியதற்கும் பணிகளுக்கான அங்கீகாரம் அளித்ததற்கும் முதலிலே அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பால வேலைக்கான ஆரம்ப நிலையில் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக, கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டது. இந்தப் பிரச்னை இப்பொழுது தீர்ந்து விட்ட காரணத்தால் மேலும் காலதாமதமின்றி விரைவாக அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, விரைவாக முடிப்பதற்கான விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

பட்டுக்கோட்டை துணை நீதிமன்றம்

541—(*வினா எண் 2192): திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை சப்-கோர்ட்டுக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): பட்டுக்கோட்டை சப்-கோர்ட்டு உள்பட, பட்டுக்கோட்டையிலுள்ள எல்லா நீதிமன்றங்களும் ஒட்டு மொத்தமாக ஒரே கட்டிடத்தில் (Combined Court Buildings) இயங்குவதற்காக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1985 ஜூலை 15

திருவிடைமருதூர் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம்

542—(*வினா எண் 2348): திரு. மு. இராமாங்கம்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூரில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தனியார் பள்ளிகளுக்கு அரசு சத்துணவு அமைப்பாளர்கள்

650—(*வினா எண் 790): திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் பள்ளிகளுக்கும் சத்துணவு அமைப்பாளர்களை அரசே நியமித்து அவர்களை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலைவர் அவர்களே, அரசு மானியம் பெறும் தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் அமைப்பாளர்கள் அரசு அலுவலர்களைக் கொண்ட குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பின் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலின் பேரில்தான் நியமனம் செய்யப் படுகிறார்கள். ஆகவே இந்த அமைப்பாளர்களும் அரசின் கட்டுப் பாட்டில் உள்ளதாகவே கருதப்படலாம்.

திரு. அ. பாலுசாமி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் பள்ளிகளில் சத்துணவு அமைப் பாளர்களை நியமிக்கும்போது, தனியார் பள்ளிகளை நடத்து கின்றவர்களே ஒன்றிரண்டு பேர்களைத் தேர்ந்தெடுத்து அவர் களைத்தான் நியமிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தனியார் பள்ளிகளில் சத்துணவு அமைப்பாளர்களை நியமித்திருக் கிறார்கள். ஆகையால் அரசு கொடுக்கிற சத்துணவை அவர்கள் சரியாகக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அமைச்சருக்கு வந்திருக்கிறதா? குற்றச்சாட்டு வந்திருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

1985 ஜூலை 15]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலைவரவர்களே, சில தனியார் பள்ளிகளிலிருந்து சத்துணவு வழங்குவதில் முறைகேடு நடந்திருக்கிறது என்று தகவல் வந்து, நானே நேரடியாக சில இடங்களைப் பரிசோதனை செய்தேன். தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். தற்போதுள்ள முறைப்படி அந்தப் பணிக்கு தகுதிவாய்ந்த 5 பேர்களை அவர்கள் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டும்; மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களில் ஒருவரை தேர்வு செய்து அரசுக்கு அனுப்புகிறார். அரசின் அனுமதி பெற்று அவர் நியமனம் செய்யப்படுகிறார். ஆகவே, அரசுதான் அவர் களை நியமனம் செய்கிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : துணைத் தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் சத்துணவு அமைப்பாளர்களை நியமித் தாலும் அல்லது மற்ற பள்ளிகளில் சத்துணவு அமைப்பாளர்களை நியமித்தாலும் அரசு அதிகாரிகளுடைய ஒரு குழு அந்தத் தேர்வை நடத்துவதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அந்த அதிகாரிக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரிய திட்டமான குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுக்கும் திட்டத்தின்படி, வேலையில்லாத குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கோ அல்லது பெண்களுக்கோ வேலை கொடுக்க வேண்டுமென்று அரசு அறிவுறுத்தியுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலை வரவர்களே, சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களைத் தேர்ந் தெடுப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்), மாவட்டக் கல்வி அதிகாரி, வட்டார வளர்ச்சி அதிகாரி ஆகியோர் அந்தக் குழுவில் இடம் பெற்றிருக் கிறார்கள். ஒரு இடத்திற்கு அமைப்பாளர் தேவை என்ற நிலை வந்தால் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு, விருப்ப முள்ள தனிப்பட்டவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, பரிசீலனை செய்து, வேலைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய சீரிய எண்ணத்தின் அடிப்படையில்தான் வேலை யில்லாத குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை தந்து வேலைக்கு அமர்த்துகிறார்கள்.

டாக்டர் ந. மாசிலாமணி : துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு பல்வேறு பள்ளிகளில் சத்துணவு அமைப்பாளர் களாகப் பணியாற்றும் அமைப்பாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் வித்தியாசம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலனை செய்து, ஒன்றாக இணைத்து ஒரே அளவிலான ஊதியம் வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 15

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலைவரவர்களே, சத்துணவு அமைப்பாளர்களுடைய பணி வேறு, ஆயாக்கள் பணி வேறு. பணிக்கு ஏற்றவாறு சம்பளம் வழங்கப்படுகிறது.

திரு. எஸ். இராமராமன் : துணைத் தலைவரவர்களே, சத்துணைக் கூடங்களில் தவறு செய்த அமைப்பாளர்களை வேலை நீக்கம் செய்து, புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அந்த வகையில் அதிக இடம் காலியாக இருக்கிறது. அந்த காலி இடங்களை உடனடியாக நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். அமைப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு பத்திரிகையில் விளம்பரம் செய்து, மனு பெற்று, தேர்ந்தெடுக்க வேண்டும். ஒன்றிரண்டு இடங்களில் காலி ஏற்படுகின்றபோது அத்தகைய பணிகளைச் செய்ய இயலாது. எனவே அதற்கென்று ஒரு ரிசர்வ் லிஸ்ட் வைத்திருக்கிறார்கள். அந்த ரிசர்வ் லிஸ்டிலே இருப்பவர்களை அவ்வாறு காலியிடம் ஏற்படுகின்றபோது அங்கே நியமிக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் தற்காலிகமாகப் பக்கத்தில் இருக்கின்ற மையத்தினுடைய அமைப்பாளர்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கணிசமான அளவில் எண்ணிக்கை சேர்ந்தவுடன் பத்திரிகையில் விளம்பரம் செய்து அவர்களிடத்திலிருந்து மனுக்களைப் பெற்று அந்த மனுக்கள் குழுக்களால் பரிசீலனை செய்யப்பட்டு அதன்படி அவர்கள் அமைப்பாளர் பணியில் நியமனம் செய்யப்படுவார்கள். இப்போது தஞ்சை மாவட்டத்தில் அந்தப் பணியை விரைவில் செய்ய ஆணையிடப்பட்டிருக்கின்றது.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார்கள் நடத்துகிற சத்துணவுக் கூடத்திற்கான பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது 5 பேர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபாரிசு செய்து அனுப்புகிறார்கள். அதற்குப் பிறகு அரசாங்கம் ஒருவரை நியமனம் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவர்களில் அரசாங்கம் யாரை வேண்டுமானாலும் நியமிக்கின்றதா? இல்லை என்றால் அவர்கள் சிபாரிசு செய்பவர்களை நியமிக்கின்றதா? சத்துணவு பொறுப்பாளர்களின் இடம் காலி ஏற்படுகின்றபோது இப்படி பல்வேறு குறைபாடுகள் ஏற்படுகின்றன. அவற்றைத் தவிர்க்கின்ற வகையில்—இப்போது ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுப்பதற்காகக் கமிட்டி அமைத்திருக்கிறார்கள். அந்தக்—கமிட்டியின்

1985 ஜூலை 15]

மூலமாக காலி ஏற்படுகின்ற இடங்களுக்கு சத்துணவுப் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தேர்ந்தெடுப்பதற்கு என்று ஒரு குழு ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் குழுதான் அந்தத் தேர்வை நடத்தும். ஒவ்வொரு ஒன்றியத்திற்கென்றும் ஒரு குழுவைப் போட்டு அல்லது இருக்கின்ற குழுவை வைத்து நாம் தேர்ந்தெடுப்பது என்பது நிர்வாகச் சிக்கலை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு மானியம் பெறும் தனியார் பள்ளிகளில் அமர்த்தப்படும் அமைப்பாளர்களுக்கு வேண்டிய தகுதி என்ன என்பதை இந்தத் துறையின் நேர்முகக் கடித எண். 114349/ஜி/82-18) நாள் 24-1-83-ல் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. தனியார்கள் பள்ளிகளில் இருக்கின்ற மேலாளர்கள் தகுதி வாய்ந்த 5 நபர்களைத் தேர்ந்தெடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்புகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதைப் பரிசீலித்து அரசுக்கு அனுப்புவார்கள். அதற்குப் பிறகு அங்கே அவர்கள் நியமிக்கப்படுகிறார்களே தவிர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 5 பேரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்களை நியமனம் செய்வதற்கென்று ரிசர்வ் லிஸ்ட் வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த ரிசர்வ் லிஸ்டிலே இருந்து தேர்ந்தெடுப்பதில் கூட அந்தந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படவேண்டும்; அப்படி இல்லை என்றால் அங்கிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பவர்களைப் போட வேண்டும் என்று விதி இருக்கின்றது என்று சொல்கிறார்கள். ஆனால் தற்போது நேர்முகத் தேர்வை நடத்தி ஓராண்டுக்கு மேல் ஆகின்ற காரணத்தால் இப்போது நியமனம் செய்யப்படுபவர்கள் எல்லாம் நீண்ட தூரத்திலிருந்து நியமிக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே உடனடியாக மீண்டும் நேர்முகத் தேர்வை நடத்தி ஒரு பட்டியலைத் தயாரிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு சில இடங்களில் இப்படிப்பட்ட தவறு நேர்ந்திருக்கின்றது என்பதற்காக தமிழ்நாடு முழுமைக்கும் ஒருமுறை தேர்வை நடந்துவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப்பட்ட நியமனங்கள் எங்கெங்கு

(1985 ஜூலை 15

நடைபெற்றிருக்கின்றன என்பதை எடுத்துக் கூறினால் அரசு அந்த வகையில் மாற்றியமைக்க ஏற்பாடு செய்யும். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே பணியாற்றுகின்றவர்கள் அந்த ஊரைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்; அல்லது அந்த ஊரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பவராக இருக்க வேண்டும் என்று தேர்ந்தெடுப்பதைப் பொறுத்த வரையில் அந்த குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அதை மீறிச் செய்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள் நியமனம் செய்வதில் தாழ்த்தப்பட்ட மலைஜாதி மக்கள் மற்றும் நரிக் குறவர்களுக்கு பெர்சன்டேஜ் அடிப்படையில் வேலைவாய்ப்பு தர முடியுமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சமுதாயத்தினுடைய அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு இந்த வாய்ப்புகள் தரப்பட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் இத்தகைய நல்ல திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால் அப்படி தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் அந்தந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்; அல்லது அந்த கிராமத்தைச் சுற்றி இருக்கின்ற 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பவர்களாக இருக்க வேண்டும்; அப்படிப்பட்ட நிலையில் மலைஜாதியினரோ அல்லது நரிக்குறவர்களோ வந்தால் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் எல்லா கிராமங்களிலும் நரிக்குறவர்களையோ அல்லது மலைஜாதியினரையோ மட்டும்தான் நியமிக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு கிராமத்திலும் மலை இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதை உருவாக்க தற்போது இயலாது. எனவே நடைமுறைச் சிக்கல் இல்லாமல் பணியாளர்களை அமர்த்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் பல்வேறு குறை பாடுகள் ஏற்படுவதை நாம் அனைவரும் அறிவோம். அந்தக் குறைபாடுகளை நீக்குகின்ற வகையில் ஆண்டுக்கு ஒரு முறை சத்துணவு மையத்தில் உள்ள அலுவலர்களைப் பக்கத்தில் இருக்கின்ற இன்னொரு கிராமத்திற்கு மாற்றினால் ஏதுவாக இருக்கும். அந்த வகையில் மாற்றி இந்தக் குறைபாடுகளை நீக்க அரசு முன்வருமா?

1985 ஜூலை 15)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் தற்காலிக பணியாளர்கள். அவர்கள் அந்த ஊரைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும், அல்லது 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக குடியிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை வைத்திருக்கிறோம். ஆகவே, அதன்படி இல்லாமல் அவர்கள் தவறு செய்கிறார்கள். என்று தெரிந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். தவற்றை தொடர்ந்து செய்கிறார்கள் என்றால் அவர்களை வேலையை விட்டு நீக்கிவிட்டு, வேறு ஒருவரை அங்கே நியமிக்கலாம்.

திரு. ஏ. பாலுச்சாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான குழு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப் பட்ட குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெற அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தற்போது உத்தேசம் இல்லை.

திரு. வி. பி. இந்தன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு பதிலை நான் அறிய ஆசைப்படுகிறேன். சத்துணவுப் பணியில் சுடுபட்ட பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இப்போது ஒரு சங்கம் அமைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தை அரசு அங்கீகரித்து அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளைப் பற்றி பேசுவார்களா? ஏனென்றால் தமிழக அரசின் எல்லாப் பகுதி ஊழியர்களுக்கும் சங்கம் இருக்கிறது. குறிப்பாக அன்-ஆர்கனைஸ்டு செக்டார் என்று சொல்லப்படுகிற நிறுவனம் உட்பட சங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில், இவர்கள் அமைத்துள்ள சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுத்து, அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஏதாவது கோரிக்கைகளை சத்துணவு மையங்களின் ஊழியர்கள் வைத்தால் கூட, அவர்களை அழைத்துப் பேசிக் கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே, அந்தச் சங்கத்தை அங்கீகரித்துத்தான் தீர்க்க வேண்டிய பிரச்னைகள் இல்லை. அதுவும் அல்லாமல் அவர்கள் தற்காலிக பணியில்தான் இருக்கிறார்கள்.

[1985 ஜூலை 15

சத்துணவு மையப் பணியாளர்கள்

651—(*வினா எண் 1636) டாக்டர் தே. குமாரதாஸ், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சத்துணவு மையத்தில் வேலை பார்க் கும் சத்துணவு பொறுப்பாளர்கள், ஆயாக்கள் குடும்பக் கட்டுப் பாட்டிற்கு ஆள் கொண்டு வர கட்டாயப்படுத்தப்படுகிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை. மையத்திற்கு வரும் குழந்தைகளின் தாய்மார்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டின் அவ சியத்தைப் பற்றி தகுந்த முறையில் எடுத்து உரைத்தால் போதும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர், பி.டி.ஓ., மற்றும் தாசில் தார்கள், நகராட்சி கமிஷனர்கள் ஆகியோர்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஒரு டார்கெட் கொடுக்கிறார்கள். அவர்கள் அதைக் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சொல்லி யிருக்கிறார்கள். அதன் வாயிலாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் வற்புறுத்தலின் காரணமாக ஆயாக்களும், சத்துணவு பொறுப் பாளர்களும் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆள் கொண்டு வந்து தான் தீரவேண்டும் என்று கட்டளை இடுகிறார்கள். அதுகுறித்து புகார் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு வதோடு, அப்படியிருந்தால் அதைப் போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு என்பது நம்முடைய அரசினுடைய இன்றியமையாத திட்டங்களில் ஒன்றாகும். அதிலே பொதுமக்களிலேயிருந்து அரசு அலுவலர்கள் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்பதிலே இரண்டாம் கருத்து யாருக்கும் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் அத னுடைய இன்றியமையாத் தன்மையை உணர்ந்துச் செயல் பட வேண்டும் என்பது இந்த நாட்டினுடைய பிரஜை என்ற முறை யில் நம் கடமைகளில் ஒரு பகுதி. ஆனால், அது தொடர் பாக அந்தந்த துறைகளைச் சேர்ந்த பணியாளர்களைத்தான் ஆட்களைக் கொண்டு வரும் பணியில் ஈடுபடுத்துகிறார்களே தவிர, சத்துணவுத் திட்டப் பணியாளர்களை வைத்து அந்தப் பணியை

[1985 ஜூலை 15

நடத்துவது இல்லை. அப்படி எங்காவது நடக்கிறது என்று தெரிந்தால் தனிப்பட்ட முறையில் உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுப்பார்களேயானால், உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆள் கொண்டு வரவில்லை என்றால், உடனே சஸ்பென்ட் செய்கிறார்கள். சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுடைய.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் அப்படி எல்லாம் இல்லை என்ற முறையில் பதில் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் பதில் சொல்லிவிட்டால் அது உண்மை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எங்காவது மாறுபட்டு நடந்திருந்தால் அதை எழுதிக் கொடுங்கள் என்று அவரே கேட்டிருக்கிறார். அந்த வகையில் தான் உறுப்பினர் செயல்பட வேண்டுமே தவிர அதையே திருப்பி திருப்பிச் சொல்லக் கூடாது.....

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து எல்லோருக்கும் தெரியும். சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அமைச்சர் அரசாங் கத்திற்காக அப்படித்தான் பதில் சொல்வார்கள். என்னைக் கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வேறு ஏதாவதை கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : அமைச்சர் அவர்கள் கண்டிப் பாக அப்படி ஆட்களைக் கொண்டு வரக்கூடாது சத்துணவு அமைப்பாளர்கள் என்ற வகையில் ஏதாவது அரசு உத்தரவைப் போடுவதற்கு முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலை வர் அவர்களே, அதனை உத்தேசித்து தான் அரசு பல்வகை உத்தரவு எண். 1693, பொது (முதலமைச்சர் குழந்தைகள் சத் துணவுத் திட்டம்) துறையில் 18—10—1983 அன்று சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள் மற்றும் அவர்களுக்குக் கீழ் பணியாற்றும் அத்தனை பேருக்கும் பொருத் தும் வகையில் எந்த சூழ்நிலையிலும் குடும்ப நல திட்டத்திற்கு

அவர்களைப் பயன்படுத்தக் கூடாது என்ற உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது அங்கே சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறார்கள். அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருந்தால் வேறு ஏதாவது காரணத்திற்கு வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பார்கள். அவர்கள் உறுப்பினர் அவர்களிடம் சொல்லும் போது இந்தக் காரணத்தைச் சொல்லியிருக்கலாம். ஆகவே, இதனை காரணமாக வைத்து யாரும் சஸ்பென்ட் செய்யப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இதற்காக யாரும் சஸ்பென்ட் செய்யப்படுவதில்லை என்று தெரிவித்தார்கள். இருப்பினும் எங்கள் பகுதியில் கூட குடும்ப நலத் திட்டத்திற்காக ஆட்களை அழைத்து வராத காரணத்தால் அங்கே ஆயாக்கள் மற்றும் பொறுப்பாளர்கள் போன்றவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்காலிக வேலை நீக்கம் என்ற அளவிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொள்ள அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குற்றச்சாட்டிற்காக அவர்கள் நீக்கப்பட்டிருக்க மாட்டார்கள். வேறு ஏதாவது தவறைச் செய்து அவர்கள் நீக்கப்பட்டிருப்பார்கள். ஆகவே, அந்தத் தவறு எப்படிப்பட்டது என்பது விசாரணை முடிந்ததற்குப் பிறகு தான் தெரியும். அப்போது தான் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் தற்காலிக பணி நீக்கம் செய்தவர்கள் அத்தனை பேரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த முடிவை அவர்களுடைய குற்றத்தினைப் பொறுத்து தான் எடுக்க முடியும்.

சென்னையில் பாதாள இரயில் திட்டம்

652—(*வினா எண். 7) திரு. என்.எஸ்.வி. சித்தன் மற்றும் திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பாதாள இரயில் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் பாதாள ரயில் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. ஆனால், சென்னை கடற்கரை ரயில் நிலை

யத்திலிருந்து மயிலாப்பூர் ஸ் வரையில் சுமார் 8.45 கிலோ மீட்டர் தூரத்திற்கு துரித இரயில் வண்டி விடுவதற்கான திட்டத்திற்கு மத்திய அரசு அங்கீகாரம் கொடுத்துள்ளது. திட்ட மதிப்பீடு 53.46 கோடி. இத் திட்டத்தின்படி சுமார் 3 கிலோ மீட்டர் வரை தரை மட்டத்திலும் மீதி தூரம் 18 அடி உயர மேல் மட்டத்திலும் துரித இரயில் வண்டி விடப்படும். இதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பாதாள ரெயில் அமைக்கிற திட்டம் இப்போது பரிசிலனையில் இல்லாவிட்டாலும் கூட, எதிர்காலத்திலாவது மீண்டும் இதனை எடுத்து பரிசிலிக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ? அதே போல இப்போதுள்ள துரித ரெயில் திட்டம் எப்போது துவங்கப்பட்டு, எப்போது அது நிறைவு பெறும் என்று அரசு கருதுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த பாதாள ரெயில் திட்டம் என்பது 5, 6 ஆண்டுகளுக்கு முன்னால் பத்திரிகைகளில் ஒரு மாறுபட்ட செய்தியின் அடிப்படையில் வந்தது. இப்போது எடுத்திருக்கிற இந்தத் திட்டத்தினை தான் ஆரம்பத்திலே பாதாள ரெயில் என்று செய்தி வந்து, அதன் தொடர்பாக இப்போது ஒரு குழப்பமே வந்திருக்கிறது. கடந்த முறை சட்டமன்ற மேலவையில் நான் பதில் சொல்லியதை கூட, ஆகாய ரெயில் என்றும், பறக்கும் ரெயில் என்றும் நான் சொன்னதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதன் மூலம் மக்களிடம் குழப்பம் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கத்தான் செய்கிறது. ஆகவே, இந்தத் தடவை பத்திரிகையாளர்கள் தயவு செய்து சரியான விவரங்களைப் பொதுமக்களுக்குத் தருகிற அளவிற்கு போடுவார்கள் என்று நம்புகிறேன். இந்தத் திட்டத்தின் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இது 1990-ம் ஆண்டில் முடியும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் கூடாது என்று சொல்வார்கள். ஆகவே, இந்தக் கேள்வியின் மூலம் என்னுடைய சிறிய சந்தேகத்தை போக்கிக் கொள்கிறேன். இந்த வினாவின் பொருள் போக்குவரத்துத்துறையைப் பற்றியதாகும். இது எப்படி நம்முடைய மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களின் பொறுப்பிற்கு வந்தது ? அடுத்த படியாக, இந்தத் திட்டத்திற்காக தமிழக அரசு எந்த அளவிற்குப் பணம் செலவு செய்கிறது ? இதிலே தமிழக அரசினுடைய பங்கு என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : துணைத் தலைவ அவர்களே, எம்.எம்.டி.ஏ. பிரிவினைச் சார்ந்தவர்கள்தான் இந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். வரைபடங்கள், போடுவதெல்லாம் நம்முடைய துறையைச் சார்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநில அரசின் பங்கு என்னவென்று கேட்டுள்ளார்கள். நாம் நிலத்தை இலவசமாகக் கொடுக்கிறோம். அந்த நிலத்தினுடைய மதிப்பு 25 கோடி ஆகும். அந்த அளவிற்கு மாநில அரசு அதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறது.

சிவகாசித் தொகுதியில் வீட்டு வசதி

653—(*வினா எண். 976) திரு. வி. பாலகிருஷ்ணன்; மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

(இ) நில ஆர்ஜிதம் பணி முடிந்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நில ஆர்ஜிதம் முடிந்தவுடன்.

(இ) இல்லை.

திருமுல்லை வாசலில் மீன்பிடித் துறைமுகம்

657—(*வினா எண். 2178) திரு. க. பாலசுப்பிரமணியன்; மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தாலுக்கா திருமுல்லைவாசல் என்ற இடத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்காகும் செலவு எவ்வளவு ?

(இ) அதன் பணி எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. ; (ஆ) மற்றும் (இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் உள்ள திருமுல்லைவாசல் என்ற இடம் கடற்கரை ஓரத்திலே உள்ள பண்டைய காலத்திலே மிகப் பெரிய துறைமுகப் பட்டினமாக இருந்த ஒரு சிறு கிராமம் ஆகும். அங்கே தற்போது உப்பநார் என்ற ஒரு பெரிய ஆறு கடலில் கலக்கிற இடமாக இருக்கிற காரணத்தால், சென்ற தடவை மீனளத்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு கலைமணி அவர்கள் அங்கே ஒரு திட்டம் இருக்கிறது என்றும், விரைவில் அது செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அப்படி ஒன்றும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதிகாரிகளிடத்திலே தொடர்பு கொண்டு ஒரு நல்ல இடமாக இருக்கிற காரணத்தால், மீண்டும் பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடல் கொந்தளிப்பு, மற்றும் கடுமையான பருவ நிலை ஆகிய காரணங்களால், மீன் பிடிப் படகுகள் பாதுகாப்பாக தங்குவதற்குப் பொருத்தமான இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் இறங்கு தளம் மத்திய அரசின் உதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன. சென்னை மாநகர துறைமுக அலுவலர், தஞ்சை மாவட்டத்தில் உள்ள சீர்காழி தாலுக்காவில், திருமுல்லைவாசல் என்ற கிராமத்தில் மீன் பிடிப் படகுகள் தங்குவதற்கு சிறு தங்கு தளம் அமைக்கலாமா என்று பரிந்துரைத்து இருந்தார்கள். அதனுடைய அடிப்படையில் திருமுல்லைவாசலில் சிறு மீன்பிடி தங்கு தளம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்த போது, அங்கே அடிக்கடி முகத்துவாரத்தில் மண் மூடிக் கொள்வதாலும், ஆண்டின் பெரும்பகுதி மண்வாருவதற்கே செலவழிக்க வேண்டியிருப்பதாலும், படகுகளுக்கான தங்கு தளம் அமைக்கும் சாத்தியக் கூறு இல்லை எனவும், சிறிய தங்கு தளம் செய்தால், ஆர்ஜிதம் செய்வதற்கு அதிகமான செலவு ஆகும் எனவும், பொங்கலூர் மைய அரசு கரையோர மீன்துறை பொறியியல் நிலைய இயக்குநரோடு செய்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதால், திருமுல்லை வாசலில், சிறிய தங்கு தளம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உப்பநார் என்ற ஆறு கடலில் கலக்கிற நேரத்திலே எதிரே வருகின்ற அணைகளில் அந்த மண்கள் கொண்டு வந்து அந்த ஆறு தூர்ந்து விடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட மீன் பிடித் துறைமுகங்கள் கட்டுவதன் மூலமாக ஆற்றிலிருந்து தாராளமாக தண்ணீர் செல்வதற்கு வழிவகை செய்ய முடியும். வெள்ள நேரங்களில் அந்த ஆற்றினால் மக்களுக்கு ஏற்படுகின்ற சிரமத்தையும் குறைக்க முடியும். ஆகவே,

ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்று சொல்வதைப்போல மீன் பிடித்துறைமுகம் கட்டுவதால், தாராளமாகத் தண்ணீர் கடலிலே கலப்பதற்கும், அந்தக் கடலிலே இருக்கிற மண் வந்து, ஆற்றின் குறுக்கே தடுக்காமல் அதை மாற்று ஏற்பாடு செய்வதற்கும் மீன் பிடிப் படகுகள் அந்த ஆற்றுக்குள்ளே புயல் காலங்களில் பாது காப்பாக இருக்க வாய்ப்பு இருக்கும். ஆகவே, மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அல்லது சம்பந்தப்பட்ட அதி காரிகளிடத்திலே தகவலை அனுப்பி அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : துணைத் தலை வர் அவர்களே, இதை ஆய்ந்த பொறியியல் துறையைச் சேர்ந்த மற்ற அதிகாரிகளும் அத்தனை பேர்களும் அந்த இடத்திலே தங்கு தளம் கட்டுவதிலே சிரமம் இருக்கிறது என்று சொன்னார் கள். ஆண்டின் பெரும் பகுதி மண் வாருவதிலே அதிகமான அளவிற்கு செலவு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த இடத்திலே அமைப்பது பற்றி யோசிப்பதற்கு வாய்ப்பில்லை. வேறு ஏதாவது தகுதியான இடம், ஆண்டின் பெரும்பகுதி மண் வந்து தூர்ந்து போகாத இடமாகப் பார்த்து உறுப்பினர் அவர்கள் சொன்னால், அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

ஆதி திராவிட மாணவர் விடுதிகள்.

654—(*வினா எண். 1266) திரு. கோ. இரகுபதி : மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள I.A.S. மற்றும் I.P.S. பயிற்சிக் கென ஆதி திராவிட மாணவர்கள் பயிலும் விடுதி மிகவும் பழு தடைந்த நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதனை மாற்ற அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பயிலும் மாணவர்கள் விடுதி மோசமாக இருப்பதால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி வேறு இடம் பார்ப்பதற்கு ஆவன செய் யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—10)

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவர்கள் ஏழை பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்களை இதில் சேர்க்க

வேண்டும் என்று சொன்னால் ஆண்டு வருமானம் 1,300 ரூபாய் க்குக் குறைவாக இருக்கிறது. என்ற சான்றிதழ் வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒரு நாளைக்கு தினக்கூலி 8 ரூபாய் என்று எடுத்துக் கொண்டாலும் கூட ஒரு ஆண்டுக்கு 3 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. எனவே, இந்த 1,300 ரூபாய்க்கு குறைவாக என்று இருப்பதை ரூபாய் 3 ஆயிரத்திற்குக் குறைவாக இருந்தால் சான்றிதழ் வழங்கலாம் என்று அரசு செய்யுமா எனஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் ஆண்டு வருமானத்தைப் பொறுத்த வரையில் 12 ஆயிரம் ரூபாயாகத்தான் போடப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற விடுதி அனாதைப் பிள்ளைகள் விடுதியாக இருக் கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. பி. எம். நன்கலெல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெல்லியில் ராவ் இன்ஸ்ட்டிடியூட் என்ற ஒரு இன்ஸ்ட்டிடியூட் இருக்கிறது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்றவற்றிற்கு பயிற்சி கொடுப்பதற்காக அது இருக்கிறது. பிற்பட்ட மாணவர்கள் டெல்லியில் தமிழ்நாடு அவுசில் தங்கிக் கொண்டு அந்த ராவ் இன்ஸ்ட்டிடியூட்டில் படித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பயிற்சி நிலையத்தில் தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் அனுப்பி ஐ.ஏ.எஸ்., ஐ.பி. எஸ். கோச்சிங் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கூட அந்த ராவ் பயிற்சி நிலையத்திற்கு அனுப்புவதற்காக நாங்கள் அறிக்கை அனுப்பியும் யாரும் வரவில்லை என்ற காரணத்தால் இந்த ஆண்டு யாரையும் அனுப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிப்புக்கு பயிற்சி கொடுக்கும் விடுதி மிகவும் பாழ டைந்த நிலையில் இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டார்கள். அதற்கு வேறு இடத்தைப் பார்ப்பதாகச் சொன்னார்கள். வேறு இடம் பெறும் வரையில், மோசமாக இருக்கும் அந்தக் கட்டிடத்தை உடனடியாகப் பழுது பார்த்து, பார்ப்பதற்கு நல்ல கட்டிடமாக இருக்கும் வகையில் செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடத்தை நானே நேரடியாகப் போய்ப் பார்த்தேன். இருந்தாலும் கட்டிடச் சொந்தக்காரரும் அதைக் காலி செய்ய வேண்டும் என்றும், கட்டிடம் கொடுக்க மாட்டேன் என்றும் சொல்லிக்கொண்டு இருக்கிறார். இப்போது இருக்கின்ற அந்தக் கட்டிடத்திற்கு வாடகையாக 2,000 ரூபாய் கொடுத்துக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு வேறு இடத்தை எங்காவது பார்த்துக் கொடுப்பார்களானால் நாங்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் சைதாப்பேட்டையில் இருக்கின்ற அந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.க்குப் பயிற்சி கொடுக்கின்ற விடுதியில் தினமும் மூன்று வேளையும் அசைவ உணவு போடுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த அசைவ உணவு என்ன என்று பார்த்தால் கரப்பான் பூச்சியும், பல்லியும் போடுவதாகச் சொல்லப்படுகிறது. இப்படி ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.க்குப் பயிற்சி பெறக் கூடியவர்களுக்கு-இந்த நாட்டுக்கு முக்கியமானவர்களாக இருக்கக் கூடியவர்களுக்கு-இப்படி கரப்பான் பூச்சியும், பல்லியும் இல்லாத உணவாக, தரமான உணவாக வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் போய்ப் பார்த்தபோது கரப்பான் பூச்சி, பல்லி எதுவும் இல்லை, நன்றாக இருந்தது. அப்படி இருந்தால் ரிப்போர்ட் கொடுப்பார்களேயானால் அதன் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.-க்கு பயிற்சி அளிக்கும் நிலையங்களை மாவட்டத் தலை நகரங்களில் அமைப்பதற்கான வாய்ப்பு உண்டா ? திருச்சி மாவட்டத்தில் ஒரு நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது போன்ற ஒரு திட்டம் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து

கொண்டு அதிக அளவுக்குத் தேர்ச்சி பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசு அதற்கு என்று தனியாக ஒரு முயற்சி எடுத்து ஒரு சிறப்புப் பயிற்சியை அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் முன்னேறுவதற்கு அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு என்றுதான் தனியாக ஒரு அமைப்பு வைக்கப்பட்டு அதில் தனியாக ஆசிரியர்கள் போடப்பட்டு நடத்தப்பட்டுவருகிறது. அதில் மாணவர்கள் தேறவில்லை என்றால் அது மாணவர்களுடைய தகுதியைப் பொறுத்தது. அதற்கு அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பெற்றோர் ஆண்டு வருமானம் 6 ஆயிரம் ரூபாய் என்று சொன்னார்கள். மத்திய அரசில் அதை 12 ஆயிரம் ரூபாய் என்று வைத்து இருக்கிறார்கள். எனவே, இங்கும் அந்த 6 ஆயிரம் ரூபாய் என்று இருப்பதை 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதற்கு அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது ஆண்டுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சிக்கென ஆதி திராவிட மாணவர்கள் எத்தனை பேர் சேர்க்கப்படுகிறார்கள் ? அப்படிச் சேர்க்கப்படுகிற மாணவர்களில் எத்தனை பேர் மத்திய அரசின் தேர்விலே தேர்ச்சி பெறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், இதற்கென தனிக் கேள்வி போட்டால், விளக்கமாகப் பதில் அளிக்கப்படும்.

திரு. வி. பி. நிந்தன் : அவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடம் ஒரு கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். வீடு எடுத்துக் கொள்கிற அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. சென்னை நகரத்திலே, எத்தனையோ இடங்களிலே, அவிவான வாடகையிலே பல இடங்களில் வீடுகளை

[1985 ஜூலை 15

அரசு எடுத்து, சொந்தக்காரர்களிடம் மன எரிச்சல், ஆத்திரம் இருந்தாலும், எடுத்து பல பணிகளுக்குப் பயன்படுத்தப் படுகிறது. ஏன் இப்படிப்பட்ட அவசியமான பணிக்கு, மாநில அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி, நல்ல இடமாக ஒரு இடமோ, இரண்டு இடமோ எடுக்கக் கூடாது என்று கேட்க நான் ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது, ஹாஸ்டலுக்கு வீடு கேட்கிறார்களா, அல்லது ஆதி திராவிட மக்களுக்கா என்பது புரியவில்லை. ஆஸ்டலுக்கு என்றால், ஆஸ்டலுக்குக் கொடுப்பதற்கு, நாம் அரசிலிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் ஆவன செய்யப் படும் என்று கூறிக் கொள்கிறேன்.

655— (*வினா எண் 1593): திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரியில் உள்ள லோகநாதன் நாராயணசாமி அரசினர் கலைக்கல்லூரியில் படிக்கும் ஆதி திராவிட மாணவர்களுக்கென விடுதி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொன்னேரி, லோகநாதன் நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரி தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி கட்டும் திட்டம் தற்போது இல்லையென்றாலும், தற்போதுள்ள அந்தத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள், வாடகை கட்டிடங்களில் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதால், அவர்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, விடுதியினை விரைவாகக் கட்ட வேண்டிய அவசியம் இருப்பதை உணர்ந்து, வருகிற ஆண்டிலாவது, விடுதியைக் கட்ட நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், இந்த ஆண்டு அது பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

85 ஜூலை 15]

மருநூத்து ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

656— (*வினா எண். 1690)—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன் மருநூத்து ஆதி திராவிடப் பொதுமக்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகள் சரியில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை மாற்றி புதிய வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : துணைத் தலைவர் அவர்களே, (அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன் மருநூத்து ஆதி திராவிடர்களுக்கு அரசுடைய வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருநூத்து கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு 20 வீடுகள் கட்டி, அதிலே அவர்கள் குடி போக முடியாத நிலைமையிலே இடிந்து போய் இருக்கிறது என்பது நான் நேரடியாகப் போய் பார்த்த விஷயம். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். குடியே போக முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். எனவே, அதைப் பரிசீலனை செய்து, மீண்டும் நல்லபடியாகக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு சின்னாளப்பட்டி வீடு கூட்டுறவு கடன் வசதி சங்கத்தின் மூல மாக 20 பேருக்கு அங்கே கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்திலே பழுது அடைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 வீடுகள் என்ற முறையிலே அரசாங்கம் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறது. இதிலே ஜனத் தொகை அடிப்படையிலே இன்னும் 20 வீடுகள் கட்டி, 40 வீடாக உயர்த்தித் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 15

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமையைப் பொறுத்து, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலட்டாற்றின் குறுக்கே அணை.

658—(*வினா எண். 448): திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முகவை மாவட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

(இ) திட்ட மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசப் : துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சுமார் 1,914 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். உணவு உற்பத்தி 2,417 டன்கள் ஆகும்.

(இ) ரூபாய் 1,085 இலட்சம்.

(முற்பகல் 10-20).

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்டுகின்ற வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும், எப்பொழுது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு விடையளிக்கின்ற நேரத்தில் சொன்னதைப்போல, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில்தான் உள்ளது ; பரிசீலனை முடிந்த பிறகு உரிய நடவடிக்கைகள் எப்பொழுது மேற்கொள்ளப்பட முடியுமோ அப்பொழுதுதான் மேற்கொள்ளப்பட முடியும். எந்த நேரத்தில் மேற்கொள்ளப்பட முடியும் என்பதைப்பற்றி தற்போது சொல்ல முடியாத நிலையில் அரசு இருக்கிறது.

1985 ஜூலை 15]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்ட வேலையை ஆரம்பிக்கின்றபொழுது அந்தப் பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்க்கின்ற அளவிற்கு இந்த அணைக்கட்டு கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்தில், திட்டமாக அமைக்கின்ற நேரத்தில் பாசனத்தின் நீர் வெகுவாக இதனால் முழுக்க அடைக்கப்படும் என்ற நிலை ஏற்பட்டதை அனுசரித்து இதை அணைக்கட்டுத் திட்டமாக மாற்றத் தீர்மானித்தது. அதற்காக 294.5 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் வெறும் பாசன உறுதிக்காக சுமார் 3 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை மேற்கொள்வது தேவையா என்ற வினாவை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் எழுப்பினார். அந்த அடிப்படையில் இது மாற்றியமைக்கப்பட்டு, தற்போது நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரவர்களுடைய ஆணைக்கிணங்க குறைந்தபட்சம் குடிநீருக்குப் பயன்படும் வகையில் இத் திட்டத்தை மாற்றியமைத்து செலவைக் குறைக்க முற்படலாம் என்று முதல்வரவர்கள் பிறப்பித்திருக்கின்ற ஆணைக்கிணங்க தற்போது உள்ளாட்சித் துறை அதைப் பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவிரியிலே தண்ணீர் திறக்கப்பட்டு மேட்டூரிலிருந்து வந்துகொண்டு இருக்கிறது. கிராண்ட் அணைக்கட்டில் ஏறக்குறைய விவசாயத்திற்கு 2,500 கோடி கன அடி தண்ணீர் விடப்பட வேண்டும் ; ஆனால், 2,000 கோடி கன அடி தண்ணீர் தான் விடுகிறீர்கள். அதைப்போல, காவிரியாற்றில் 6,000 கோடி கன அடிதண்ணீர் விடப்பட வேண்டும் ; ஆனால், 2,600 கோடி கன அடிதான் தண்ணீர் விடுகிறீர்கள். இப்படி கிராண்ட் அணைக்கட்டில் 80 சதவீதமும், காவிரியில் 40 சதவீதமும் தண்ணீர் விட்டால் அந்தத் தண்ணீர் எப்படி ஆற்றில் ஓடி, வாய்க்கால்களில் பாய்ந்து நிலத்திற்கு வந்து விவசாயம் செய்ய முடியும் ? ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், காவிரியில், விவசாயத்திற்கு நிறைவு செய்யும் அளவிற்கு இல்லாவிட்டாலும் விதை வைக்கின்ற அளவிற்காவது தண்ணீர் விடுவதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் இங்கே மலட்டாற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் வளம்

கொடுக்கும் அன்னை காவிரியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் தனியாக, சிறப்பான முறையில் பதில் வழங்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. தகவல் கோரல்.

(அ) காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழா.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய மூத்த கட்சியாக விளங்கக்கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கம் தன்னுடைய நூற்றாண்டு விழாவினை இன்றைக்குச் சென்னையிலே கொண்டாடிக் கொண்டிருக்கின்றது; பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பொன்னான பிறந்த நாளையும் மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடிக்கொண்டிருக்கின்றது. பாரதத்தின் இளைய பிரதமர் மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்கள் இந்த விழாவிலே கலந்துகொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த நிகழ்ச்சிக்கு நம்முடைய அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அவை முன்னவரவர்களைக் கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விழாவிற்கு வாழ்த்து சொல்வது பற்றித் தெரிவித்தார்கள். ஒரு அமைப்புக்கு வாழ்த்துச் சொல்லுங்கிற மன்றமாக இதை மாற்றக் கூடாது. அது ஒரு அரசியல் கட்சி. (குறுக்கீடு) சுதந்திரம் வாங்கியது என்றால் எனக்கும் அதிலே பங்கு உண்டு. ஆகவே, நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், அரசியல் கட்சியின் மாநாட்டிற்கு வாழ்த்து கொடுக்கின்ற மன்றமாக இதை மாற்றக் கூடாது என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மூத்த கட்சி என்று சொன்னேன். நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற கட்சி ; இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடியது அந்தக் கட்சி. இப்படி வேறு எந்தக் கட்சிக்கு வந்தாலும்கூட சொல்லலாம், எனவே, இதில் கட்சி பாகுபாடு இல்லை.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பள்ளி ஆசிரியர்கள் 11–ஆம் தேதி மறியல் போராட்டம் நடத்தி 106 பேர் கைதாகியிருக்கிறார்கள்; அடுத்த தினம் 1251 பேர் இத்தகைய தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ எடுத்துக் கொள்ள நோட்டீஸ் கொடுங்கள். திடீரென்று கேட்டால் அமைச்சர் எப்படி பதில் சொல்வார்?

(இ) இரெயில் நிலையத்திலிருந்து உறுப்பினர்கள் விடுதிக்கு வர ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மறுப்பது

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் துணைத் தலைவர் திரு. சித்தன் அவர்கள் சொன்ன மாதிரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சொல்லலாம் 100 ஆண்டுக்காலம் வேறு எந்தக்கட்சியுமே இருந்ததில்லை. அதைச் சொல்வதிலே தடங்கல் என்றால் விட்டு விடுகிறேன்.

நாங்கள் எல்லாம் எம். எல். ஏக்கள். சென்னைக்கு வரும் போது பாண்டியன் எக்ஸ்பிரசிலே அல்லது அடுத்த வண்டியிலே இறங்கி, ரெயில்வே ஸ்டேஷனில் ஆட்டோவை, டாக்சியை அணுகினால் ஒருவர் கூட வர மறுக்கிறார். ஆஸ்டலுக்கு வர மாட்டோம்' என்று, சாமான்களை வைத்த பிறகு கூட எடுத்து வெளியிலே போட்டு விடுகிறார்கள். அது மிகவும் கடுமையாகக் கண்டிக்கத்தக்க ஒன்று. நாங்கள் ரூ. 10 கொடுக்க வில்லை, ரூ. 12 ஆகக் கொடுக்கிறோம். ரூ. 4 ஆகக் கூடிய இடத்திலே ரூ. 8 கொடுக்கிறோம். அப்படியும் வர மறுக்கிறார்களே, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன செய்ய இருக்கிறார்கள் ? எங்களுக்குக் கேவலமாக இருக்கிறது. எங்களுடைய பரிதாபகரமான நிலையை உணர்ந்து, நடவடிக்கை எடுத்து, இதற்கு ஏதாவது வழிவகை காண்பார்களா?

மாண்புமிகு திரு. ஈ. முத்சுவாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே இப்படிப்பட்ட புகார்கள் தனிப்பட்ட முறையிலே வந்து பல நடவடிக்கைகளை நாங்கள் கடுமையாக எடுத்திருக்கிறோம். இருந்தாலும் சில இடங்களிலே அப்படிப் பட்ட தவறுகள் நடக்கின்றன என்பதை நான் மறுப்பதற்கில்லை ; தொடர்ந்து அந்தக் கடுமையான நடவடிக்கையை அமுலாக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. குறிப்பாக, ரெயில்வே நிலையங்களிலே, அது எக்மோர் நிலையமாக இருந்தாலும் ச , சென்ட்ரல் நிலையமாக இருந்தாலும் சரி அங்கே கடுமையாக அதை அமலாக்க வேண்டுமென்ற உணர்விலே, அதற்கு மேல் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த உணர்வையும் சேர்த்து நாங்கள் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

(திரு. சு. முத்துசாமி) [1985 ஜூலை 15

ஒன்றை மட்டும் வேண்டுகோளாகப் பலமுறை இந்த மன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன். இப்படிப் பொது மக்களுக்கு, குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட பிரச்னைகள் உருவாகின்ற நேரத்தில், நாங்கள் அதன்மீது நடவடிக்கை எடுக்கின்றபொழுது, அதிலே தொழிற்சங்கங்கள் என்ற பெயரால், அரசியல் கருத்துக்கள் என்று வருகின்ற பொழுது, இங்கே நீங்கள் சொன்னீர்களே, அந்தப் பரிதாப நிலைமை எங்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

ஒரு முறை கூட கடுமையாக நடவடிக்கை எடுத்து, 10 நாட்கள் அந்த வண்டிகள் நிறுத்தப்பட்டன. அப்போது, 15,000 பேர்கள் ஊர்வலமாக வந்தார்கள். ஊர்வல மாக வந்தவர்கள் யார் என்று பார்த்தால், அங்கே எல்லா அரசியல் கட்சிகளுடைய கொடிகளும் பறந்தன. எனவே, அந்தச் செல்வாக்கு வேண்டுமென்பதற்காகவோ அல்லது அவர்களைத் தங்கள் பக்கம் இழுக்க வேண்டுமென்பதற்காகவோ நடவடிக்கையிலே இறங்காமல், அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பை நீங்கள் தருவீர்க ளானால்--இங்கே ஒவ்வொரு கட்சியிலும் சட்டமன்ற உறுப் பினர்கள் இருக்கிறீர்கள். உங்கள் கட்சியிலே சொல்லி, அந்த ஒத்துழைப்பைத் தருவீர்களானால்—கடுமையான நடவடிக்கை எடுத்து, நிச்சயமாக நாங்கள் எதிர்பார்க்கிற அளவுக்குத் திருத்த முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதை யாரும் குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ளாமல் வேண்டு கோளாக எடுத்து அந்த ஆதரவைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(ஈ) மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம் வழங்குதல்

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அரசிடமிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பள்ளிக்கூட மாணவர்களுக்கு 30-6-1985-க்குள் புத்தகம் கொடுத்து விடுவோம் என்று சொன்னார்கள். இப்பொழுது பரவலாக பள்ளிக்கூட மாணவர் களுக்குப் புத்தகம் கிடைக்காமல், ஜூலை 15-ஆம் தேதி வரை, ஆதிதிராவிடர் நலத் துறையாக இருந்தாலும், கல்வித் துறையாக இருந்தாலும் நான் நேரடியாகப் பார்த்தது, இன்னும் கிடைக்க வில்லை.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கொடுத்ததாக அமைச்சர் ஸ்டேட்மென்ட் கொடுத்தார். நீங்கள் கொடுக்க வில்லை என்று சொன்னால், என்றைக்குக் கொடுத்தீர்கள் என்று எழுதிக் கேளுங்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர் இப் பொழுது இல்லை. திடீர், திடீரென்று கேட்டால், எப்படிப் பதில் கொடுக்க முடியும்?

1985 ஜூலை 15]

(உ) தனியார் விளம்பரப் பலகைகள் அரசு மேற்கொள்ளுதல்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் கொள்கை நிலைமையிலே ஏற் பட்டிருக்கிற தடுமாற்றம் பற்றி ஒரு விளக்கம் தெரிய வேண்டு மென்பதற்காகத்தான் ஒரு விவரத்தைக் கேட்க விரும்புகிறேன். சில தினங்களுக்கு முன்னால், இதே பேரவையிலே தனியாரிட மிருந்து விளம்பரப் பலகைகளை மேற்கொள்ளுவதற்குரிய சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை நாம் அறிவோம். ஆனால், கடந்த சில தினங்களாக, தமிழ்நாடு அரசு நிறுவனத்திற்குச் சொந்தமான டிட்கோவின் தமிழ்நாடு கெமிக்கல்ஸ் ப்ராடக்ட்ஸ் நிறுவனம் — காரைக்குடியில்—விற்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது....)

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை பல்லாவரம் மலைப் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ம. ஆபிரகாம், மா. மணிமாறன், ஆ. நடராசன், ப.பொன்னுரங்கம், கு. சுப்பராயன், பொ. உத்திராபதி, கு. ரமணி, ஜே. ஹேமச் சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, எஸ். இராசா ராமன், துரை கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ''3-7-1985 விடியற்காலை 3-30 மணிக்கு திருசூலம் என்ற இடத்தில் அண்ணா அரிசன சொசைட்டியில் கல் உடைப்பதற்காக வைத்துள்ள தோட்டா வெடித்து ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதம், பொருள் சேதம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. ம. அபிரகாம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வர் அவர்களே, கடந்த 3-7-1985 அன்று விடியற்காலை 3-30 மணி அளவில் திருசூலத்தில் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற குவார்ட்டர்சில் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. அந்த குவார்ட்டர்ஸ் எல்லாம் குடிசை வீடுகள். அங்கே தீப்பற்றி எரிந்து, பரவியிருக்கிறது. எட்டுக்கு எட்டு அளவுள்ள குடிசைகளை இறுதியாக வந்து பார்க்கும்போது, பயங்கரமான வெடி வெடித்து, சத்தம்

வந்திருக்கிறது. அந்தக் குடிசைகளுக்குக் காவலாளியாக இருந்த பூமாரி என்பவர் கிட்டத்தட்ட 20 அடி தூரத்திற்கு அப்பால் தூக்கி எறியப்பட்டு, பிணமாகிவிட்டார். அது மட்டுமல்லாமல் தீயை அணைப்பதற்காக சுற்றியிருந்த மக்கள் வந்து கூடியிருக்கிறார்கள். கல் உடைக்கும் தொழிலாளர்கள் அவர்கள். அந்தக் கல் உடைக்கும் தொழிலாளர்களில் 22 பேர்களுக்குமேல் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். 9 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, அவர்களுடைய உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. மேலும் 22 பேர்கள் புற நோயாளிகளாக இருக்கிறார்கள்.

அந்த வெடி விபத்து நடப்பதற்குக் காரணம், கல் உடைக்கும் தொழிலாளர்களுக்காக அண்ணா அரிசன சொசைட்டி ஒன்று அங்கே இருக்கிறது. அதனுடைய தலைவர் அந்த சொசைட்டிக்குக் கல் உடைப்பதற்காக வெடி மருந்துகளை வாங்குகிறார் என்று சொல்லி, சட்டவிரோதமாக அங்கே வெடிகளைக் குவித்து வைத்திருக்கிறார். அந்த வெடி மருந்துகளைச் சேகரித்து வைக்க அனுமதி பெறவில்லை. அந்த வெடி மருந்துகளைச் சேகரித்து வைக்கின்ற சட்ட விதிகளைக் கூடக் கையாளவில்லை. அது மட்டுமல்லாமல் அந்த வெடி மருந்துகளை எல்லாம் ஒரு குடிசையில் குவித்து வைத்திருக்கிறார். அந்த வெடிகள் எல்லாம் பாறாங்கல்லைப் பிளக்கின்றவை. நாங்கள் அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்கும்போது மக்களாகவே சில தகவல்களை எங்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அங்கே குவித்து வைத்திருந்த வெடி மருந்துகள் பற்றிய செய்திகளைக் கேட்டால் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. வெடிக்குண்டு 10 பெட்டிகள், ஒவ்வொரு பெட்டியிலும் 100 வெடிகள் வீதம் மொத்தம் 1000 வெடிகள் இருந்தன. வெடித் தோட்டாக்கள் அடங்கிய 3 பெட்டிகள் இருந்தன. ஒவ்வொன்றிலும் 250 வீதம் மொத்தம் 750 தோட்டாக்கள் இருந்தன. அதைப்போன்று அமோனியம் நைட்ரேட் என்று சொல்லப்படுகின்ற உப்பு நான்கு மூட்டைகள் வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் 12 வோல்டேஜ் மின்சக்தி திறன் கொண்ட வெடிகள் 400-க்குமேல் 16 பெட்டிகளில் வைத்திருக்கிறார்கள். அங்கே இருந்து வந்த வெடிச்சத்தம் மிகப் பயங்கரமாக இருந்தது. அந்தச் சத்தத்தை மேற்கே தாம்பரத்திற்கு அப்பாலுள்ள பகுதிகளிலுள்ள மக்களும் உணர்ந்திருக்கிறார்கள். அதைப்போன்று வடக்கே மாம்பலம் (தி. நகர்) வரையில் இருக்கிற மக்கள் எல்லாம் அந்தச் சத்தத்தை உணர்ந்திருக்கிறார்கள். இவ்வளவு பயங்கரமான வெடி விபத்திற்குக் காரணம் கண்ணி வெடிகளைக் கொண்டு வந்து அந்த சொசைட்டியின் தலைவர் அங்கே சேர்த்து வைத்திருக்கிறார். அண்மையில்தான் அதற்குப் பக்கத்திலே இருக்கிற விமான நிலையத்தில் வெடி விபத்து ஏற்பட்டு

பயங்கர சேதம் ஏற்பட்டது. இந்த வெடி விபத்தினால் பக்கத்திலே வீடு கட்டி, குடியிருக்கிறவர்களுக்குக் பயங்கரமான பீதி ஏற்பட்டிருக்கிறது.

இந்த வெடிகள் விற்பனை செய்வதற்கு, கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு என்று இருக்கிற அண்ணா அரிசன சங்கத்தின் தலைவர் திரு. சண்முகவேலு என்பவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சேகரித்து வைத்திருந்த வெடிமருந்துகள், வெடிகள் காரணமாகத்தான் இந்தப் பயங்கரமான வெடி விபத்து ஏற்பட்டிருக்கிறது. குடிசையில் ஏற்பட்ட தீ விபத்தினால் தீ பரவி, கல் உடைப்பதற்கு வைத்திருந்த வெடி மருந்துகள் வைக்கப்பட்டிருந்த குடிசைக்கும் தீ பரவி, வெடி மருந்துகள் தீப்பற்றி, இந்தப் பயங்கரமான சேதத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. பக்கத்தில் இருந்தவர்கள் எல்லாம் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள். கட்டிடங்களை எல்லாம் அப்படியே குலுக்கியிருக்கிறது ; சின்னாபின்னமாக உடைந்து சிதறியிருக்கின்றன. சுவர்கள் எல்லாம் பாளம், பாளமாக வெடித்திருக்கின்றன. அந்தப் பகுதியில் மையமாக ஏறத்தாழ 3,000 தொழிலாளர்கள் இந்தக் கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டவர்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் இப்போது வேலையில்லாமல் பட்டினியால் வாடுகிறார்கள். அது மட்டுமல்லாமல் அந்த வட்டாரத்தில் மற்ற தொழில்களும் நடக்கக் கூடாது என்ற தடை இருக்கிறது. மின் இயந்திரங்களை வைத்துக் கல் உடைக்கும் தொழிலும் மூடிக்கிடக்கிறது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் ஏறத்தாழ 2,000-க்குமேல் இருப்பார்கள்.

அதுமட்டுமல்ல. அந்தக் கற்களை அப்புறப்படுத்துகின்றவர்கள், அந்தக் கற்களை வெளியே கொண்டுபோய் விற்பனை செய்கின்ற முறையில் லாரிகளில் வேலை செய்பவர்கள், இப்படிப்பட்டவர்களை எல்லாம் கணக்கிட்டால் கிட்டத்தட்ட 8,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை இல்லாமல் அன்றாடம் ஒரு வேளை உணவு கூட இல்லாமல் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வெடி விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் இருக்கிறார்கள். அதே நேரத்தில் புறநோயாளிகளாகப் பலர் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் உரிய நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும். அந்தத் தொழிலாளர்களை உடனடியாகச் சந்தித்து அவர்களைப் பார்வையிட்டு அவர்களுக்கு வேண்டிய நஷ்டஈடு, வீடு கட்ட உதவி போன்றவற்றைச் செய்ய வேண்டும். இவற்றை உடனடியாகச் செய்து, நடுத் தெருவிலே உண்ண உணவு கூட இல்லாமல் நிர்க்கதியாக நின்றுகொண்டிருக்கின்ற அந்த மக்களை நீங்கள் காப்பாற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ம. ஆபிரகாம்] [1985 ஜூலை 15

அந்த வெடிகுண்டுகளை எல்லாம் கொண்டு வந்து சட்டத்திற்குப் புறம்பாக அறையிலே போட்டு வைத்திருக்கிறார் சொசைட்டியின் தலைவர். இப்போது வெடி விபத்துக்கள் ஏற்பட்ட நிலைமையினைப் பல இடங்களில் பார்க்கிறோம்; திருச்சியிலே பார்க்கிறோம்; மதுரையிலே பார்க்கிறோம். எனவே, அந்த வெடி குண்டுகளை எல்லாம் அப்படிப்பட்டவர்களுக்கு அந்த சொசைட்டியின் தலைவர் விற்பனை செய்கிறாரோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. இவர் நாட்டு வெடிகுண்டுகளை அறையிலே கொண்டு வந்து சேர்த்து வைத்திருக்கிறார். இவற்றை அரசு உடனடியாகக் கவனிக்க வேண்டும். இனிமேல் கல் உடைக்கின்ற தொழிலாளர்களுக்கு அந்த வெடி குண்டுகளைக் கொடுப்பதைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் மைனிங் டிப்பார்ட்மென்ட் மூலமாக அரசாங்கமே கொண்டுவந்து வைத்து, அரசாங்கமே அதற்கென்று ஒரு அலுவலகத்தை வைத்து அரசாங்கத்தின் மூலம் அவற்றை ஸ்டோரேஜ் செய்து அப்போதைக்கப்போது அந்த மருந்துகளை சப்ளை செய்யக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அந்த மக்கள் வாழ வழிசெய்ய வேண்டும். அரிசன சொசைட்டி என்ற பெயரால் அரிசனத் தொழிலாளர்களைக் கொண்ட அந்த சொசைட்டிகளில் யார் யாரோ தலைவர்களாக இருந்துகொண்டு அந்தத் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி ஏறக்குறைய ஏழெட்டு ஆண்டுக்காலமாக அந்தத் தொழிலாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இதன் காரணத்தால் பல இலட்சக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானத்தை அந்த சொசைட்டியின் தலைவர் வரவிடாமல் செய்து இருக்கிறார்.

இதே செய்தியை இந்த மன்றத்தில் கலைஞர் அவர்கள் ஒரு ஆண்டிலே எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தத் தலைவரும், அவரோடு உடன்பாடு கொண்டிருப்பவர்களும் சேர்ந்து கொண்டு அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய தொகையைக் கூடக் கட்டாமல் செய்திருக்கிறார்கள் என்ற செய்தியினை இதே மன்றத்தில் கலைஞர் அவர்கள் சொல்லி குற்றம் சாட்டினார்கள். அதன்பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை விசாரித்து ஏறக்குறைய 30 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக அவருக்கு ஃபைன் போட்டிருக்கிறார்கள். ஒரு முறை கட்டி இருக்கிறார்; தொடர்ந்து அடுத்த ஆண்டிலே அந்த ஃபைனைக் கட்டாமல் அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்.

மலைகளைப் பொறுத்தவரையில், அரிசன சொசைடிக்கென்று ஏறக்குறைய 30 ஏக்கர் எடுத்திருக்கிறார்கள். ஆனால் 50 ஏக்கரை அரசாங்கத்திற்குத் தெரியாமல், லைசன்ஸ் இல்லாமல்

எடுத்துக்கொண்டு அந்தக் கல்லை உடைத்து, அரிசன சொசைட்டி என்ற பெயரால் ஏழைத் தொழிலாளர்களை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கிறார்கள், தனி நபர்கள். அந்த வகையில் அந்தத் தனி நபர் கிட்டத்தட்ட ஒரு கோடீஸ்வரராகக் கூட வளர்ந்திருக்கின்ற காரணத்தால், இந்த நாட்டை அழிக்கக்கூடிய பயங்கரமான நாட்டு வெடி குண்டுகளைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்குத் தொழில் தாருங்கள். அந்தத் தொழிலாளர்களுக்கான சொசைட்டிகளைப் பொறுத்தவரையில், அரிசனத் தலைவர்களைச் சேர்த்துக்கொள்கிற வகையில், அவர்களுக்கு நீங்கள் வாய்ப்பு தரவேண்டும். எனவே இது குறித்து விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீ விபத்துக்கள் என்பது இயற்கையாக வந்தது என்ற காலம் மாறி இப்போது திடீர் தீடீர் என்று குண்டு வெடித்து அதன்மூலமாகவும் இப்படிப் பல்வேறு சந்தேகத்தை உருவாக்கக் கூடிய அளவுக்கு அதிகமாக இப்போது ஏற்பட்டு பரவி வருகின்றது. எனவே அரசு இதில் தீவிரமான நடவடிக்கை எடுக்க முயற்சிக்க வேண்டும். 2, 3 மாத காலத்திற்குள்ளாக சென்னையில் ஒரு பெரிய விபத்து மூர் மார்க்கெட்டில்; பிறகு திருச்சியிலே என்று தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. 3-7-1985-ல் சென்னைக்கு அருகில் திரிசூலத்தில் பெரியதொரு வெடி விபத்து ஏற்பட்டு அந்தத் தெரு முழுமையும் சுக்கு நூறாகத் தூக்கி எறியப்பட்டு, ஒரு மனிதரும் தூக்கி எறியப்பட்டு பயங்கரமான அளவுக்கு ஒரு தீ விபத்து ஏற்பட்டு இருக்கின்றது.

(முற்பகல் 10-40)

தீ விபத்து ஏற்படுகிறபோது எல்லாம் அரசாங்கம் குறைந்த பட்சம் உதவியை அவர்களுக்கு ஏதோ செய்து வருகிறதே தவிர, அவர்கள் ஒவ்வொருவரும் வைத்திருந்த சிறு சிறு பொருள்களுக்கு ஈடாக, கஷ்டப்பட்டு சேமித்து வைக்கக்கூடிய பொருள்கள் தீயால் சேதம் ஆகிவிட்டால், அவை முழுமையும் கொடுக்கின்ற வகையில் உதவிகளைச் செய்ய முடியவில்லை.

ஆகவே இந்தத் தீவிபத்து என்பது இந்த சொசைட்டிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றவர், அதுவும் அரசினுடைய அனுமதி இல்லாமலேயே அதிகமான அளவில் வெடி மருந்தை வைத்து, அது வெடித்து ஒருவர் இறந்திருக்கிறார். 20 பேர்கள் அதிகமான தீ விபத்தால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரு

கிறார்கள். 22 பேர்கள் தீக்காயங்களுக்கு ஆளாகி வெளி நோயாளி களாக சிகிச்சை பெற்று மருத்துவ மனையை விட்டு அனுப் பப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ரூபாய்க்குச் சொத்துக் கள் சேதமாகியிருக்கின்றன.

இந்த விபத்திற்குக் காரணமாக இருந்தவர் யார் என்பதுதான் தெரிந்துவிட்டதே, அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுப்பதோடுகூட, அவர் எந்த அளவுக்கு அந்த சொசைட்டியை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்தமாக 8 ஆயிரம் தொழிலாளர்களைக் குறைந்த அளவுக்கு ஊதியத்தைக் கொடுத்து, அவர்களுடைய உழைப்பை அதிகமாகப் பெற்றுக் கொண்டு அந்த அதிக உழைப்பில் இருந்து கொள்ளை அடித்து பணத்தை சேகரித்து வைத்திருக்கும் பெரிய மனிதர் என்று சொல்லக்கூடியவரிடமிருந்து எந்த அளவிற்கு சொத்துக்கள் சேதமாகியிருக்கின்றனவோ, அந்த அளவிற்கு, ஈடு கொடுக்கக்கூடிய அளவிற்கு, அவரிடமிருந்து சொத்துக்களை யெல்லாம் அரசாங்கம் பறிமுதல் செய்து, பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு உரிய வகையில் சர்க்கார் நட.வடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால் இன்றைக்கு அரசு என்ன செய்கிறது என்றால், எங்கே தீயால் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்கு 200 ரூபாய் குடிசை கட்டிக் கொள்ளவும், 5 கிலோ அரிசி, ஒரு கிலோ மண்ணெண்ணெய் போன்றவற்றையும் இலவசமாக கொடுத்து வருகிறார்கள். இன் றைக்குக் கீற்றின் விலை, 100 கீற்றுக்கள் 90 ரூபாய்க்கு விற்கின்றன. குடிசை கட்ட வாங்கக் கூடிய கயிறும் அதிகமாக விலை ஏறியிருக் கிறது. மூங்கில், ஒரு மூங்கில் 20 ரூபாய் 25 ரூபாய், விற்கிறது, ஆகவே அரசு கொடுக்கும் இந்த 200 ரூபாயை வைத்துக் கொண்டு, ஒரு சின்னக் குடிசையைக் கூடப் போடமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே உங்கள் ஆட்சியில் இந்தத் தொகையை உயர்த்திக் கொடுத்தால்தான், எதிர் காலத்தில் இத்தகைய தீ விபத்து ஏற் படுகிற கட்டத்தில் அவர்களுக்கு, குறைந்தபட்சம் 500 ரூபாயாவது கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலிக்கும்.

அதேபோல அரிசி, மண்ணெண்ணெய் போன்றவற்றின் அளவையும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு இந்த விபத்தில் பாதிக்கப் பட்டிருக்கக்கூடியவர்களுக்கு உத்தரவாதமான வேலை கிடைப்ப தற்கும் அரசாங்கம் மாற்று ஏற்பாடு ஏதாவதுசெய்தாக வேண்டும். இவற்றை எல்லாம் முடிவு எடுப்பதற்காக அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்றுதான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானமே கொடுத்திருக்கிறோம். எனவே நான் அரசை கேட்டுக் கொள்வது யாரால் இந்த வெடிவிபத்து ஏற்பட்டு தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றதோ, அவர் மீது கடுமையான

136425
501
சென்னை 600 008

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தோடு இந்த 8 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் உத்தரவாதமான வேலை கிடைப்ப தற்கு ஏற்பாடு செய்து, அந்தக் குடும்பங்கள் நல்ல முறையில் வாழக்கூடிய அளவுக்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றிற்கு எல்லாம் சேர்த்து தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். ஆகவே இந்த விபத்தினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கும் அந்த தீவிபத்திற்கு யார் காரணமாக இருந்தாரோ அவர் மீது நடவடிக்கை எடுப்ப தற்கும், விவரமாக பேசுவதற்காக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு கோ. வீரய்யன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, சமீபத்திலே பல்லாவரத்திலே கல் உடைக்கக்கூடிய அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய வெடி விபத்து இன்றைக்கு நம்முடைய நாட்டில் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளில் ஒன்றாகி விட்டது. வெடி விபத்து என்பது அன்றாடம் நிகழக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருந்து கொண்டிருக்கக்கூடிய தற்போதைய சூழ்நிலையில், அதுவும் சமீபத்திலே தமிழகத்தை மிகப் பெரிய இடையூற்றுக்கு, அச்சத்திற்கு ஆளாக்கிய சென்னை விமான வெடி விபத்து நடந்திருக்கக்கூடிய சூழ்நிலையில், பல்லாவரத்திலே கல்உடைக்கும் பகுதியில் இந்த வெடி விபத்து ஏற்பட்டு, அதிலே ஒருவர் இறந்து, பலர் காயப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கக் பட்டிருக்கக்கூடிய, அதிலும் சிலர் தங்களுடைய உயிருக்கு ஆபத்து நீங்காமல் போராடிக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையில் இந்த வெடி விபத்து ஏற்பட்டிருக்கிறது.

அத்தோடு மட்டும் அல்லாமல், அந்தக் கல்லை உடைத்து பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும்படியான ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்தச் சம்பவத்தினால் அந்த வேலை நிறுத்தப் பட்டதால், பிழைப்பை நடத்தக் கூட முடியாத நிலையை அது ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு காரணமான அந்த வெடி மருந்து, அந்தப் பகுதியிலேயே ஒரு குடிசையில் வைக்கப்பட்டிருக் கிறது.

இந்த வெடிமருந்தை விற்கக்கூடியவர்கள் விதிமுறைகளை அனுசரித்து அவற்றை விற்றிருக்கிறார்களா? வாங்கியவர்கள் அவற்றைப் பாதுகாப்பாக வைக்கக்கூடியதில் விதிமுறைகளை அனுசரித்து இருக்கிறார்களா ? அந்த அளவிற்கு அவர்கள் அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருந்தார்களா ? இதற்கு காரணமானவர்கள் யார் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

[திரு.கோ.வீரய்யன்] [1985 ஜூலை 15

அடுத்தபடியாக இந்த வெடிவிபத்தினால் இறந்திருப்பவருடைய குடும்பத்தினருக்கும், மற்ற பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பத்தினர்களுக்கும் நிவாரணம் தர வேண்டும். இந்த நிகழ்ச்சியினால் அவர்கள் வேலை இழந்து மற்ற உடைமைகளை இழந்து அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும், இந்த வெடி விபத்திற்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு முன் வரவேண்டும். இந்த வெடி மருந்தை வாங்கியவர்கள் குவாரியில் கல் உடைக்க என்ற காரணத்திற்காக மட்டும் தான் வாங்கினார்களா? அல்லது இப்போது நாட்டிலே நடைபெறுகிற பல்வேறு பாதகமான நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்துவதற்காக திருட்டுத்தனமாக விற்பனை செய்யப்பட்டு வாங்கப்பட்டதா என்பதைப் போன்ற பிரச்சினைகளை விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடந்த 3-7-1985ம் தேதியன்று திருசூலம் என்ற இடத்தில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் வாழும் பகுதியில் வெடி விபத்து ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது. சுற்றி இருந்தவர்கள் பலத்த காயம் அடைந்திருக்கிறார்கள். பல்வேறு குடிசைகள் அந்தப் பகுதியில் தீக்கிரையாகி இருக்கின்றன. தாம்பரம் பகுதி வரையில் இந்த வெடி விபத்தின் பாதிப்பு பரவி இருக்கிறது. அந்தப் பகுதி இன்றையதினம் மயானம் போல காட்சியளிக்கிறது. அந்த வெடி மருந்துகள் எங்கேயிருந்து வந்தன ? இதனை யார் வாங்கினார்கள் ? இதனை விற்றவர்கள் யார்? இவற்றைத் தயார் செய்கிற லைசென்ஸ்தாரர் யார்? இது போன்ற விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும். இந்த வெடி மருந்துகளைத் தயார் செய்தவர்கள் மீதும், வாங்கியவர்கள் மீதும், விற்றவர்கள் மீதும் தக்க நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். காரணம் இதுபோன்ற நிகழ்ச்சிகள் இன்றைக்குத் தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தியா பூராவும் நடைபெற்று வருகின்றன. ஆகவே இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடரக்கூடாது என்பதற்காக அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இதன் காரணமாக தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் மூடப்பட்டிருக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள் இன்றையதினம் வேலை வாய்ப்பின்றி, உணவிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களாக இருந்தாலும், அந்தப் பகுதியில் வாழ்கிற குடிசை வாழ் மக்களாக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாவித உதவியை

1985 ஜூலை 15] [திரு.எஸ்.இராசராமன்]

யும் செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நஷ்ட ஈட்டை வழங்க அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த வெடிமருந்துகளைத் தயார் செய்த லைசென்ஸ் தாரர்களின் லைசென்சை ரத்து செய்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகளைக் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் பகுதியில் திருசூலம் என்ற சிற்றூரில் நடந்த வெடி விபத்து பற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து மேலும் ஏன் விவாதிக்க வேண்டுமென்பதற்கான காரண காரிய விளக்கங்களைக் கூறுகிறபோது தெரிவித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10-50)

3-7-1985-ம் நாளன்று அதிகாலை சுமார் 3.30 மணிக்கு திருசூலம் கிராமத்தில் சுப்பிரமணிய செட்டியார் என்பவருக்குச் சொந்தமான கல்குவாரி கிரஷரில் வேலை செய்யும் வேலையாட்களின் குடிசைகளில் ஒன்றில் திடீரென்று தீப்பிடித்துக் கொண்டது. தீ பரவி அவர்களுக்குச் சொந்தமான 17 குடிசைகள் எரிந்து சாம்பலாகி விட்டன. அருகிலே தண்ணீர் இல்லாததால் நெருப்பை அணைக்க இயலவில்லை. அந்தக் குடிசைகளையொட்டி அண்ணா அரிசன புளு மெட்டல் சொசைட்டியின் தலைவர் சண்முகவேலு என்பவருக்குச் சொந்தமான ஒரு குடிசையும் அதற்கு அடுத்து நான்கு குடிசைகளும் இருந்தன. தீப்பிடித்து பின் 17 குடிசைகளில் இருந்தவர்கள் வெளியே வந்து கூச்சல் போட்டதன் காரணமாக ஜனங்கள் மற்ற குடிசைகளின் கூரைகளைப் பிரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். 17 குடிசைகள் எரிந்து போயின. அண்ணா அரிசன சொசைட்டிக்குச் சொந்தமான குடிசையில் காலை சுமார் 4 மணிக்குத் தீ பரவ ஆரம்பித்திருக்கிறது. அந்தக் குடிசையில் பாறைகளை வெடிக்க உபயோகப்படுத்தும் வெடி மருந்துகளை எந்தவிதமான லைசென்சும் இல்லாமல் மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. சண்முகவேலு அவர்கள் வைத்திருந்திருக்கிறார்கள். அதிலே தீப்பட்டவுடன் அது வெடித்து இருக்கிறது. அந்த வெடி மருந்துகள் வெடித்ததன் காரணமாக இந்தக் கூரைக் கட்டிடத்தினுடைய கல் சுவர்கள் வெடித்ததும் அங்கே நின்று சொண்டு இருந்தவர்கள் தூக்கி எறியப்பட்டார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 15

இதன் காரணமாக தீ விபத்தில் பாதிக்கப்பட்ட அந்தக் குடிசையில் இருந்த சங்கு என்பவரின் மகன் பூமாரி 37 வயது உடையவர்—பலத்த காயம் ஏற்பட்டு, அந்த இடத்திலே இறந்து விட்டார். மற்றும் 22 நபர்களுக்குக் காயம் ஏற்பட்டது. தகவல் தெரிந்தவுடன் தீயணைக்கும் படையினர் அந்த இடத்திற்கு விரைந்து வந்து, தீயை அணைத்து விட்டனர். காயம் அடைந்த நபர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப் பட்டு உள்ளனர். 12 பேர்கள் சிகிச்சை முடிந்து அனுப்பப்பட்டனர். 8 நபர்கள் சென்னை அரசாங்க பொது மருத்துவமனையிலும், 2 பேர்கள் குரோம்பேட்டை அரசாங்க மருத்துவமனையிலும் உள் நோயாளிகளாக சேர்க்கப்பட்டனர். இது சம்பந்தமாக பல்லாவரம் காவல் நிலையத்தில் 387/85 என்ற வழக்கு எண் கீழ், பிரிவு 436, ஐ.பி.சி. மற்றும் 5,35 இந்திய வெடி மருந்துச் சட்டம், இந்தியன் எக்ஸ்பிலோசிவ் ஆக்ட் மற்றும் 174 சி.ஆர்.பி.சி. பிரிவுகள் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. இந்தத் தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டதாகத் தெரிகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்குக் காவல் துறையினர் உடனடியாக தக்க உதவிகளையும் பாதுகாப்பையும் அளித்து இருக்கிறார்கள்.

வெடி குண்டை வைத்திருந்த அண்ணா அரிசன சொசைட்டியின் தலைவர் திரு. சண்முகவேலு அவர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள். குரோம்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட 2 நபர்கள் சிகிச்சை முடிந்து 8—7—1985 அன்று டிஸ் சார்ஜ் செய்யப்பட்டு இருக்கிறார்கள். சென்னை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 8 நபர்களில், 4 நபர்கள் சிகிச்சை முடிந்து வெளியே வந்திருக்கிறார்கள். தற்போது 2 நபர்கள் உள்நோயாளிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய உடல்நிலை நன்கு தேறி வருகிறது. சம்பவம் நடந்த இடத்திலே தகுந்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருக்கிறது. தற் சமயத்தில் அந்த இடத்திலே எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை. அந்த வெடிமருந்து, பாறைகளை வெடிப்பதற்காக அங்கே வைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் லைசென்ஸ் பெற்றிருக்க வேண்டும் முறைப்படி. லைசென்ஸ் பெறாத வகையில் இந்த வெடி மருந்து அங்கே வைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே சுட்டிக் காட்டியதற்கு இணங்க இப்போது வெடி மருந்துகளால் வெடி குண்டுகள் செய்யப்பட்டு, அதன் காரணமாக நாட்டிலே எப்படிப்பட்ட சேதாரங்களை விளைவிக்கின்றன, எப்படிப்பட்ட ஆபத்துக்களை விளைவிக்கின்றன என்பதையும் கண்காணித்து, உன்னிப் போடு இருந்து பணியாற்ற வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். ஆகவே, உரிமை பெறாமல் ஒருவர் வெடி மருந்து வைத்திருந்தால் அவர் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டியவர்தான்.

1985 ஜூலை 15] [டாடர் இரா. நெடுஞ்செழியன்]

அந்த வகையிலே சண்முகவேலு என்பவர் மீது நான் முதலிலே குறிப்பிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. அவர் இப்போது தலைமறைவாக இருக்கிறார். அவரை எப்படியும் பிடிப்பதிலே காவல் துறையினர் தீவிர மான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர் மீது வெடி மருந்துச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதற்கு முன்னோடியாக, முன்னெச்சரிக்கை யாக என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அதை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்ட காவல் துறை யினருக்கு, அந்தந்தப் பகுதியில் உள்ளவர்கள் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, ஒரு நபர் இறந்திருக்கிறார். மற்ற வர்கள் காயப்பட்டு இருக்கிறார்கள். குடிசைகள் எரிந்து போய் இருக்கின்றன. இதுபற்றிய முழு விவர அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டு இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து விவர அறிக்கை வந்த பிறகு, யார் யாருக்கு எந்த எந்த அளவிற்கு உதவி செய்ய வேண்டும் என்ற குறிப்புகள் வந்ததற்குப் பிறகு, அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று சொல்லி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அவையை ஒத்திவைத்து மேலும் விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி, அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. அறிக்கை அளித்தல்.

(அ) விதி III-இன் கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் III-வது விதியின் கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 12—7—1985 அன்று கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் வத்திராயிருப்பிலிருந்து சுமாபட்டி வரை நெடுஞ் சாலை பணிகள் நடந்து கொண்டு இருக்கவில்லை, அங்கே பணிகள் நடக்கவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே சுட்டிக் காட்டி

னார்கள். அப்படி நடக்கவில்லை என்று சொன்னால் உடனடியாக நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருந்தேன். அப்போதே உடனடியாக 11 மணிக்கு இங்கே இருந்து தொடர்பு கொண்டு பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினுடைய நிர்வாக இயக்குநர் அவர்களிடத்தில் சொல்லி, அந்த குறிப்பிட்டப் பகுதியில் என்ன என்ன வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன என்ற அறிக்கையை அனுப்ப வேண்டும் என்று நான் சொன்னேன். அன்று இரவே அந்த அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். அதன்படி அந்த விளக்கத்தை நான் அவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். பத்திரிகையில் சட்டமன்ற உறுப்பினர் சத்தியம் செய்தார் என்று சொல்லி பெரியதாக விளம்பரம் செய்யப்பட்டு இருக்கிற காரணத்தால் இந்தஅறிக்கையைச் சொல்ல வேண்டிய நிர்பந்தம் எனக்கு ஏற்பட்டு இருக்கிறது.

வத்திராயிருப்பிலிருந்து சுமாபட்டி வரை அதாவது 11 கிலோ மீட்டரிலிருந்து 12 கிலோமீட்டர் வரை 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, தற்போது ரோடு வேலைகள் அங்கே நடந்துகொண்டு இருக்கின்றன. அதிலே ரோலர் மிஷன்கள் வேலை செய்து கொண்டு இருக்கின்றன. இப்போது தார் போடும் வேலையையும் அதிலே தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறார்கள். இன்னும் சரியாக ஒரு மாத காலத்திலே முடிக்கப்படும் என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று 12 கிலோ மீட்டரிலிருது 13 கிலோ மீட்டர் வரை 96 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இப்போது ஜல்லி பரப்பப்பட்டு செம்மண் தூவப்பட்டு, தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகிறது. இன்னும் 1½ மாத காலத்தில் தார் போடும் பணி தொடர்ந்து செய்யப்பட்டு முடித்துத் தரப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. 13 கிலோ மீட்டரிலிருந்து 14 கிலோ மீட்டர்வரை 94 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 24—8—1984 அன்று அந்த வேலை முடிக்கப்பட்டு இருக்கிறது. 14 கிலோ மீட்டரிலிருந்து 14/8 கிலோ மீட்டர் வரை 96 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 26—8—1984 அன்று முடிக்கப்பட்டு இருக்கிறது. பாலத்தைப் பொறுத்த வரையில் 12 கிலோ மீட்டரில் இருக்கக்கூடிய பாலத்திற்கு 35 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அது 28—11—1984 அன்று முடிக்கப்பட்டு இருக்கிறது. 12/8-லே உள்ள பாலத்திற்கு 32 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அது 10—8—1984-ல் முடிக்கப்பட்டு இருக்கிறது. இது போக, வத்திராயிருப்பு - புதுப்பட்டி புதிய பாலம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அதில் நிலம் கையகப்படுத்தலில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டு இருக்கிறது. 7 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 8 மீட்டர் அகலத்தில் 5 கண்கள் உடைய அந்த பாலத்தின் வேலை தற்போது நடைபெற்று வருகிறது. அதிலே 2 கண்களின் வேலை தற்போது நடந்து கொண்டு இருக்கிறது. விரைவாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. கவன ஈர்ப்பு.

(அ) கடல் கொந்தளிப்பு காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பல கிராமங்கள் பாதிக்கப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜே. ஹேமச்சந்திரன், டாக்டர் தே. குமாரதாஸ், திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், இரா. தாமரைக்கனி மற்றும் எப். எம். இராசரத்தினம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டத்தில் 27—6—1985 முதல் 30—6—1985 வரை பெய்த பலத்த மழை காரணமாக வள்ளிவிளை, இரவிபுத்தன்துறை, பூத்துறை, சின்னதுறை, மிடாலக்காடு ஆகிய இடங்களில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக, பல வீடுகள் நாசமடைந்தும் மேலும் பல வீடுகள் இடிந்து விழும் அபாய நிலையில் இருப்பதும் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு வட்டம், கல்குளம் வட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த குக்கிராமங்களிலும் இதர கடலோரக் கிராமங்களிலும் 27—6—1985 முதல் 30—6—1985 வரை ஏற்பட்ட பெரு மழையின் காரணமாக கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பால் வீடுகள் பாதிக்கப்பட்டன. இக்கடல் கொந்தளிப்பால் கடலோரக் கிராமங்களில் 219 வீடுகள் முழுமையாகவும், 333 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்தன. சேதமடைந்த பகுதிகளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றுமுள்ள அலுவலர்களுடன் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு விதிகளின்படி முழுமையாக சேதமடைந்த 219 வீடுகளுக்கு நிவாரணத் தொகை ரூ.300வீதம் மொத்தம் ரூ.65,700வழங்கப்பட்டது. பகுதி சேதமடைந்த 333 வீடுகளுக்கு ரூ. 150 வீதம் மொத்தம் ரூ. 49,950 வழங்கப்பட்டது. இத்துடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன. குடிசைகளின் சேத மதிப்பு ரூ. 5,91,130 என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இக்கடல் கொந்தளிப்பால் கடலோரப் பகுதி

களில் தொழில் செய்யும் மீனவ மக்களின் தொழிற் கருவிகள் சேதமடைந்துள்ளதற்கு தக்க நிவாரணம் வழங்கிட, மீன்வளத் துறை சேதம் குறித்த விவரங்களை சேகரிப்பதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மழையின் காரணமாக ஏறத்தாழ 5 ஆயிரத்திற்கும் அதிகப்பட்ட வீடுகள் சேதம் அடைந்து இருக்கின்றன. முழுவதுமாக சேதம் அடைந்த வீடுகளுக்கு 300 ரூபாயும், ஓரளவுக்கு சேதம் அடைந்த வீடுகளுக்கு 150 ரூபாயும் தான் நிவாரணமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இது காணாது இன்று ஏற்பட்டு இருக்கக்கூடிய விலைவாசி உயர்வு காரணமாக இந்த முன்னூறு ரூபாயில் ஒரு வீடு கட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதால் இந்தப் பணத்தை அதிகப்படுத்தி குறைந்தபட்சம் ஒரு வீட்டை கட்டிக் கொள்ள ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். அதற்கு மேல் இன்று காலா காலத்தில் கடல் கொந்தளிப்பு காரணமாக பல வீடுகள் இடிந்து போய் கொண்டு இருக்கிற நிலை ஏற்பட்டு இருப்பதன் காரணமாக, அந்தப் பகுதிகளில் ஒரு நல்ல தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? பாதிக்கப் பட்ட அவர்களுக்கு வீடுகள் இடிந்து விட்டது மட்டும் அல்லாமல் மற்ற பொருள்களும் சேதம் அடைந்து இருக்கின்றன. அதற்கான நிவாரணம் கொடுப்பதற்கு நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் கொந்தளிப்பால் 219 வீடுகள் முழுவதுமாகவும், 333 வீடுகள் பகுதியாகவும் சேதம் அடைந்து இருக்கிறது. ஆகவே இப்படி சேதம் அடைகிறபோது அவர் களுக்கு எப்படி உதவி செய்ய வேண்டும் என்கின்ற அளவுக்கு அரசு விதிமுறைகளை வைத்து அந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஆங்காங்கு இருக்கின்ற நிலைமை களுக்கு ஏற்ப, நிவாரண உதவி செய்யப்பட்டு வருகிறது. புயல், வெள்ளம், தீ போன்ற இடர்பாடுகளினால் முழுவதுமாக சேதம் அடைந்த குடிசை ஒவ்வொன்றுக்கும் 300 ரூபாய் என்றும், பகுதியாக சேதம் அடைந்த குடிசைகள் ஒவ்வொன்றுக்கும் 150 ரூபாய் என்றும் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிற ஒரு முறையை அரசு மேற்கொண்டு இருக்கிறது.

அது தவிர, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு புடவை இலவசமாக வழங்கப்படுகின்றன. ஏழ்மை நிலையி லுள்ளவர்களுக்கு, அதாவது பொதுவாக, மாதச் சம்பளம் ரூபாய் 200-க்கு மேற்படாமல் இருப்பவர்களுக்கும், ரூ.10-க்கு மேற் படாமல் நிலவரி செலுத்துபவர்களுக்கு மட்டுமே இப்படிப்பட்ட நிவாரணங்கள் அளிக்கப்படுகின்றன. ஆகவே, அதற்கென்று ஒரு வரைமுறை இருப்பதன் காரணமாக, அதன் அடிப்படையில் தான் இந்த நிலைமைகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, அதற்கு மேலும் அவர்களுடைய குடிசைக்கு ஏற்பட்ட பாதிப்புச் செலவு அத்தனையும் தாங்குவது என்ற நிலைமை அரசிடத்தில் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட நிவாரணங்களுக்குத் மத்திய அரசு கூடுதலாகத் தருகிறபோது, அதையும் கூடுதலாக வாங்கித் தருகிற பொறுப்பையும் மாநில அரசு ஏற்றுக் கொண்டிருக் கிறது. ஆகவே, அது பற்றி முழு விவர அறிக்கை மாவட்ட ஆட்சித் தலவைரிடத்திலே கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்த பிறகு, மத்திய அரசின் உதவி கிடைக்குமானால், அதையும் பெற்று, ஏற்றதைச் செய்ய அரசு முயலும்.

(முற்பகல் 11-00)

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கடல் கொந்தளிப்பு ஆண்டாண்டு தோறும் மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட்டு மாதங்களில் வந்த வண்ணம் இருக்கின்றது. அதற்கு நிரந்தரத் தீர்வு காணுகின்ற விதத்தில் அண்டை மாநில மான கேரள மாநிலத்தில் கடல் பகுதியில் தூண்டில் வளைவு என்ற அமைப்பில் வளைவுகளை இட்டு கடல் கொந்தளிப்பு ஏற்பட்டாலும், அந்த ஊரை பாதிக்காத அளவில் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அந்தக் காலங் களில் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையும் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் அந்தத் தூண்டில் வளைவுகளை அமைத்துக் கொடுத்து, கடல் கொந்தளிப்பிலிருந்து அந்த ஊர் மக்களைக் காப்பாற்றுவதுடன், அவர்கள் தொழி லுக்குச் செல்கின்ற விதத்திலே வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி கடல் கொந்தளிப்பு, கடல் அரிப்பு, மற்றவற்றினால் பாதிக்கப்படுகிற மக்களுக்கு வசதி வாய்ப்புக்கள் செய்து தருகிற பணிகள் பல்வேறு முறைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புயலால் பாதிக் கப்படுகிறபோது, குடிசை மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற் காக ஆங்காங்கு அடைக்கலம் புகுவதற்கான கட்டிடங்களை கட்டி வருகிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது

(டாக்டர் இரா.நெடுஞ்செழியன்) [1985 ஜூலை 15

போன்று, அந்த முறை கையாளப்படுமேயானால், கடல் கொந்தளிப்பினால் ஏற்படுகிற பாதிப்பு குறையும் என்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். இது பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் கூறிய கருத்துக்களை அடிப்படையாக வைத்து, தீர ஆராய்ந்து, அதனால் நல்ல பயன் விளையுமானால் அது பற்றி ஆராய்ந்து தக்க முடிவை நாம் எடுக்கலாம்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக கொடுத்து இருக்கின்ற பகுதிகள் அனைத்தும், ஒரு பகுதி தவிர, என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. அந்தப் பகுதியில் ஏறத்தாழ 1 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். 27—6—1985 முதல் 30—6—1985 வரை உள்ள கடல் கொந்தளிப்பின் காரணமாக, ஏறத்தாழ 50 ஆயிரம் பேருக்கு மேல் வீடு இல்லாமல் தவிக்கிறார்கள். அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான கட்டுமரம், பலகை போன்றவைகளை கடல் அடித்துக் கொண்டு போய் விட்டது. மேலும், அவர்களுக்கு நிரந்தரமான முறையில் வீடு இல்லை. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பார்களா ? நிரந்தரமான முறையில் அவர்கள் தொழில் செய்யவேண்டும். கல்போடுகின்ற திட்டத்தை தமிழக அரசு உருவாக்கி, கல் போட்டுக் கொடுத்தார்கள். ஆனால் கல் போடுவதில் கூட அவர்களுக்கு நிரந்தர வேலை செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அத்தகையோர் 2 இலட்சம் மக்கள் வாழ்கிற ஊருக்கு, அரபியன் சீ-யில் இராமன்துறை, பூத்துறை என்று சொல்கிற ஊர்களில், ஃபிஷிங் ஹார்பர் செய்து கொடுத்து, அன்றாடம் புயல் காலங்களில் வேலை செய்வதற்கான வசதி செய்து கொடுக்கவேண்டும். அதற்கு அரசு ஆவன செய்யவேண்டும். வீடு இல்லாது தவிக்கிறவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு பணம் ஒதுக்குமா என்றும், மேலும் அவர்களுக்கு இழப்பான கட்டுமரம், பலகை போன்றவைகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டலத்த மழையின் காரணமாக விளவன்கோடு வட்டத்தைச் சேர்ந்த குக்கிராமங்களான, கரும்பானத்துறை, எனையம்துறை, எனையம் சின்னத்துறை, எனையம் பெருந்துறை, ராமன்துறை, பூத்துறை, விள்ளவிளை ஆகியவற்றில் 131 குடிசைகள் முழுமையாகவும், 88 குடிசைகள் பகுதியாகவும் சேதம் அடைந்தன. கல்குளம் வட்டத்தைச் சேர்ந்த குக்கிராமங்களான குறும்பனை, வாணியக்குடி கோடி முனை, சைமன் காலனி, மரப்படி, செய்யாக்கால்குடி, கொட்டில்பொடு, முட்டம், மண்டைக்காடுபுதூர், பெரியவிளை, கல்லுக்கோட்டம்புதூர் ஆகியவற்றில் 53 குடிசைகள் முழுமையாகவும், 224 குடிசைகள் பகுதியாகவும் சேதம் அடைந்து இருக்கின்றன.

1985 ஜூலை 15] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

அகஸ்தீஸ்வரம் வட்டத்தைச் சேர்ந்தால், குக்கிராமங்களான, இராஜாக்கமங்கலம்துறை, அழிக்கள் பிள்ளைத் தோப்பு ஆகிய வற்றில் 35 வீடுகள் முழுமையாகவும், 213 பகுதியாகவும் சேதம் அடைந்து இருக்கின்றன.

அவற்றிற்கு எப்படிப்பட்ட நிவாரணங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி நான் முதலிலேயே குறிப்பிட்டேன். அவர்கள் வீடு கட்டுவதற்கு வேறு வகையில் கடன் வசதி செய்து, வீடு கட்டிக் கொடுக்க, பல தவணைகளில் திருப்பிக் கொடுக்க வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஆராயும்படி சொல்லியிருக்கிறோம். அதற்கான முறையில் அவர்கள் செய்தால் குறைந்த வட்டியில் திருப்பிச் செலுத்தும் வகையில் கடன் வழங்கலாம்.

கட்டுமரங்கள் 19-ம், வள்ளம் 11-ம், வலைகள் 10-ம், வெளிப் பொருத்தும் எந்திரம் 2-ம், இயந்திரப் படகு 2-ம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சேதங்களைக் கணக்கெடுத்து எந்த வகையிலே, எந்த அளவிற்கு நிவாரணம் அளிக்கலாம் என்பதைப் பற்றி ஆராயும்படி மீன் துறை கேட்கப்பட்டிருக்கிறது. மீன் துறையிடமிருந்து அறிக்கை வந்தபிறகு தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றத்தால், கடல் கொந்தளிப்பால் முழுவதுமாக வீடு இழந்தவர்களுக்கு 300 ரூபாயும், பகுதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு 150 ரூபாயும் உடனடியாகக் கொடுத்து உதவிய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசுக்கு என்னுடைய நன்றியினை முதற்கண் நான் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த குறும்பனை, வாணியக்குடி, கோடிமுனை, சைமன்காலனி, குளச்சல், மரமடி, கொட்டில்பாடு, மண்டைக்காடு புதூர், பெரியவிளை, சின்னவிளை, கடியப்பட்டணம், முட்டம், அழிக்கால் பிள்ளை தோப்பு, இராசக்கமங்கலம் துறை ஆகிய பகுதிகளில் கொந்தளிப்பால், கடல் அரிப்பால் வீடுகள், குடிசைகள் தரை மட்டம் ஆகி உள்ளன. கடல் நீர் அந்தக் குடிசைகளுக்குள் புகுந்த காரணத்தால் அவர்களுடைய உடைகள், சாப்பாட்டுத் தட்டு, தொழில் கருவிகள் ஆகியவை கடலிலே இழுத்துச் செலவப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமைகளை ஆராய்ந்து வருங்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலேயும் மீன்பிடித் துறை முகங்களை அமைக்கின்ற நோக்கம் அரசுக்கு உண்டா? மேலும், கடலுக்கு அருகில் உள்ள குடிசைகளில் குடியிருப்பதால் அவர்களுடைய வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து, கடற்கரை ஓரங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் ஏதேனும் உண்டா என்பதோடு, இன்றைக்குத் தொழில் செய்ய முடியாமல் உள்ள அந்த ஏழை மீனவக் குடும்பங்களின்

(திரு. எப். எம். இராசரத்தினம்) [1985 ஜூலை 15

விழிநீரைத் துடைக்கின்ற வகையில் இலவச ப்ரஷன் கொடுக்கின்ற திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புவதோடு, கூடுதலாக நிதியுதவி செய்து அவர்களது நிலைமைகளை உணர்ந்து, செய்கின்ற நோக்கம் உண்டா என்பதை இந்த நேரத்தில் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு என்னென்ன நிவாரண உதவிகளைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்துதிலே அரசு ஈடுபட்டு, செய்து வந்திருக்கிறது. மேற்கொண்டு செய்வதைப்பற்றி நான் முதலிலே சொன்னதைப்போல, அவர்கள் வீடு கட்டுவது போன்ற வைகளுக்கு எந்த அளவிற்குக் கடனுதவி, மற்றவைகளைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயிருந்து முழு அறிக்கையும் வந்ததற்குப்பிறகு மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். ஆனால் அதற்கான நடவடிக்கைகளைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கேட்டிருக்கிறோம், மீன் துறையினிடத்திலேயும் கேட்டிருக்கிறோம் என்று சொன்னேன். அதுவந்த பிறகு அதுபற்றி ஆலோசித்து, தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

(ஆ) மதுரை மாவட்டத்தில் வேளாண்மைத்துறை, நிலக்கடலைக்கு நிர்ணயித்துள்ள விலை

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் விதைக்கடலை உற்பத்தி செய்து வைத்துள்ள விவசாயிகளிடமிருந்து வேளாண்மைத் துறை அவற்றை பாங்க வெளிச்சந்தை விலையை விட குறைவான விலையை நிர்ணயித்துள்ளதால் ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

எண்ணெய்வித்துத் துறை, எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி விதைகள விதைப் பண்ணை விவசாயிகளிடமிருந்து அரசின் கொள்முதல் விதிப்படி கொள்முதல் செய்கிறது. அரசு கொள்முதல் விதிப்படி நிலக்கடலை விதைகள் அங்காடி விலையுடன் கூடுதலாக ஒரு கிலோ விதைக்கு 25 பைசாவும் சேர்த்து கொள்முதல செய்யப்படுகிறது.

1985 ஜூலை 15] [டாக்டர் கா. காளிமுத்து]

அங்காடி விலை என்பது சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி இயக்குநர் (புள்ளியியல்) அவர்கள் அறிந்து நிர்ணயிக்கும் விலையாகும். இந்த விலை சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி வேளாண்மை இயக்குநர் (எண்ணெய்வித்து) அவர்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி இயக்குநர் (புள்ளியியல் துறை) அவர்களால் அனுப்பப்படுகிறது.

ஆகவே புள்ளியியல் துறை அனுப்பும் அங்காடி விலைப்படி எண்ணெய்வித்துத் துறை நிலக்கடலை விதைகளைக் கொள்முதல் செய்கிறது.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை அந்த மாவட்ட உதவி இயக்குநர் (புள்ளியியல்) அவர்கள் அளிக்கும் அங்காடி விலையினைக் கொண்டு நிலக்கடலை விதை கொள்முதல் செய்யப்படுகிறது.

பொதுவாக நிலக்கடலை விதைக்கு, அங்காடி விலை மற்றும் தவணைக் கட்டணம் (Premium) கிலோவிற்கு 25 பைசா தவிர உண்மைச் சான்றிதழ் விதைக்கு கிலோவிற்கு ரூ. 1-ம் விதைப் பண்ணை விவசாயிக்கு அத்துறை அளிக்கின்றது. எனவே, நிலக்கடலை விதை கொள்முதல் செய்யும்போது விதைப் பண்ணை விவசாயிகளுக்கு அவர்களது விதைகளுக்கு அப்பகுதியில் நிலவும் அங்காடி விலையைவிட கூடுதலாகவே அளிக்கப்படுகின்றது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், மாவட்ட புள்ளி விவர அதிகாரி கொடுத்திருக்கின்ற விலைகளைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு வேளாண்மைத் துறை விலை நிர்ணயம் செய்து கொண்டிருக்கிறது என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே புள்ளி விவரத் துறை கொடுத்திருக்கின்றபடி, 36 கிலோ கொண்ட மூட்டைக்கு 170 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையில், வெளி மார்க்கெட்டில், திண்டுக்கல்லில், 100-க்கும் மேற்பட்ட தரகுக் கடைகள் இருக்கின்றன. அங்கே 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதனால், அங்கே ஆதார விதைகளை வாங்கி, விதை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு விலை குறைவாக இருக்கிறது. இதனால் அவர்கள் விற்க முடியாமல் இன்றைக்கு தனிப்பட்டவர்களிடத்தில் விற்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த விலை நிர்ணயத்தைப் புள்ளிவிவரத் துறை நிர்ணயிப்பதைவிட வேளாண்மைத் துறையே— ஏறக் குறைய 5,000, 10,000 மூட்டைகளைத் திண்டுக்கல்லிலே மட்டும் வாங்குகிறார்கள்—செய்வதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 15

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே' வெளி மார்க்கெட்டிலே ஒரு பொருள் என்ன விலைக்கு விற்கிறது என்பதைக் கணக்கில் எடுத்து, புள்ளி விவரத் துறை தரும் விவரங்களின் அடிப்படையில் வேளாண்மைத் துறை இவைகளை யெல்லாம் வாங்கிக் கொண்டிருக்கிறது. வேளாண்மைத் துறையே இந்த முயற்சியில் ஈடுபடுவது அது இயல்பாக செய்ய வேண்டிய பணிகளைப் பாதிக்கும். ஆகவே, வேளாண்மைத் துறை செய்ய இயலாது.

மாண்புமிகு திரு. டேகந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு தலைவர வர்களே, வேளாண்மைத் துறைக்கு இருக்கின்ற பணி களில் இவைகளைச் செய்ய முடியாது என்று மாண்புமிகு அமைச் சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இல்லையென்றால், வேறு ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ? இதிலே இரண்டு வித மான பாதகமான சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. புள்ளி விவரத் துறை கொடுக்கும் தொகை குறைவாக இருப்பதால் அதற்குமேல் கொடுக்க முடியாது என்ற இக்கட்டான நிலைமை வேளாண்மைத் துறைக்கு ஏற்படுகின்றபொழுது, நம் துறையிலே ஆதார விதை களை, நல்ல விதைகளை வாங்கி உற்பத்தி செய்கிறார்கள்.

(முற்பகல் 11—10)

மகசூல் எடுத்த உடனேயே அடுத்த கோடை விவசாயம் செய்ய வேண்டுமென்பதற்காக, வேளாண்மைத் துறையிலே குறைவாக தொகை கிடைக்கிறது என்பதற்காக வெளி மார்க்கெட்டிலே இருக்கிற வியாபாரிகளுக்கு இப்படிப்பட்ட விதைகளை எல்லாம் எண்ணெய் ஆட்டுவதற்கு என்று விற்று விடுகிறபொழுது, துறைக்கு ஒரு பாதகமான சூழ்நிலை, நல்ல விதைகளைப் பெற்று, மீண்டும் விவசாயிகளுக்குக் கொடுக்கிற ஒரு அரிய வாய்ப்பைத் துறை இழக்கிற சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகள் கூடுதல் விலை கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். நாம் ஆண்டுதோறும் விதைக் கடலை வாங்குவதற்கு என்று பணத்தை ஒதுக்குகிறோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வேளாண்மைத் துறைக் கென்று கிடங்கு இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் அந்த விதை உற்பத்தி செய்த உடனேயே, அந்த விதைக் கடலையைத் துறை பெற்றுக் கொண்டு அப்பொழுது இருக்கிற நிலவரத்தில் பாதி விலையை விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டால் அவர்கள் அடுத்த மகசூலுக்கு நடுவதற்கு வாய்ப்பு இருக்கும். பாதி விலையை அவர்களுக்குக் கொடுத்து விட்டு மீண்டும் அவர்கள் எதிர்பார்க்கிற அளவுக்கு உயர்ந்த விலை வருகிறபொழுது மீதிக் கடலையை விற்க வகை செய்கிற முறையில், வேளாண்மைத் துறை இந்த நடை முறையை விவசாயிகளுடைய நலன் கருதி ஏற்படுத்துமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

1985 ஜூலை 15]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, விதை கொள்முதல் செய்து விவசாயப் பெருமக்களுக்கு வழங்குகிற எண்ணெய் வித்துத் துறை அந்தப் பணியை மேற்கொள்வது இயலாது. விற்பனைத் துறையின் மூலமாக அத்தகைய நட வடிக்கைகளைச் செய்ய இயலுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

4. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

(ஆ) விதி 111-ன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள், 111-வது பிரிவின் கீழ், மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

திரு. வி. பி. சிந்தன்: ஏற்கெனவே விதி 55-ன்படி திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க அனுமதி வேண்டு மென்று ஒரு தீர்மானம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையில் கேட்டிருக்க வேண்டும். It is too late.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய அறிக்கை:—

தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை முன் வைத்து, நிர்வாகங்களுக்கு 16—7—1985 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக வேலை நிறுத்த அறிவிப்புகள் கொடுத்திருந்தனர்.

பல கட்டங்களில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டன. இரு தரப்பினருக்கிடையே இணக்கமான முடிவு ஏற்படவில்லை.

வேலை நிறுத்தத்தைத் தவிர்க்கும் பொருட்டும், பஞ்சாலைத் தொழில் பாதிப்பு ஏற்படாத வகையிலும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒப்புதலின் பேரில் அரசு தொழில் தகராறு சட்டப் பிரிவு 19 (b)-ன் கீழ் தொழிலாளர்களுக்குக் கீழ்க்கண்டவாறு நிவாரணம் அளிக்க அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது:

(அ) 6,001 கதிர்களுக்கு மேற்பட்ட பஞ்சாலைகளில் பணி புரியும் நிரந்தர மற்றும் பதிவித் தொழிலாளர்களுக்கு ஓட்டு மொத்தத் தொகையாக ரூ. 500 (ஐநூறு மட்டும்) 23-7-1985க்குள்

(திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி) [1985 ஜூலை 15

நிர்வாகத்தினர் அளிக்க வேண்டும். இது தவிர, பிரதி மாதம் ரூ. 75 வீதம் இத்தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இத் தொகை ஜூலை மாதச் சம்பளம் வழங்குவதி லிருந்து ஆரம்பித்து பிரதி மாதம் கொடுக்கப்பட வேண்டும்.

(ஆ) 6000—அதற்கும் குறைவாக கதிர்களைக் கொண்ட பஞ் சாலைத் தொழிலாளர்களுக்கு ஒட்டு மொத்தத் தொகைகளாகப் பின்வருமாறு வழங்கப்படும்.

(1) 23—7—1985-க்குள் ரூ. 250

(2) 14—8—1985-லிருந்து 20—8—1985-க்குள் ரூ. 250 கொடுக்கப்படும். சமரசப் பேச்சு வார்த்தையில் இருந்த பிரச் சினைகள் தொழில் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடுவதற்கும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அரசு அறிவிப்பினை இரு தரப்பினரும் நல்லெண்ணத்துடன் ஏற்று, பஞ்சாலைத் தொழிலில் அமைதி நிலவ அரசுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. பி. நிந்தன் : ஒரு பாய்ன்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல் பிரகாரம் "There shall be no debate on such statement at the time it is made" (குறுக்கிடு) வேறு எதிலும் பாய்ன்ட் ஆப் ஆர்டர் எழவில்லை.

(இ) விதி 111-ன் கீழ் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் ஆலோசனையின் பேரில் கூட்டுறவு விவசாயச் சங்கக் கடன் வசூலில் வரவு வைப்பதில் 16—7—1985 முதல் புதிய நடைமுறையை அமல்படுத்துவது தொடர்பான அறிக்கையினை வைக்கிறேன்.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர் வாங்கிய கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும்போது அசலில் குறைந்தது 50 விழுக்காடு விவசாய சேவை கூட்டுறவுச் சங்கத்தில் செலுத்தினால், அவ ருடைய தவணை தவறிய நிலுவையில் நிற்கும் பாக்கித் தொகை யில் 50 விழுக்காடு அசல் பாக்கிக்கும், மீதியை வட்டி போன்ற இதர இன பாக்கிகளுக்கும் வரவு வைக்கும் புதிய நடைமுறையை 16—7—1985 முதல் 30—6—1986 வரை பரீட்சார்த்தமாகப் பின்பற்ற தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

1985 ஜூலை 15]

6. அறிவிப்பு

மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7 அரசினர் சட்ட முன்வடிவுகள்

மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு 1985.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் "

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill 1985 பின்னால் இந்த பில் வருகிறது. கால் ஆண்டுக்கு பெரும் பாலான வண்டிகளுக்கு டாக்ஸ் உயர்த்துவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிற இந்த காலகட்டத்திலேயே இந்த வண்டிகள் எல்லாம் மத்திய சர்க்காரால் டீசல், பெட்ரோலுக்கு விலை உயர்வு செய்யப் பட்டதால் பெரும் துன்பத்திற்குள்ளாகி இருப்பதை நாம் எல்லாம் அறிவோம். அதைப்போன்று ஸ்பேர் பார்ட்ஸ் வரி உயர்வினாலும் சொல்லெணா கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் இந்த வண்டிகளுக்குச் சொந்தக்காரர்கள். இந்தச் சூழ்நிலையில் நம் முடைய அமைச்சர் அவர்கள் கூட ட்ரான்ஸ்போர்ட் சம்பந்த மாகச் சொல்லும்போது பஸ் கட்டணத்தை ஏன் உயர்த்த வேண் டும் என்று சொல்லும்போது டீசல் விலை உயர்ந்திருக்கிறது என்ற ஒரு காரணத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அதனால் தான் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டத்திற்கு ஆளாகியிருக்கிறோம் என்று அவர்கள் சொல்வதுண்டு.

அதே நேரத்தில் இந்த வாகனங்கள் பெட்ரோல் விலை உயர்வை சந்திக்க வேண்டும், டீசல் விலை உயர்வைச் சந்திக்க வேண்டும், ஸ்பேர் பார்ட்ஸ் விலை உயர்வை சந்திக்கச்வேண்டும்.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1985 ஜூலை 15

இந்த ஆண்டிலேயே கூட மத்திய சர்க்காரால், மாநில சர்க்காரால் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் வாகனங்களுக்கு காலாண்டுக்கு இப்படி வரியை உயர்த்தி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த வரி உயர்வை ரூபாயாகப் போட்டிருக்கிறார்கள். பர்சென்டேஜாகப் போட்டிருந்தால் பொதுமக்களுக்கு பயங்கரமாக காட்சியளிக்கும். ரூபாயாகப் போட்டிருப்பதால் மேலெழுந்த வாரியாக அவ்வளவாக கண்ணுக்குத் தெரியவில்லை. அதனுடைய பர்சென்டேஜைப் பார்க்கும்போது 25 சதவீதம், 40 சதவீதம், 60 சதவீதம், 80 சதவீதம், ஏன், 100 சதவீதம் கூட வாகனங்களுக்கு அமைச்சர் அவர்கள் வரி விதிப்பை உயர்த்தியிருக்கிறார்கள். இந்த வரி விதிப்பு நிச்சயமாகப் பொதுமக்களைத்தான் பாதிக்கும். பொது மக்கள் பயன்படுத்துகின்ற உணவுப் பண்டங்களைக் கொண்டுவரும்போது அதிகக் கட்டணம் செலுத்த வேண்டும், இந்த வரி விதிப்பினால். அதனால் பண்டங்கள் விலை ஏறும். அதனால் வாங்கிச் சாப்பிடுகின்றவர்கள் தாங்க முடியாத கஷ்டங்களுக்கு ஆளாவார்கள் என்பது என்னுடைய கருத்து.

மேலும் சாதாரண வண்டிகளுக்கு குவார்ட்டர்லி டாக்ஸ் 10 ரூபாய் என்று இருக்கிறது. அதற்கு இன்னொரு 10 ரூபாய் போடுகிறார்கள். ஆக, இந்த சாதாரண வண்டிகளுக்கு சென்ட் பர்சென்ட் வரி உயர்வு செய்திருக்கிறார்கள். எனவே சாதாரண வண்டிகளுக்குக்கூட இப்படிப்பட்ட வரி உயர்வை விதித்து, மக்களைப் பாதிக்கின்ற இந்தச் சட்டத்தை அறிமுக நிலையிலேயே நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று கூறி, என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற மோட்டார் வண்டிகள் மீதான வரி உயர்வுக் குரிய சட்ட முன்வடிவினை தொடக்கத்திலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்த வரி உயர்வானது நேரடியாகப் பொதுமக்களைத்தான் பாதிக்கும். பொதுவாகவே சமீப காலத்தில் மாநில அரசினுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் எப்படியாவது தங்கள் நிதி ஆதாரத்தை சேகரித்துக் கொள்வது என்ற நிலையிலிருந்து மட்டுமே சிந்திக்கிறார்களே தவிர, மக்கள் நோகாமல் சேகரிக்க வேண்டுமென்ற பரந்த உணர்விலே இருந்து அரசு சிந்திக்கவில்லை என்று தெரிகிறது. எனவே, இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற சட்ட

1985 ஜூலை 15] [திரு. கு. சுப்பராயன்]

முன்வடிவினால் சாமானிய மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு பஸ் கட்டணத்தை உயர்த்தி சாதாரண மக்கள் மீது ஒரு தாக்குதலை அரசு தொடுத்தது. இப்போது வண்டிகள் மீது வரியை உயர்த்தி மேலும் ஒரு தாக்குதலைத் தொடுத்திருக்கிறது. இதனுடைய முழு விவரங்களையும் இந்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறபோது நாங்கள் எடுத்து வைக்க இருக்கிறோம் என்று சொல்லி, தொடக்கத்திலேயே இந்தச் சட்ட முன்வடிவினை கடுமையாக ஆட்சேபிக்கிறேன் என்று கூறி, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொல்லியைப் போல விவாதத்தின் போது இதுபற்றி முழுமையாகப் பேசி ஆராயும் வாய்ப்பு இருக்கிறது. அப்போது இந்த வரி உயர்வுக்கு என்ன நியாயம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்க எனக்கு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் இப்போது இரண்டொரு கருத்துக்களை வைத்துப் பார்க்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் மக்களைப் பாதிக்காத வரியாகப் போடவேண்டுமென்று இங்கே சொன்னார்கள்.

(முற்பகல் 11-20)

அதற்கான ஆலோசனையைக் கொடுக்கவில்லை : இந்த வரியைப் போட்டாலும், அந்த வரி மக்களைப் பாதிக்கும் என்று முழுமையாகச் சொல்லிவிட்டுப் போவது மட்டும் சரியாக இருக்காது. எப்படி இருந்தால் பாதிக்காது என்பதையும் சொன்னால் தான் சரியாக இருக்கும். வரியைப் போடவில்லை என்றால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது என்பது தெரியும். வரி போட்டுத் தீரவேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருப்பதன் காரணத்தால்தான் இந்த வரி போடப்படுகின்றது. இங்கே பல நேரங்களில் அவர்கள் பேசுகின்றபோது பஸ் முதலாளிகள இலாபம் சம்பாதிக்கிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள் என்றெல்லாம் பேசுகிறார்கள். ஆனால் வரி உயர்வு வருகின்றபோது அப்படிச்செய்யலாமா, அது மக்களைப் பாதிக்காதா என்றெல்லாம் பேசுவது என்பதைப் பார்க்கும்போது அரசாங்கம் எதைச் செய்தாலும் அதை எதிர்க்கவேண்டும் என்ற உணர்வு வந்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது. எனவே நிதியாதாரத்தை மட்டும் மனதில் வைத்து இந்தக் காரியங்களைச் செய்யவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மக்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இது ஒருவகையில் பயன்படுமே என்றுதான் செய்யப்பட்டு இருக்கின்றது. எனவே யாரையும்

[திரு. க. முத்துசாமி] [1985 ஜூலை 15

கஷ்டப்படுத்தவேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படவில்லை. நிச்சயமாக மக்களின் நன்மைக்காகத் தான் இது செய்யப்படுவதன் காரணத்தால் மக்கள் எல்லோரும் இதற்கு ஒத்துழைப்பு தருவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதன் காரணத்தால்தான் இது கொண்டு வரப்படுகின்றது என்பதையும், இது விவாதத்திற்கு வருகின்றபோது இதுபற்றி முழுமையாக பதில் சொல்ல வாய்ப்பு இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறி முகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1985 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1985).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத்தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மகோதாவை நம்முடைய சமுதாயத்திற்குரிய வகை யில் நாவலர் அவர்கள் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண் டும் என்று அறிமுகம் செய்து இருக்கிறார்கள். 1985-86-ஆம் நிதியாண்டில் மாநில அரசின் செலவுக்கு கன்சாலிடேட்டட் ஃபண்ட் என்ற வகையில் உள்ள தொகு நிதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றம் பல்வேறு மானியங்களின் கீழ் அரசாங்கத்தினுடைய

1985 ஜூலை 15] [திரு. அ. ரகுமான்கான்]

செலவுக்காக ஒதுக்கீடு செய்ய அங்கீகரிக்கப்பட்டு அந்தத் தொகை யிலே இருந்து ஒதுக்கப்படுகின்றது. 1,038 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் படுகின்றது. பல்வேறு மானியங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தொகை மக்களின் நலனை கருதி அரசாங்கம் பல்வேறு திட்டங்களைப் போட்டுச் செயல் படுத்துவதற்காக என்ற நல்ல நோக்கத்தோடு இந்தத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஒதுக்கப்பட்ட தொகையை முறையாக மக்களின் நன்மைக்காக செலவழிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி நான் கேட்டுக் கொள் வதற்குக் காரணம்–ஆடிட்டர் ரிப்போர்ட்கள் இங்கே வைக்கப் படு கின்றன. அந்த ஆடிட் ரிப்போர்ட்டுகளை எல்லாம் நாம் புரட்டிப் பார்த்தால் ஒதுக்கப்பட்ட பணம் எல்லாம் செலவழிக்கப்படாமல் திரும்பத் தரப்படுகின்றது என்ற தகவல்கள் அதிலே தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அந்தப் பட்டியல்களை எல்லாம் நான் வகைப்படுத்திச் சொல்வது என்றால் அதற்கே நீண்டநேரம் ஆகும். ஆக ஒதுக்கப் படுகின்ற தொகைகள் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்படாமல் திட்டங்களே தீட்டப்படாமல் தீட்டிய திட்டங்கள் அமல்படுத்தப் படாமல் அவற்றை எல்லாம சரண்டர் செய்கின்ற காரியம் சரியாக இருக்காது.

ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மதுரையிலே தமிழ்ச்சங்கம் வைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து பல்லாண்டுக் காலம் உருண்டோடிவிட்டது. அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை திரும்பப் பெறப்பட்டிருக்கின்றது என்று சொல்கிறபோது ஒருதிட்டத்தை அறிவிப்பது; அறிவித்தபின்அதற் காக ஒதுக்கீடு செய்வது; ஒதுக்கீடு செய்த பின்னர் அவற்றைச் செலவழிக்காமல் சரண்டர் செய்வது என்று சொன்னால் அது என்ன நியாயம்? ஆகவே ஒதுக்கப்பட்ட தொகை முறை யாகச் செலவழிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் இங்கே இருந்தால் பதில் சொல்ல உதவியாக இருக்கும். இந்த அவையிலே கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் பற்றிப் பலமுறை திரா விட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கருத்துக்களைச் சொல் லியிருக்கிறோம். ஆளுங்கட்சிக்காரர்களும் இதுசம்பந்தமாகப் பல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது ஒரு புதிய சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது. இந்த மன்றத்தில் எற்கனவே பேசுகின்ற போது சொன்னார்கள். கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்கு மத்திய அரசு இன்னும் அனு மதி வழங்கவில்லை; அதைப்போலவே பிளானிங் கமிஷன் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை, வாட்டர் கமிஷன் போர்ட் இதற்கு

அனுமதி கொடுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் என்வயர்ன்மெண்டல் டீம் என்று சொல்லக் கூடிய அந்தக் குழு, ஆரயிக் கணக்கான மரங்களை இதற்காக வெட்டுகிறார்கள். அதனால் இதை அனுமதிக்க முடியாது என்று சொல்லி எதிர்ப்புகள் எல்லாம் கூட தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட இந்த சூழ்நிலையில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். ஏன் என்று கேட்டால் 1976 ஆம் ஆண்டு, மறைந்து போன பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னைக் கடற்கரையிலே, சென்ன நகரத்துமக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் கொண்டு வரப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் 7 ஆண்டுகளுக்குப் பிறகுதான் 1983 ஆம் ஆண்டிலே இந்த ஒப்பந்தம் நடைபெற்றது.

ஆனால் இன்றைக்கு ஆந்திர முதல்வர் திரு. என். டி. ஆர் அவர்கள் தமிழ்நாடு சர்க்கார் மீது ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். தமிழகம் செலுத்த வேண்டிய பங்கு எவ்வளவு என்பது குறித்து இன்னும் எங்களுக்கே சரியாகத் தெரியவில்லை. 6 மாதங்களுக்கு ஒருக்கால் 30 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகம் இதுவரையில் ஆந்திர சர்க்காருக்கு கொடுத்தது 30கோடி ரூபாயா அல்லது 60 கோடி ரூபாயா? எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்ற விளக்கம் இல்லை. ஆனால் இன்றைக்கு ஆந்திராவின் முதலமைச்சர் திரு.என். டி. ஆர். அவர்கள்தமிழகம் தன்னுடைய பங்கைச் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குக் காலையில் இந்து பத்திரிகையிலே கூட முதல் பக்கத்திலே தலையங்கம் போட்டிருக்கிறார்கள்.

அது இரு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினை. நான் அதற்குள்ளே விரிவாகபோகவிரும்பவில்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது என்னவென்றுகேட்டால் கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் ஹெக்டே அவர்கள் இந்த தெலுங்கு கங்கா திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கடிதம் எழுதியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுடைய எதிர்ப்புக்கு காரணம் வேறு. காரணம் அவர்களுடைய டிரிப்யூனலின்படி அந்த திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இரண்டாவது, சென்னைக்கு குடிதண்ணீர் வழங்குகிற பிரச்சனை வேறு, ஆனாலும் இன்றைக்கு ஆந்திரா சர்க்கார் அதை விவசாயத்திற்காகப் பயன்படுத்துகிறது. மூன்றாவது, சர்பிளஸ் வாட்டர் என்று பங்கிடுகிற உரிமையில் ஆந்திராவிற்கு இருக்கிற சர்பிளஸ் வாட்டரை எடுத்துக் கொள்வதற்கு அனுமதி கிடையாது என்று பலவகையான ஆந்திரா கர்நாடக பிரச்னைகளை எடுத்துக் காட்டுகிற வகையில்,

ஒட்டு மொத்தமாக இந்த தெலுங்கு கங்கா திட்டத்திற்கு ஹெக்டே அவர்கள் எதிர்த்து கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதை நிறைவேற்ற கூடாது என்று எழுதியிருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

அடுத்தாற்போல் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மௌலி அவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கர்நாடக சட்ட சபையில் பேசியிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். கர்நாடகத்திலே இருக்கக்கூடிய நீர்ப்பாசனப் பொதுப்பணித்துறை அமைச்சர் தேவ கௌடா இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. எனவே இன்றைக்கு கிருஷ்ணா நதி நீர் திட்டம் நிறைவேறுமா ? சென்னை நகரத்தின் குடிதண்ணீர்ப் பிரச்னை தீர்க்கப்படுமா? இந்த முட்டுக்கட்டைகள் நீக்கப்படுமா? இது போன்ற முயற்சிகளில் இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதற்கென ஒரு அறிக்கை வைத்தால் கூட தேவலை. இது என்ன நிலைமையில் இருக்கிறது என்று இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களாகிய எங்களுக்கே தெரியவில்லை.

நம்முடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் சென்னைக்கு வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் வருகை தந்திருப்பது குறித்து மகிழ்ச்சி. ஆனால் இது போன்ற சந்தர்ப்பத்தில், மாநில சர்க்கார், மத்திய சர்க்காரிடத்திலே இதுபோன்ற பிரச்சினைகளைப் பற்றி பேசி என்ன முடிவு என்பதைப் பற்றி தெரிந்தாக வேண்டும். காரணம் ஹரே ராமா ஹரே கிருஷ்ணா என்று சொல்வதைப் போல கிருஷ்ணா நீர் வருமா வராதா என்று சொல்லக் கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அன்றைக்கு இதற்காக பெரிய விழாக்கள் எல்லாம் நடைபெற்றது. அதற்கும் பகீரதன் கங்கையைக் கொண்டு வந்தது போல, புரட்சித் தலைவர் அவர்கள் கிருஷ்ணா நதிநீர் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னை நகரத்தின் குடிதண்ணீர் பிரச்னை தீர்ந்தது என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் ஆண்டுகள் பலவாயின. செலவுகள் பல கோடி அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமையில் இந்த திட்டத்தினுடைய தற்போதைய நிலமை என்ன? இந்தத் தடைகள் தகர்க்கப்படுமா? இது பற்றி இந்தச் சபையிலே ஒரு முறை நான் கேட்டபோதுகூட, நம்முடைய விவசாயத்துறை அமைச்சர் என்னுடைய அருமை நண்பர் காளிமுத்து அவர்கள் சொன்னார்கள், 'தடைகளை தகர்த்தெறிய தடம் தோள்கள் உண்டு' என்று சொன்னார்கள். ஜனநாயகத்திலே தடம் தோள்களை வைத்துக்கொண்டு கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்னையை தீர்க்க முடியாது. அழுத்தமாக, தெளிவாக பேச வேண்டியவர்களிடத்திலே பேசி, கேட்க வேண்டியவர்களிடத்திலே கேட்டு, மத்திய

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஜூலை 15

சர்க்காரிடத்திலே சொல்லித்தான் இந்தப் பிரச்சினையை தீர்க்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக இது இருட்டில் இருக்கிறது. கொஞ்சம் வெளிச்சத்திலே கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அது வருமா, அதற்குரிய நிலைமை என்ன என்பதையும் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய நாவலர் அவர்கள் டெல்லிக்குப் போனார்கள். அங்கே அவர் போனபோது அவரிடத்திலே முக்கியமான பிரச்னை கிளப்பப்பட்டது, ஓவர் டிராப்ட் சம்பந்தமாக. ஓவர் டிராப்ட் என்று சொல்வது ஒன்றும் பாவகரமான காரியம் அல்ல. மாநில சர்க்கார் தன்னுடைய நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு, தங்களுடைய பொருளாதார நிலைமைகளை வைத்துக் கொண்டு, தங்களுடைய மாநிலங்களுக்குத் தேவையான திட்டங்களைத்தீட்டுகிறார்கள். அதற்கான முயற்சிகளைச் செய்கிறார்கள். ஆனால் பொருளாதார ஆதாரங்களை அதற்காக இன்னும் அதிகமாகத் தேட வேண்டிய கட்டாயத்தில் வருகிற போது, எல்லா முக்கியமான வரி வருமானங்களையும் தன் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கிற மத்திய சர்க்காரிடத்திலே அவர்கள் ஓவர் டிராப்ட் வாங்குவது என்பது, நிதி உதவி பெறுவது என்பது நீண்ட நாட்களாக இருந்து வருகிற மாநில சர்க்காருடைய ஒரு உரிமையாகும். அது பெரும் பாவகரமான காரியம் அல்ல. மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் அது பயன் படுத்தப்படுகிறது. ஆனால் நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் டெல்லி போனபோது, இந்த ஓவர் டிராப்ட் வாங்குகிற உரிமை மாநில சர்க்காருக்கு இனி கிடையாது, அதை நாங்கள் நடுத்தரக் கடனாக மாற்றப் போகிறோம் என்று மத்திய அரசின் நிதியமைச்சர் அறிவித்தவுடனேயே, அதை வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி, எங்களைப் பொறுத்த மட்டிலே ஓவர் டிராப்ட் கிடையாது. நாங்கள் எல்லாவற்றையும் சரியாக கொடுத்து விட்டோம். என்று சொல்லி மாநில சர்க்காருடைய உரிமை பறிக்கப்படுவதைக் கண்டிப்பதற்குப் பதிலாக, ஓவர் ட்ராப்ட் பெறுகிற உரிமை எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு பதிலாக, அந்த உரிமையைப் பறிக்கிறது மத்திய சர்க்கார். அந்த நிதியமைச்சர் பறிக்கிறார் என்றால் அதற்கு நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் பாராட்டு தெரிவித்து வருதென்றால், நான் கேட்க விரும்புகிறேன், இது மாநிலத்தின் நலனை பாதிக்காதா? அதிலே நம்முடைய நாவலர் அவர்கள் ஒரு அறிக்கையை விடுகிறார்கள். அவர்களிடத்தில் வேண்டுகோள் விடுகிறார்கள். ஓவர்ட்ராப்ட்டை எடுத்துவிட்டாலும், நடுத்தரக்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஜூலை 15

கடனாக மாற்றினாலும், மாநிலங்களுக்கு உதவி செய்வதிலே மத்திய சர்க்கார் பாரபட்சமில்லாமல், கருணையோடு இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கருணை மனு கொடுப்பது வேறு, உரிமையை பறிகொடுப்பது வேறு, ஆகவே ஓவர் ட்ராப்ட்.....

(முற்பகல் 11-30)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இதற்கு இப்போதே விளக்கம் தருவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். ஓவர் ட்ராப்ட்டை 28-1-1985-ல் வாங்கக்கூடாது என்று நிறுத்தி விட்டார்கள். அதைத் தொடர்ந்து ரிசர்வ் வங்கியிலும் நிறுத்தி விட்டார்கள். சிலபல மாநிலங்களில் இரண்டு, மூன்று நாட்களுக்கு தங்களுடைய செக்குகளை நிறைவேற்ற முடியாத அளவிற்கு கூட கஷ்டங்களுக்குள்ளாயின. ஓவர் ட்ராப்டை திருப்பியே செலுத்தித் தீரவேண்டுமென்று மத்திய அரசு சொல்லுமேயானால் இந்த ஓவர்ட்ராப்ட்டிற்கு 15 சதவீதம் வட்டி கொடுக்க வேண்டும். ஆகவே தான் மீடியம் டெர்ம் லோனாக மாற்றவேண்டுமென்பதை வரவேற்றேனே தவிர, இனிமேல் ஓவர்ட்ராப்ட் தர வேண்டிய அவசியமில்லை, இத்தோடு நிறுத்திக்கொள்ளலாம்என்று அந்த வகையில் எந்தவித கருத்தையும் நான் எடுத்துச் சொல்லவில்லை. ஆகவே மீடியம் டெர்ம் லோனாக மாற்றினால் அதற்கு 8 சதவீத வட்டி தான். ஐந்தாண்டு காலத்தில் அதனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் 250 கோடி, 300 கோடியென்ற அளவில் வாங்கி இருக்கிறார்கள். அதை ஐந்து ஆண்டு காலத்தில் ஐந்து தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். அதற்கு வட்டி 8 சதவீதம். அதைத் தான் நான் வரவேற்றேன். மீடியம் டெர்ம் லோனாக மாறியதை வரவேற்றேனே தவிர, இனிமேல் ஓவர்ட்ராப்ட் வேண்டாம் என்றில்லை. எங்களைப் பொறுத்தவரையில் ஓவர்ட்ராப்ட் கூடாது என்று சொன்னார்கள். பீகார் போன்ற வேறு சில மாநிலங்களில் இப்போது ஓவர்ட்ராப்ட் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே ஓவர்ட்ராப்ட் கொடுக்கிற தன்மையை அறவே போக்கிவிட வேண்டும், கூடவே கூடாது என்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு ஏற்படுகிற செலவினங்கள் மற்றவைகளைப் பார்க்கிறபோது ஓவர்ட்ராப்ட் என்பது இருக்கத்தான் வேண்டும். ஓவர்ட்ராப்ட் இருக்கவேண்டுமா வேண்டாமா என்று கேட்டால் அதற்கான வழிவகை இருக்கத்தான் வேண்டுமென்று இந்த மாநில அரசும் சொல்லும், நானும் சொல்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : துணைத்தலைவர் அவர்களே, ஓவர் ட்ராப்ட் என்பது மாநிலங்களுக்கு சட்டப்படி இருக்கிற உரிமையாகும். அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபையில் இது சம்பந்தமாக நடந்த விவாதங்களின்

போது பேரறிஞர்கள் எல்லாம் ஓவர்ட்ராப்டிற்கு வழியிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களுடைய அதிகாரங்களை காங்கிரஸ் கட்சி பறிப்பவைகளில் ஒன்றாக மாநில அரசுகளுக்கு இருக்கிற ஓவர்ட்ராப்ட் உரிமை இருக்கிறது. ரெட்யூஸ்ட் இண்டரஸ்ட் என்ற பிரச்னைக்கு நான் போக வில்லை. ஓவர்ட்ராப்ட் என்பது நமக்கிருக்கிற உரிமை. வேண்டுமானால் அதற்கு ஒரு லிமிட் இருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, ஓவர்ட்ராப்ட் என்கிறபோது இப்போது வேஸ்-அண்ட்-மீன்சிற்கு ஓவர்ட்ராப்ட் தருகிறார்கள். நம் முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் 66 கோடி வரையிலும் நாம் கூடுதலாக வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதற்கு வேஸ்-அண்ட்-மீன்ஸ் அட்வான்ஸ் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதையும் தாண்டி போகிறபோதுதான் ஓவர் ட்ராப்ட் என்பது வருகிறது. அதைத்தான் கொடுப்பதா இல்லையா என்ற அளவிற்கு வருகிறார்கள். எனவே மாநிலங்கள் இப்போது அதிகமான செலவினங்களை ஏற்றுக்கொள்கிற நிலைமை ஏற்பட்டு விடுவதன் காரணத்தால், மத்திய அரசு அப்படிப்பட்ட செலவினங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய நெருக்கடி, இக்கட்டான நிலை ஏற்பட்டு விடுவதன் மூலம், ஓவர்ட்ராப்ட் வாங்குவதில் தவறில்லை, அது பாவம் இல்லை. நானும் ஏற்றுக்கொள்கிறேன். அதைச் சமாளிப்பதற்கு வேறு வழியும் இல்லை. மத்திய அரசு வேறு வகையிலே உதவி செய்யாவிட்டால் இதை வாங்கித் தான் தீர வேண்டும். ஓவர் ட்ராப்ட் வாங்க வேண்டாமா? இல்லை அது அறவே கூடாதா என்ற பிரச்னைக்குள் போகவில்லை. மீடியம் டெர்ம் லோனாக மாற்றுகிற ஒன்றைத்தான் ஆதரித்தேனே தவிர, ஓவர்ட்ராப்ட் கொடுப்பதே கூடாது என்று மத்திய அரசு சொல்லிவிடுமேயானால் பல மாநிலங்கள் தங்கள் முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போய்விடும். ஆகவே அந்தக் கருத்தைத் தான் சொல்கிறேனே தவிர, ஓவர்ட்ராப்ட் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, 'நெடுஞ்செழியன் தகவல், ஓவர்ட்ராப்ட் முழுவதையும் தமிழ கம் செலுத்தி விட்டது' என்று சொல்கிற தினமணி பத்திரி கையின் குறிப்பில்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றிய தகவலை தந்து விட்டார்கள். லதற்கு பிறகு பத்திரிகையில் வந்திருப்பவைகளை பற்றியெல் லாம் சொல்ல வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது தான் சரியே தவிர, இதற்கு மாறுபட்டு எந்தப் பத்திரிகையில் வந்தாலும் அது தவறான ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : ஓவர்ட்ராப்ட் சம்பந்தமாக மத்திய அரசு அந்த உரிமையை மறுக்கக்கூடியதை ஏற்றுக்கொள்ள வில்லையென்று நாவலர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்த செய்தி தவறு என்றும் சொல்லி இருக் கிறார்கள். ஆனால் பத்திரிகையில் மத்திய அரசினுடைய நிலையை ஆதரிப்பதாக தகவல் வந்த காரணத்தாலேதான் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. ஆதரிக்கவில்லை என்று சொன்னால் அதை நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோல் இன்னொரு பிரச்சினை, பழைய பிரச்சனை தான், இருந்தாலும், உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியவனாக இருக்கிறேன். காரணம் இன்றைக்கு நம்முடைய பிரதமர் சென்னைக்கு வருகை தருகின்ற நேரத் தில், அமைச்சர்கள் மாலை அணிவிப்பதும், மரியாதை செய் வதும் வரவேற்கத் தகுந்ததுதான். ஆனால் ஆந்திராவின் முதலமைச்சர் என்.டி.ஆர். அவர்கள் தெளிவாக தெரிவித்திருக் கிறார்கள். விசாகப்பட்டினத்திற்கு பிரதமர் அவர்கள் வரு வார்களேயானால், ஆந்திரா சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் குறித்து, அவரிடத்திலே பேசலாம் என்று கூட பத்திரிக்கை செய்தி வந்திருக்கிறது. இது உண்மையான செய்தி என்று நான் கருதுகிறேன். காரணம் மத்திய சர்க்கார் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் பல இருக்கின்றன. இங்கேயிருக்கிற அமைச்சர்கள், முதல் அமைச்சர், மற்றும் தமிழக சர்க்கார், இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சி களில் ஈடுபடவேண்டும் என்றும், அவர்களை வலியுறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலவர் அவர்களே, ஆந்திராவின் முதல் அமைச்சர் மட்டும் மத்திய அமைச்சர்கள் வரும்போது, அந்த மாநிலத் தினுடைய குறைகளைச் சொல்வதில்லை. தமிழ் நாட்டு அமைச் சர் பெருமக்கள், மத்திய அரசிலிருந்து யார் வந்தாலும், தமிழ நாத்தினுடைய பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறார்கள். அதைப் போலவேதான் சமீபத்திலே மத்திய ரயில்வே அமைச்சர் அவர் கள் வந்தபோதும், வேறுபல அமைச்சர்கள் வந்தபோதும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு விஷயங்களைப் பற்றி மத்திய அமைச்சரோடு வாதிட்டு இருக்

கிறார்கள். பிரதமரோடு கூட பேசி, பல கோரிக்கைகள் அடங்கிய மனுக்களைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, மகஜர் கொடுப்பதும் மனுக்கள் கொடுப்பதும், மந்திரிமார்களுக்கு மக்கள் மனுக்களைக் கொடுப்பது போல அல்லது மற்றவர்கள் கொடுப்பதைப்போல, மனுக்களைக் கொடுக்கவில்லை இந்தச் சர்க்கார் என்று நான் சொல்லவில்லை, ஆனால் அருமைச் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ராமலிங்கம் அவர்களுக்கு தெரியும் என்று நான் கருதுகிறேன். பி.சி. ராய் அவர்கள் வங்கத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, மாநிலசர்க்கார் உரிமை பறிக்கப்பட்டபோது, உதாரணமாக பெர்பாரி பாகிஸ்தானுக்கு தாரைவார்க்கப்பட்டபோது, அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான், அப்போது பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்கள்தான், கட்சிக் கட்டுப்பாட்டை மீறி, மேற்கு வங்க முதலமைச்சராக இருந்த பி. சி. ராய் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு போட்டார்கள், போராடினார்கள், சுதந்திர தினத்தை துக்க நாளாக அறிவித்தார்கள். கவர்னர் மாளிகையில் இருக்கக்கூடிய விளக்குகள் எல்லாம் எரியக்கூடாது, காரணம் மாநில சர்க்காரினுடைய திட்டங்களை மத்திய சர்க்கார் புறக்கணிக்கிறது, அதற்கு என்னுடைய எதிர்ப்பை— தெரிவிப்பதற்காக— ஜனநாயகத்திற்கு உட்பட்டு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன் என்று சொல்லி, அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அந்த எதிர்ப்பைத் தெரிவித்தார். ஏதோ நாம் மனுக்கள் கொடுக்கிறோம், மகஜர்கள் கொடுக்கிறோம், டெலிபோனிலே பேசுகிறோம், டெலகிராம் கொடுக்கிறோம் என்று சொல்கிற அன்றாட நடவடிக்கைகள் நம்முடையை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாது. இன்னும் பிரச்சினையிலே அக்கறை செலுத்த வேண்டும். மத்திய சர்க்காரிடம் மாநில சர்க்கார் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கின்றன. மாநில சர்க்காருக்கு, மத்திய சர்க்கார் நிறைவேற்றித் தரவேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கின்றன. காரணம் நம்முடைய பிரதமர் அவர்கள் விஜயம் செய்யும்போது, அந்த நேரத்தில் அவர்களுக்கு நினைவுபடுத்தினால், மாலை போடுகின்ற நேரத்திலே அதைப்பற்றி பேசுவீர்கள், வலியுறுத்துவீர்கள் என்ற நல்ல எண்ணத்தோடு அதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து காவிரி நீர்ப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாக இருக்கிறது. இதிலே தி.மு.கழகம் ஏதோ தப்பு செய்துவிட்டதாக இங்கே பேசப்படுகிறது. காவிரி நீர்ப்பிரச்சனை தமிழ் மக்களுடைய பிரச்சினை. அவர்களுடைய தலை

யெழுத்தோடு யாரும் விளையாடவேண்டாம். இதை அரசியல் பிரச்சினையாக்க வேண்டிய அவசியம் இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்கள் இடத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆதாரம் இதே அவைக்குறிப்பிலே இருக்கிறது. வேண்டுமானால் சபைக் குறிப்பைக் கூட வாசித்துக் காட்ட நான் தயாராக இருக்கிறேன். அதிலே அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள் எடுத்த நிலை எதுவோ, அதுதான் இன்றைய சர்க்காருடைய நிலை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தி.மு. கழகம் ஏதோ தப்பு செய்துவிட்டது என்பதைப் போல ஒரு தவறான கருத்துச் சொல்வதை அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாக வில்லை. சர்ப்ளஸ் வாட்டரை எப்படி ஷேர் பண்ணுவது என்பதுதான் பிரச்சினை. கர்நாடகத்திலேயும், தமிழகத்திலேயும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சர்ப்ளஸ் வாட்டர் சம்பந்தமாக புள்ளி விவரங்களை வைத்திருக்கிறார்கள். உட்கார்ந்து பேசினால் பிரச்சினை தீரும். நம்முடைய முதல் அமைச்சர் கூட ஓய்வுக்காக நந்திமலைக்குச் செல்வதாக இருக்கிறார். அப்படிப் போகின்ற நேரத்திலே இதைப்பற்றி உட்கார்ந்து பேசி முடிவு எடுக்கலாம் என்று அவர்கள் இருக்கக்கூடும். இன்னும் நந்திமலைக்குப் போகவில்லை. ஆனாலும் போகின்றபோது, இதிலே தனியாக அக்கறை செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் இன்றைக்கும் காவிரி நீர்ப் படுகைகளில் புனல் மின் திட்டங்களை கொண்டுவர முடியாமல் இருக்கிறது. இதனால் ஒகனேக்கல் திட்டம் நிறைவேற முடியாமல் இருக்கிறது. காரணம் காவிரி நீர்ப்பிரச்சினையிலே ஒகனேக்கல் திட்டத்திற்கு அனுமதி தரமாட்டோம் என்று அவர்கள் பேசுகிறார்கள். இதைப்போல 12 நீர் மின் திட்டங்களை மத்திய அரசாங்கத்திலே கொடுத்து இருக்கிறீர்கள். இதுவரைக்கும் அனுமதி கிடையாது. அதைப் பெறுவதற்கு என்ன முயற்சியை எடுத்துக்கொண்டீர்கள் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆக புன்னம் புழா திட்டம், ஒகனேக்கல் திட்டம் மற்றும் இது போன்ற மின் திட்டங்கள் இன்றைக்கு கிடப்பில் இருக்கின்றன.

(முற்பகல் 11-40)

அதைபோலவே இன்னொரு வேடிக்கை. மத்திய அரசு நம்முடைய மாநில அரசு திட்டங்களிலே எவ்வளவு அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணம் திண்டுக்கல்-மதுரை-தூத்துக்குடி அகல ரயில் பாதைத் திட்டம். இதில் 325 கிலோ மீட்டருக்கு பாதை முழுமையாக போடப்பட வேண்டும்

அரசினர் சட்ட முன்வடிவுகள்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஜூலை 1

இப்போது 6 கிலோ மீட்டர் தூரம்தான் போட்டு இருக்கிறார்கள் தூத்துக்குடி டு மேலவட்டாறு என்று சொல்லக்கூடிய 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு போட்டு இருக்கிறார்கள். நீண்ட காலம் தாமதம் ஆகிறது. 5 ஆண்டு காலத்தில் முடிய வேண்டிய வேலை. இன்னும் முடியவில்லை. ரயில்வே பட்ஜெட்டிலே குறைந்த தொகையை ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால் நான் கேட்க விரும்புகிறேன். இது குறித்து இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ? மத்திய அரசை இதுகுறித்து வலியுறுத்தி நீங்கள் போராட வேண்டாமா ? செலவு பல மடங்கு உயர்ந்துகொண்டு இருக்கிறது.

கரூர்-சேலம் பிராட்கேஜ் வேண்டும் என்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அது ஆய்வில் இருப்பதாகச் சொல்கிறார்கள்க இது குறித்து எல்லாம் மத்திய அரசு என்ன முயற்சி எடுத்து வருகிறது, அதற்கு மாநில அரசு அதை எதிர்த்து வாதாடி, போராடி பெறுகின்ற முயற்சியில் ஈடுபடுகிறீர்களா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய துணை சபாநாயகர் தொகுதி வேடசந்தூர் தொகுதியில் பாளையத்திலே சிமெண்ட் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்றும், அதற்கான சிறப்பான அங்கே சிமின்ட் உருவாக்குவதற்கான பூகோள அமைப்பு இருக்கிறது என்று எழுதி 8 வருட காலமாக இந்தச் சட்டசபையில் ஆளுநர் உரையிலும் சொல்லியிருக்கிறீர்கள், பட்ஜெட்டிலும் சொல்லியிருக்கிறீர்கள், வேடசந்தூர் பகுதியிலே பாளையத்திலே சிமெண்ட் ஆலை எல்லாம் ஆளும் கட்சியின் சாதனை என்றும் மத்திய அரசின் அனுமதி என்று எல்லாம் சொல்கிறீர்கள். ஆனால் 8 வருட காலமாக என்ன அனுமதி என்று உள்ளே பார்த்தால் மத்திய அரசிடம் அனுமதி கேட்டு எழுதியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக நான் கேட்க விரும்புகிறேன், ஏதோ மகஜர் கொடுத்து விடுவதாலேயே பாளையத்தில் சிமெண்ட் ஆலை கிடைத்து விடுமா என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். வேடசந்தூர் சிமெண்ட் ஆலை இன்றைக்கு கிடப்பில் இருக்கிறது.

அதேபோலவே சேதுசமுத்திரத் திட்டம், அது குறித்து ஏதோ தேர்தல் நேரத்திலே தேர்தல் அறிக்கையாக வைத்தீர்கள். அதற்கு என்ன முயற்சி எடுத்து இருக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சேலம் உருட்டு இருக்கிறது. அது இரும்பு ஆலையாக இருக்கக்கூடிய நிலைமை இல்லை. அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் இந்த சேலம் இரும்பு ஆலை திட்டத்திற்கு அனுமதி இல்லை என்று சொன்னால் அந்த குழுவை விட்டு நான் வெளி நடப்பு செய்வேன் என்று அவர்கள் வெளியே வர முயற்சித்த

நேரத்தில் அன்றைக்கு பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அந்தத் திட்டத்தை இந்த சேது சமுத்திர திட்டத்தில் சேர்த்தார்கள். அந்த அளவுக்கு உத்வேகத்தோடு, உணர்ச்சியோடு அதை போராடி பெறுகின்ற காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறதா என்றால் கிடையாது.

நிலக்கரி 3-வது சுரங்கம் குறித்து மத்திய அரசு கவனிக்கிறதா என்றால் இல்லை. இதற்கு மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இதே சட்டசபையில் 1980 ஆம் ஆண்டில் எல்லா கட்சிக்காரர்களும் ஆதரித்தார்கள். இந்திரா காங்கிரஸோடு கூட்டாக இருக்கின்ற போது நீங்கள் பேசுகிற பேச்சு ஒன்றாக இருக்கிறது, கூட்டணி இல்லாதபோது நீங்கள் பேசுகிற பேச்சு வேறு ஒன்றாக இருக்கிறது. உதாரணமாக சொல்கிறேன், இந்த பினாமி நில ஒழிப்புச் சட்டம் என்ற ஒரு சட்டம் வந்தது. அப்போது நம்முடைய முதலமைச்சரும் மற்றவர்களும் தமிழ் நாட்டில் சில நிலப் பிரபுகள் பினாமி பெயரில் ஆயிரக்கணக்கான வேலி நிலங்களை அவர்களின் உறவினர்களுக்கு, மற்றவர்களுக்கு பினாமியாக எழுதிவைத்து இங்கே மக்களை ஏமாற்றுகிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள் என்று எல்லாம் பேசி, எனவே ஒரு சோசிலிஸ பாதையை நோக்கி இந்த அரசு போகிறது, எனவே பினாமி நில ஒழிப்பு சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம் என்று கொண்டு வந்தார்கள். நாங்கள் எல்லாம் ஆதரித்தோம்.

இன்றைக்கு மத்திய அரசின் கொள்கையின்படி அந்த 20 அம்ச திட்டத்தை சிறப்பான முறையில் அண்ணாவின் வழி வந்த நீங்கள் நிறைவேற்றிக் கொண்டு இருப்பதாகச் சொல்கிறீர்கள். ரொம்பவும் சந்தோஷம். ஆனால் நான் கேட்க விரும்புகிறேன். அந்த 20 அம்ச திட்டத்தில் 4 வது அம்ச திட்டம் இந்த நில சீர்திருத்தம் தான். நில சீர்திருத்தத்தில் பினாமி நில ஒழிப்பு சட்டம் வருகிறது. மத்திய அரசு ஜனாதிபதியின் அங்கீகாரம் வழங்கப் படாமல் இருக்கிறது. இது குறித்து வாய் திறந்து இந்த சபையில் ஜனாதிபதி அங்கீகாரம் வழங்காதது தப்பு, மத்திய அரசு அதை செய்யாமல் இருப்பது, வழங்காமல் இருப்பது தப்பு, ஆகவே போராடுவோம் என்று எங்காவது சொல்லியிருக்கிறீர்களா ? அல்லது ஒரு தீர்மானம் போட்டு இருக்கிறீர்களா, கூட்டத்தில் பேசியிருக்கிறீர்களா பினாமி நில ஒழிப்புச் சட்டம் என்று சொன்னால் யாரோ கோபித்துக் கொள்வார்கள், சிக்கல் வந்துவிடும், ரே கமிஷன் வரும் என்று ஒரு பயம், இது குறித்து உங்களுக்கு பலப் பிரச்சினைகள், இருக்கிறதே தவிர, நான் கேட்க விரும்புகிறேன், பினாமி நில ஒழிப்பு சட்டத்திற்கு ஜனாதிபதி அங்கீகாரம் பெறுவதற்கு இந்த அரசு என்ன முயற்சி எடுத்து இருக்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஜூலை 15

கிறது என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பிரதமர் அவர்கள் சென்னைக்கு வரும் நேரம். துரதிருஷ்டவசமாக இந்தி திணிப்பு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இதை எல்லாம் நீங்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். டி.வி. யில் இந்தியை திணிக்கிறார்கள், பாங்கியில் இந்தியை திணிக்கிறார்கள், ரயில்வேயில் இந்தியை திணிக்கிறார்கள், விமானத்தில் இந்தியை திணிக்கிறார்கள், நேரடியாக, மறைமுகமாக இந்த இரண்டு டாக்டிக்ஸ்ஐ பயன்படுத்தி இந்தி திணிக்கப் படுகிற வேலை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

உதாரணமாகச் சொல்கிறேன், வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட போது கூட கல்வி மாநில அரசினுடைய பட்டியலில் ஸ்டேட் லிஸ்ட்டில் இருந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக மாநில அரசின் கையில் இருந்த கல்வி இப்போது கன்கரன்டு லிஸ்ட்டில் பொதுப்பட்டியலில் போயிருக்கிறது.

சட்டம் படித்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரியும். கன்கரன்ட் லிஸ்ட் என்று சொன்னால் என்ன அர்த்தம்? மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சட்டம் இயற்றலாம். ஆனால் மத்திய சர்க்காருடைய சட்டம் தான் இறுதியானது. ஆக, மறைமுகமாக கன்கரன்ட் லிஸ்ட் என்று சொல்வது மத்திய சர்க்காருடைய லிஸ்ட் தான்.

ஆக, இன்றைக்கு கல்வி, ஸ்டேட் லிஸ்ட்டிலிருந்து, மத்திய சர்க்காருக்குப் போய் இருக்கிறது. என்ன அர்த்தம் என்றால், மத்திய சர்க்கார், கல்வியில் எந்த முறையையும் கொண்டு வரலாம். இந்தியைக் கூடத் திணிக்கலாம். தமிழின சமுதாய மக்களுடைய கலாசாரத்திற்கு எதிரான கல்வித் திட்டங்களைக் கொண்டு வரலாம். எல்லா அதிகாரமும் அங்கு இருக்கிறது. இன்றைக்குக் கல்வி, மாநில பட்டியலிலிருந்து மத்திய சர்க்கார் கன்கரன்ட் லிஸ்ட்டுக்கு போய் விட்டதனாலே, ஏற்பட்டிருக்க கூடிய கடுமைக்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன்.

மாடல் ஸ்கூல் ஒன்று துவக்கப் போகிறோம் என்று அறிவித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாடல் ஸ்கூல் வைக்கப்போகிறார்களாம். மொத்தம் 432 ஸ்கூல்; திட்டக்குழு இதற்கு அனுமதி கொடுத்து விட்டது. 800 கோடி ரூபாய் எஜூகேஷன் மினிஸ்டர் இதற்குத் தரவேண்டும் என்று சென்டிரலிலே திட்டக் குழுவிடம் கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

அந்த மாடல் ஸ்கூல் எப்படி இருக்கும் என்று கேட்டால், ஒரு எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி சொல்கிறது, மாடல் ஸ்கூலுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

1985 ஜூலை 15] [திரு. அ. ரகுமான்கான்]

ஆக, இந்த மாடல் ஸ்கூல் என்பது மத்திய சர்க்காருடைய ஏஜென்சியாகும். நம்முடைய கலாச்சாரத்தின் மீது எடுக்கப்படுகிற ஒரு படையெடுப்பு. இந்தி ஆதிக்கத்தைத் திணிக்கிற ஒரு கருவியாக இருக்குமென நிச்சயமாக நாம் அஞ்சுவதற்கு நியாயங்கள் இருக்கின்றன. எனவே, இது முக்கியமான விஷயம்.

மாநில சுயாட்சி அண்ணாவின் கொள்கை. அதிலே நம்பிக்கை இருப்பதாக சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். தீர்மானம் இது வரைக்கும் போடவில்லை. சர்க்காரிய கமிஷன் முன்னாலே இன்னும் ரிப்போர்ட் தரவில்லை. அதற்கு காலக் கெடு கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அம்பா சங்கர் கமிஷன் அறிக்கை வைக்க வில்லை. அதற்கும் காலக் கெடு கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், கல்வி மாநிலப் பட்டியலில்தான் இருக்க வேண்டும். பொதுப் பட்டியலில் இருக்கக்கூடாது. பொதுப்பட்டியலில் இருப்பதை இந்தத் தமிழ்நாடு சட்டசபை ஏற்றுக்கொள்ளவில்லை, எதிர்க்கிறது என்று ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே நீங்கள் கொண்டு வரவேண்டும். அதை ஆதரிப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக நாங்கள் உறுதியாக நிற்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல. மத்திய சர்க்கார் தமிழகத்தினுடைய மக்களுடைய தலையெழுத்தோடு பயங்கர விளையாட்டு விளையாடிக் கொண்டு இருக்கிறது. தமிழக அரசு அது குறித்து மௌனம் சாதித்துக் கொண்டு இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன்.

எம்.பி.பி.எஸ். அது போலவே, பி.டி.எஸ். பல் வைத்தியத்திற்கு படிக்கும் பாடப்பிரிவு—இதிலே 35 சதவிகிதம் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று அறிவித்து இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ஒண்டே அவர்கள் அதை எதிர்ப்பதாக இ கே தெரிவித்தார்கள். கேரளாவும் அதை எதிர்ப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால் கேரள சர்க்காரின் சார்பாக ஒரு அறிக்கை வெளிவந்திருக்கிறது. நாங்கள் இந்த ஆண்டு அதை அமல் நடத்தமுடியாது என்றும், வேண்டுமானால், 1986–87-லே பார்க்கலாம் என்றும், இப்போது முடியாது என்றும் அறிவித்துவிட்டார்கள். காரணம், சுப்ரீம் கோர்ட்டிலே கூட அப்படி டைரக்ஷன் கொடுத்து இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

ஆனால், இந்தச் சர்க்கார் எந்த விதமான விளக்கமோ, அறிக்கையோ வைக்கவில்லை. அமைச்சர்கள் எல்லாவற்றுக்கும் அறிக்கை வைக்கிறார்கள். அமைச்சர் முத்துசாமி அவர்கள்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஜூலை 15

இங்கே அறிக்கை வைத்தார்கள். மற்றவர்களும் வைத்தார்கள். பஞ்சாலை தொழிலாளர் போராட்டம் சம்பந்தமாக டிரிப்யூன் லுக்கு விடப்பட்ட செய்தியை இங்கே அறிவித்தார்கள்.

நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு முக்கியமான பிரச்சினையாக இருக்கக்கூடிய இந்த எம்.பி.பி.எஸ். இலே 35 சதவீதம் பிற மாநிலத்தவர்களுக்கு ஒதுக்கப்படுகிறதா ? அதுபோல் பி.டி.எஸ். இலே ஒதுக்கப்படுகிறதா ? முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபட்டு இருக்கிறதா ? அதற்கான ஆண்டு அமல் ஆகுமா ? விரைவில் அதைப்பற்றி அவைக்கு தெரிவிக்க வேண்டும்.

காரணம், பிற மாநிலத்தவர்களை மருத்துவக் கல்லூரியிலே நுழைப்பதற்கு, 35 சதவீதம் என்ற போர்வையிலே, முயற்சி நடைபெற்று வருவதாக அறிகிறேன். ஆகவே, அது குறித்த தமிழக சர்க்காரின் நிலை என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே, சென்னை உயர் நீதிமன்றம்—தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்றம் செய்யப்படவேண்டும் என்று சொல்கிறோமே, அதை மாற்று வதற்குக் கூட தமிழக சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது. . . .

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி தமிழக சர்க்காரும் ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்டினுடைய நகல் கேட்டிருக்கிறோம். ஆக. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்த்தபடி இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட், டைரக்ஷன் வந்து ஆகிவிட்டது. நான் பார்த்தேன். என்ன போட்டு இருக்கிறது என்று கேட்டால், இப்போது உடனடியாக அமல் நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டு இருக்கிறது. அதைத் தான் உங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். கேரளாவிலே இருக்கக்கூடிய அரசு இந்த ஆண்டு இல்லை என்று சொல்லி ஆகிவிட்டது. இங்கே நுழைவுத் தேர்வின் மூலமாக 35 சதவீதம் பிற மாநிலத்தவர்கள் உள்ளே நுழைகிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11—50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதைத்தான் நான் சொன்னேன், கேரளாவைப் பொறுத்தவரையில் அந்த விஷயத்திலே அவர்கள் Implead ஆச்சட்டட்டிருக்கிறார்கள்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1985 ஜூலை 15

They are party to the whole Supreme Court Judgement. Therefore they were able to take a decision early. We will also be taking a similar decision in a day or two and that will be announced in the House.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே என்ன முடிவு எடுக்கப்படும் என்று சொல்லப் படும் என்று சொன்னார்கள். ஆனால், கேரளா முடிவு எடுக்கப் படுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. காரணம், இதை அடிப்படையிலே நீங்கள் எதிர்க்கிறீர்கள்; அப்படி அடிப்படை யிலே எதிர்க்கின்றபொழுது, மீண்டும் பரிசீலனை செய்ய வாய்ப்பு இருக்கின்றபொழுது உடனடியாக இதை அமல் நடத்த வேண்டியஅவசியம் என்ன? அமல் நடத்த வேண்டிய கட்டாயம் இல்லைஎன்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது, கேரளா அதைப் பின்பற்றுகிறது. ஆகவே, நீங்கள் மட்டும் அதை அமல் படுத்த வேண்டிய அவசியம் இல்லை. நல்ல விஷயத்தைச் சொல்லுவீர்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான் ஏற்கனவே சொன்னேன். We will take a decision on similar lines. We are waiting for certain details. As soon as the details are received We will be taking similar decision. பைனலாக அனவுன்ஸ் செய்வதற்கு முன்னால் பூரா விவரங்களையும் பெற்றுக்கொண்டுதான் சொல்ல வேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு அ. ரகுமான்கான்: What our Honble Minister has said on the Floor of the House is an assurance, I knows Our Honble Minister said that he will submit report within two days. I am thankful to him as far as that points concerned. மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, கண்ணகி கோயில் பிரச்னை இருக்கிறது. கேரளாவைச் சேர்ந்தவர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். நமக்குச் சொந்தமா அவர்களுக்குச் சொந்தமா என்று கேட்டால் நமக்குச் சொந்தம் என்பதற்கான ஆதாரங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு வரையிலும் தீர்வு காணப்படாமல் இருப்பதால் கம்பம் போன்ற பகுதியில் இருப்பவர்கள் உள்ளே நுழைவதில் சிக்கல் இருக்கிறது.

தமிழ் தெரிந்த நீதிபதிதான் சென்னை உயர்நீதிமன்றத்தில் இருக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் என் உயிர் போனா லும் அதை நான் விட்டுவிட மாட்டேன் என்றும் முதல்வரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். தமிழ் தெரிந்த நீதிபதி வர வேண்டும். டிரான்ஸ்ஃபர் ஆப் ஜட்ஜ்-இல்கூட

(திரு. அ. ரகுமான்கான்) [1985 ஜூலை 15

பொலிடிக்கல் மோட்டிவ் இருக்கிறது என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதி சொல்லியிருக்கிறார். நீதிபதி கன்னாவிற்கு நடந்தது வேறு விவகாரம். நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆனால், இதை அமல் நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், மாநில அரசின் திட்டங்களை நிறைவேற்று வதற்கு அவர்கள் பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக் கிறது என்பதை இந்த நேரத்திலே நான் நினைவு படுத்த விரும்பு கிறேன்.

கடைசியாக, இன்னொரு முக்கிய விஷயத்தை உங்கள் அனுமதி யோடு சொல்லிவிட்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள் கிறேன். இந்த விஷயத்தை நான் நாவலர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். ஏனென்றால், தவறுகள் களை யப்பட வேண்டும் என்பதற்காக, நான் அதுசம்பந்தமான ரெக்கார்டுகளையெல்லாம் வைத்திருக்கிறேன். என்னுடைய பேச்சை முடித்த பிறகு வேண்டுமானால் அவற்றை நாவலர் அவர்களிடத்தில் கொடுக்கிறேன் உங்கள் அனுமதியோடு.

பாட நூல் நிறுவனத்தில் மிகப் பெரிய தப்புகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இனியன் அச்சகம் என்று ஒரு அச்சகம்; ஹைடென்ஷன் மெஷின் ஒன்றுதான் இருக்கிறது. ஒரு சில அச்சக மெஷின்களோடு தான் அது இயங்குகிறது. 1985–86 ஆம் ஆண்டு, அரசு ஆணைப்படி அச்சிடுவதற்காகப் பாட நூல் கொடுக்கிறார்கள், எட்டாம் வகுப்பு அறிவியல்; எட்டாம் வகுப்பு கணக்கு. 20–2–1985-க்குள்ளே அச்சடிக்கப்பட்டு பாட நூல் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பது உத்தரவு. ஆனால் அப்படிக் கொடுக்கவில்லையென்றால் அச்சடிக்கும் உரிமையை அந்தப் பட்டியலிலிருந்து எடுத்து விடுவார்கள்; அதற்குப் பிறகு அச்சடிக்கும் உரிமையைத் தர மாட்டார்கள். இதை ஸ்ட்ரிக்டாக நடைமுறைப்படுத்து கிறார்கள் ஆனால், இனியன் அச்சகம் குறிப்பிட்ட தேதிக்குள் கொடுக்கவில்லை.

திடீரென்று ஒருவர், யார் அந்தப் பாட நூல் நிறுவனத்தி னுடைய தலைவராக இருக்கிறார்களோ, அவர்கள் பெயரைக் கூடச் சொல்வதில் தப்பு இல்லை, நம்முடைய மறைந்து போன ஈ.வி.கே. சம்பத் அவர்களுடைய துணைவியார், அவரே ஒரு கடிதம் கொடுத்து— அவர்தான் அதிலே தலைவர், அவரே கடிதம் கொடுக்கிறார், அந்தக் கடிதத்தின் நகல் என்னிடத்திலே இருக்கிறது— அந்தக் கடிதத்தில் என்ன சொல்கிறார் என்றால், அந்த அச்சகத்தின் பெயரை மாற்றி, இனியன் அச்சகத்தின் பெயரை மாற்றி, ராம்கிருஷ் என்று சொல்லி, ஏற்கனவே இனியன் அச்சகத்திற்குக் கொடுத்த அத்தனை வேலைகளையும்

1985 ஜூலை 15] (திரு. அ. ரகுமான்கான்)

டிரான்ஸ்பர் செய்கிறார்கள். இவர்களாவது குறிப்பிட்ட தேதிக்குள் கொடுத்தார்களா என்று கேட்டால் இல்லை. இல்லை யென்று சொல்ல வேண்டுமென்றால் அச்சக உரிமையாளரின் பெயரைச் சொல்லாமல் இருப்பதே தப்பு. நான்கைந்து மாதங்கள் ஆகின்றன. உங்களிடத்தில் குறிப்புகள் இருந்தால் பாருங்கள். ராம் கிருஷ் பிரிண்டர் என்ற புதிய அச்சகம் இருக்கிறது, இனியன் அச்சகம் என்பது மாற்றப்பட்டு இருக்கிறது. யார் அந்த உரிமை யைக் கொடுத்தது? இப்படி மாற்றப்பட்டதாக அந்தத் தலைவரே மனுக் கொடுத்து அவர்களே மாற்றி இருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இதற்குப் பின்னாலே என்ன பின்னணி என்று, தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப்பொழுதுகூட கேட்கிறேன், அந்த உரிமையாளர் யார் என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும். காரணம், கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப் படும் இந்தத் துறையிலே இதுபோன்ற தவறுகள் நடக்கின்றன.

மூகாம்பிகா, [ஆப்செட்— அதற்கொன்றும் கொடுக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. அச்சடிக்கின்ற உரிமை தரக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அதிலும் விதிகள் பின்பற்றப்பட்டிருக்கின்றனவா என்றால் கிடையாது. நான் குறிப்பு வைத்திருக்கிறேன். 1984–85-ல் அளிக்கப்பட்ட வேலைகளை அந்த அச்சகம் முடிக்கவில்லை. அதற்கான உத் தரவுகள் என்னிடம் இருக்கிறது. 8-வது வகுப்பு, ஆங்கிலம் 75,000 காப்பிகள் அச்சடிக்கக் கொடுத்து இருக்கிறார்கள். இது வரைக்கும் பல தடவை அந்தப் பாட நூல் நிறுவனத்தின் சார்பாக நீங்கள் இந்தக் குறிப்பிட்ட தேதிக்குள் தரவில்லை. எனவே, உரிமை உங்களுக்கு மறுக்கப்படும் என்றெல்லாம் சொல்லி யுங்கூட, அதற்குப் பிறகும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் கோப்புகள் அங்கே இருக் கின்றன; கேட்கலாம். கோப்பு உங்களிடத்திலே இருக்கிறது, கோப்பின் நகல் என்னிடத்திலே இருக்கிறது. எப்படி வந்தது என்று நீங்கள் கேட்க வேண்டாம். அப்படியே, அந்தக் கோப்புகளின் காப்பியை நாங்கள் வைத்திருக்கிறோம். நீங்கள் வேண்டுமானாலும் பார்வையிடலாம்.

இன்னொன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன், மூகாம்பிகா ஆப்செட் தப்பும், அநீதியும் ஏன் செய்கிறது தெரியுமா? வலம்புரி ஜான் அதற்குச் சொந்தக்காரர். ஆக, ஆளுங்கட்சிக்காரர்கள் * * பாட நூல் நிறுவனம் இருக்கிறது என்பதற்கு இதைக் காட்டிலும் என்ன ஆதாரம் தேவை என்று நான் கேட்க விரும்பு கிறேன். (மணியடிக்கப்பெற்றது.).

* * மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

(திரு. அ. ரகுமான்கான்) [1985 ஜூலை 15

மக்கள் குரல் அச்சகம், 1984–85 ஆம் ஆண்டு அச்சுப் பணியை முடிக்காமல் இருக்கும்போது, விதி முறைகள் இடம் கொடுக்காமல் இருக்கும்போது, 5 இலட்சம் பிரதிகள் அச்சடிப்பதற்கு கொடுக்கிறார்கள். ஏன் என்றால், மக்கள் குரலே மகேசன் குரல் என்று இன்றைக்கு உங்களை நியாயப்படுத்தி எழுதுபவர், ஊருக்கு உபதேசம் செய்பவர். அதிலும் முறைகேடு. மக்கள் குரல் பத்திரிகைக்குத் தரப்படுகிறது. ஏன் இப்படியெல்லாம் தரப்படுகிறது என்று கேட்டால், பின்னாலே, அதை நான் விளக்க, ஆதாரத்தோடு சொல்கிறேன். விசாரணை வைத்தால், நான் தெளிவாகச் சொல்லத் தயாராக இருக்கிறேன். அதற்குக் காரணம், பாட நூல் தலைவியாக இருப்பவர் மிகப் பெரிய * * அவருக்குப் போய் பதவி உயர்வு கிடைக்கிறது. ஏனென்றால், அங்கே * * போதாது என்று சொல்லி, சிறு தொழில் நிறுவனத்திற்கு நீங்கள் மாற்றுகிறீர்கள் என்று சொன்னால் அது எந்த விதத்திலே நியாயம்? அதற்கான கோப்புகள் உண்டா என்று கேட்டால், அந்தக் கோப்புகளின் நகல் என்னிடத்திலே இருக்கிறது. சர்க்கார் நியமிக்கும் விசாரணை கமிட்டியின் முன்னாலே வந்து பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். என்று சொல்லி, இது ஒரு ஊழல் ஆட்சி என்பதற்கு அடையாளம் இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது என்று சொல்லி, என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * என்ற வார்த்தைகளை நீக்குகிறேன். It is unparliamentary.

* டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவின் மீது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களை இந்தச் சட்டமன்றத்திலே வைக்க முன் வருகின்றேன்.

பத்து அவதாரம் கொண்டார் பரந்தாமன்—இன்று
பரிபூரண அவதாரம் கண்டார் பரங்கிமலை தேவன்
உண்மையாக உழைப்பவர்க்கு இணங்குவார்
உடன் வந்து உதவி செய்து வாழ்த்துவார்
உடன் பிறந்த ரத்தமாக நேசிப்பார்—சில

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் இணங்க அகற்றப்பெற்றது.

1985 ஜூலை 1] (டாக்டர் கே. சமரசம்)

''ஓட்டை உடைசல்'' புகழும்போது யோசிப்பார்
கோடிவகை அனுபவங்கள் கண்டவர்—பல
கொடியவரின் தொடர்பை விட்டு விண்டவர்
குறுக்கே வந்த எமனை வென்று மீண்டவர்

கும்பிடத்தக்க அவர்தானே எங்கள் ஆண்டவர். அந்த இறைவன் ஆட்சியில், இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தேர்தலிலே வெற்றி பெற்றது என்று சொன்னால், நடந்து முடிந்த தேர்தலைப் பற்றி எல்லோரும் அறிவார்கள். தேர்தல் நேரத்திலே செய்த மோடி மஸ்தான் வேலை, தீம்தரிகிட தில்லுமுல்லு, துக்ளக் தர்பாரெல்லாம் அமெரிக்காவிலிருந்து வந்த வீடியோ படமெனும் புயலால் பெருமழையால் அடித்துச் செல்லப்பட்டது என்பதை யாரும் மறந்து விடமுடியாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்,
கிளராத சோறு வேகாது
சீவாத தலை படியாது
துவைக்காத துணி வெளுக்காது
இவற்றைப் போலத்தான்
விளக்காத உண்மை

வீணாகிப் போய் விடும் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஆகவே, அந்த அடிப்படையில் பல்வேறுவிதமான உண்மைகள இந்த மன்றத்திலே வைக்க வேண்டிய ஒரு நிலைமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே பல நேரங்களில், வெற்றியைப் பற்றிக் கூட சந்தேகிக்கக்கூடிய சூழ்நிலையில் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி நண்பர்கள் சொன்னார்கள்.

(நண்பகல் 12-00).

ஆனால் நான் இந்தச் சட்டமன்றத்தில் ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். அண்ணா காலம் அவர் அரசியலுக்கு வந்தார். 1957-லே 15 உறுப்பினர்கள். 1962-லே 50, 1967-லே 134 உறுப்பினர்கள் என்ற அளவுக்கு உயர்ந்து, ஆட்சியைப் பிடித்தோம். அது போலவே அவர் மறைந்து விட்ட பிறகு நிலைமை

என்ன என்று பார்க்கும் போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 1969-லே 124 ஆக இருந்தது அல்லது 132 என்ற நிலையிலே இருந்தது. 1971-லே ஒட்டு மொத்தமாக 184 சீட்டுகளைப் பிடித்தோம். 1977-லே அண்ணா தி.மு.க. மட்டும் 126. 1980 ஆம் ஆண்டில் 129-க்கு மேல் ; 1984-லே 130-ஐயும் தாண்டியது. ஆனால் 1977, 1980, 1984 என்ற இந்த மூன்று தேர்தல்களிலும் நேரடியாக திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அணி வருப்பிலே கூட போட்டியிடுகிறபோது அன்றையதினம் எந்த அளவுக்கு நமக்குள் பாகுபாடு இருந்ததோ அதான் 1984-லேயும் கூட இருக்கிறதே தவிர இதில் வேறு எந்த சாவோ, இடையிலே வந்த உடல்நலக் குறைவோ இல்லை என்பதைக் காட்ட நாட்டுமக்கள் ஓட்டு போட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இயக்கம் என்பது அவர்களுடைய கொள்கைக்காக, இலட்சியத்திற்காக திட்டங்களுக்காக 1977 ஆம் ஆண்டிலே மக்களுடைய நிலை என்னவோ அதை ஒட்டித்தான் இருக்கிறதே தவிர இடையிலே வந்த வேறு எந்த விதமான ஆதாயமோ இல்லை என்பதையும் தனித் தன்மையோடு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட வெற்றியைப் பெற்றிருக்கிறது என்பதையும் ஆணித்தரமாக சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் இந்த நிதியை ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தியத் துணைத் கண்டத்திலேயே 20 அம்சத்திட்டத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிற அரசு தமிழக அரசு. கல்வியில் மறுமலர்ச்சி, சிறு தொழில்களில் பெரும் முன்னேற்றம், இந்தியாவிலே தமிழ் நாட்டில் தான் பல்வேறு வகையிலே முன்னேற்றம். கிருஷ்ணா நதித்திட்டம், அதைக் கொண்டு வர ஏற்பாடுகள் அதைப் போன்று காவேரிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

அது மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே கட்டியிருக்கிற வீடுகள், பாசன வசதிகள், மின்சார உற்பத்தி, உணவுப் பொருள் வழங்குதல், போக்குவரத்து வசதி, புதிய மாவட்டங்களை உருவாக்குதல், பல்கலைக் கழகங்கள், பொறியியல் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி—இப்படி பல்வேறு திட்டங்கள் இதுவரையில் இந்தியத் துணைக் கண்டத்தில் மற்ற மாநிலங்களில் இல்லாத அளவுக்கு சிறப்பாகவும் தமிழ்நாட்டில் இதுவரை ஆண்டு வந்த எந்த ஆட்சியும் நடைமுறைக்குக் கொண்டு வர முடியாத பல்வேறு நாட்டு

நடப்புத் திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்து, இந்த அரசு அவற்றிலே நல்ல முன்னேற்றம் அடைந்து, அவற்றை எல்லாம் நிறைவேற்றுவதற்குரிய வகையிலே இந்தச் சட்ட முன் வடிவின் மூலமாக பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று டாக்டர் நாவலர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

இங்கே பல பிரச்சினைகளைச் சொன்னார்கள். மொழிப் பிரச்சினையை சொன்னார்கள். கல்வி பொதுப் பட்டியலிலே போயிருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். மருத்துவத் துறையிலே இடம் வருவது தேவை என்று இந்தியாவிலே வரவேண்டிய கணக்கை எல்லாம் சொன்னார்கள். பினாமி நிலம் ஒழிப்பு பற்றியும் சொன்னார்கள். நான் ஒன்றை வெளிப்படையாகவே சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை மதிக்காத வகையிலே, மத்திய அரசிலே கூட இதற்கு வேண்டிய வகையிலே வாய்ப்பு அளிக்கத் தவறினால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட பேரறிஞர் அண்ணா அவர்கள் சேலம் இரும்பாலை வருவதற்கு எழுச்சி நாள் கொண்டாடினார்களே அதைப் போன்று ஒரு எழுச்சிநாள் கொண்டாட புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். மன்றங்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் நிச்சயமாக முன்வரலாம். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை கழகம் பரிசீலிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய தனித் தன்மை எந்த வகையிலும் கெடாமல் தமிழ்நாடு என்னென்ன வகையில் எது எது தேவை என்று கருதுகிறதோ, உணர்வு என்னென்ன இருக்கிறதோ நியாயம் என்னென்ன இருக்கிறதோ அதைப் பெறுவதற்கு எந்த வகையிலே போராட வேண்டுமோ அந்த வகையிலே போராடி, எந்த வகையில் வாதாட வேண்டுமோ அந்த வகையில் வாதாடி, இந்த மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற உணர்வுகளுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடியவர் யாராக இருந்தாலும் அதை முறியடிக்கக்கூடிய வகையில் இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மன்றங்களும் எழுச்சி நாள் கொண்டாடக்கூடிய நிலைமை வரும்.

இந்தத் தமிழ்நாட்டிலே தான் மாணவர்களுக்கு இலவச உணவு, இலவச உடை, இலவச புத்தகம் என்று எல்லாம் கொடுத்து, கல்வியிலே கூட மிகப் பெரும் மறுமலர்ச்சியை உண்டாக்கி இருக்கிறோம் என்றால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட ஒரு சூழ் நிலையில் மிக நல்லமுறையிலே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டில் நல்லாட்சி புரியக்கூடிய வகையில் நல்ல

பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறது இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே இப்போது மிக மிக அத்தியாவசியத் தேவை என்று சொல்வது நீதிமன்றங்களிலே நீதிபதிகள் காலி இடம் இருக்கக் கூடாது. காலி இடங்களை எல்லாம் உடனே நிரப்ப வேண்டும். மது விலக்குக் குற்றங்கள் உடனடியாக பைசல் ஆகக்கூடிய வகையில் குற்றங்கள் தேங்காத வகையில், பாதிக்கப்பட்டவர்கள் பல முறை படியேறி மேலும் பாதிக்காத வகையில், குற்றவாளிகளுக்கு உடனடியாக தண்டனை கொடுக்கின்ற வகையில், இந்த நீதி மன்றங்களிலே நீதிபதிகளை தங்குதடை இல்லாமல் தேவையான அளவுக்கு நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரையிலும் ஒரு முதலமைச்சர் ஒரு கார்ப்பரேஷனுடைய நிர்வாகத்திலே அந்தத் தலைநகருக்காக ஒரு தனி கமிட்டி அமைத்து, தலைமை ஏற்று சீர்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலைக்கு யாரும் முன்வரவில்லை. தனித்தன்மை கொண்ட ஒரு சூழ்நிலையாக சென்னை மாநகராட்சிக்கு அப்படி முதலமைச்சர் அவர்கள் தலைமை ஏற்று நடத்தக் கூடிய அளவுக்கு தனிக் கவனம் செலுத்துகிறார்கள் என்று சொன்னால் இதிலே அவர்கள் எந்த அளவுக்கு ஈடுபாடு வைத்திருக்கிறார்கள் என்பதையும், இதற்கு முன்பு இதை எப்படி சின்னாபின்னமாக்கி வைத்திருக்கிறார்கள் ஏற்கனவே இருந்த சூழ்நிலையில் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அந்த அடிப்படையில் சென்னையை மிகப்பெரிய அழகான நகரமாக ஆக்கக்கூடிய வகையில் வெளி மாநிலத்தவர்களும் வந்தாலும் வெளிநாட்டவர்களும் கண்டு, இருந்து, நல்ல முறையில் செல்லக்கூடிய வகையில் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள். பாதையாக இருந்தாலும், மின்சாரமாக இருந்தாலும், கழிவுநீர் அகற்றுகின்ற பணியாக இருந்தாலும், பார்க்-ஆக இருந்தாலும், பல்வேறு போக்குவரத்தாக இருந்தாலும் பல நல்ல திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். படகுப், போக்குவரத்து என்பதைக்கூட எப்படி எப்படி நடைமுறைப் படுத்தலாம் என்பதைப் பற்றியும். பஸ் போக்குவரத்து, பல்வேறு விதமான இரயில் போக்குவரத்து போன்றவை எல்லாம் மிகச் சீராக அமையக்கூடிய வகையிலும் புரட்சித் தலைவர் அவர்கள் நல்லபல திட்டங்களை உருவாக்கி இந்த நகரத்தை மேம்படுத்துவதற்குரியவகையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இங்கே பேசுகின்ற

போது ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒன்றைச் சொன்னார். ஆளும் கட்சி என்பது ஒரு பருவப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டதுபோல்; எதிர்க்கட்சி என்பது கல்யாணம் ஆகாத பருவப் பெண் போல் என்று சொன்னார். நான் ஒத்துக்கொள்கிறேன்; இல்லை என்று சொல்லவில்லை. கல்யாணம் ஆன பெண்ணைப் பார்த்து குழந்தை உண்டா என்று கேட்டால் பரவாயில்லை; எங்களைப் போய் கேட்கிறீர்களே என்று ஒருவர் சொன்னார். இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே ஒரு அதிசயம் நடந்திருக்கிறது என்றால் அது கல்யாணம் ஆகாத பருவப் பெண் கர்ப்பமாகி பிறகு அது இடையிலே அபார்ஷனும் ஆகிய நிலைகூட இங்கேதான் நடந்தது. 1984-ல் இங்கே தேர்தல் நடக்கின்றது என்றால் முதலமைச்சராக புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் முதலமைச்சர் என்ற நிலையில்தான் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தார்கள். முதலமைச்சர் என்ற நிலையில்தான் அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார்கள். முதலமைச்சர் என்ற நிலையில்தான் இங்கே யிருந்து அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். முதலமைச்சராக இருக்கும்போதுதான் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர் முதலமைச்சராக இருந்துகொண்டிருக்கும்போது தமிழ்நாட்டிலே தேர்தல் நடைபெறுகிறது. அப்போது எதிர்க்கட்சியினர் தீர்மானம் போடுகிறார்கள். இந்த முதலமைச்சருக்கு நாங்கள் தொடர்ந்து நல்ல சிகிச்சை அளிப்போம், ஏற்கனவே அளிக்கப்பட்ட சிகிச்சைக்கு விசாரணைக் கமிஷன் அமைப்போம் என்று தீர்மானம் போட்டார்கள். இப்படிப் போடுவது யார்? எதிர்க்கட்சிகள். இதுதான் கல்யாணம் ஆகாத பருவப்பெண் அப்படியே கர்ப்பம் ஆகி விட்டாள்; அப்புறம் ரிசல்ட் என்னவென்றால் அபார்ஷன் ஆகிவிட்டது. இப்படிப்பட்ட நிலைமையை உலகில் வேறு எங்கும் காண முடியாது. தமிழ்நாட்டிலே மட்டும்தான் காணமுடியும். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை இங்கே உருவாக்கி விட்டார்கள். ''வீட்டைக் கொளுத்துகின்ற ராஜாவுக்கு ஊதிக்கொடுக்கிற மந்திரி'' என்பார்கள். அதுபோன்று எதிர்க்கட்சியினர் எப்படி, எப்படி பேசினார்களோ அதற்குத் துணையாக நின்ற ரதகஜதுரகபதாதி போன்றவர்களும் அதற்கான காரண-காரியங்களை எடுத்து வைத்தார்கள்.

இப்போது சிலருக்கு சில .உணர்வுகள் வந்திருக்கின்றன. அதாவது மேலவையில் கூட எதிர்க்கட்சியாக இருக்கின்ற உறுப்பினர் ஒன்றைப் பேசினார். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பேசியிருக்கிறார். காங்கிரஸை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவோம். இப்படி ஆந்திராவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பேசியிருக்கிறார். மேலவையில் எதிர்க்

(டாக்டர் கே. சமரசம்) [1985 ஜூலை 15

கட்சித் தலைவராக இருக்கின்ற திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்றபோது சொல்லியிருக்கிறார்கள், அதில் என்ன தவறு இருக்கின்றது என்று. அவ்வாறு சொல்லிவிட்டு சில காரண, காரியங்களையும் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இந்த நாடு விடுதலை பெறுவதற்காக நூறாண்டுகளுக்கு மேலாக கஷ்டப்பட்டவர்கள். அப்படிப்பட்ட நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்று சொல்வதில் என்ன தவறு? டெல்லியில் 21 ஆண்டுக்காலம் நாங்கள் ஆட்சி செய்துகொண்டிருக்கி றோம். இடையிலே மூன்றாண்டுக்காலம் எங்கள் நிர்வாகம் இல்லை. பிறகு மீண்டும் வந்து விட்டோம். தமிழ்நாட்டிலும் நாங்கள் ஏன் வரக்கூடாது? ஒரு கட்சியிலே இருந்து வெளியே வந்து நான்கு வருஷத்தில் தேர்தலில் நின்று வெற்றி பெற்று மூன்று முறை தாய்க்கழத்தையே தோற்கடித்த வரலாறு உங்களுக்கு இருக்கின்றது என்று சொன்னால் நாங்கள் நூறாண்டுக்காலம் பாடுபட்டவர்கள் ஆட்சிக்கு வருவோம் என்று சொல்ல எங்களுக்கு உரிமை இல்லையா என்று எல்லாம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே பாடுபட்டிருந்தாலும் டெல்லி யைப் பொறுத்தவரையில் வேண்டுமானால் காங்கிரஸ் பாஞ் சாலியாக இருக்கலாம். அவ்வாறு சபதத்தை ஏற்று மீண்டும் வந்து அமரலாம். ஆனால் திராவிடத்தைப் பொறுத்தவரையில் அதிலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் என்பது மாதவி. அவள் மகள் மணிமேகலை. இந்த இருவரும் துறவு பூண்டார்கள். அது போல அரசியல் துறவறம் பூண்டது. பூண்டது தானே தவிர மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வர முடியும் என்று அவர்கள் நினைப்பது கனவுதானே தவிர வேறு அல்ல.

(பிற்பகல் 12.10)

கறந்த பால் மடிபுகா, கடைந்த வெண்ணெய் மோர் புகா உடைந்துபோன சங்கினோசை உடல்களும் உயிர்புகா, விரிந்த பூவும் உதிர்ந்த காயும் மீண்டும்போய் மரம் புகா, இறந்து போன மனிதன் இனிப் பிறப்பதில்லை. என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள், அந்த அடிப்படையிலே தான். இதற்கும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல. இன்னும் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் எல்லாம் ஏதோ கற்பனை யில் ஆட்சி செய்துக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் தான் இருக்கிறார்களோ என்று நினைக்கிறேன். இது எதைப்

1985 ஜூலை 15] (டாக்டர் கே. சமரசம்)

போல் இருக்கிறது என்றால், மன்மதனை ஈஸ்வரன் எரித்து விடுகிறான். ரதிதேவியானவள் மகாவிஷ்ணுவிடம் போய் என் கணவனை திருப்பித் தாருங்கள் என்று கேட்கிறாளாம். மாகவிஷ்ணுவும் ரதிக்கு வரம் கொடுக்கிறாராம். உன் கணவன் உன் கண்ணுக்கு மட்டும் தெரிவான், மற்றவர்களின் கண்ணுக்கு, உலகத்தாரின் கண்களுக்குத் தெரிய மாட்டான் என்று, அவர்களும் சந்தோஷமாக வாழ்கிறார்களாம். இந்த கற்பனை வாழ்க்கையைப் போலத்தான் அவர்களுடைய கற்பனை ஆட்சியும் இருக்கிறது.

ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பே ஜஸ்டிஸ் கட்சி, நீதிக் கட்சி தமிழகத்தின் ஆட்சியைப் பிடித்திருக்கிறது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே நீதிக்கட்சியின் முதல்வர் கள் தமிழகத்தை ஆண்டிருக்கிறார்கள். அதனுடைய வழி யிலேதான், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர் களுடைய அரசு ஏற்பட்டு தொடர்ந்து ஆண்டு வருகிறார் களே தவிர, வேறு அல்ல. அந்த நீதிக்கட்சியின் ஆட்சியின் கொள்கைகளைக் கடைபிடிக்கக்கூடிய அளவில்தான் நாங்கள் தொடர்ந்து இருந்து வருகிறோம் என்பதையும் யாரும் மறந்து விட வேண்டாம் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, சுண்ணாம்பு தண்ணீர் பாலாகாது, சுடுகாடுபோன பிணம் வீடு திரும்பாது, சூழ்நிலையைப்பயன் படுத்தி, எப்படி எப்படியெல்லாம் முயற்சிகளைச் செய்ய முடியுமோ அப்படி யெல்லாம் செய்து, மக்கள் மத்தியிலே சென்று மண்டியிட்டுப் பார்த்தும் முடியாத சூழ்நிலையிலே பல்வேறு வகையான கருத்துக்களையும் அவர்கள் இங்கே கொடுக்கிறார்களே தவிர வேறு அல்ல.

ஆனால் மீண்டும் மீண்டும் எங்கள் கட்சி ஆட்சிக்கு வருகிறது என்று சொன்னால், அண்ணாவின் தம்பி புரட்சித் தலைவர் அவர்களின் தொண்டன், பொதுமக்களின் வேலைக் காரன் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் எங்கள் தொண்டர்களை, அண்ணா தி.மு.க. தொண்டர்களை மக்கள் பார்க்கிறார்கள், அந்த வகையிலேதான் எங்களைத் திரும்ப திரும்ப தேர்ந்தெடுக்கிறார்கள். அதை யாரும் மாற்றிவிட முடியாது என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, இன்னொரு கருத்தையும் உங்கள் முன்னால் நான் வைக்க விரும்புகிறேன், லெனின் அவர்களின் இரண்டு கண்களைப்போல ஸ்டாலினும், டிரான்ஸ்கி

)டாக்டர் கே. சமரசம்) [1985 ஜூலை 15

என்பவரும் இருந்தார்கள். லெனினுக்குப் பின்னால் எப்படி என்பதைக் குறித்து டிரான்ஸ்க்கி சொல்லும்போது I want to live on is name அவர் பெயரால் நான் வாழ்வேன் என்றான். அதனால் அவன் வரலாற்றில் இடம் பெற முடியாமல், ஈரவிறகானான், ஈசல் இறகானான், ஆனால் ஸ்டாலின் சொன்னான், I want to make him live என்று, லெனினுடைய நாமத்தை வாழ வைப்பேன் என்று சொன்னான், அதனால் ஸ்டாலின் வாழ்ந்தான் வரலாற்றிலே நீண்ட நெடிய இடம் பெற்று. அந்த அடிப்படையில்தான் நீதிக்கட்சியின் ஆட்சியின் கொள்கைகளை தமிழகத்தில் கட்டிக்காக்கக் கூடிய வகையில், இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டு வருகிறது. ஆகவே எப்படிப்பட்ட நிலை வந்தாலும் நாங்கள் எங்கள் கொள்கைகளில் உறுதியாக நிற்போம், மக்களுக்குத் தொடர்ந்து ஆட்சியிலிருந்து தொண்டாற்றுவோம் என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று அமர்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர், நிதியமைச்சர் அவர்கள் 1985–86 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்காக இந்த நிதி ஒதுக்கீட்டைக் கேட்டு, பரிந்துரைத்து அவை முன் வைத்திருக்கிறார்கள்.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக பல்வேறு வகையான மானியக் கோரிக்கைகளின் மீது நாம் இங்கே விவாதித்துப் பேசியிருக்கும் போதெல்லாம் அந்தந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்கள் இங்கே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பக் கூடிய பல கோரிக்கைகளுக்கு எல்லாம் போதிய நிதி வசதி ஏற்படும் போது, நிதி ஆதாரங்கள் இடம் கொடுக்கக் கூடிய அளவுக்கு உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் ஏற்கப்படும் என்று, அனேகமாக எல்லாத் துறையைச் சார்ந்த அமைச்சர்களும் கூறினார்கள்.

அதிலிருந்து நாம் புரிந்துக் கொள்வது இன்றைய தமிழ்நாட்டு மக்களுக்கு, இந்த மாநில அரசு நிறைவேற்றித் தர வேண்டிய காரியங்களை நிறைவேற்றுவதற்கு உரிய அளவிற்கான நிதி ஆதாரங்களும் நிதியும், இவைகளில் இருக்கிறதா இல்லையா என்பதை நாம் இவைகளில் இருந்து தெரிந்துக் கொள்ளமுடியும்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலேதான் நம்முடைய நாட்டின் மக்களுக்காக அமைக்கப்பட்ட 7-வது நிதிக் கமிஷன் மாநிலங்களுக்கு எந்த அளவுக்கு போதுமான நிதி ஒதுக்கீடு தர வேண்டும் என்று பரிந்துரைகளைச்செய்து உள்ளதோ அந்தப் பரிந்துரைகளை

1985 ஜூலை 15] (திரு. கோ. வீரய்யன்)

மதிக்காமல், 7-வது நிதிக் குழு வழங்கியிருந்த பரிந்துரைகளிலே ஒரு ஆண்டுக்குரிய அந்தத் தொகையை மத்திய அரசு வழங்க விருப்பம் இல்லாமல், தன்னுடைய விருப்பம் போல ஒரு தலைப் பட்சமாக கொடுக்க தீர்மானித்து விட்டது.

அதனுடைய விளைவாக மாநிலங்களுக்கு கிடைக்க வேண்டிய வருவாய்க்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு அதனால் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி நிதி இழப்பு ஏற்படுகிற நேரத்தில், மாநில அரசின் சார்பில் அதை ஆட்சேபிப்பதற்கும், மறுப்பதற்கும், மத்திய அரசு எடுத்த நடவடிக்கை மாநிலத்திற்கு விரோதமானது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கும் நம்முடைய மாநில அரசு தயக்கம் காட்டுவது, அல்லது கண்டுகொள்ளாமல் இருப்பது எந்தக் காரணத்தால் என்பதை அறிய விரும்புகிறேன். மத்தியிலே ஆளக்கூடிய கட்சியோடு இருக்கிற அரசியல் உறவுகள் காரணமாக மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை தட்டிக் கேட்பதிலே மாநில அரசு தயக்கம் காட்டுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல ஓவர்டிராப்டைப் பொறுத்த வரையில் ரிசர்வ் வங்கியிடம் மாநில அரசுகள் தங்களுடைய நிதி வருவாயிலிருந்து ஈடு கட்டமுடியாத நிலையில் ஓவர்டிராப்ட் வாங்க வேண்டிய கட்டாய அவசியம் ஏற்படுகிறது. மத்திய அரசு உலகம் முழுவதும் சென்று கடன்களை வாங்க முடியும். தேவைப்படுமானால் தன்னுடைய நோட்டு அடிப்பு இயந்திரத் தொழிற்சாலையை முடுக்கி விட்டு தேவையான அளவிற்கு நோட்டுக்களை அடித்துக் கொள்ள முடியும். நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரம் என்ற முறையில் நோட்டு அடிக்கக்கூடிய துறையிலும் கூட நம்முடைய நாட்டில் தனியார் துறையும், அரசுத் துறையும் போட்டிப் போடுகிற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே மத்திய அரசு தன்னுடைய தேவைக்கான அளவிற்கு நோட்டு அடித்துக் கொள்ள முடியும். ஆனால் மாநில அரசு நோட்டு அடிக்க முடியாது. தன்னுடைய விருப்பம் போல, தன்னுடைய தேவைக்கு மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் மாநில அரசுகள் கடன் பெறவும் முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கக் கூடிய ஒரே ஒரு வாய்ப்பு ரிசர்வ் வங்கியில் ஓவர் டிராப்ட் வாங்குவது தான். அப்படிப்பட்ட சூழ்நிலையில் சட்ட ரீதியாக அதனை அங்கீகரிக்க வேண்டிய நிலையில் அங்கீகரிக்கப்படுகிறது. ஆனால் நம்முடைய முன்னவர் அவர்கள் சொல்லக்கூடும், தமிழகத்தைப் பொறுத்த வரையில் நாம்ஓவர் டிராப்ட் வாங்கவில்லை, எனவே

(திரு. கோ. வீரய்யன்) [1985 ஜூலை 15

ஓவர் டிராப்ட் கொடுப்பதை மத்திய அரசு ரிசர்வ் வங்கிக்குத் தடை செய்திருப்பதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை என்று கூட சொல்லக் கூடும்.

தமிழக அரசின் நிலையில் ஓவர் டிராப்ட் வாங்குகிறதா, வாங்வில்லையா என்பது பிரச்சினையில்லை. மாநில அரசுக்கு இருக்கக்கூடிய உரிமை அது. அரசியல் சட்ட ரீதியாக தேவைப்படுகிற காலத்தில் மாநில அரசுகள் வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிற உரிமை மத்திய அரசின் உத்தரவினால் மறுக்கப்படுகிற போது நம்முடைய மாநில அரசு அதைப்பற்றி ஆட்சேபிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல தான் இதுவரையில் கொடுத்திருக்கிற ஓவர் டிராப்டுகளை மத்திய தர கடனாக மாற்றி, அதற்கு வட்டியும் விதித்து, குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதையும் நாம் ஆட்சேபிக்காத நிலையில் இருக்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், தொழிற்துறையில் பெருமளவிற்கு நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். குறிப்பாக மின் துறையில் திட்டங்களுக்கு அனுமதி பெறுவதற்கே நாம் பல ஆண்டுக் காலம் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. மின்சாரப் பற்றாக்குறை என்பது தமிழகத்திலே பல்வேறு தொழில்களை அழித்து, நசித்து, நாசமாக்கிக் கொண்டிருக்கிற நிலையில், மின் உற்பத்தியை நாமாக நமக்குத் தேவையான அளவிற்கு உற்பத்தி செய்து கொள்வதற்கு, நீர்மின் நிலையமானாலும், அனல் மின் நிலையமானாலும், அவைகளுக்கு அனுமதி தருவதற்கோ பல ஆண்டுக் காலம் காத்திருக்கிற நிலை இருக்கிறது.

இன்றைக்கு விவசாயத்தை எடுத்துக் கொள்வோமானால் நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில் அது மாநில அரசின் முழுப் பொறுப்பில் இருக்கிறது. அப்படி மாநில அரசின் முழு பொறுப்பிலிருந்தாலும் நம்முடைய சட்டப் பேரவையில் எந்த ஆட்சேபனையும் இல்லாமல், ஏகமனதாக நிறைவேற்றக் கூடிய ஒரு சட்டத்தைக் கூட குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்காமல் அந்த நிலையில் நாம் நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. அப்படி நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில் பினாமி நில ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு நாம் நிறைவேற்றினாலும் கூட, மாநில அரசிற்கு அரசியல் சட்ட ரீதியாக அப்படி நிறைவேற்றுகிற உரிமை இருந்தும் கூட குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்கவில்லை என்ற காரணத்தால், மோசடி செய்து, நிலத்தை அபகரித்து சட்டத்திற்கு விரோதமாக கையிலே வைத்திருக்கிற பினாமி நிலங்களை எடுக்க முடியாத நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

1985 ஜூலை 15] (திரு. கோ. வீரய்யன்)

(பிற்பகல் 12–20)

அதைப் போலவே பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் 20 அம்சத் திட்டத்திலே உள்ள முதல் திட்டம் இது என்று கூறிக் கொண்டாலும், பாசனத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மிகப் பெரும் அளவிற்கு சீர்கேடு அடைந்திருக்கின்ற நிலைமை இருக்கிறது. நாடு முழுவதும் இருக்கிறது. தமிழகத்திலும் இருக்கிறது. அதிலும் குறிப்பாக காவிரித் தண்ணீர் பிரச்சினை என்பது கடந்த 10 ஆண்டுக்காலமாக தீர்க்கப்படாமல் இருக்கிறது. இப்போது நமக்கு வரத்து இருக்கலாம். ஆனால் அந்த வரத்துக் கூட கண்ணம்பாடியிலிருந்து இல்லை என்பதை நம் முடைய அமைச்சர் அவர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். கண்ணம்பாடி அணை காவிரி நதியில் இருக்கக்கூடிய அணையே தவிர கண்ணம்பாடியிலிருந்துதான் நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்க வேண்டுமே தவிர, இன்றைக்கு கபினியிலே அணையைக் கட்டி விட்டாலும், அதற்கு பாசனத்திற்குரிய வாய்க்கால்களை அவர்கள் வெட்டாத காரணத்தாலே, இங்கே தேங்கியிருக்கக் கூடிய தண்ணீரை நமக்குத் திறந்து விடுகிறார்களே தவிர, கண்ணம்பாடி அணை மூடப்பட்டு பல ஆண்டுகளாக இருக்கிறது. இன்றைக்கும் கண்ணம்பாடி அணை திறக்கப்படவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலேதான் மத்திய மாநில அரசுக்கு இடையில் உள்ள உறவுகளைப் பரிசீலிப்பதற்காக என்று நியமிக்கப்பட்டு இருக்கிற சர்க்காரியா கமிஷன்—ஏறக்குறைய 2 ஆண்டுக்காலம் ஆனாலும் — முன்னாலே, இப்படி நமது நிதித்துறையாக இருக்கட்டும், அல்லது பொதுப் பணித்துறையாக இருக்கட்டும், அல்லது நிலச் சீர்திருத்தத் துறையாக இருக்கட்டும், அல்லது பொதுத் துறையாக இருக்கட்டும், எந்தத் துறையிலும், நம்முடைய மாநில உரிமைகள், நலன்கள், இந்தச் சட்டமன்றத்தினுடைய உரிமைகள் நிறைவேற்றப்பட முடியாத ஒரு சிக்கலான முறையில் இன்றைக்கு இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், அதை மாற்றுவதற்கு, திருத்துவதற்கு இந்த மாநில மக்களின் நலனை முன் வைப்பதற்கு நம்முடைய மாநில அரசு இதுவரையிலும் முன்வராதது என்பது வருந்தத்தக்கது, என்பதோடு இது தவறான ஒரு முடிவு என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே சர்க்காரியா கமிஷன் முன்பு, நமக்கு உள்ள சில பிரச்சனைகளைப் பற்றி, மத்திய மாநில உறவு முறைகளைப் பற்றி, இதுவரையிலும் கூறாமல் இருப்பது சரியல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் இந்த சிவப்பு நாடா முறை என்பது தொடர்ந்து நடக்கின்றது. எதை எடுத்துக் கொண்டாலும் குறிப்பாக உபரிநிலம் விநியோகிக்கின்ற நட

வடிக்கைகள் தமிழகத்தில் நடக்கிறது. 1981 ஆம் ஆண்டு ஒரு அரிசன விவசாயத் தொழிலாளிக்கு, 90 சென்ட் நிலம் குடவாசல் வட்டம், கண்டரமாணிக்கம் என்ற கிராமத்தில் பட்டா கொடுக்கப் பட்டது. அதற்குத் தவணையிலே பணம் கட்டச் சொல்லி, உத்தரவு போடப்பட்டது. அந்த விவசாயித் தொழிலாளியும் பணம் கட்டி விட்டான். 1983 ஆம் ஆண்டு மறுபடியும் பணம் கட்டச் சொல்லி, உத்தரவு வந்தது. பணம் கட்டினான். கடந்த 1984 ஆம் ஆண்டு பணம் கட்டச் சொல்லி, ஒரு உத்தரவு மறு படியும் வந்தது. பணம் கட்டினான். நிலத்தை எடுத்துக் கொடுக் கச் சொல்லி, தாசில்தாரிடமும், பிறகு ஆர்.டி.ஓ. விடமும் பிறகு கலெக்டரிடமும் கேட்டு, நானே கலெக்டருக்கு ஒரு கடிதம் எழுதி கிட்டத்தட்ட 5 ஆண்டுக்காலம் ஆகியும் இந்த 90 சென்ட் நிலத்தை அந்த விவசாயிக்கு எடுத்துக் கொடுக்க முடியவில்லை. அதற்குரிய தஸ்தாவேஜுகளை, விவரங்களை முன்னவர் அவர் களிடம் நான் தருகிறேன். அவர்களும் இதைப் பார்க்கட்டும். எனவே 5 ஆண்டுக் காலமாக இந்த 90 சென்ட் நிலத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டும் கூட, அந்த விவசாயினுடைய கையிலே ஒப்படைக்கப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் உத்தரவுகள் மட்டும் வருகிறது, பணத்தைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்.

அதேபோல் குடியிருப்பு மனைகளைப் பொறுத்த வரையில், குறிப்பாக நாகப்பட்டிணம் வட்டம், சிறான்குடி கிராமத்தில், 1.59 ஏக்கர் நிலம் குடிமனைப் பட்டா வழங்க வேண்டும், அவர் கள் எல்லாம் பள்ளத்திலே இருக்கிறார்கள். மேடாக இருக்கின்ற இடத்திற்கு வரவேண்டும் என்றால், நிலச்சொந்தக்காரர்கள் மறுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நிலச்சொந்தக்காரர் களை நாங்கள் பார்த்து, பேசி அவர்கள் நிலத்தை விலைக்குக் கொடுத்து விடுகிறோம் என்று அவர்கள் ஒப்புதல் கொடுத்தும் கூட, அந்தக் கடிதம் நாகையிலிருந்து தஞ்சைக்கு வந்து, தஞ்சை யிலிருந்து சென்னைக்கு வந்து சேர 3 ஆண்டுக்காலம் ஆனது. சென்னைக்கு அந்தக் கடிதம் 15-4-1985 அன்று புறப்பட்டது சென்னைக்கு வந்ததற்கு பிறகு, ஆதி திராவிட நலத் துறையைப் போய்ப் பார்த்தால், 61765/85 என்ற நம்பருடைய அந்தக் கடிதம் திருப்பி, இப்போது மறுபடியும் தஞ்சைக்கு 6-7-1985-ல் அனுப்பப்பட்டு இருக்கிறது. திருப்பியும், அந்த விவரங்களைக் கேட்டு, அது வந்து, இந்த ஏழை எளியவர்களுக்கு குடியிருப்பு மனைகள் கிடைப்பதற்கு எத்தனை ஆண்டுக் காலம் ஆகும் என்று சொல்ல முடியாது. அந்த அளவிற்கு நிர்வாகத்தில் ஒரு தேக்க நிலை இருக்கிறது. அதைப் போக்க வேண்டும். இந்த சிவப்பு நாடா முறை என்பது ஒழிக்கப்பட வேண்டும்.

அதேபோல் கல்வித் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள், இலவச உணவு, இலவச உடை, இலவச புத்தகம் எல்லாம்

வழங்கப்படுகிறது. அப்படி மாணவர்களுக்கு வழங்கப்படக் கூடிய இந்த இலவச புத்தகங்கள் என்பது தனியார் கடைகளில் விலைக்கு விற்கப்படுகிறது. குறிப்பாக அறந்தாங்கி என்ற நகரிலே இருக்கிற தனியார் கடையிலே விற்ற புத்தகத்தை நான் விலைக்கு வாங்கி வந்திருக்கிறேன். 2 ரூபாய் விலை, சபை முன்னவர் அவர்களிடத் திலே நான் இந்தப் புத்தகத்தை கொடுக்கிறேன். 3-வது வகுப்பு க்கு உரிய இந்திய வரலாறு என்ற அந்தப் புத்தகம் தனியார் கடையிலே 2 ரூபாய் விலைக்கு விற்கப்படுகிறது.

இப்படி மாணவர்களுக்கு கொடுப்பதாக கணக்கு எழுதிவிட்டு இந்தப் புத்தகங்களை எல்லாம் வெளி மார்க்கெட்டில் விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். இதைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் காவல் துறைக்கு நாம் நிதி ஒதுக்கீடு செய் கிறோம். அந்தத் துறை மக்களுக்கு பயன்படுகிற அளவில் இருக்க வேண்டும் என்று கூறுகிறோம். ஆனால், சில தினங் களுக்கு முன்னால் கடந்த 12 ஆம் தேதி திருச்சி மாவட்டம் வேப்பந்தட்டை கிராமத்தில் நடந்து இருக்கக்கூடிய அந்த துப் பாக்கிச் சூடு நடந்து அதிலே இறந்து போன அந்த பழனிமுத்து உடல் நசுங்கி செத்ததாக தகவல் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த பழனிமுத்து நசுங்கி சாகவில்லை, அவருடைய மார்பில் குண்டு பாய்ந்து இரண்டு துளைகள் இருக்கிறது, என்று சொல்லப் படுகிறது. அந்த பழனிமுத்துவுக்கு மனைவியும், 3 ஆண் குழந் தைகளும் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அந்த உறவினர் கள் அந்த மனைவியும், குழந்தைகளும் வந்து தன்னுடைய கண வனின் பிணத்தை தன் கையில் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அப்படி ஒப்படைக்காமல் பெரம்பாலூருக்கும் வேப்பந்தட்டைக்கும் இடையில் போலீசார் அந்தப் பிணத்தை எரித்து சாம்பல் ஆக்கியிருக்கிறார்கள். சுட்டு பிணமாக்கிய பிறகும் அந்தப் பிணத்தை கூட அந்தச் சொந்தக் காரர்களுக்குக் கொடுக்காத அளவுக்கு நிலைமை அங்கே ஏற்பட்டு இருக்கிறது. அங்கே காலையிலிருந்து மாலை 5 மணி வரை அந்த மக்கள் பஸ் வசதி கோரி அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி னார்கள் அமைதியாக. அங்கே ஆர். டி. ஓ. அவர்கள் இவர் களை எல்லாம் அமைதியாக கலைந்து போகச் சொல்லி அவர்களும் அமைதியாக கலைந்து செல்லும்போது திருச்சி மாவட்டத்தின் ரூரல் டி. எஸ். பி.யாக இருக்கும் மாத்தியூஸ் அவர்கள் மூட்டிய ஆத்திரத்தின் காரணமாக அதற்கு தலைமை தாங்கிய வர்களை கைது செய்ய வேண்டும் என்று சொன்னதன் காரண மாக அங்கு பதட்ட நிலைமை உருவாகி மிகப் பெரிய சங்கடங் கள் உருவாகி சேதங்கள் உருவாகி அந்தப் பகுதி மக்களுக்கு இன் றைக்கு ஒரு சுடுகாட்டு நிலைமை உருவாகியிருக்கிறது. இந்த காவல் துறையிலும் கல்வித் துறையிலும் நடக்கும் இப்படிப்பட்ட ஊழல்களைத் தவிர்க்க வேண்டும்.

(திரு. கோ. வீரய்யன்) [1985 ஜூலை 15

அதேபோல் பழங்குடி மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கக்கூடிய தொகை முழுமையாக அங்கே போய் அவர்களுக்கு சேர்ந்து அதன் பயனை அவர்கள் அடைவதற்கு வேண்டிய முறையிலும் நிர்வாகம் செம்மையான முறையில் செயல்படுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக நாட்டில் குடிக்கத் தண்ணீர், சுடுகாட்டுக்குப் பாதை இல்லாத ஒரு அவல நிலை இருக்கக்கூடிய இந்த நேரத்தில் அதற்காக ஒதுக்கும் பணம் திரும்பி வருகின்றது என்றால் நிர்வாகம் எந்த அளவுக்கு அந்த மக்களை அலட்சியமாகத் துச்சமாக மதிக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். இன்றைக்கும் நூற்றுக்கணக்கான கிராமங்களில் சுடுகாட்டுக்கு பாதை கேட்டு அமைச்சர் அவர்களிடமே மனுக்கள் கொடுத்துக்கொண்டு அப்படிப்பட்ட நிலைமையில் அவர்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகை திரும்பி வருகிறது என்றால் அது நிர்வாகத்தில் இருக்கக்கூடிய ஒரு தேக்க நிலையை காட்டுகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லி அந்த நிலையை போக்குவதற்கு இந்த மாதிரியான ஒரு மோசமான நிர்வாக நிலையை மாற்றுவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு குடிநீருக்கும், நடை பாதைக்கும், சுடுகாட்டுக்கு பாதைக்கும் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன், இந்த விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களின் விளை பொருட்களுக்கு ஒரு கட்டுப்படியான விலை கிடைக்காத ஒரு நிலை இருக்கிறது. அந்த விலையை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் மாநில அரசின் கையில் இல்லை என்று எனக்குத் தெரியும், அதை உணர்ந்து தான் சொல்கிறேன், அது நெல்லாக இருந்தாலும், கரும்பாக இருந்தாலும் பருத்தியாக, இருந்தாலும், கடலையாக இருந்தாலும் கட்டுப்படியான விலை அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்.

இன்றைக்கு தமிழகத்தில் பருத்தி பயிரிடும் விவசாயிகளுக்கு மிகவும் மோசமான நிலை இருக்கிறது. விலை வீழ்த்தப்பட்டு அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த நேரத்தில் மத்திய பேரரசு ஒரு இலட்சம் பேல் பருத்தியை இறக்குமதி செய்வதாக அறிவித்து இருக்கிறார்கள். அது இன்னும் பருத்தி விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய நிலைமையாக இருக்கிறது. எனவே இப்படி விவசாயப் பொருட்களுக்கு ஒரு கட்டுப்படியான விலை கிடைக்கச் செய்வதற்கு தமிழ்நாடு விவசாயிகளுடைய குரலை ஆதரித்து மத்திய அரசை நிர்ப்பந்தப் படுத்துவதற்கு நம்முடைய மாநில அரசு முயற்சிச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

1985 ஜூலை 15]

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொண்டு வரப்பட்டு இருக்கிற 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து நிதி வழங்கக்கூடிய 3,416 கோடி ரூபாய் இந்த மாநில தொகுப்பிலிருந்து ஒதுக்க வேண்டும் என்ற அந்தச் சட்டத்தை ஆதரித்து என்னுடையக் கருத்தைச் சொல்ல விழைகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மத்திய அரசு ஓவர் டிராப்ட் ரத்து செய்தது சரியில்லை என்று சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளும் முகத்தான் யாருமே இல்லை என்று சொல்லுகிற கருத்தை நான் வைக்க ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-30)

ஆனால், அதே நேரத்தில் எனக்கு இருக்கிற குறை எல்லாம் இந்திய துணைக் கண்டத்திலேயே ஒழுங்காக, சீராக, சிக்கன மாக நிர்வாகம் செய்கிற தமிழகத்திற்கு, எப்போதுமே நிதி ஒதுக்குவதில் பாரபட்சமான நிலையை மத்திய அரசு பல கால மாக எடுத்துக் கொண்டு வருகிறது. அதிலும், குறிப்பாக, 1967-லிருந்து பல நிகழ்வுகளில், பல நேரங்களில் இதுபோன்ற நிகழ்ச்சிகளை மத்திய அரசு கையாண்டு கொண்டிருக்கிறது.

இன்றைக்குக் கூட, ஜனவரி மாதம் வரை நம்முடைய மாநிலத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிற நிதியிலே நமக்கு ஓவர்டிராப்ட் இருந்தாலும், மார்ச் மாதக் கணக்குகளை முடிக்கின்றபோது, இங்கே இருக்கின்ற சீர் அமைப்பு வேலைகளை எல்லாம் செய்து, ஓரளவுக்கு மார்ச் மாதம் ஓவர்டிராப்டே இல்லாத நிலையை இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் தான் முன்னோடியாக இருக்க வேண்டும் என்று, கஷ்டப்பட்டுக் கொண்டு வந்திருந்தாலும், மற்ற மாநிலங்களிலே இருந்த ஓவர் டிராப்ட்டுகளை நீண்ட கால, மத்திய கால கடனாக மாற்றி இருப்பது, நமக்கு சலுகை இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆக, ஜனவரி மாதத்திலே நம்முடைய நிதியிலே எவ்வளவு பற்றாக்குறை இருந்ததோ, ஓவர்டிராப்ட் எவ்வளவு வாங்கியிருக்கிறோமோ, அதைக் கடனாக மத்திய அரசு தர வேண்டும் என்று மாநில சர்க்கார் வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல, குடும்ப நலத் திட்டமாக இருந்தாலும், வேறு பல திட்டங்களில் எல்லாம் நம்முடைய மாநில அரசு முனைப்பாக வேலை செய்கிற நேரத்தில் உரிய பலன் நமக்கு கிடைப்பது

இல்லை. அதிலே வேறு பிரச்சினைகளை எல்லாம் சொல்லி, தமிழகத்தைப் புறக்கணிக்கிற தன்மையைத்தான் மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது.

அதற்காகத் தான் ஏற்கெனவே பல காலத்திற்கு முன்னாலே இருந்தது போல, '' பெர்மீபார்மன்ஸ் க்ரைட்டீரியா '', அதாவது ஒழுங்காக, அதிகமாக வரி வசூல் செய்கிற மாநிலத்திற்கும், செலவைச் சிக்கனமாக செய்கிற மாநிலத்திற்கும், ஒழுங்காக மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைக் கொண்டு வருகிற மாநிலத்திற்கும், அதிகமான ஊக்கத் தொகையை, அதிகமான அளவுக்கு நிதியை வழங்குகிற தன்மையிலே மத்திய அரசு செயலாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் தெலுங்கு கங்கைத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்று கேட்டார்கள். எனக்குக் கூட ஒரு ஐயப்பாடு இருக்கிறது. ஒரு வினா இருக்கிறது. இந்த மன்றத்திலே கூட பல உறுப்பினர்கள் அதைப்பற்றித் திரும்ப திரும்பப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமரே வந்து, இந்த தெலுங்கு கங்கைத் திட்டத்தைத் துவக்கி வைத்ததற்குப் பின்னாலும்,— பிளானிங் கமிஷனுக்கு இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் தான் தலைவர்— அப்படியிருந்தும், பிளானிங் கமிஷன் பல வினாக்களை, பல ஐயப்பாடுகளை; கொண்டு வரலாமா ? கொண்டு வரக்கூடாதா ? என்ற ஐயப்பாடு பிளானிங் கமிஷனுக்கு எப்படி வந்தது ? அந்த ஐயப்பாடு நமக்குத் தான் எப்படி வந்தது ?

அதைத் தெளிவுபடுத்த வேண்டும். ஆகவே, மத்தியிலே இருக்கிற பிளானிங் கமிஷனாவது அதை உணர வேண்டும். ஒரு இந்தியத் துணைக் கண்டத்திலே ஜனநாயக அமைப்பின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமர் வந்து, மற்ற மாநில முதலமைச்சர்களை எல்லாம் வைத்து இந்தத் திட்டத்தைத் துவங்கியதற்குப் பின்னாலும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, பல சிக்கல்களை உருவாக்குமேயானால், அவர்கள் அந்த ஜனநாயக அமைப்பையே மதிக்காத தன்மையிலே பிளானிங் கமிஷன் இருப்பதாகத்தான் இந்த மன்றத்தின் வாயிலாக குற்றம் சாட்ட ஆசைப்படுகிறேன்.

அப்படியில்லையெனில், விரைவுபடுத்துவதற்கான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு, மாநில அரசுக்கு செய்துத்தர வேண்டும் என்ற இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நான் வேறு பல விஷயங்களைப் பேச வேண்டும் என்று எண்ணி இருந்தாலும் கூட, இந்த மன்றத்திலே பேசிய என்னுடைய மதிப்பிற்கும், மாண்புக்கும் உரிய நண்பர் ரகுமான்கான் அவர்

கள் பல்வேறு கருத்துக்களை வீராதி வீரர் போல சுட்டிக் காட்டி விட்டுச் சென்ற காரணத்தால், நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பதில் சொல்ல வேண்டிய கடமையில் இருக்கிற காரணத்தால், சிலவற்றைச் சொல்லி விடை பெற ஆசைப்படுகிறேன்.

இந்த மாநிலத்திலே நடக்கிற நல்ல காரியங்கள் எல்லாம் கண்ணுக்குத் தெரியாமல், மேற்கு வங்க முதலமைச்சராக இருந்த பி. சி. ராய் அவர்களின் வீரத்தைப் பற்றி எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அவரைப் பார்த்து நான் கேட்க வேண்டிய ஒரு கேள்வி என்னவென்றால், ஒருவேளை ரகுமான்கான் அவர்களுக்கு தூரப் பார்வையோ, கிட்டப் பார்வையோ இல்லாத காரணமோ என்று தெரியவில்லை. அவர் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரிடம் ஆலோசனை பெற்று நல்ல கண் டாக்டராகப் பார்த்து, கிட்டப் பார்வைக்கான ஒரு கண்ணாடியைப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

காரணம், பி. சி. ராய் மட்டும் வேறுபட்டவர் அல்ல. இந்திய துணைக் கண்டத்திலேயே 1952-க்கு பின்னால் வேறு எந்த மாநில முதலமைச்சரும், மத்திய அரசை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தது இல்லை. தமிழ்நாட்டு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். மட்டும் தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே மத்திய அரசினுடைய தவறான கொள்கையை எதிர்த்து மாநிலத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய தானியங்களை ஒதுக்கவில்லை, உணவை ஒழுங்காக தரவில்லை என்று ஒரு நாள் முழுவதும் உண்ணாவிரதம் இருந்து மத்திய சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். (குறுக்கீடு). அந்த நேரத்திலே ஒரு வாரத்திற்கு முன்னாலே, தமிழகத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மத்திய அரசுக்கு, மத்திய பிரதமருக்கு மனு தந்தார்கள். அந்த மனுவிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் (குறுக்கீடு).....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் பேசிமுடித்த பிறகு விளக்கம் பெற வேண்டுமானால் கேளுங்கள். நடுவில் குறுக்கிட வேண்டாம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : அந்த நேரத்திலே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எங்கள் இயக்கத்தைச் சார்ந்த மோகனரங்கம் அவர்களுடைய தலைமையிலே எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கையெழுத்திட்டு, தமிழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவர்களும் கையெழுத்திட்ட அந்த மனுவிலே, கையெழுத்திட மறுத்த தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களும்

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 ஜூலை 15

மத்தியிலே இருந்தார்கள். இந்த மாநிலத்திலேயிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் அந்த மனுவிலே கையெழுத்து இட மறுத்து இருக்கிறார்கள். கையெழுத்து இடாதது மட்டுமல்ல, ஒரு பத்திரிகையில் பேட்டியும் தந்தார்கள். எப்படித் தான் காங் கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் மத்திய அரசை எதிர்த்துத் தருகிற மனுவிலே கையெழுத்திட்டிருக்கிறார்களோ, அது கொடுமையானது என்று ஒரு பத்திரிகைக்குப் பேட்டி தந்தார்கள்.

அன்றைய திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப் பினர் சி. டி. தண்டபாணி அவர்கள், அப்படி ஒரு மனுவிலே கூட கையெழுத்துப் போடுவதற்கு பயந்து பின்வாங்கினார்கள். இந்த மாநிலத்திற்குத் தரப்பட வேண்டிய, ஒழுங்காக ஒதுக்கப்பட வேண்டிய அரிசி, கோதுமை தரப்பட வேண்டு மென்று கேட்பதற்காகக்கூட மனுவிலே கையெழுத்திடுவதற்குத் தயக்கம் காட்டியவர்கள், இன்றைக்கு இந்த அரசைப் பார்த்து, இந்த அரசுக்கு வீரம் இல்லை என்று சொல்வது எப்படி நியாயம் என்பதை அவர்கள் மத்தியிலே கேட்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு இராமலிங்கம் அவர்களும் என்னைப் போல இந்த அவையிலே தொடர்ந்து உறுப்பினராக இருக்கிறார் கள். இந்தப் பிரச்சினையைப் பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்து பேசியபோது, நான் பேசியிருக் கிறேன். இது சபைக் குறிப்பிலே இருக்கிறது. நமது முதல மைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததே சட்டப் பிரச்சினை என்று சொன்னேன். என். ஜி. ஓ. யூனியன் தலைவர் சிவ இளங்கோ அவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது அது தற் கொலை முயற்சி என்று சொன்னார்கள். உண்ணாவிரதமே சட்ட விரோதம் என்று சட்டத்திலே இருக்கிறது. எனவே சிவ இளங்கோ உண்ணாவிரதம் இருந்தது தற்கொலை முயற்சி என் றால், முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததை ஏன் இந்த சட்டப் பிரிவிற்கு பயன்படுத்தப்படவில்லை என்று கேட் டேன். அப்போது அதற்குப் பதில் இல்லை.

இரண்டாவது மத்திய சர்க்காருக்கு, சென்ட்ரல் பூலுக்கு ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய கையிலே இருக்கக் கூடிய சர்ப்ளஸ் ஸ்டாக்கிலிருந்து, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு கொடுக்க வேண்டும் என்று வழக்கமாக இருந்து வருகிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறிப்புகள் சுருக்கமாக இருக்க வேண்டும். தெளிவாக இருக்க வேண்டும். இன்னொரு உரை போல ஆற்றக் கூடாது. ஒரு நாடாளுமன்ற

1985 ஜூலை 15] [பேரவைத் துணைத் தலைவர்]

உறுப்பினர் பேட்டியிலே சொல்லி இருப்பதைச் சொல்லியிருக் கிறார். அவர் சொன்னதில் தவறு ஏதேனும் இருந்தால், அதைச் சுட்டிக்காட்டலாம். (குறுக்கீடு) அவர் பேசினார். இவர் பாய்ன்ட் ஆப் ஆர்டர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதற்கு இவர் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். இடையிலே நீங் கள் ஏன் சமரசம் ? நீங்கள் உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலை வர் அவர்களே, சில நேரங்களில் கம்பராக மாறி, விளக்கம் தர வேண்டி இருக்கிறது, சில நேரங்களில் வள்ளுவர் போன்று சுருக்கமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. உறுப்பினர் கேட்டி ருக்கக்கூடிய கேள்வி கம்பராக மாறி பதில் சொல்ல வேண்டிய கேள்வியே தவிர, வள்ளுவரைப் போல சுருக்கமாக பதில் சொல் லக் கூடிய நிலையிலே இல்லை. எனவே, இது சம்பந்தமாக ஒரு விளக்கத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். மத்திய சர்க்காரை எதிர்த்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உண் ணாவிரதப் போராட்டம் நடத்தியது, திருச்செந்தூர் தேர்த லுக்காக நடத்திய ஒரு நாடகம்— இது ஓரங்க நாடகம்— என்று கூட நான் சொல்லி இருக்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : ஓரங்க நாடகம் நடத்திப் பழக்கப்பட்டவர்களுக்கு எது எது ஓரங்க நாடகத்தில் வரும், எது எது பெரிய நாடகத்தில் வரும், எது எது சினிமாவிலே வரும் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியும். நான் அதற்குள் போக விரும்பவில்லை. அதைப் பாராட்ட முடியாத அளவுக்கு அவ ருடைய பார்வை கிட்டப் பார்வையாக இல்லை, தூரப் பார்வை யாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பினேனே தவிர, வேறு அல்ல. இந்த மாநில முதலமைச்சர் என்றைக்கும், எதற் கும் தயக்கம் காட்டுபவர் அல்ல. தமிழகத்திற்குத் தர வேண் டிய உரிமைகளைப் போராடி, வாதாடிப் பெற்றிருக்கிறார்கள். பல நேரங்களில் மத்திய அரசு கொள்கையிலே தடம் புரளுகிற போது, இந்த மாநில அரசு மைய அரசை சுட்டிக்காட்டியிருக் கிறது.

(பிற்பகல் 12—40)

இவ்வாறு எடுத்துக் காட்டியிருக்கிறது, வாதாடி இருக்கிறது என்பதைத்தான் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சிவ இளங்கோ அவர்களையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர் களையும் ஒன்றாக இணைக்கிறார்கள். சிவ இளங்கோ அர சாங்க ஊழியராக இருப்பவர். ஆனால், ஒரு மாநிலத்தின் தலை வர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், மக்கள் நாயகன், மக்கள் தலைவர் உண்ணாவிரதம் இருப்பதற்கும், ஒரு அரசாங்க ஊழியர் உண்ணாவிரதம் இருப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இந்த மாநிலத்திற்கு எது தேவை என்று கேட்டு, பல்வேறு

கோரிக்கைகளையும் கூறி, அவற்றைப் பெறுவதற்காக மத்திய அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டுவதற்காக இருந்த உண்ணாவிரதத்தைப்பற்றிக் கூட களங்கம் கற்பிப்பது நியாயம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். ஏதோ, அவர்கள்தான் வீரத்திற்குப் பெயர் போனவர்களைப் போலச் சொன்னார்கள். இன்றைக்கு இலங்கைத் தமிழர்களுக்காகக் கண்ணீர் வடிக்கின்ற தமிழன் நான்தான் என்று சொல்லுகின்றவர்கள், வீரத்திற்குத் தாங்கள்தான் பெயர் போனவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள், அன்றைக்கு இதே மன்றத்தின் முதலமைச்சராக இருந்த நேரத்தில், கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தபொழுது வேலை எடுத்துக்கொண்டு போய் போர் புரிந்தார்களா, அல்லது வாளை எடுத்துக் கொண்டு போய் போராடி மத்திய அரசாங்கத்தைத் தடுத்து நிறுத்துவோம் என்று அறிக்கை விட்டார்களா ? ஆனால், அவர்கள் அன்றைக்குச் சொன்னது, கன்சல்ட் செய்தார்கள் என்பதுதான். இப்படி வார்த்தைகளில்தான் விளையாடினார்கள். ஆனால், மைய அரசின் உள்துறை அமைச்சரவர்கள் அப்பொழுதே நாடாளுமன்றத்தில் பதில் அளித்தார்கள். மாநில அரசோடு நாங்கள் கன்சல்ட் செய்துதான், அதை அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகுதான், நாங்கள் கச்சத் தீவை இலங்கைக்கு ஒப்படைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, இன்றைக்கு இலங்கையில் ஏவப்பட்டுள்ள பிரச்னைக்கு மைய காரணமாக இருப்பது, அன்றைக்கு இந்த மாநிலத்திலே ஆட்சியிலே இருந்தவர்கள் மைய அரசுக்கு ஒரு எதிர்ப்பைக் கூட காட்டாமல் இருந்ததன் காரணமாக, கச்சத் தீவை மைய அரசு இலங்கைக்கு ஒப்படைத்ததன் காரணமாக இன்றைக்கு இந்த நிலைமை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, கச்சத் தீவை திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் அன்றைக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். அன்றைக்கு நடந்த அது சம்பந்தமான எல்லா விஷயங்களும் அன்றைய ஆட்சியில் அமைச்சராக இருந்த நாவலர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கூட அப்படிக் கொடுத்தது தப்பு என்று சொல்லவில்லை. நிலைமைகளைத் தான் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். ஈழத் தந்தை செல்வா அவர்கள்கூட இந்தக் கச்சத் தீவு கோரிக்கையை வலியுறுத்த வேண்டாமென்றுகூடக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான ஆதாரம் இருக்கிறது.

இரண்டாவதாக, கச்சத் தீவை நாம் நிச்சயமாகக் கொடுக்கக் கூடாது என்ற நிலையை எடுத்தாலும் கூட, மத்திய அரசாங்கம் அதிலே பிடிவாதமாக இருக்கின்றபொழுது, கச்சத் தீவைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக்கூட பல்வேறு கூட்டங்கள் நடந்து, அந்தக் கண்டனக் கூட்டத்தில் இராமநாதபுரத்தில் நான் கலந்துகொண்டு பேசினேன். ஒரு காலத்தில் இராமநாதபுரம் சேதுபதி அரசர்களுக்கு எப்படி உரிமை இருந்தது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூட்டங்கள் நடத்துவது என்பது வேறு, மனுக்கள் கொடுப்பது என்பது சாதாரண விஷயம் என்று ஏற்கெனவே சொன்னார்கள். அதைப் போல கூட்டங்கள் நடத்துவது என்பது வேறு விஷயம். ஆனால், இங்கே மன்றத்தில் ஏற்றுக் கொண்டுவிட்டு, வெளியே கூட்டங்கள் நடத்துவது என்பது ஏதோ நாடக அரங்கில் நடப்பதைப் போன்ற ஒரு காட்சியாகத்தான் அமையும். அன்றைக்கு இந்த மன்றத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றிய திரு. அரங்கநாயகம் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை, எங்களுடைய நிறுவனத் தலைவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லி இந்த மன்றத்திலேயிருந்து வெளியேறியிருக்கிறார்கள். ஆனால், அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் அதை ஏற்றுக் கொண்டு மைய அரசுக்கு ஆதரவு காட்டினார்கள் என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இழந்த கச்சத் தீவை மீண்டும் பெற இந்தச் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறீர்கள் என்று— உங்கள் சார்பாக அல்ல, ஏன் என்றால் உறுப்பினரவர்கள் அதைச் சொல்லக் கூடிய நிலையில் இல்லை— அமைச்சர்கள் தெரிவிக்க விரும்பினால், அந்தக் கச்சத் தீவைப் திரும்பப் பெறுவதற்கான உங்கள் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக நாங்கள் இருக்கிறோம். எனவே, இது குறித்து முதலில் தீர்மானத்தைப் போட்டு இதற்கான திட்டங்களை அறிவியுங்கள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : துணைத் தலைவரவர்களே, நன்றாக இருக்கிறது அவர்கள் சொல்லது. அதிகாரம் தங்கள் கையிலே இருக்கின்ற நேரத்திலே எடுத்துக்கொடுத்து விட்டார்கள் ; ஆனால், அதைத் திரும்பப் பெறுவதற்கு என்ன முயற்சியைச் செய்கிறீர்கள் என்று எங்களைப் பார்த்து கேள்வி

கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். காரணம், கேள்வி கேட்கின்ற இடத்திற்கு அவர்கள் வந்திருக்கிறார்கள், பதில் சொல்லுகின்ற நிர்பந்தத்தை எங்களிடத்திலே நாட்டு மக்கள் தந்திருப்பதால். ஆகவேதான் அந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். புரட்சித் தலைவரவர்கள் அதற்கும் நல்ல பதிலை வைத்திருக்கிறார்கள்.

கச்சத் தீவை அன்றைக்கு ஒப்படைத்தது தவறு என்று எப்படி சொன்னார்களோ அதே கொள்கையில்தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். அதிலே எந்த மாற்றமும் இல்லையென்பதை அவருக்கு எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். கச்சத் தீவை ஒப்படைத்து விட்டு, அன்றைக்கு எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டாதவர்கள், இன்றைக்கு வந்து வீரப் பேசுவதிலே என்ன நியாயம் இருக்கிறது?

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை)

அதைப் போலவே, மேற்கு வங்காளத்திலே முதலமைச்சராக இருந்த, காங்கிரஸ் பேரியக்கத்திலே இருந்த பி. சி. ராய்— மையத்திலே காங்கிரஸ் ஆண்டு கொண்டிருக்கிறது. மையத்திலே ஆளுகின்ற அதே நேரத்தில், —மாநில சர்க்காருக்கு ஒதுக்கப்பட வேண்டிய சலுகைகளிலிருந்து பல்வேறு மாற்றங்களைச் செய்கிறார்கள்; ஏற்புடையது அல்ல, இந்த மாநில சர்க்கார் ஏற்றுக் கொள்ளாது என்று ஒரு ஆணித்தரமான கொள்கையைச் சொல்லி, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார் என்று இந்த விவாதத்திலே குறிப்பிட்டார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே பல்வேறு நிலைகளில் மைய அரசு செய்தது தவறு என்று சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறோம். 50 சதவீதம் பிற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற அந்த ஒதுக்கீடுகூட இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. அதிலே வாதாடுவதற்காக அரசு சென்றிருக்கிறது.

அதைப் போலவேதான் இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும்கூடச் சொல்லியிருக்கிறார்கள். 35 சதவீதம் பிற்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படுகிற மைய அரசினுடைய தீர்மானம் ஏற்புடையது அல்ல என்றும் அதுவும் வழக்கு பன்றத்திற்குப் போகப் போகிறது என்பதையும் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். நாங்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் பயந்தவர்கள் அல்ல; சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகத் தயாராகத்தான் இருக்கிறோம். ஆனால், உங்களைப் போல, காவிரி பிரச்னையிலே, பிரதமர் வாய்மொழியாகச் சொன்னார் என்று வாபஸ் வாங்கிக் கொண்டு ஓடி வரவில்லை, அப்படிப்பட்ட பயந்தாங் கொள்ளிகள், தொடை நடுங்கிகள், இன்றைக்கு இந்த மாநில அரசைப் பற்றியும், இந்த மாநிலச் சர்க்கார் பற்றியும்

சொல்கிறார்கள். ஏதாவது எழுத்து மூலமாகச் சொன்னார்களா? அன்றைக்குப் பிரதமராக இருந்தவர், எழுத்து மூலமாக, காவிரி நீர் பிரச்சினையை வழக்குமன்றத்திலேயிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள் என்று எழுதி இருக்கிறாரா என்றால், இல்லை. அல்லது வேறு எந்த விதத்தில் சொல்லியிருக்கிறார்கள்? தொலைபேசியில் சொன்னார்கள் என்று நீங்கள் ரெக்கார்ட் செய்திருக்கிறீர்களா என்றால் அதுவும் இல்லை. அதிகாரிகளுக்குத் தகவல் வந்திருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. வேறு எப்படிச் சொன்னார்கள்?.....(மணி அடிக்கப்பெற்றது).

* திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நிதி அமைச்சர் அவர்களால் முன் வைக்கப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக, பல்வேறு துறைகளின் பேரில், அந்தந்த துறைகளின் அமைச்சர்களால் முன்மொழியப்பட்ட மானியக் கோரிக்கைகளில் தேவையென கோரிய நிதி ஒதுக்கப்பட்டது. அந்த விவாதங்களின் போது, தேவைகளிலே பல்வேறு ஆளுகிற கட்சியின் உறுப்பினர்கள் உட்பட, பல்வேறு உறுப்பினர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துக்களையும் கவனத்திலே கொண்டு பரிசீலித்து பார்க்கிற பொழுது, உண்மையிலேயே மாநில தேவைக்கு உரிய நிதி மத்திய அரசால் ஒதுக்கப்படவில்லை என்பது பரவலாக ஒப்புக்கொள்ளக்கூடிய ஓர் உண்மையாகும். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் குறிப்பிட்டது போல், கடந்த பல ஆண்டுக்காலமாகவே மாநில அரசின் மீது மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தான் நடந்து கொண்டிருக்கிறது என்பது நடைமுறை அனுபவத்திலே நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. மாற்று அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்கள் மாநிலங்களில் ஆளத் தொடங்கினால், அதைத் தங்களுடைய அதிகாரத்தைக் கொண்டு தண்டிப்பது என்ற தண்ட முறையைத்தான் மத்திய அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத்தான், நம்முடைய மாநில அரசு கோரிய நிதியை ஒதுக்க மறுக்கப்பட்ட முறையிலிருந்தே நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

இங்கே ஒரு விஷயத்தை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தின் தேவையை அவர்கள் உணர்ந்து அதற்கு உரிய நிதியை ஒதுக்க முன் வரவில்லையென்றாலும்கூட, அதற்குரிய நிதியைப் பெறுவதில் போராடுவதில் இந்த மாநில அரசு தவறி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல துறைகளின் வாயிலாக முன்வைக்கப் பட்டிருக்கிற பல்வேறு திட்டங்கள், காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அவை நிறைவேற்றப்பட வேண்டுமானால், அவற்றிற்கு ஒரு மிக முக்கியமான முன் நிபந்தனை, அரசு ஊழியர்கள்

அதிலே முழுமையாக ஈடுபடுத்தப்படவேண்டும். இந்த மாநில அரசைக் குற்றம் சாட்டுவதற்காக அல்ல, புரிந்துகொள்வதற்காக நான் அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட சில விஷயங்களைக் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமக்கு உரிய பங்கை மத்திய அரசிடம் கோருவதற்கு நமக்கு எப்படி உரிமை இருக்கிறதோ அதே போல், அரசுக்கு நிதி ஆதாரங்கள் போதவில்லை என்றால் மக்களின் தலையிலே வரியை ஏற்றி வசூலித்துக்கொள்வதற்கு மாநில அரசுக்கு உரிமை எப்படி இருக்கிறதோ, அதுபோல், மக்கள் தங்கள் வாழ்க்கை அனுபவத்தில் தங்கள் தேவைப்பொருள்களை வாங்கிக் கொள்ள இயலாத அளவு விலை ஏறுகிறபொழுது, அந்த ஏற்றத்தை ஈடுகட்டிக் கொள்வதற்காகப் பணியாற்றுகிற இடத்தில் அது தனிப்பட்ட முதலாளியானாலும் அல்லது அரசு நிறுவனமானாலும், அவர்களுக்கு முன்னால் தங்கள் கோரிக்கைகளை முன் வைப்பது, நியாயபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். ஆனால், அரசு ஊழியர்களால் அப்படி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட பொழுது, இந்த மாநில அரசு அதைப் பொறுப்புணர்ச்சியோடு கவனிக்கவில்லை யென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற ஊதியம் மாநில அரசிலே பணியாற்றுகிறவர்களுக்கு இல்லை. நிதி கமிஷன் அதைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறது. அப்படிப் பட்ட வேறுபாடுகள் காலப்போக்கில் களையப்பட வேண்டும்.

(பிற்பகல் 12.50)

தமிழ்நாட்டில் என்.ஜி.ஒ-க்களுக்கு வழங்குகிற ஊதியத்தை விட பிற மாநிலங்களில் அதிகமாக வழங்கப்படுகிற நிலைமை தற்போது கூட இருக்கிறது. அவற்றை எல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் 4-வது பே கமிஷன் தன்னுடைய ரெக்க மென்டேஷனைக் கொடுத்திருக்கிறது. அது எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்த்தோம். இதுவரையில் வந்திருக்கிற சம்பளக் கமிஷன்கள் எல்லாம் ஊதியத்தைக் கூட்டும், உரிமையைக் கூட்டும் என்றுதான் பார்த்திருக்கிறோம். ஆனால் 4-வது சம்பளக் கமிஷன் என்ன செய்திருக்கிறது ? நடைமுறையில் அனுபவிக்கிற உரிமைகளைப் பறிக்கிற காரியத் திற்காக இந்த பே கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது, அதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

பல துறைகள் வாயிலாக பல்வேறு கடமைகளைச் செய்ய வேண்டிய அரசு ஊழியர்களை இந்த மாநில அரசு அவர்களின் கோரிக்கையை துறை வாரியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவர்களுடைய பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று ஆசிரியர்கள் பிரச்சனையும் தீர்க்கப்பட வில்லை. எந்த ஒரு மாநிலத்திலும், எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் தார்மீகப் பொறுப்பை மேற்கொண்டிருக்கிற ஆசிரியர் சமுதாயத்தை அழவைத்து, அவர்களைப் போராட தெருவிலே இழுத்துவிடுவது எதிர்கால சமுதாயம் கன்றிப்போவ தற்கான ஒரு முன்னறிவிப்பாகும். ஆகவே, இந்த அரசு, பட்ட தாரி ஆசிரியர்கள் ஆனாலும் சரி, அவர்கள் தமிழ் புலவர்கள் ஆனாலும் சரி, அல்லது தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஆனாலும் சரி, அவர்களுடைய கோரிக்கைகளை கவனத்தோடு கேட்டு, காலத்தில் தீர்க்கிற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த மாநில அரசு, மத்திய அரசு விஷயங்களில் நமக்கு அநீதிகளை இழைக்கிற அரசாக மத்திய அரசு நடந்து கொள்ளுகிறபோது கூட நிமிர்ந்து நின்று சட்டமன்றத்தில், எதிர்க்கட்சிகள் நியாயம் கேட்பது போல, மத்திய அரசிலே நியாயம் கேட்க ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். அதற்குத் தெளிவான ஒரு உதாரணம், இங்கே நம்முடைய அமைச்சர்கள் பலர் இருக்கிறார்கள். 1960-ஆம் ஆண்டில் இதே பேரவையில் நில உச்சவரம்புச் சட்ட முன்வடிவு விவாதிக்கப்பட்டபோது, நிலப் பிரபுக்கள் அந்த சட்டத்தை, உருவாக்கி முதன் முறையாக அதைச் சட்ட மாக்க இங்கே கொண்டுவந்தார்கள். அப்போது நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சர் மாண்புமிகு ப.உ.ச. அவர்கள் சட்டமன்றத்தில் அன்றைக்கு இடம் பெற்றிருந்தார்கள். அந்த அரசில் தவறுகளைப் பற்றி, உள் நோக்கங்களைப் பற்றி என்னைக் காட்டிலும், எங்கள் இயக்கத்தைக் காட்டிலும் நுட்பமான வாதங்களை எடுத்து வைத்ததை நாம் இன்றைக்குக் கூட சட்டப்பேரவை குறிப்புகளில் பார்க்கலாம். அந்த நேரத்தில் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்த மரியாதைக்குரிய அண்ணா அவர்கள் குறிப் பிட்டதை, இந்த மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாக இருப்பதால் அதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சில தினங்களாக என்ன பேசப்பட்டு வருகிறது ? கோவில் நிலங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய 36 கோடி ரூபாய் குத்தகைப் பாக்கியைக் கொடுக்காவிட்டால், கோவில், மடா லயங்களுக்கு அந்த நிலங்களைக் கையகப்படுத்த வகை செய்யப் படும் என்று சொல்கிறார்கள். ஏன் இந்த அரசுக்கு கொள்கை யில் ஒரு வழுக்கல் ஏற்படுகிறது ? திராவிட முன்னேற்றக்

(திரு. கு. சுப்பராயன்) [1985 ஜூலை 15

கழகத்திலிருந்து உங்களைப் பிரித்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் அமைச்சர்கள் சொல்கிறார்கள், கோவில், மடங்களுக்கு இருக்கிற சொத்துக்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் வகையில் சட்டம் ஒன்று முன்மொழியப்பட விருக்கிறது என்று சொல்கிறார்கள். அண்ணா என்ன சொன்னார் ? அறநிலையங்களுக்கு ஏன் 200 ஏக்கர் நிலம் ? அது இல்லாவிட்டால் விபூதி மாடத்தில் விபூதி இருக்காதா ? அது இல்லாவிட்டால் வில்வமரம் காய்க்காதா? அது இல்லாவிட்டால் சைவ நெறி தழைக்காதா ? எதற்காக கோவில்களுக்கும் மடங்களுக்கும் சொத்து இருக்க வேண்டும் ? ஆகையால் மடாலயங்களுக்கு, அறநிலையங்களுக்கு ஒரு துளியும் நிலம் இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை ; எங்கள் கட்சித் தலைவர் சொல்லவில்லை ; எங்கள் கட்சித் தேர்தல் அறிக்கையில் சொல்லவில்லை. இது உங்களுடைய அரசியல் ஆசானான அண்ணாவால் சொல்லப்பட்டது. அந்த விஷயத்திலிருந்து ஏன் நீங்கள் தடம் புரளுகிறீர்கள் ? மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு உரிய பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படி ஒரு சட்டம் வருமானால் இலட்சக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். இதை எல்லாம் கவனத்தில் கொண்டு உரிய பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையைப் பொறுத்த வரையில் ஒரு விஷயத்தை நான் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். காவல் துறையைப் பொறுத்த வரையில் எங்களுடைய சந்ததி தொடக்கத்திலிருந்தே காவல் துறையால் பாதிக்கப் பட்டிருக்கிறது. பாவப்பட்டவர்களுக்காகப் போராடிய பாட்டாளி வர்க்கம் காவல் துறையால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த காவல் துறையின் நடைமுறைகள் மாற்றப்படவேண்டும். முறைப்படுத்தப்பட வேண்டுமென்று ஒவ்வொரு முறையும் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஆனாலும் கூட மானியக் கோரிக்கை முடிந்து பதில் அளித்த பிறகும்கூட, திருச்சியிலே நடைபெற்ற சம்பவம் உங்களுக்குத் தெரியும். அதன் உள்ளே நான் போக விரும்பவில்லை. அந்த சம்பவம் மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள கோரிக்கை வைத்ததற்காக, அதை தலைமை ஏற்று வந்த தலைவர்களை பேசுவதற்கு என்று அழைத்து, பிடரியைப் பிடித்து போலீஸ் லாரியிலே தள்ளும்போதுதான் கலவரம் மூண்டிருக்கிறது.

1985 ஜூலை 15] (திரு. கு. சுப்பராயன்)

அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் ? அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துகிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது தயவு செய்து அதிகாரிகளை நியாயப்படுத்தாதீர்கள். அதிகாரிகளைத் தோளில் உட்கார வைத்தால் உங்கள் தலையிலே நின்றுவிடுவார்கள். அதிகாரிகள் அரசின் திட்டத்தை செல்லரிக்கிறார்கள். அதிகாரிகள் அரசின் திட்டம் உரிய காலத்தில் மக்களுக்கு கிடைப்பதைத் தடுக்கின்ற நந்திகளாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே உஷார் தன்மையோடு இருந்து இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்கவேண்டும் என்பதற்காகத்தான் போடுகின்ற திட்டங்கள் உரியபடி மக்களுக்குப் போய்ச் சேருவதில் மிகுந்த கவனத்தைச் செலுத்தவேண்டும என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீர்ப்பாசனத் துறை நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தவரையிலே அதிலே தொடர்ந்து தடைக் கற்கள் மத்திய அரசால் இடப்பட்டு வருகின்றன. பல திட்டங்கள் கிடப்பிலே போடப்பட்டுவிட்டன, ஊறப் போடப்பட்டுவிட்டன. இப் போது மாநில அரசு அதை வலியுறுத்திக் கேட்பதில் ஏனோ வேகம் செலுத்தவில்லை. சொன்னால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கோபப்படுகிறார்கள். வருத்தப்படுகிறார்கள். எதிர்க்கட்சியிலே இருந்து நாங்கள் வந்திருக்கிறோம் என்றால் உங்களுக்கு பூச்சூட்டுவதற்காக அல்ல ; புகழ் உரை நிகழ்த்தவும், அல்ல ; உங்கள் வேலைகளில் உள்ள நடைமுறைப் பிசகுகளைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான், அத்தகைய கடமையை ஆற்றுவதற்காகத்தான் எதிர்க்கட்சி என்ற நிலையிலே இருந்து அசுரப் புயல் அடித்த நேரத்திலும் கூட சில நபர்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆளும் கட்சி நண்பர்கள் என்ன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் என்றால் எதிர்த் தரப்பிலே இருந்து சொல்லப் படுகின்ற கருத்துக்களில் எடை உள்ளவற்றை எடுத்துக்கொண்டு அங்கீகரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய வகையில் பணியாற்றவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தியாகிகள் பென்ஷனைப் பொறுத்தவரையில் பல அறிவிப்புக்களை இந்தப் பேரவை முன்னமேயே அறிவித்திருக்கின்றது. நான் அந்தக் கருத்தினை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன் சில ஆயிரம் பேர்கள் தியாகிகளாக விடுதலைப் போராட்ட வீரர்களாக இருக்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து மனுப் போடுகின்ற நிலைமைக்கு இந்த மாநில அரசு வைக்கக்கூடாது. பல மாநிலங்கள் அவர்களின் பென்ஷன் தொகையை உயர்த்தி இருக்கிறது. 1947-க்கு முன்னால் கடுமையான எதிர்ப்பில் நெஞ்செலும்பு ஒடிந்தாலும் பரவாயில்லை என்று தேசத்தின் விடுதலைக்காகப் போராடியவர்கள் படிப்படியாக ஏறி, அதிகாரி, அதிகாரியாக மனுக்களைக் கொண்டு போய்க் கொடுக்கின்ற ஒரு துயர நிலைமையை நாம் இனிமேலும் விட்டு வைக்கக்கூடாது.

(திரு. கு. சுப்பராயன்) [1985 ஜூலை 15

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தக் குறைந்தபட்ச பென்ஷன் தொகையை அதிகப்படுத்தவேண்டும். அவர்களுக்குக் குடியிருப்பு மனைகளை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுத்துறை என்கிறபோது அதிலே மாநில அரசு அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றவில்லை. தமிழ்நாட்டில் நாங்கள்தான் உண்மையான கம்யூனிஸ்ட்கள் என்று தன்னை கம்யூனிஸ்ட்களோடு ஒப்பு நோக்குவதன் மூலம்தான் உயர்த்திக்கொள்ள முடியும் என்பதை உலக அரசியல் அனுபவங்களிலிருந்து உணர்ந்த அண்ணா அவர்கள் அந்த கம்யூனிஸ்ட்களோடு ஒப்புநோக்கினார் பெருமை மிக்க பாரம்பரியம் — இன்றைக்கு என்ன நடக்கின்றது என்றால் மத்திய அரசு பொதுத்துறையைச் சீரழிக்கின்றது. அது சிறுகச் சிறுக பொதுத்துறையைக் கொல்கின்றது. அதனுடைய புதிய கொள்கை அதுதான். எதற்காக இந்த மாநில அரசு தன்னுடைய பாரம்பரிய பொது உடைமை நேசிப்புக் கொள்கையில் இருந்து தடம் புரள்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

நடைமுறையில் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். விளம்பரப் பலகையைக் கையகப்படுத்துகின்ற சட்ட முன்வடிவின் போது நான் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். தமிழ்நாடு அரசின் டிட்கோவிற்குச் சொந்தமான தமிழ்நாடு கெமிகல்ஸ் புரொடெக்ஷன்ஸை ஏன் தனியாருக்கு விற்கிறீர்கள்? இது என்ன நியாயம் ? அரசு எடுத்துக்கொண்டு இலாபகரமாக நடத்துகின்ற ஒன்றைத் தனியாருக்கு விற்றுவிடுவது என்பதுதான் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் கொள்கையா? தனி நபர் கொள்ளை அடிப்பதைத் தடுக்க வேண்டாமா? அரசினுடைய டிட்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான தமிழ்நாடு கெமிக்கல்ஸ் ப்ராடெக்ட்ஸ் 200 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இருக்கும்போது எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் இருக்கும்போது அரசுக்குச் சொந்தமான ஒன்றை தனியாருக்கு ஏன் கொடுக்க வேண்டும் ? மலிவான வகையில் நான் குற்றம் சாட்டவில்லை. அவ்வாறு மலிவாகக் குற்றம் சாட்டுகின்ற அரசியல் பாரம்பரியத்தில் நான் பாடம் பயின்றவனும் அல்ல. இப்படி விற்றால் இதற்கு உள்நோக்கம் கற்பிக்க மாட்டார்களா ? ஏன் அரசு நிறுவனத்தைத் தனியாருக்குக் கொடுக்க விரும்புகிறீர்கள்? இது கொள்கை வழுக்கல் இல்லையா ? இந்த நிலைமையில் மத்திய அரசை எதிர்த்து உங்களால் எப்படிப் போராட முடியும் ? ஆகவே, அத்தகைய முடிவு அமைச்சகத்திடம் இருக்குமேயானால் தயவு செய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

1985 ஜூலை 15]

(பிற்பகல் 1—00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985—86 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்க மசோதாவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்கள். சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் பலவற்றின் மீது விவாதங்கள் நடைபெற்று எல்லா துறைகளின் அடிப்படையிலும் கொடுக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் வழங்கப்பட்டு இப்போது ஒட்டு மொத்தமாக ஒதுக்கப்பட்ட தொகையைக் கேட்கும் அந்த நிலைக்கு இந்தச் சட்ட மன்றம் வந்து சேர்ந்திருக்கிறது.

ஆக சட்டமன்ற பேரவையால் அனுமதிக்கப்பட்ட வகையில் 2,773 கோடியே 33 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. மாநில தொகுநிதிக்கு சாட்டப்பெற்ற வகையில் 643 கோடியே 3 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் ஆகும். ஆக மொத்தமாக 3,416 கோடியே 36 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்கிற வகையில் இந்த ஒதுக்கீடு மசோதா இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசியபோது, ஒதுக்கீடு மசோதாவிலிருந்து வேறு பல கோணங்களில், வேறு பல இடங்களுக்கு எல்லாம் சென்றாலும், அவை அனைத்திற்கும் பதில் அளிக்கின்ற வகையில் நேரமும் இல்லை. ஆனால் நிதியை ஒதுக்கீடு செய்கிற அளவிற்குப் பதிலாக நேரத்தைத் தான் ஒதுக்கீடு செய்தார்கள் என்று கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டதன் காரணமாக, அவை அத்தனைக்கும் விரிவாகவோ, விளக்கமாகவோ பதில் சொல்வதற்கு இயலாத நிலையில், அவர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்களிலே இன்றியமையாத கருத்துக்களுக்கும், இந்த மன்றம் அறிய விரும்பும் கருத்துக்களுக்கும், ஏற்ற உரையினை அந்தந்த துறையைச் சார்ந்த அமைச்சர்கள் அவ்வப்போது பதில் அளிப்பார்கள் என்ற தன்மையை மட்டும் நான் எடுத்துத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகைப் பற்று பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள். மிகைப் பற்றை வாங்கிக் கொள்ள லாம் என்று சட்ட ரீதியாக எந்தச் சட்டமும் இல்லை. அது உரிமையாகவும் வழங்கப் பெறுவதில்லை. ஆனால் உரிமையாக வழங்கப்பெறும் அளவுக்கு ரிசர்வ் வங்கி அனுமதிக்கலாம். அனுமதிப்பது அல்லது அனுமதிக்காமல் இருக்கிற உரிமை ரிசர்வ் வங்கியைச் சார்ந்தது. ரிசர்வ் வங்கியை அனுமதிக்கச் சொல்வது, அனுமதிக்க வேண்டாம் என்று சொல்லுகிற அளவுக்கு ஆணை இடுகிற உரிமை மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆகவே, வேஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ் என்ற அளவுக்கு நமக்குப் போது மான அளவுக்கு செலவு அதிகரித்து, நம்மிடத்திலே அதற்கு தகுந்த நிதி இல்லாத நேரத்தில் சில பல இனங்களை—செலவி னங்களை—நாம் சமாளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்

போது, அப்போது கடன் என்ற வகையில் ரிசர்வ் வங்கியிலே வாங்கிக் கொள்ளலாம் என்ற வகையிலேதான், வேஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ் என்று பெயரிட்டு, ஒவ்வொரு மாநிலத்தி னுடைய தன்மையை ஒட்டி, இவ்வளவு வரையிலும் வாங்கிக் கொள்ளலாம், அதை அவ்வப்போது திரும்ப கொடுத்து விடலாம் என்று வைத்திருக்கிறார்கள்.

ஆனால் அது ஒரு எல்லைக்குள் இருக்க வேண்டும் என்ற அளவுக்கு ஒரு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த தொகை தான், நான் முதலிலே குறிப்பிட்டபடி தமிழகத்தைப் பொறுத்த வரையில் 66 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நாம் வாங்கிக் கொள்ளலாம். பிறகு ரிசர்வ் வங்கிக்கு செலுத்திவிடலாம். ஆனால் எக்காரணம் கொண்டும் இந்த 66 கோடியை தாண்டக் கூடாது என்பதுதான் விதி. ஆனால் தாண்டுகிற நிலைமை ஏற்படுகிறபோது ரிசர்வ் வங்கி அனுமதிக்கிறது. அது உரிமை யின்பால் பட்டது அல்ல என்றாலும் கூட அனுமதிக்கிறது. அனுமதிக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கொள்கை. நம்முடைய மாநிலத்திலே வறட்சி நிலை இருந்த போதுகூட நாம் மேற்கொண்டு 60 கோடி ரூபாய்க்கு மிகைப் பற்று வாங்க வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு வந்தோம் என்பதையும், அதில் பிறகு 55 கோடி ரூபாய்க்கு மேலாக கடனாக மாற்றப்பட்டது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

இப்பொழுது சமீபத்திலே கூட 28–1–1985 அன்று இவ்வளவு தொகைக்கு மிகைப்பற்றை எல்லா மாநிலங்களும் வாங்கிக் கொள்ளுங்கள். அதற்கு மேல் மிகைப்பற்று வாங்கக் கூடாது என்று உத்திரவிட்டபோதிலும் கூட தமிழக மாநிலம் 43 கோடி ரூபாய் மிகைப் பற்று வாங்கித்தான் இருந்தது. அதற்குப் பிறகு ஒவ்வொரு மாநிலமும் முயற்சி செய்து மிகைப் பற்றைக் குறைக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்ன வகையிலே, பலர் குறைத்துக் கொண்டு வந்தார்கள். நாம் அந்த 43 கோடியையும் 1–7–1985-க்குள்ளாக, முழுவதும் இல்லாம லேயே ஆக்கிவிட்டோம் என்பதைத்தான் நான் குறிப்பாக எடுத்துச் சொன்னேன். ஆகவே மிகைப் பற்று வாங்குகிற நிலை வேண்டுமா அல்லது அறவே எடுத்துவிட வேண்டுமா என்று சொன்னால், நான் முதலிலே எடுத்துச் சொன்ன மாதிரி, மாநில அரசினுடைய நிதி ஆதாரங்களுடைய தன்மைக்கும், அது ஏற்றுக் கொண்டிருக்கிற பணிகளை நிறைவேற்றுகிற அவசியமும் ஏற்படுகிற நேரத்தில், சில மாநிலத்தில் மிகைப் பற்று வாங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. அந்த வகையில்தான் இப்போது இருக்கிற அமைப்புகள் இருக்கின்றன.

ஆகவே மிகைப்பற்று வாங்கவே கூடாது என்ற நிலை வருமேயானால் பல மாநிலங்களில் பல பணிகளை செய்ய முடியாமலேயே போகும். நானும் எடுத்துச் சொன்ன மாதிரி, இங்கே வறட்சி ஏற்பட்ட போது, நாம் மிகைப் பற்று வாங்காமல்

போய் இருப்போமானால், சில பல இடர்பாடுகளுக்குக் கூட நாம் ஆளாகியிருப்போம். இப்பொழுது சமீபத்திலே கூட 43 கோடி ரூபாயை 28–1–1985லே நாம் வாங்கியிருந்தோம். அதைச் சரிகட்டிவிட்டோம் என்று சொல்கிறோமே தவிர, அந்தக் கொள்கையில், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், அதை இல்லாமல் ஆக்கியிருக்கிறோம் என்ற குறிப்பைத்தான் சொன்னேனே தவிர, மிகைப்பற்று வாங்கக் கூடிய உரிமையோ அல்லது அதற்குரிய வசதி வாய்ப்பு களோ அறவே கூடாது என்பது அல்ல இந்த ஆட்சியினுடைய கொள்கை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே 28–1–1985-ல் கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களும் மிகைப் பற்று வைத்திருந்தன. இன்றைய நிலையில் பீகார், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான், தமிழ் நாடு ஆகியவை களுக்குத் தான் மிகைப்பற்று இல்லை. மற்ற மாநிலங்கள் கூட தாங்கள் வாங்கிய மிகைப் பற்றை பெருமளவிற்கு குறைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். 28–1–1985-ல் ஆந்திரப்பிரதேசம் 230 கோடி மிகைப்பற்று வாங்கியிருந்தது. இன்றைக்கு 1–7–1985-ல் 95 கோடிக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போல ஹரியானா 83 கோடி வாங்கியிருந்தது. அதை 36 கோடிக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். கர்நாடகம் 246 கோடி மிகைப்பற்று வைத்திருந்தது. 148 கோடிக்கு கொண்டு வந்திருக்கிறது. கேரளம் 246 கோடி மிகைப்பற்று வைத்திருந்தது. அதை 199 கோடிக்கு இப்போது கொண்டு வந்திருக்கிறது. ஒரிசா 49 கோடி வைத்திருந்தது. அதை இப்போது 17 கோடிக்கு கொண்டு வந்திருக்கிறது. மேற்கு வங்கம் 259 கோடி மிகைப் பற்று வைத்திருந்தது அதைக் குறைத்து 139 கோடிக்குக் கொண்டு வந்திருக்கிறது.

ஆகவே, அதைப் பொறுத்தவரையில் பிரச்சனை இல்லை. ஆனால் மாநில அரசு அந்தத் தன்மையைப் பொறுத்த வரையில் மிகைப்பற்று என்ற நிலையில் இருக்கிறபோது நான் முதலில் சொன்னமாதிரி 15 சதவீத வட்டி செலுத்த வேண்டும். மாநிலங்கள் அதிகமான அளவிற்கு வட்டி செலுத்த வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக தாம் அதனை மத்தியதர கடனாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம். அதனை மத்திய அரசு ஏற்று 5 ஆண்டுக் காலத்திலே கொடுக்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறது. 28–1–1985-ல் எந்த அளவிற்கு மிகைப்பற்று இருந்ததோ, அந்த அளவிற்கு இருக்கிற தன்மையை 5 ஆண்டுகளில் சரிப்படுத்தலாம் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்த வகையில் நமக்கும் லாபம் வருகிறது. 43 கோடி ரூபாய் அந்த வகையில் கடனாக நாம் பெற்று 5 ஆண்டு காலத்தில் திரும்பச் செலுத்துகிற வாய்ப்பும் இந்த மாநில அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1985 ஜூலை 15

அந்த வகையில் 28-1-1985-ல் எல்லா மாநிலங்களும் சேர்த்து 1,808 கோடி மிகைப்பற்றாக வைத்திருந்தன. அதுதான் மாற்றப்பட்டிருக்கிறது. இந்த அரசு மத்திய அரசிடத்தில் வாதிட்டுப் பெறவேண்டுமென்ற நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே எந்த அளவிற்கு வாதிட முடியுமோ அந்த அளவிற்கு வாதிட்டு பெறவேண்டியவைகளை நாம் பெற்றுக்கொண்டு தான் இருக்கிறோம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழகம் அப்படிப்பட்ட சூழ்நிலையை பெற்றிருப்பதன் காரணமாகத் தான், ஓரளவிற்காவது சிறப்புற பணிகளை மேற்கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் நல்லதொரு நிலையில் நம்மால் பணிகளைச் செய்ய முடிகிறது.

1967 ஆம் ஆண்டில் தேர்தலில் வெற்றி பெற்று வந்த தற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையில் எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு இந்தியாவை மத்தியில் ஒரு கட்சி ஆள்கிறது. அதனால் எதிர்க்கப்பட்டு வந்திருக்கிற எதிர்க்கட்சியாக இருந்த ஒன்று இன்றைக்கு தமிழகத்தில் ஆளும்கட்சியாக மாறியிருக்கிறது. கட்சிக்கு கட்சி மாச்சரியங்கள் இருக்கலாம். கட்சித் தலைவர்களுக்கிடையில் மாச்சரியங்கள் இருக்கலாம். ஆனால் போட்டியிட்ட கட்சிகளில் ஒன்று டெல்லியை ஆள்கிறது. போட்டியிட்ட கட்சிகளில் மற்றொன்று தமிழகத்தை ஆள்கிறது என்பதற்காக மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இருக்கிற உறவுகள் காப்பாற்றப்படும். ஆகவே கவர்ன்மெண்ட் வர்சஸ் கவர்ன்மெண்ட் என்பது வேறு. கட்சி வர்சஸ் கட்சி என்பது வேறு என்ற அளவிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இருக்கவேண்டிய உறவுகள் இருக்கும் ; எந்தெந்த வகையிலே போராட வேண்டுமோ அந்த வகையிலே போராடுவோம், எந்தெந்த வகையிலே ஆதரிக்க வேண்டுமோ அந்த வகையிலே ஆதரிப்போம் என்று சொன்னார்கள்.

அப்படி போராட வேண்டிய கட்டம் வந்தபோது என்.சி.சி. பொறுத்தவரையில் இந்தி தான் ஆணைமொழி என்று அவர்கள் அறிவித்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னார்கள். இல்லாவிட்டால் அந்தத் திட்டமே தமிழகத்திற்கு வேண்டாமென்று சொன்னார்கள். ஒரு ஆண்டுகாலம் பார்த்துவிட்ட பிறகு ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாமென்று மத்திய அரசு சொன்னது. அதற்குப் பிறகு அதைப் பயன்படுத்துகிற சூழ்நிலை வந்தது. அந்த வகையில் தான் நாமே பல்வேறு பிரச்னைகளை பொறுத்தவரையிலும் எதையெதை ஒட்டு மொத்தமாக மத்திய அரசு கொண்டு வருகிறது என்பதற்காக அவைகளை நாம் ஏற்கவேண்டிய அவசியமும் இல்லை. எதையெதை வாதாடி எதிர்க்கவேண்டுமோ அவைகளை எதிர்த்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

1985 ஜூலை 15] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

அதிகமான உதாரணங்களைச் சொல்ல வேண்டியதில்லை என்றாலும், அண்மையில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கோடிக்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட விருக்கிறார்கள் என்ற போது, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் குறைந்தது 7,000 கோடியாவது போகலாமென்ற கருத்தை நாம் எடுத்துச் சொன்னோம். அதற்கு பிறகு ஒரு லட்சத்து 80 ஆயிரம் கோடி அளவிற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் செல்கிற நிலையில் இருக்காது, கிட்டத் தட்ட ஒரு லட்சத்து 40 ஆயிரம் அல்லது 45 ஆயிரம் கோடிக்கு நிற்பதற்குவேண்டிய அவசியம் ஏற்படுமென்று அவர்கள் தெரி வித்தபோது, 6,000 கோடி அளவில் தமிழகத்தின் திட்டச் செலவு இருக்க வேண்டுமென்ற கருத்தை நாம் எடுத்துச் சொன்னோம். அதற்குப் பிறகு ஒவ்வொரு மாநிலத்தையும் திட்டக்குழு அழைத்து விவாதித்து வந்தார்கள். அப்படி விவாதித்த போது 30-4-1985 அன்று நானும், நிதித்துறைச் செயலாளரும், தலைமைச் செயலாளரும் மற்றவர்களும் சென்று வாதிட்டபோது 4,800 கோடி தமிழகத்திற்கு ஒதுக்கு கிற நிலைமை, எட்டாவது நிதிக்குழு சொல்லியிருக்கிற கருத்தின் அடிப்படையில் இவ்வளவு தான் வருமென்றார்கள். அப்போது நாம் வாதிட்டோம். இது ஒன்றும் சரியாக வராது. நீங்கள் வைத்திருக்கிற கணக்கின்படி பார்த்தாலும், நீங்கள் போட்டிருக்கிற கால்குலேஷன்கள் மற்றவைகள் தவறாக வருகிறது. நாங்கள் சொல்கிற கணக்கின்படி எங்களுக்குக் கூடுதலாக வரவேண்டுமென்று வாதிட்டுப் பார்த் தோம். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சொன்ன 4,800 கோடியை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லி விட்டு நாங்கள் வந்துவிட்டோம். மறுபடியும் வந்து வாதாடுகிறோம் என்று சொல்லிவிட்டு வந்தோம். 15 நாட்கள் கழித்து வாதிட்டோம். அப்படிப்பட்ட சூழ் நிலையில் நாம் பிரதமர் அவர்களுக்கும் எடுத்துச் சொன் னோம், மற்றவர்களுக்கும் எடுத்துச் சொன்னோம். நிதித் துறை அமைச்சருக்கும் எடுத்துச் சொன்னோம். திட்டக் குழுத் தலைவருக்கும் எடுத்துச் சொன்னோம்.

(பிற்பகல் 1-10)

அதற்குப்பிறகு நாம் எடுத்துச் சொன்ன புள்ளிவிவரங் களிலே நியாயம் இருக்கிறது என்பதையும், நாம் வாதா டிய தன்மைகளிலே நியாயம் இருக்கிறது என்பதையும் அவர்கள் ஒப்புக்கொண்டு அதன் காரணமாகத்தான் மீண்டும் 14-5-1985-லே சென்று, நிதிக் குழுவோடு பேச்சு வார்த்தை முடித்ததற்குப் பிறகு, முதலிலே 4,800 கோடிதான் ஒத்துக் கொள்வோம் என்று சொன்ன நிலை மாறி, நாம் எழுப்பிய வாதங்களையும், மற்றவைகளையும் ஏற்றுக்கொண்டு, 5,750

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1985 ஜூலை 15

கோடிக்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இருக்கலாம் என்பது மட்டுமல்லாமல், மலைப் பிரதேசத்தினுடைய வளர்ச்சிக்கு ஒரு 54 கோடியும் ஒதுக்கத் தக்க சூழ்நிலைவந்து, கிட்டத்தட்ட 5,804 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்கத்தக்க அளவிற்கு வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களைப் பற்றிப் பேசித் தீரவேண்டும் என்று எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலே 3,150 கோடிக்கு திட்டச் செலவுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது என்றாலும் கூட நாம் ஆண்டுக்காண்டு கூடுதலாக பல்வேறு காலத்திலேயும் கூட, திட்டப் பணிகளை எந்த வகையிலும் குறைக்காமல், கடுமையான, கொடுமையான வறட்சி இருந்தபோது கூட நாம் கூடுதலாகச் செலவழித்தோம். நம்முடைய திட்டத்திலே ஒதுக்கப்பட்டது, கிட்டத்தட்ட 3,150 கோடி என்றாலும் கூட, நம் சாதனையினுடைய அளவு 3,600 கோடியாக இருந்தது. கூடுதலாக 450 கோடிக்கு நாம் செய்து முடித்து இருக்கிறோம். 1985–86-லே கூட 960 கோடிக்கு திட்டக் குழு அனுமதித்து இருந்தாலும் கூட, நாம் வரவு செலவு திட்டத்தில் கூறியிருப்பது 1,102 கோடிக்காவது திட்டச் செலவைக் கொண்டு போக வேண்டும் என்பதுதான். ஆனால் இன்றைக்கு 960 கோடிக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும், கீழே இறங்காது. அதற்கு மேலாகத்தான் இருக்கும் என்பதை யும் நான் இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி ஏற்கனவே பல உறுப்பினர்கள் சொல்லியது மாதிரி, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கள் சொல்லியது மாதிரி, மத்திய அரசு நமக்குத் தரவேண்டிய பங்கு, மற்றவைகளைக் கூடுதலாக ஆக்க வேண்டும் என்பதை தொடர்ந்து வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் வலியுறுத்திக் கொண்டுதான் வருகிறோம். அப்படி வற்புறுத்திக் கொண்டு வருகிற நேரத்திலே கூட குறிப்பாக இப்போது இருக்கிற காட்கில் பார்முலா மாற்றப்பட வேண்டும், அது மாற்றப்படாததன் காரணமாகத் தான் முற்போக்கு மாநிலங்களுக்கு கிடைக்க வேண் டிய தொகை கிடைக்கவில்லை என்பதையும் வற்புறுத்திக் கொண்டு இருக்கிறோம். இதைப் பற்றி நேஷனல் டெவலப் மென்ட் கவுன்சில் பேசி முடிவு எடுங்கள் என்று தான் திட்டக்குழு சொல்கிறது. நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் என்ன திட்டம் வகுத்து இருக்கிறதோ, அதனுடைய அடிப்படையிலேதான் நாங்கள் பணியாற்ற வேண்டும் என்று சொல்வியிருக்கிறார்கள். அடுத்து, கன்சைன்மென்ட் டாக்ஸ், இன்கம் டாக்ஸ், எக்சைஸ் டாக்ஸ் போன்றவைகளில் நமக்குக் கூடுதலாக பங்கு வேண்டும் என்பது போன்று சில குறிப்பிட்ட மாநிலங்கள் வற்புறுத்தி வரு கின்றன. அதையும் நாம் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

1985 ஜூலை 15] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஏழாவது நிதிக் குழுவினுடைய அடிப்படையிலே நமக்கு 7.21 சதவீதம் பங்கு ஒதுக்கீடு வந்தது. எட்டாவது நிதிக் குழு விலே 6.25 என்று இப்போது வைத்திருக்கிற ஒரு பார்முலாவின் படி கொண்டு வந்திருக்கிறார்கள். இது நியாயம் இல்லை என்று நாம் வற்புறுத்தி, அந்த பார்முலாவை மாற்ற வேண்டும் என்று நாம் தொடர்ந்து எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

மற்ற பல்வேறு கருத்துக்களைப் பற்றி மாண்புமிகு உறுப் பினர்கள் பலரும் சொன்னார்கள். தெலுங்கு கங்கையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் எடுத்துத் தெரி வித்தார்கள். தெலுங்கு கங்கை திட்டத்தைப் பொறுத்தவரை, அவர்கள் கூறியது மாதிரி இப்போது ஏற்பட்டு இருக்கின்ற நில வரத்தினுடைய, தன்மையினுடைய அறிக்கையை அதற்கு உரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வைப்பார் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இருக்கிற சூழ்நிலைகளில் விளக்கம் செய்தால்தான் நல்லது. பத்திரிகை களிலே அப்படிப்பட்ட நிலைமை வருகிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், மகாராஷ்டிரம் 5 டி.எம்.சி.யும், கர்நாடகம் 5 டி.எம்.சி.யும், ஆந்திரம் 5 டி.எம்.சி.யும் ஆக 15 டி.எம்.சி. தண்ணீர் நமக்கு வரவேண்டும் என்பதிலே, இப்போது ஆந்திராவிலேயும், கர்நாடகத்திலேயும், ஏற்பட்ட தகராறிலே இது பாதிக்கப்படுகிற சூழ்நிலை இல்லை. ஆனால் அந்த திட்டத்தினுடைய அடிப்படையிலே ஆரம்பத் திலே போடப்பட்ட 720 கோடி ரூபாய் திட்டத்திலே நம்முடைய பங்கு 200 கோடி ரூபாய். 520 கோடி ரூபாய் தெலுங்கு தேசத் தினுடைய பங்கு. இது பற்றிய விவரங்களை எந்த அளவில் இருக்கிறது, எந்த நிலையில் இது இருக்கிறது என்பதை எல்லாம் பற்றி முழு விவர அறிக்கையை இந்த அவைக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்து வைப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அங்கே நாம் கொடுக்க வேண்டும் என்பது, 60 கோடி கொடுப்பதாக ஒத்துக் கொண்டோம். 3 தவணை களிலே நாம் தான் பணம் தந்தோமே தவிர, இதற்கு ஈடாக அவர்கள் பணம் தரவில்லை. நாம் கொடுத்த பணத்தை மட்டும் செலவழித்துக் கொண்டு இருப்பதன் காரணமாகத் தான், உங்க ளுடைய செலவு என்ன? ஈடாகச் செலவழித்தது என்ன என்று கேட்பதிலே அவர்களுடைய கணக்கு வருகிறது. ஆகவேதான், நாம் அதற்கு அடுத்த தவணையைக் கொடுக்காமல், முதல் தவணை தீர்ந்ததற்குப் பிறகு, கொடுக்கலாம் என்ற அளவில் வந்தது. இதை விரிவாகவும், விளக்கமாகவும் மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த அவையிலே அத்தனை பேர்களும் அக்கறை உடைய பிரச் சனை என்பதை எவ்வோரும் அறிவோம். 1924 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு காலாவதி

யாகிவிடவில்லை என்பதைத்தான் இந்த மன்றமும் இந்த அரசும் ஏற்கனவே கொண்டிருந்த எண்ணம். அது காலாவதி யாகிவிடவில்லை. ஆகையினாலே 1924-லே இருந்து எந்த அளவு தண்ணீர் தமிழகத்திற்கு தரவேண்டும் என்று ஒரு உடன்பாடு இருந்ததோ, அந்த அளவிற்கு ஆன தண்ணீர் வந்துகொண்டு தான் இருக்க வேண்டும். 1974-லே மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று எதற்குச் சொன்னார்கள் என்றால் கூடுதலாக சில பல கால்வாய்கள் வெட்டிக் கொண்டு வந்து காவிரியில் விட்டு அதிக மான அளவிற்கு உபரி தண்ணீர் கிடைக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் அந்த உபரி தண்ணீரை, கர்நாடகமும், தமிழக மும் எந்த சதவீதத்தில் பிரித்துக் கொள்வது என்பதை 1974-க்கு பிறகு பேசிக் கொள்ளலாம் என்பதற்காகத்தான் இருக்கிறதே தவிர, அடிப்படையை மாற்றாமலும் அடிப்படையில் வருகின்ற தண்ணீர் வரவேண்டும் என்று சொல்லுகின்ற அந்த வாதத்திலே நாம் தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறோம். அதற்கான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்ற முறையில் 4 மாநிலங்களும் சேர்ந்து கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி, தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் சேர்ந்து முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. 2, 3 கூட்டங்கள் நடைபெற்றும் சரியான முடிவு இன்னும் வர வில்லை. கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு ஹெக்டே அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள், தமிழகமும் கர்நாடகமும் உட் கார்ந்து பேசி இந்தப் பிரச்சினையை தீர்த்து விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி தீர்க்கப்படுகின்ற சூழ்நிலை வந்து நாங்கள் தீர்த்துக் கொண்டு விட்டோம் என்று மத்திய அரசுக்கு தெரிவிக்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால் மிக மகிழ்ச் சிக்கு உரிய ஒன்று தான். அப்படிப்பட்ட சூழ்நிலையைத்தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அது பற்றிப் பேசுவதற்கும் இருக்கிறோம்.

இரயில் பாதையைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆக இரயில் பாதை விரைவாக போடப்பட வேண்டும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. சென்ற முறை கூட நான் டெல்லி சென்று இருந்த போது இரயில்வேத் துறை அமைச் சர் மாண்புமிகு திரு. பன்சிலால் அவர்களைப் பார்த்து நீங்கள் ஒதுக்கிய தொகை மிக மிகக் குறைவு, ஆக இன்னும் பல ஆண்டுக் காலம் ஆகும். இதற்கு அதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் எடுத்துச் சொல்லிவிட்டு வந்து இருக்கிறேன். ஆக, அவர்களுக்கும் இரயில்வே துறைக்கும் அதிகப் பணம்—பணத் தட்டுப்பாடு இருப்பதன் காரணமாக—ஒதுக்கவில்லை என்றும் அதற்கான வாய்ப்பு ஏற்படும் போது அதிகமாக ஒதுக்குகிறோம் என்றும் சொன்னார்கள். நெய்வேலி சுரங்கம் பற்றியும் மற்றும் பல்வேறு தன்மைகளைப் பற்றி எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கல்வியைப் பொதுப் பட்டி யலில் சேர்த்தபோது அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு நமது கல்வி அமைச்சர் அவர்கள் கல்வி மாநில பட்டியலில் தான் இருக்கவேண்டுமே தவிர, பொதுப் பட்டியலில்

வரக்கூடாது என்று பேசியிருக்கிறார்கள். மேற்கு வங்கம், திரிபுரா, கர்நாடகம், ஆந்திரம் போன்ற 5, 6 மாநிலங்களில் பேசி இருக்கிறார்கள். ஆனால் பெருவாரியான மாநிலங் களின் கருத்து என்ற அளவில் முடிவு எடுத்து அதைக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். எனவே நாம் தொடர்ந்து எதிர்க்க வேண்டியது தான். என்றைக்கு இருந்தாலும் கல்வி மாநில பட்டியலுக்கு வந்தால்தான் கல்வி யினுடைய போக்கு இருக்கக்கூடும். இல்லாவிட்டால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியது போல் என்றைக்காவது ஒரு நாளைக்கு இந்த வாய்ப்பு வசதிகளை வைத்துக்கொண்டு எந்த இந்தி திணிப்பு கூடாது என்று நாம் கருதுகிறோமோ அதை மறைமுகமாக திணிப்பதற்கு இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்பது தான் நம்முடைய நோக்கம். அதை பயன்படுத்திக் கொள்வதற்கு இடம் கொடுக்காமல் இருப்போமே யானால் கல்வித் துறையில் அவர்கள் கை வைக்கக்கூடாது. அது மாநில பட்டியலில் தான் இருக்க வேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு அதற்கான வாய்ப்பையும் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

அடுத்து பினாமி ஒழிப்புச் சட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். பினாமி ஒழிப்புச் சட்டம் வேண்டும் என்பதால் தான் நாமே கொண்டு வந்தோம். இல்லா விட்டால் இந்த அவையில் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அதற்கு ஒப்புதல் தராத அளவுக்கு சாக்கு போக்கு சொல்லி பல்வேறு கடித போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கும் அளவுக்கு டெல்லி இருக்கிறது.

இந்த பட்டா பாஸ் புத்தகம் கொண்டு வருவதற்கான தன்மை யை ஏற்கனவே கொண்டு வந்து இருப்போமானால் பல்வேறு பிரச்சினைகளுக்கு இடம் இல்லாமல் இருந்து இருக்கும். நிலம் வைத்து இருப்பவர்களுக்கு எல்லாம் கடன்வாங்க மற்ற வசதிகளை செய்து கொள்ள சௌகரியமாக இருந்து இருக்கும். இதில் என்ன சங்கடம் என்று கேட்டால் அதில் நாம் உரிமையாளர்கள் கடன் வாங்குவது, கொடுப்பது மட்டும் அல்லாமல் குத்தகைதாரருடைய பெயரையும் குறிக்க வேண்டும் என்று மத்திய அரசு சொல் கிறது. ஆக குத்தகைதாரர் பெயரை அதில் குறிக்க ஆரம்பித்து விட்டால் உரிமைப் பட்டாவில் வேறு பல சிக்கல்கள் வரும் என்பதற்காக அதற்கு என்று தனியான சட்டம் குத்தகைதாரர் உரிமைச் சட்டம் இருக்கிறது. ஆகவே, நில உரிமையாளர்களுக்கு இருக்கிற உரிமையைக் கொண்டு இருக்கிற இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறோம். மத்திய அரசினுடைய அதிகாரிகளும் மாநில அரசின் அதிகாரிகளும் உட் கார்ந்து பேசியிருக்கிறார்கள். அதை வேறு விதிமுறையில் கொண்டு வரலாம், சட்டத்தில் சேர்க்க வேண்டாம் என்ற அளவுக்கு இப்போது மத்திய அரசு ஒத்துக்கொண்டு இருக்கிறது. அந்தச் சட்டம் விரைவிலே வரலாம் என்று நான் கருதுகிறேன்.

[1985 ஜூலை 15

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பினாமி நில ஒழிப்புச் சட்டத்தை மீண்டும் இந்த அவையில் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

திரு. சு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த பினாமி நில ஒழிப்புச் சட்டத்தை கொண்டு வருவதில் உணர்வு பூர்வமாக மாநில அரசு இருக்கிறது என்று தெரிவித்ததற்கு மிகவும் நன்றி. ஆனால் பினாமி சட்டத்தை நாம் இயற்றியும் கூட, அதற்கு அனுமதி வழங்காமல் விட்டுவிட்ட மத்திய அரசின் நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கை என்ன எடுக்க இருக்கிறது என்பதை அறிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டம் தேவைப்படுமா என்று ஆராய்ந்த பிறகு தான் அதற்கு முடிவுக்கு வரவேண்டும். அதற்கு இடையில் இந்த பினாமி ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய நோக்கம். அது விரைவில் கையெழுத்து ஆகி வரவேண்டும் என்பதற்காக கடித போக்குவரத்தில் நாம் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். மேலும் வற்புறுத்துவதற்கான முயற்சிகளை மேற் கொள்வோம் என்பதை இந்த வாய்ப்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1—20)

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள், இனியன் அச்சகத்தைப் பற்றிய நிலைமைகளையும் 'மூகாம்பிகை அச்சகத்தை' பற்றிய தன்மைகளையும் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு உடனடியாக என்னால் பதில் சொல்ல இயலாது. அவர் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுகள், குறைபாடுகளைப் பற்றி ஆராய்ந்து, அதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதை அரசு எடுக்கும். அதைப்பற்றி ஆராயும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அதற்கான கோப்பு எல்லாம் தன்னிடத்திலே இருக்கிறது என்று எல்லாம் சொன்னார்கள்.

ஆகவே, அந்த கோப்பு வருகிற சூழ்நிலைகள் உள்ளபடியே—அது எங்கு இருந்து வருகிறது என்று கேட்காதீர்கள், நான் சொல்லவும் மாட்டேன் என்றும் சொன்னார்கள்—அவை முறைப்படி, நியாயப்படி வேலை செய்கிறவர்கள், நாணயமாக மற்றவைகளில் இருப்பவர்கள் காப்பாற்றப்படவேண்டிய ஒன்று.

ஆகவே அவர்களிடத்திலே கொடுக்கிறவர்கள் சிலபேர், சில பம இடங்களிலே இருக்கிறார்கள் என்பதைத்தான் அது தெரிவிக்குலே தவிர, அது எப்படி வந்தது என்றால் என்னுடைய அறையிலே

1985 ஜூலை 15] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இருக்கிற கோப்பு, வேறு இடத்திலே இருக்கிற ரகசியக் கோப்பு வெளியே வருகிறது என்றால், வெளியே வருவதற்கு யாரோ காரணமாக இருந்து இருக்கிறார்கள், வேண்டியவர்கள் இருந்து இருக்கிறார்கள் என்று தான் பொருளே தவிர, வேறு எதையும் சொல்ல முடியாது.

இருக்கிற அத்தனை பேரும் என்று சொல்லமாட்டேன். இப்படி 1,2 என்று விரல் விட்டு எண்ணக்கூடிய சிலபேர் ஆங்காங்கே இப்படிப்பட்ட தவறுகள் செய்கிறார்கள். பல ரகசியக் கோப்புக்கள் எல்லாம் இருக்கின்றன. 'டிஃபென்ஸ் இலாகாவிலே இப்படிப்போனால் என்ன ஆவது? வேறு இலாகாவிலே இப்படிப் போனால் என்ன ஆவது? ஆக, ஒரு முறைக்குத் தான் நான் எடுத்து சொல்கிறேனேதவிர, அவருக்கு கிடைக்கிறது என்று சொன்னால், வாங்கிக் கொள்கிற ஆர்வத்திலே தான் அவர் இருப்பார் என்று உணருகிறேன். ஆக, கிடைப்பதற்கு எப்படிக் காரணம் வந்தது? யார் காரணமாக இருந்தார்கள்? அது தனியாக ஆராயப்படவேண்டிய ஒன்று..

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு ஒரு சிறு விளக்கம். பட்ஜெட்டினுடைய ரகசியத்தைக்கூட பாண்டிச்சேரியிலே இப்போது முதல்வராக இருக்கக்கூடிய பரூக் மரைக்காயர் அவர்கள் வாசித்தார்கள். அவைகள் இம்பார்ட்டன்ட் டாக்குமென்ட், பப்ளிக் டாக்குமென்ட ாக இருக்கலாம், ஆனாலும் எதிர்க்கட்சியினுடைய பணி, தவறுகளுக்கு ஆதாரமாக அவைகளைப்பெற்று திரட்டி,சபையின் கவனத்திற்கு, அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் பாராளுமன்ற ஜனநாயகத்தில் அனுமதிக்கப்பட்ட முறை தான் இரண்டாவது 'சோர்ஸ் ஆப் இன்பர்மேஷன் ஷுட் நாட் பி கொஸ்டின்ட்' என்ற காமன்ஸ் அவஸினுடைய மரபு ஒத்துக் கொள்ளப்படும் என்று நம்புகிறேன். ஆக எப்படி வந்தது என்ற ஆராய்ச்சியில் இறங்காமல், குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்ட தலைவர் மீது ஒரு விசாரணைக் கமிஷன் வைத்து நடவடிக்கை எடுத்தால் இன்னும் பல ஆதாரங்களை தரத் தயாராக இருக்கிறேன். அரசு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; அதுபற்றிய விவரம் சொல்லி இருக்கிறார்கள். அது பற்றி ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி அரசு முடிவு செய்யும் என்று நான் சொன்னேன். பாராளுமன்றத்திலேயும் சொல்லி இருக்கிறார்கள், பாண்டிச்சேரியிலேயும் சொல்லி இருக்கிறார்கள். சட்டமன்றத்திலே சொல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. நான் எங்கிருந்து ஆதாரம் கொண்டு வந்தேன் என்று சொல்வதற்கும் உரிமை உண்டு. சொல்லாமல் இருப்பதற்கும் உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. என்னுடைய கேள்வி எல்லாம், இங்கிருந்து எப்படிப் போச்சு என்பதற்காக

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 15

ஆராயப்பட வேண்டும் என்பதற்குத்தான் சொல்கிறேனே தவிர, உங்கள் கையிலே எப்படி வந்தது என்பதைப் பற்றி உங்களை நான் 'கொஸ்டின்' பண்ணவில்லை.

பாராளுமன்றத்திலே கூட, மதுலிமாயி சில சமயங்களில் சில வற்றை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். வேறு சிலரும் எடுத்து வைத்து இருக்கிறார்கள். ஆகவே, வந்தது பற்றி, எடுத்து வைத்தது பற்றி நான் சொல்ல வரவில்லை. அப்படிப் பட்ட சூழ்நிலைகள் இருக்கிறது என்பதற்காகத்தான் எடுத்துச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் அல்ல.

அதுபற்றி அவர்கள் எடுத்துச் சொன்னதற்கு, உடனடியாக என்ன நிலைமை என்பதைப் பற்றி என்னால் கூறுவதற்கு இல்லை. ஆனால் அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப் படையில், ஆராயப்படும் என்பதை எடுத்துச் சொல்லி, வேறு பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவற்றுக்கெல்லாம் தக்க நடவடிக்கை கள் அந்தந்தத் துறையினர் மேற்கொள்வார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக மானியக் கோரிக்கைகள் மீது நடை பெற்ற விவாதத்தின்போதும் சரி, இந்த ஒதுக்கீட்டு மசோதாவின் போதும் சரி, முழு ஒத்துழைப்பையும் தந்து, ஆதரித்தமைக்காக நிதி அமைச்சர் என்ற முறையிலே நான் நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

திரு. பொன். முத்துராம்லிங்கம் : 'ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன்', மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்தக் கூட்டம், இறுதிக் கட்டத்திற்கு வந்து விட்ட காரணத்தினாலே, மாண்புமிகு நம்முடைய நிதி அமைச்சர் அவர் கள் ஆயத்தீர்வையின் போது பதில் அளித்துப் பேசுகிற நேரத்தில், சில விவரங்களை இந்த மன்றத்திற்குச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் கூறிய விவரங்கள் சரியான விவரங்கள் அல்ல என்பதை முன்னாள் வருவாய்த் துறை அமைச்சராக இருந்த எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, அந்த விவரங்கள் உண்மையானது தானா, என்பதை நாட்டு மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தைத் தவிர வேறு சந்தர்ப்பத்தில் இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளமுடியாது என்ற காரணத்தினாலே தான், சில தகவல்களை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் நாட்டு மக்க ளுக்கு தெளிவாக்கப்படும் என்ற அடிப்படையில், அந்தக் கருத் தைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆயத் தீர்வை விவாதத்தின் போது, மாண்புமிகு நிதியமைச்சர்....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப் பினர் பொன் முத்துராமலிங்கம் முதலிலே சொல்லியிருந்தால், என்னுடைய விவாதத்திலேயே விளக்கி சொல்லி இருக்கமுடியும்.

1985 ஜூலை 15] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதன்மீது நீண்ட விளக்கம் சொல்லவேண்டிய அவசியம் இருக் கிறது. அதை வேறு சந்தர்ப்பம் வரும்பொழுது சொல்கிறேன். ஆக ஒன்றை மட்டும் நான் சொல்லி விடுகிறேன். கோப்புகளில் எப்படியிருக்கிறது என்பது ரகசியமான ஒன்று. கோப்புகளிலே என்னென்ன இருக்கிறது என்பதை வெளியிடக்கூடாது. அது திட்ட வட்டமான ஒரு மரபாக இருந்துவருகிறது. செயலாளர் முடிவு செய்கிறார். முதலிலே துணைச்செயலாளர் முடிவு எடுப்பார். பிறகு ஒரு அமைச்சர் முடிவு எடுப்பார். கடைசியில் முதலமைச்சர் என்ன முடிவு எடுக்கிறாரோ, அது தான் வெளியிலே வரவேண்டும்.

ஆனால் சொல்கிறபோது சொன்னார்கள். ஒரே ஒரு குறிப்பை மட்டும் இப்போது சொல்ல விரும்புகிறேன். மற்றவைகளை சந்தர்ப்பம் வருகிறபோது விரிவாக சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையெழுத்து போட்ட பிறகு, ஓர் உத்தரவு இட்டபிறகு, கீழே ஒரு அமைச்சர் கையெழுத்திட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையை ஏற்றுக்கொள் கிறார் என்பது தான் பொருள். ஒரு வரியில் கூட நான் மறுக் கிறேன், என்கிற வார்த்தையையோ, ஏற்றுக்கொள்ளவில்லை என்கிற வார்த்தையையோ கூட எழுதவில்லை. வெறும் கை யெழுத்தை மட்டும் தான் போட்டிருக்கிறார்கள். 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுக்கட்டும். எனக்கு இது பிடிக்கவில்லை, நான் இதை ஏற்றுக்கொள்ளவில்லை' என்று சொல்லவில்லை. நான்கு கோப்புகளில் முடிவு எடுக்கட்டும் என்று சொன்னதற்குப்பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளலாம். இல்லை மறுத்தாலும் மறுக்கலாம் என்பது பொருள். மற்ற விளக்கங் களுக்கு வேறு சந்தர்ப்பங்கள் வரும்போது விரிவாகச் சொல் கிறேன். அவைகளைச் சொல்லவேண்டுமென்றால், அரை மணி நேரமாவது வேண்டும். அவர்கள் சொன்னதிலே உண்மை இல்லை. ஆக திரும்பவும் இப்போது ஏன் இப்படிப் பேசுகிறார் என்று புரியவில்லை. ஆனால் இது தேவையில்லை. அப்படி பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். வேறு ஒரு சந்தர்ப்பம் வரும்போது சொல்கிறேன் என்று சொல்லி, இத் துடன் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2). சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1985) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 16—7—1985 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்—

264. கேரள போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Ganguli Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.

2883

605/86

வெளியீடு 19-8-1986

Issued 19-8-1986

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

செவ்வாய்கிழமை, ஜூலை 16, 1985 - தொகுதி XIII எண் 4

Tuesday, the 16th July 1985 - Volume XIII No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George, Madras - 600 009

விலை ரூ. 3-00 காசுகள்) [Price Rs. 3-00 paise

உள்ளடக்கம்

16–7–1985.

	பக்கங்கள்.
1. வினாக்கள்-விடைகள் :	
உடுக்குறியிட்ட வினாக்கள்	581–626
2. தகவல் கோரல் :	
(அ) சென்னை-கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் குறித்து	626–627
(ஆ) செங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளருக்கு உறுப்பினர் எழுதிய கடிதம்	627
(இ) அரசு மருத்துவ மனைகளில் மருந்து களவாடப்பெறுவது	627
(ஈ) மூலக் கேள்வியும், அதற்கான விடையும் கூட சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு அளிப்பது	628
(உ) சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்குச் சலுகைகள்	628
(ஊ) அவையிலுள்ள மைக் ஒன்று உடைந்துள்ளது குறித்து	686
3. அவை உரிமை மீறல் பிரச்சினை :	
'' தினகரன் '' மற்றும் '' முரசொலி '' நாளிதழ்கள் மீதும், மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி மீதும்— தீர்ப்பு ..	628–687
4. ஒத்திவைப்புத் தீர்மானம் :	
திருவண்ணாமலையில் காலரா நோயினால் பலர் பாதிக்கப்பெற்றுள்ளது ..	637–645
5. அறிவிப்பு :	
மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி ..	646
6. கவன ஈர்ப்புகள் :	
(அ) வேளச்சேரியிலுள்ள டி. அண்ட் எச். எலக்ட்ரோட்ஸ் நிறுவனம் கதவடைப்பு செய்துள்ளது	646–648

(ஆ) திருநெல்வேலி மாவட்டம் நாசரேத் குடிநீர்த் திட்டத்தின் மூலம் போது மான அளவு குடிநீர் வழங்குவது .. 648–650

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் :

(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகை முறைகள்), திருத்தச் சட்டமுன் வடிவு, 1985 650

(ஆ) நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985 650–654

(இ) நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985 654–656

(ஈ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985 .. 656–685

(உ) கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985 .. 656–685

* மாண்புமிகு திரு. தா. வீராசாமி 656–657, 671–685
திரு. ஆ. நடராசன் 657–659
*திரு. வை. பாலச்சந்திரன் 659–662
திரு. ஜே. ஹேமச்சந்திரன் 659–665
திரு. டி. ஆர். வேங்கடரமணன் 666–671, 681

(ஊ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1985 .. 686–702

மாண்புமிகு திரு. தா. வீராசாமி 686–687, 689
மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் 688–689, 691
திரு. என். எஸ். வி. சித்தன் 687–693
திரு. அ. பிரணவநாதன் 693–695
திரு. எம். செல்லமுத்து 695–696
திரு. பொ. உத்திராபதி 696–698 699–702

(எ) வேளாண் விளைபொருள் சந்தை கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1985 703–713

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து 703, 709–713
திரு. மு. இராமநாதன் 703–706
திரு. கோ. வீரய்யன் 707–708
திரு. பொ. உத்திராபதி 708–709

8. அறிக்கை அளித்தல் :

தடை 111-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை. 702

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 714

2883

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, ஜூலை 16, செவ்வாய்க்கிழமை.
ஆடி 1, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு—2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு ".

ஆக்கமும் கேடும் சொல்லுகின்ற சொல்லால் வருவதால் ஒருவன் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தனியார் நிறுவனம் மின் உற்பத்தி.

659—(*வினா எண். 201)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனி நிறுவனம் எதுவும் மின் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த நிறுவனங்கள் மின் உற்பத்தி செய்கின்றன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : சென்னை நகரிலுள்ள சில தொழில் நிறுவனங்கள் 110 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

[1985 ஜூலை 16

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் தங்களுடைய தொழிற்சாலைகளுக்காக மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்வதற்காக அனுமதி கொடுக்கின்ற பொழுது, தங்களுடைய தேவைக்கு மேலும் அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொழுது அதை மற்ற இடங்களுக்கும் பயன்படுத்திக்கொள்ள, அதை விநியோகம் செய்வதற்கான பெரிய அளவில் செய்ய அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனியார் தொழில்களின் தேவைக்குப்போக மிச்சமிருந்தால் அதை மின்வாரியம் பெற்றுக்கொள்ளும். ஆனால், இந்தத் திட்டம் ஆகஸ்ட் 1983-இல் அனுப்பப்பட்டுள்ளது. இது கொள்கை பற்றிய ஒரு முடிவாகையால் இந்திய அரசுதான் எடுக்க வேண்டும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் மின் தேவை மிகவும் அதிகமாக இருப்பதால் தமிழக அரசு மத்திய அரசை இதற்கான கொள்கை ரீதியான அங்கீகாரத்தை அளிக்க வேண்டும் என்று வற்புறுத்துமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதோடு, கோவையில், கோவை மாவட்டத்திலிருக்கின்ற [illegible]மில் அதிபர்கள் ஒன்றாகச் சேர்ந்து கேப்டிவ் ஜெனரேட்டர் வைத்துக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்து கொள்வதற்கு [illegible] அனுமதி கோரியிருப்பதாக அறிகிறேன். அப்படி ஏதேனும் [illegible] கோரிக்கை வந்துள்ளதா ? அதற்குத் தமிழக அரசு பரிந்துரை செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நமது அரசு மத்திய அரசுக்கு ஏற்கெனவே பரிந்துரை செய்திருக்கிறது. கோவை பகுதியைப் பொறுத்த வரையில் தனியார் கருத்துரு அரசுக்கு வரவில்லை. அரசுக்கு வந்தால் அது பரிசீலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற இந்த வேளையிலே தனியார் மின்சார உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கின்ற அதே நேரத்தில், அவர்களுடைய தேவைக்கு அதிகமாக இருந்தால் அதை மின்சார வாரியத்திற்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலையை, குறிப்பிட்ட சதவிகிதம் அவர்கள் உற்பத்தி செய்வதில் மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தலாமா ? அப்படியென்றால் அதில் தமிழக அரசினுடைய வாய்ப்பின் பங்கு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

1985 ஜூலை 16]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நாம் அதில் மூலதனம் போடுவதில்லை. ஆகவே, குறிப்பிட்ட சதவீதம் மின்சாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்கு இயலாது. ஆனால், அவர்களுடைய தேவைக்குப்போக மீதியிருந்தால் நாம் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் நிறுவனம் மின்சார உற்பத்தி செய்து கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கு விதிமுறைகள், வரையறைகள் ஏதாவது இருக்கிறதா ? மேற்கு வங்கத்தில் இப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை நமக்கே தருகிறார்கள். அப்படிப்பட்ட வசதி வாய்ப்புகளைத் தமிழகத்திலேயும் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்உற்பத்தியைப் பொறுத்த வரையில் தனியார்களுக்கு வழங்கும் முடிவு, கொள்கை ரீதியாக இந்திய அரசால் மேற்கொள்ளப்பட வேண்டிய முடிவு. ஏற்கெனவே டாட்டா போன்ற நிறுவனங்கள் பம்பாயில் தனியார் துறையில் மின் உற்பத்தி செய்து வருகிறார்கள். எனவே, இது வழிவழியாக வந்த வழக்கம். ஆகவே, இந்திய அரசு எல்லாவற்றையும் கவனித்துப் பார்த்து முடிவெடுக்க வேண்டியுள்ளது.

தொளசம்பட்டியில் துணை மின் நிலையம்.

660—(*வினா எண். 758)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் தொளசம்பட்டியில் மின்வாரிய துணை நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தலைவர் அவர்களே, இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1985 ஜூலை 16

தானியங்கி பால் வழங்கு நிலையங்கள்.

661—(*வினா எண். 1014)—திரு. சா. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆவின் தானியங்கி பால் வழங்கு நிலையங்களில் பணம் கொடுத்து பால் வாங்குவதற்குப் பதிலாக மற்ற பால் நிலையங்களைப் போன்று அட்டைகள் கொடுத்து பால் வாங்குகின்ற முறையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஒரு சில தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் பால் அட்டைகள் மூலமாக பால் விநியோகம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் பெறப்பட்ட நுகர்வோர் முறையீட்டின் அடிப்படையில் '' நுகர்வோர் முன்னுரிமைக் கருத்தாய்வு '' செய்ய முடிவெடுக்கப் பட்டுள்ளது. அந்த ஆய்வின் பின், அட்டையின் மூலம் மற்ற தானியங்கி நிலையங்களிலும் பால் வழங்க தமிழ்நாடு கூட்டுறவு பால்உற்பத்தியாளர்கள் இணையத்தால் பரிசீலனை செய்யப்படும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் ஒன்று, என்னுடைய மைலாப்பூர் தொகுதியிலே, சித்திரைக் குளத் திலே 24 மணி நேரம் செயல்படுகின்ற சாரணத்தால், புரட்சித் தலைவர் தலைமையில் நடக்கின்ற இந்த அரசுக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல், பெசன்ட் நகர், இந்திரா நகர், அடையாறு போன்ற பகுதிகளில், 24 மணி நேரம் செயல்படுகின்ற வகையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, வரைவிலே அங்கெல்லாம் 24 மணி நேரமும் கொடுக்க முயற்சி எடுத்து வருகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் பால் பையிலிருந்து பால் திருடுவதைத் தடுக்க பால்பைகளில் தினமும் தேதியுடன் கூடிய முத்திரையிட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பரிசீலிக்கப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தானியங்கி பால் நிலையங்களிலே எந்த அளவுகோலின் அடிப்படையிலே பால் கொடுக்கப்படுகின்றது என்று அறிய விரும்புகிறேன். ஏதாவது, '' கோட்டா '' என்று வைத்திருக்கிறார்களா ? ஏனென்றால், சில சமயங்களில் டோக்கன்கள் கேட்டால், ஒருவருக்கு ஒரு லிட்டர்தான் தரு

1985 ஜூலை 16]

வோம், 2 லிட்டர்தான் தருவோம் என்று அங்கே இருக்கிற வர்கள் கூறுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, எந்த அடிப் படையிலே அங்கே பால் வழங்கப்படுகின்றது, டோக்கன் வழங் கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான நுகர்வோர்களுக்கு, '' கன்ஸ்யூமர்களுக்கு '' கொடுக்க வேண்டுமென்பது அடிப்படை. சில நேரங்களிலே, அந்தப் பகுதியிலே இருக்கிற தேநீர் கடைக் காரர்கள், மற்ற கடைக்காரர்கள், பயன்படுத்துகிறார்கள். அந் தப் பகுதியிலே இருக்கிற நியாயமான, '' போனபைட் கன்ஸ்யூ மர்ஸ் '' ஸுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அளிக்கப்பட்டு வருகிறது.

ஆலந்தூர் சாலையில் உள்ள இறைச்சிக் கூடம்.

662—(*வினா எண் 1485)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை 146 ஆவது வட்டம் ஆலந்தூர் சாலையி லுள்ள ஆடு மற்றும் பன்றி அடிக்குமிடம் (ஸ்லாட்டர் அவுஸ்) முதலியவற்றைச் சீரமைக்கும் பணிகள் மற்றும் அடிப்படை வசதி களான தண்ணீர் வசதி, மின்விளக்கு வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் பணிகள் துவக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே,(அ) சைதையிலுள்ள ஆடு மற்றும் பன்றி வெட்டுமிடத் தில் தற்போதைய தேவைக்கேற்ப தண்ணீர் மற்றும் மின் வசதி கள் செய்யப்பட்டுள்ளன. எனவே, சீரமைக்கும் புதிய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

பால் வளத்தில் பட்ட மேல்படிப்பு.

663—(*வினா எண் 1596)—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் வளத்துறையில் மேல்நிலைப் படிப்பு (M.Sc. Dairying) படித்துவிட்டு. பல பெண்கள் வேலையில்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பால்வள நிறுவனங்களில் உள்ள காலி இடங்களை இவர்கள் மூலம் நிரப்ப அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை. (M.Sc., Dairying) என்ற பட்ட மேல்படிப்பு படித்த பெண்கள் எவரும் தமிழ்நாடு-கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் வேலை வாய்ப்புக் கேட்டு வரவில்லை. அம்மாதிரி பட்டப்படிப்பு இந்த மாநிலத்தில் எந்தக் கல்லூரியிலும் போதிக்கப்படவில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குத் தரப்பட்ட பதில் உண்மையிலேயே என்னைத் துக்கத்தில் ஆழ்த்துகிறது. ஏனென்றால், அமைச்சரிடத்திலேயே நான் நேரிலே சொல்லியிருக்கிறேன். என்னுடைய நெல்லை மாவட்டத்திலே இருக்கக்கூடிய குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியிலே எம்.எஸ்.ஸி. டெய்ரியிங் சயன்ஸ் என்ற பட்டப் படிப்பு இருக்கிறது. அந்தக் கல்லூரியிலே, அதிலே படித்து, கடந்த 3 ஆண்டுகளாக வெற்றி பெற்றவர்கள், இன்றைக்கு வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சருடைய நேரடி கவனத்திற்கு நானே கொண்டு வந்திருக்கிறேன். அமைச்சர் அவர்களும் அந்தக் கல்லூரிக்கு விஜயம் செய்திருக்கிறேன் என்று என்னிடத்திலே குறிப்பிட்டார்கள். இன்றைக்கு ஆவின் பால் வளத்துறையிலே பல மானேஜர் பதவிகள் காலியாக இருக்கும்போது, இந்தச் சிறப்புப் பட்டம் பெற்றவர்களை அந்தப் பதவிகளில் வேலைக்கு அமர்த்துவதிலே என்ன இடையூறு இருக்கிறது என்பதை நான் அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரிலும் விளக்கம் அளித்திருக்கிறேன். இப்பொழுதும் விளக்கம் அளிக்கிறேன். எம்.எஸ்.ஸி. டெய்ரியிங் என்பது ஒரு மேல் படிப்பு. ஆனால், குற்றாலம் பராசக்தி கல்லூரியிலே போதிப்பது ''குவாலிட்டி கண்ட்ரோல்'' —அதில் மட்டுமே பயிற்சி அளிக்கப்படுகிறது. குவாலிட்டி கண்ட்ரோல் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே சொல்லிக் கொள்கிறேன். இரண்டும் வேறு வேறு. எம். எஸ்.ஸி. டெய்ரியிங் என்பது ஒரு படிப்பு; குவாலிட்டி கன்ட்ரோலுக்காக மட்டும் போதிக்கப்படுவது என்பது அந்தக் கல்லூரியில்—அதை மட்டும் சொல்லிக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. இனியும், இந்த ஆண்டு இந்த பால் பெருக்குத் திட்டத்திலே பல வாய்ப்புகள் வர இருக்கின்றன. அப்பொழுது எல்லோருக்கும் அந்த வேலை வாய்ப்பு கொடுக்கப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தப் படிப்பு, எம்.எஸ்.ஸி. டெய்ரியிங் என்றுதான் அந்தப் பகுதியிலே சொல்லப்படுகிறது. என்றாலும் அமைச்சர் அவர்கள் டெக்னிக்கல் ஆக, அதிலே டூதோ மிஸ்டேக் இருப்பது போல் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் எம்.எஸ்.ஸி. குவாலிட்டி கண்ட்ரோல் என்று

எடுத்துக் கொண்டாலும், எம்.எஸ்.ஸி. குவாலிட்டி கண்ட்ரோல் படித்தவர்கள் பலர் வேலை இல்லாமல் இருக்கும்போது, அதே போன்று பல பதவிகள் காலியாக இருக்கின்றன. படித்தவர்கள் வேலையில்லாமல் இருப்பது ஒரு பக்கம் இருக்க, தகுதியான ஆட்கள் வேலையில்லாமல் இருக்கும்போது, அந்தக் காலி இடங்களை நிரப்புவதற்கு அரசு உடனடியாக முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு ஒரு தகவலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பயிற்சி பெற்ற 7 பேர்களுக்குச் சென்ற ஆண்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ரூ. 450—20—590—30—700 என்ற விகிதத்தில் அவர்களுக்கு இன்றைக்கு உதவி பால் பண்ணை வேதியராக பதவிகள் எல்லாம் அளிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இந்த ஆண்டு நிரப்பப் பெற வாய்ப்பு இருக்கிறது; அவர்களெல்லாம் நிச்சயமாக அதிலே அமர்த்தப்படுவார்கள்.

பால் விற்பனை நிலையங்கள்.

664—(*வினா எண் 2904)—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக பால்வள நிறுவனத்தில் பாலை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கும் பொருள்களுக்கான விற்பனை நிலையங்களில் ஊனமுற்றோர், கைம்பெண் போன்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 9—10)

திருமதி பா. வளர்மதி : தலைவரவர்களே, சமூக நலத்துறையின் மூலமாக ஊனமுற்றவர்களுக்கு பல்வேறு இடங்களில் இல்லங்கள் நடத்தப்படுகின்றன. வங்கிகள் மூலம் கடன் பெற்று கடைகள் நடத்த உதவி செய்வதைப் போன்று, இந்த விற்பனை நிலையங்களில் பெண்களுக்கு முக்கியத்துவம் தரும் திட்டம், இந்த நிறுவனம் நடத்துகின்ற சில விற்பனை நிலையங்களை அவர்களுக்கு ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

[1985 ஜூலை 16

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, சென்னையில் 53 பால் பொருள் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் 18 மட்டும் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள விற்பனை நிலையங்களை இணையமே நடத்தி வருகின்றது. எதிர் காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை மையமாக வைத்து, ஊனமுற்ற பெண்களுக்கு வாய்ப்புக் கொடுக்க அரசு ஆலோசனை செய்யும்.

திருமதி பா. வளர்மதி : தலைவரவர்களே, இப்போது பால்வள நிறுவனத்தில் தயாரிக்கும் மூலப் பொருள்களை மொபைல் யூனிட் மூலம் விற்பனை செய்ய அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, பல்வேறு வகைகளில் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய முயன்று வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

கோமுகி அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

665—(*வினா எண் 962)—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் கோமுகி அணை மற்றும் அதை ஒட்டியுள்ள கல்ராயன் மலைப் பகுதியை சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தமிழகத்தில் ''விண்ட் சர்பிங்'' விளையாட்டு.

666—(*வினா எண் 1584)—திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலாத்துறை மூலமாக ''விண்ட் சர்பிங்'' (Wind Surfing) என்று புதிய விளையாட்டை தமிழகத்தில் அறிமுகப்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

1985 ஜூலை 16]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மாமல்லபுரம் வழியில் உள்ள முட்டுக்காடு என்ற இடத்தில் 'விண்ட் சர்பிங்'' (Wind Surfing) விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த 'விண்ட் சர்பிங்' என்ற புதிய விளையாட்டில் மாநில அளவில் போட்டிகள் நடத்தி, அதிலே விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சியே இப்போதுதான் தொடங்கப்பட்டுள்ளது. அநேகமாக வெளிநாட்டுப் பயணிகள், நம்முடைய மாநிலத்திலுள்ள ஆர்வமிக்க இளைஞர்கள் இப்போதுதான் இதிலே பயிற்சி பெற்று வருகிறார்கள். ஆகவே, இப்போது இதிலே போட்டி நடத்துவது என்பது இயலாத காரியம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ஊட்டி, கொடைக்கானல், மகாபலிபுரம் போன்ற சுற்றுலாத் தலங்களில் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் பனி சறுக்குதல், வீடியோ கேம்ஸ் போன்ற விளையாட்டுக்களை அறிமுகப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மிகு முக்கியஸ்தர்கள் தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். பனி படர்ந்த பகுதி நம்முடைய மாநிலத்திலும் ஏற்படும்போது அரசு அதிலே முயற்சி செய்யும். செயற்கை முறையில் அதை உருவாக்க முடியும் என்றாலும் அதற்கு நிறையப் பணம் செலவாகும். முதலிலே இயற்கை வசதிகளைப் பயன்படுத்தி விட்டு, பின்னால் செயற்கை முறைகளைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

டாக்டர் க. முகம்மது சலீம் : தலைவரவர்களே, கொடைக்கானலில் உள்ள 'கால்ஃப்' விளையாட்டை அங்கே இருக்கிற அந்த விளையாட்டை இன்டர்நேஷனல் அளவில் ஒரு முக்கிய விளையாட்டாக எடுத்து, சுற்றுலாத் துறை மூலமாக அதை நடத்தி, எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அந்த 'கால்ஃப்' விளையாட்டு என்பது ஒரு குழுவின் மூலமாக நடத்தப்படுகிறது. நல்ல வசதி பெற்றவர்கள், நேரம் இருப்பவர்கள் அந்த விளையாட்டில் ஈடுபடுகிறார்கள். கொடைக்கானலில் இருக்கிற 'கால்ஃப்' விளையாட்டு மைதானம் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு, சிறப்பாக இருக்கிறது என்று பாராட்டப் பட்டிருக்கிறது. சமீபத்தில் அங்கே வந்த கர்நாடக முதலமைச்சர்

[1985 ஜூலை 16

மாண்புமிகு ஹெக்டே அவர்கள் கூட மிகுந்த அளவில் பாராட்டி, உலக அளவிலான 'கால்ஃப்' விளையாட்டுப் பந்தயத்தைக் கொடைக்கானலில் நடத்தலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். இப்போது அந்த விளையாட்டு மைதானம் தனியார் குழுவின் பொறுப்பில் இருந்து வருகிறது. அவர்கள் விளையாட்டை நடத்துகிறார்கள். அதிலே பங்கு கொள்ள வாய்ப்பு, வசதி இருப்பவர்கள் பங்கு பெறலாம். அரசு அதிலே தலையிட இடமில்லை.

கம்பர் கோட்டத்தை சுற்றுலாத் தலமாக்கல்.

667—(*வினா எண். 1897)— திரு. மு. தங்கமணி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேரெழுந்தூர் கம்பர் கோட்டத்தை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 668 மற்றும் 669 ஒன்றாக எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

தங்கத்தாது பற்றிய ஆய்வு.

668—(*வினா எண். 702)— திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தங்கம் எங்கெங்கே கிடைக்கிறது ?

(ஆ) இலாபகரமாக இல்லையென கைவிடப்பட்ட இடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) தமிழகத்தில் தங்கம் நீலகிரி மாவட்டத்தில் வைநாடு என்ற பகுதியிலும் தர்மபுரி மாவட்டத்தில் மகாராஜகடை மற்றும் நாரணப்பள்ளிக்கு ஒதுக்கு வனப்பகுதிகளிலும் கிடைக்கிறது.

(ஆ) ஒன்று. அதாவது நீலகிரி மாவட்ட வைநாடு பகுதி.

669—(*வினா எண். 1427)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் வெப்பனப்பள்ளி ஒன்றியம் மகாராஜாகடையில் பெரும் அளவில் தங்கத்தாது கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா ?

1985 ஜூலை 16]

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, (அ) மாநில புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மற்றும் இந்திய புவியியல் ஆய்வுக் கழகம் முதலியவை இதுவரை மேற்கொண்ட ஆய்வுப்பணிகளின் மூலம் தர்மபுரி மாவட்ட கிருட்டிணகிரி வட்டத்தில் மகாராஜாகடை மற்றும் நாரணப்பள்ளி காப்புக் காட்டுப் பகுதிகளில் தங்கம் காணப்படுவதாக தெரிய வருகிறது.

(ஆ) ஆய்வுப் பணிகளின்போது தரைமட்ட சோதனை மாதிரிகளில் ஒரு டன்னில் 0.1 கிராம் முதல் 3.5 கிராம் வரை தங்கம் உள்ளதென அறியப்பட்டது. இருப்பினும் நீள்சோதனைக் குழிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் டன்னிற்கு 0.1 கிராம் முதல் 2.00 கிராம் தங்கம் காணப்படுகிறது. தங்கம் கொண்ட பாறைகளின் நீள்போக்குத் தொடர்ச்சி— ஆழத்தில் அமைந்துள்ள தன்மை மற்றும் தங்கம் கிடைக்கும் அளவு முதலியவை பற்றி கண்டறிய இவ்வாண்டின் ஆய்வுப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மகாராஜகடையில் இருக்கின்ற அந்தத் தங்கத் தாதுவை அங்கேயே சுத்திகரிப்பு செய்வதற்குப் பொருளாதார அடிப்படையில் சாதகமான சூழ்நிலை இருக்குமா என்பது குறித்து மத்திய அரசு முடிவு எடுத்திருக்கிறதா ? மேலும் தொல்லியல் துறை தங்கச் சுரங்கம் மூடப்படுகின்ற சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் தர்மபுரி மாவட்டம் மகாராஜகடையில் கிடைக்கின்ற தங்கத் தாதுவை சோலார் தங்கச் சுரங்கத்திற்குக் கொண்டுபோய் சுத்திகரிக்கலாம் என்ற எண்ணத்தில் மத்திய அரசு இருக்கின்றது என்ற கருத்து இருக்கிறதா ? அப்படி இருந்தால், தர்மபுரி மாவட்டத்தில் மகாராஜகடையில் கிடைக்கின்ற தங்கத்தாது பொருளாதார அடிப்படையில் பலன் உள்ளதாக இருந்தால் தர்மபுரி மாவட்டத்திலேயே அந்த சுத்திகரிப்பினைச் செய்ய வேண்டும் என்று இப்போதிலிருந்தே மாநில அரசு மத்திய அரசினிடத்தில் வற்புறுத்த ஆரம்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டில் இருந்தே ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கே எடுக்கப்படுகின்ற தங்கத்தைப் பொறுத்தவரையில் பொருளாதார நீதியில் பலனளிக்கின்ற வகையில் நல்ல விலை கிடைக்குமா என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 100 ஆழ்குழாய் துளைகளைப் போட்டுத் தோண்டி எடுத்து இந்த ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது இந்த ஆராய்ச்சி முடியவே மேலும் இரண்டாண்டுக் காலம்

[1985 ஜூலை 16

ஆகும் என்று அறியப்படுகின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணத்தைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு இதை எடுத்துக்கொள்ளக்கூடிய நல்ல சூழ்நிலை உருவானால் தமிழக அரசு அப்படிப்பட்ட முயற்சியை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் மின் உற்பத்தி.

670—(*வினா எண் 1009)—திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் 10 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்து அதனை ஆலையின் தேவைக்கும் கூற்றுப்புறத்திற்கும் பயன்படுத்தும் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

(ஆ) ஆம் எனில், அதனை விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தாயமங்கலம் கூட்டு குடிநீர்த் திட்டம்.

671—(*வினா எண். 1697)— திரு. பொ. அன்பழகன் ; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி தொகுதியில் 30 கிராமங்களுக்குப் பயன்பெறக்கூடிய தாயமங்கலம் கூட்டு குடிநீர்த் திட்டம் செயல் படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் செயல்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தாயமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் தாயமங்கலம் மற்றும் சூராணம் இடையே போடப்பட்டுள்ள பிரதான குழாய்களை பொதுமக்கள் உடைத்தும், அதன் வால்வுத் தொட்டிகளில் உள்ள வால்வுகளைக் கழற்றியும் தண்ணீர் எடுப்பதால் சூராணம் நீர் உந்து நிலையத்திற்கு தண்ணீர் சரியாகச் சென்றடைவதில்லை. இருப்பினும், பொது மக்களால் விளைவிக்கப்படும், பழுதுகள், அப்போதைக்கப் போது சீர் செய்யப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. தாயமங்கலம் கிராமத்தில் நிமிடத்திற்கு 900 லிட்டர் தண்ணீர்

[1985 ஜூலை 16

கிடைக்கக்கூடிய ஆழ்துளைக் கிணற்றை மையமாகக் கொண்டு தான் தாயமங்கலம் கூட்டுக் குடிநீர்த்திட்டம் தயாரிக்கப்பட் டுள்ளது. அந்த ஆழ்துளைக் கிணற்றைப் பயன்படுத்துவதற்கு தாயமங்கலம் கிராம பொதுமக்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்துள்ளதால் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சிவகங்கை வட்டார வளர்ச்சி அலுவலருடன் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இளைய யாங்குடி பகுதியில் உள்ள 30 கிராமங்களுக்கும் காளையார் கோயில் ஒன்றியத்தைச் சேர்ந்த 17 கிராமங்களுக்கும் என்று ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். பல இடங்களில் ஊற்றுத் தண்ணீர் குறைந்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றது. இது உண்மையா ? சூராணத்திற்குப் போகின்ற பைப் லைனில் கோளாறு ஏற்பட்டு அதாவது அந்த கிராம மக்கள் தவறு பண்ணு வதால் கோளாறு ஏற்பட்டு தண்ணீர் சரியாக வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பைப் லைன் சரியாக இருக்கின்ற மற்ற இடங்களில் கூட தண்ணீர் சரியாகச் செல்லவில்லையே! எனவே அவற்றை எல்லாம் சரி செய்து மிகவும் வறட்சி உள்ள அந்தப் பகுதிக்குக் குடிநீர் கஷ்டம் இல்லாமல் செய்கின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையிலேதான் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இடையிலே கொஞ்சம் மின்சாரப் பற்றாக்குறை இருந்ததால் சிக்கல்கள் இருந்தன. அதுவும் இப்போது சரி செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவனியாபுரத்திற்குக் குடிநீர் வழங்கல்.

672—(*வினா எண் 3529)— திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதி அவனியாபுரம் நகரப்பஞ்சாயத்திற்கு குடிநீர்வடிகால் வாரியத்தி னால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் தொடங்கப் பெற்று, பூர்த்தி பெறும் ?

(இ) திட்டத்தின் மொத்த மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) ஆம். ஆய்வு நடந்து கொண்டுள்ளது.

(ஆ) ஆய்வு முடிந்தபின் திட்டம் செயலாக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(இ) ஆய்வு முடிந்த பின்னரே இத்திட்டத்தின் மதிப்பீடு தெரியவரும்.

(முற்பகல் 9—20)

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவனியாபுரம் பேரூராட்சியைச் சார்ந்த கணேசபுரம், இந்திரா நகர், மீனாட்சி நகர், பெரியார் நகர் ஆகிய பகுதிகளும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்பட்டிருக்கிற குடியிருப்புகள் இருக்கும் பகுதிகளும் குடிதண்ணீர் பற்றாக்குறை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த முக்கியமான குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால், இடைக்காலப் பணியாக ஏதாவது செய்து கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும்.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டி முடிக்கப்பட்டிருக்கக்கூடிய பகுதிகளில் குடிதண்ணீர் வசதிக்காக ஏறத்தாழ 84 ஆயிரம் ரூபாயை குடிதண்ணீர் வாரியத்திற்கு, பேரூராட்சி மூலமாக செலுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை வைத்து இந்த வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கு, ஆழ் குழாய் கிணறுகளைப் போடுகின்ற வேலைகளை அரசு உடனடியாக மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மேற்கொள்ளும்.

மதுரை சுப்பிரமணியபுரம் பகுதியில் சாக்கடை அமைப்புத் திட்டம்.

673—(*வினா எண் 2813)—திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் சுப்பிரமணியபுரம், கரைத் துறை, ஜெய்ஹிந்த் புரம் ஆகிய பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மதுரை மாநகராட்சியில் உள்ள (1) வசந்த நகர், (2) ஆண்டாள்புரம், (3) வெங்கடாசலபுரம், (4) சுந்தரராஜபுரம், (5) இரத்தினபுரம், (6) ஜெய்ஹிந்த்புரம், (7) சுப்பிரமணியபுரம், (8) எம். கே. புரம், (9) கரைத்துறை, (10) மாகாளிப்பட்டி, (11) சிந்தாமணி ரோடு ஆகிய பகுதிகளுக்கு சாக்கடைத் திட்டத்தை விரிவு படுத்த உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான மொத்த செலவு எவ்வளவு ? இந்தத் திட்டம் எப்போது நிறைவு செய்யப்படும் ? மாண்புமிகு அமைச்சர் சொன்னதிலிருந்து சில பகுதிகள்-குறிப்பாக பெஹபூப் பாளையம், எல்லிஸ் நகரம், ஒத்தப்பட்டு ஆகிய பகுதிகள் விடுபட்டிருக்கின்றன என்று தெரிகிறது. அந்தப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவு படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாக போடப்பட்டிருக்கிற திட்டம் இது. மதிப்பீடு போதிய அளவில் இன்னும் முடிவு செய்யப்பட வில்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற பகுதிகளுக்கும் விரிவு படுத்துவதற்கான செயற் குறிப்பு இருக்கிறது.

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய இந்தச் செயல் திட்டத்தில் அனுப்பாண்டி வாய்க்கால், கிருதமால் நதி ஆகியவற்றையும் சேர்த்து வருகிற வகையில் பாதாள சாக்கடை அமைப்பதற்கு முன் வருவாரா ? அதையும் சேர்த்துச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வகையிலே தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

போடிநாயக்கனூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

674—(*வினா எண் 2906)—திருமதி பா. உஷாமதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் (Drinaage Scheme) குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

[1985 ஜூலை 16

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போடிநாயக்கனூர் நகரசபை பல நூற்றாண்டுகளுக்கு மேலாக உள்ள நகரசபை. ஆகவே, இதற்கு முன் உரிமைக் கொடுத்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அரசும் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் போட வேண்டும் என்பதை நகரசபையினுடைய ஆயுள் காலத்தை வைத்து முடிவு செய்கிற வகையில் இல்லை. மக்கள் தொகையின் அடிப்படையில் தான் முடிவு செய்யப்படுகிறது. போடிநாயக்கனூர் நகராட்சியைப் பொறுத்த வரையில் ஒரு இலட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகை இருக்கிற காரணத்தால்தான், இப்போதைக்கு அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதாக உத்தேசம் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டிலாவது அந்தத் திட்டத்தை போடி நகராட்சி செயல்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இல்லை.

பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனை.

675—(*வினா எண். 1406)—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவ மனைக்கு 12 படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்ட கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இதற்கான நடவடிக்கை தகுந்த தருணத்தில் அரசு எடுக்கும்.

1985 ஜூலை 16]

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு 12 படுக்கைகள் கொண்ட கட்டிட வசதி வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கடந்த 8 ஆண்டுகளாக கோரிக்கை விட்டுக் கொண்டே வந்திருக்கிறார்கள். நானும் பலமுறை மனுக்களை அதற்காகக் கொடுத்திருக்கிறேன். சேலம் மாவட்டம் மருத்துவ அதிகாரியும் கூட அதற்கான மதிப்பீடுகளை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, 12 படுக்கை வசதிகளைக் கொண்ட கட்டிடத்தை அந்த மருத்துவமனைக்கு உடனடியாக கட்டி வசதி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவை இங்கே கட்ட வேண்டும் என்று டிபார்ட்மெண்ட்டலாக, அதாவது துறையிடமிருந்து பரிந்துரை வந்திருக்கிறது. நான் கூட அதை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதற்கிணங்க 1985–86லே இரண்டாம் பகுதி அதாவது பார்ட் இரண்டு ஸ்கீமிலே கொண்டு வந்தோம். ஆனால், பொருளாதார காரணங்களினால் அடுத்த ஆண்டுக்கு தள்ளிப் போடுங்கள் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்த வகையிலே 1986–87லே அது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெத்தநாயக்கன்பாளையம் மருத்துவமனைக்கு வெளிப்புற நோயாளியாக நாள் ஒன்றுக்கு மருத்துவ வசதி பெறுவதற்காக 250 நோயாளிகள் வருகிறார்கள். ஆகவே, அந்த இடத்தில் உடனடியாக கட்டிடம் கட்டினால், அந்த மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். பார்ட் இரண்டு ஸ்கீமிலே நிதி வசதி இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, அடுத்த ஆண்டு இதற்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 2, 3 ஆண்டுகளாக இதைப் பற்றி என்னிடம் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். நிச்சயமாக அடுத்த ஆண்டு, 1986–87லே இது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலுகாவில் அரசு மருத்துவமனைகள் விஸ்தரிக்கப்படாமல், கட்டிட வசதி இல்லாமல், தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலும், ஆத்தூர் தாலுகாவில் வீரணூர் மருத்துவ மனையும், சாத்தப்பாடி மருத்துவமனையும் போதிய வசதியில்லாமல், கட்டிட வசதியில்லாமல் சரியான

[1985 ஜூலை 16

முறையில் இயங்காத நிலை இருக்கின்ற காரணத்தினால், இந்த ஆண்டாவது பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு கட்டிடம் கட்டித் தர அரசு முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை மிகவும் வலியுறுத்திக் கூற ஆசைப்படுவதோடு, அப்படி கட்டித் தர அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பெத்தநாயக்கன் பாளையம் அரசு மருத்துவமனையைப் பற்றி எழுப்பப்பட்ட கேள்வி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூலிகைப் பண்ணைகள்.

676— (*வினா எண்1751)—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எங்கெங்கு மூலிகைப் பண்ணைகள் உள்ளன ?

(ஆ) மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் ஏதேனும் ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே (அ) சென்னையில் உள்ள அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் ஒரு மூலிகைப் பண்ணை இருக்கிறது.

மேலும், கீழ்க்கண்ட இடங்களில் மூலிகைப் பண்ணைகள் அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டு மூலிகை பயிரிடும் வேலைகள் மறு பரிசீலனையில் உள்ளன:—

1. கொல்லிமலை, நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம்.

2. எழுத்துக்கார கொண்டமலை, நந்தவனம், திருவரங்கம் நகரியம், திருச்சி மாவட்டம்.

3. அச்சம்பட்டி, வீரகேரளம்புதூர் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

4. வீரபுலி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி, கன்னியாகுமரி மாவட்டம்.

5. மதுரை காமராஜர் பல்கலைக்கழக வளாகம், மதுரை.

6. செண்பகத்தோப்பு, திருவில்லிபுத்தூர் வட்டம், காமராஜர் மாவட்டம்.

(ஆ) தற்பொழுது இல்லை.

1985 ஜூலை 16]

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் பொன்னாவரை மூலிகை மூலம் மருந்து தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி தயாரிக்கும் நிறுவனம் லைசென்ஸ் பெற அரசு மூலம் ஏதாவது விண்ணப்பம் செய்துள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி மூலிகை பண்ணைகள் எந்தெந்த இடங்களிலே ஏற்படுத்தப்படுகின்றன என்பதாகும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலிகைப் பண்ணை இருக்கின்ற இடங்களையும் அமைக்கப்படும் இடங்களையும், தெரிவித்தார்கள். இந்த மூலிகைகளினால் தீராத வியாதிகள் தீருகின்றன என்று இப்போது ஆய்விலிருந்து தெரிகிறது. ஆகவே, பண்டைய காலத்தில் உள்ள ஆலையங்களில் மூலிகைகளை வைத்து, அவைகளைப் பராமரித்து வந்தார்கள். அதிலே, சில ஆலையங்களிலே சரியான முறையிலே நிர்வகிக்கப்படாததினால் அந்த மூலிகைகள் எல்லாம் அழிந்து வருகின்றன. ஆகவே, ஒரு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தெந்த ஆலையங்களில், எந்தெந்த இடங்களில் இப்படிப்பட்ட மூலிகைகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிய ஒரு குழுவை அமைப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஜி. ஓ. எம்.எஸ். எண் 207, ஹெல்த் அண்டு பேமலி பிளானிங், நாள் 14—2—83 அன்று, Government issued orders for the formation of the Tamil Nadu Medicinal Plant Farms and Urban Medicinal Corporation. அந்த ஒரு கார்ப்பரேஷனை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அதன்படி 27—9—1983 அன்று இந்த கார்ப்பரேஷன் நிறுவப்பட்டு, அது இப்போது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கருத்தை இந்த கார்ப்பரேஷனுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

மதுக்கரை சிமிண்ட் ஆலையிலிருந்து வெளியேறும் புகை மற்றும் தூசி.

677—(*வினா எண் 2196)—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியிலுள்ள மதுக்கரை ஏ.சி.சி. கம்பெனியிலிருந்து வெளிவரும் புகையில் ஏராளமான தூசி நிலங்களிலும் கிராமங்களிலும் படிவது அரசுக்குத் தெரியுமா ?

[1985 ஜூலை 16

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே (அ) ஆம்.

(ஆ) அரசு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 9-30)

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, மதுக்கரை மற்றும் பக்கத்தில் இருக்கிற கிராமங்களிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இந்த தூசியால் பாதிக்கப்படுகின்றன. பல ஆண்டுக்காலமாக அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லப்படுகிறதே தவிர இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் அதைக் கட்டுப்படுத்த எடுக்கவில்லை. எனவே, விரைவான நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புவதுடன் கேரள எல்லையிலே மலபார் சிமிண்ட் பேக்டரி 'டிரை புராசஸ்' என்பதன் மூலமாக இயங்குவதாக தெரிவித்தார்கள். ஆனால் கெட்டிமடை, கந்தைய கவுண்டன் சாவடி, நலக்கரை போன்ற இடங்களிலே உள்ள ஆயிரக்கணக்கான மக்களின் சுகாதாரம் விவசாயம் பாதிக்கப்படுவதால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் ஒரு தூர்ப்பாக்கிய மான நிலைமை என்னவென்றால் 1974 ஆம் ஆண்டு மாசு கட்டுப்பாடு சட்டம் என்கிற சட்டம் மத்திய அரசாங்கத்தால் இயற்றப்பட்டு மத்திய அரசாங்கம் அந்தச் சட்டத்தை தமிழக அரசு இயற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. ஆனால் 1974 ஆம் ஆண்டு வேறு ஒரு சட்டத்தை இயற்றலாம் என்று சொல்லி அந்தச் சட்டத்தை இயற்றாமல் கைவிடப்பட்டு விட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் தான் அந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. எனவே, அதிலே ஏறக்குறைய 7 ஆண்டுகளை இழந்திருக்கிறோம் என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு "(The industry propose to instal Pilot Wet Scrubber Plant), என்ற முறையில் இரண்டாவது பகுதிக்கு ஒரு புது இயந்திரம் அமைக்கப் பட்டு காற்று மண்டலத்தை கெடுக்கக்கூடிய நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். நாம் அது போதாது 'Electro-static precipilaters needed' என்று மீண்டும் சொல்லியிருக்கிறோம். 8—3—1985 இல் மீண்டும் 'Electrost tic precipitators' என்பதை நீங்கள் ஏற்படுத்தினால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

1985 ஜூலை 16]

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த ஸ்கீம் அவர்கள் அமல்படுத்தப் பட்டு அந்த பைலட் ஸ்கீம் தோல்வியடைந்துவிட்டது. மீண்டும் அதே அளவுக்கு தூசி வந்துகொண்டிருக்கிறது. 2, 3 தடவைகள் அந்த பேக்டரியை பூட்டவேண்டுமென்று அரசு நிர்ப்பந்தித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிற அந்த நிர்வாகத்தை வற்புறுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது புதிதாகக் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம் நம் கையில் ஒரு ஆயுதம் போன்று இருக்கிற காரணத்தினால் நிச்சயமாக வற்புறுத்துவதோடு மட்டுமல்லாமல் செயல்படுத்த வில்லையென்றால் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, மதுக்கரை ஏ.சி.சி. சிமிண்ட் ஆலையிலிருந்து வெளியேறுகிற புகை மண்டலத்தைக் கட்டுப்படுத்த என்ன முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அதற்காக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும் எவ்வளவோ அவசரச் சட்டங்களைக் கொண்டுவந்து மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய காரியங்களைச் செய்கிறபோது இப்படி புகை மண்டலம் 25 மைல் சுற்றளவுக்குப்பரவி எந்தவித மான பயிர் பச்சையும் விளையாதபடி கடலையோ வெங்காயமோ வேறு எந்த விளைபொருளுமோ விவசாயி பயிர் செய்தால் விளைநிலங்கள் பாழ்படுவது மட்டுமல்ல அந்தப்பகுதியிலே குடியிருக்கிற மக்கள் தவறிப்போய் ஆகாரத்தைத் தூக்கி மறந்துவிட்டாலும் சாம்பலைத்தான் பார்க்கலாம் என்ற நிலைமை இருக்கிறது, இமயமலைச் சாரலில் பனிமண்டலம் மூடியிருப்பதைப்போன்று வெண்சாம்பல்தான் மூடியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள், இருந்தாலும் கடுமையான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து இதுபோன்று நிலையிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்து அந்த நிலைமையைக் கட்டுப்படுத்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் இந்தக் கேள்வியை தான் இங்கே கேட்டார்கள். நான் அவர்களுக்கு மிகத் தெளிவாக பதில் அளித்திருக்கிறேன். ஏற்கனவே இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்திருப்போமானால் நாம் படிப்படியாக நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக 1974 ஆம் ஆண்டு வரவேண்டிய சட்டம் வராமல் அது கைவிடப்பட்டது. 1981 ஆம் ஆண்டு மீண்டும் கொண்டு வந்தோம். அதில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாது. செக்ஷன் 26-ன் கீழ் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதில் பல்வேறு கட்டங்கள் இருக்கின்றன. இப்போது கையில் இருக்கிற சட்டமே

கடுமையான சட்டம். அதுவே போதும். இந்தச் சட்டத்தை முன்பே கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆகவே இந்தச் சட்டத்தின் கீழ் நாம் கடுமையான நடவடிக்கையை படிப்படியாக எடுத்துக் கொண்டு வருகிறோம்.

இந்த சிமெண்ட் ஆலை 1934 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. 38 ஆயிரத்திலிருந்து 46 ஆயிரம் மெட்ரிக் டன் சிமெண்ட் ஒரு மாதத்திற்கு உற்பத்தி செய்து கொண்டு வருகிறது. நான் ஏற்கனவே அந்தப் பகுதிக்குச் சென்று இதனைப் பார்த்திருக்கிறேன். பார்த்ததற்குப் பிறகு தான் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னேன். அதைத்தான் மாண்புமிகு நடராசன் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, கோவை நகரை ஒட்டியிருக்கிற ஏ.சி.சி. சிமெண்ட் ஆலை அரசாங்கத்தின் லோக்கல் பாடிக்கு கொடுக்கவேண்டிய வரியைக் கூட பல லட்சத்திற்கு கொடுக்காமல் இருக்கிறது. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பொலுஷன் கன்ட்ரோல் டிவைசை அடாப்ட் பண்ணவில்லை யென்றால் அந்தக் காலத்திற்குள் விவசாயிகளுக்கு ஏற்படுகிற நஷ்டமானாலும், பொது மக்களுக்கு ஏற்படுகிற நஷ்டமானாலும், அதனை அவர்களிடமிருந்து இந்தச் சட்டத்தின் மூலம் வசூலித்து, அவர்களுக்கு காம்பன்சேஷன் என்ற முறையில் வழங்குவதற்கு சட்டத்தில் இடமிருக்கிறதா ? அப்படி வழங்குவதற்கு அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, காம்பன்சேஷனிற்கு அந்தச் சட்டத்தில் இடமில்லை என்றாலும் கூட, ஏற்கனவே நான் தெரிவித்ததைப் போல 'எலெக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்ஸ்' என்ற கருவியை உடனடியாக அங்கே பொருத்தி, வெளியே வரக்கூடிய ப்ளை-ஆஷ் என்று சொல்லக்கூடிய சாம்பலை கட்டுப்படுத்த வேண்டும்; இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்லி இருக்கிறோம். அதிலே 26 வது ஷரத்து கடுமையான ஷரத்தாக இருக்கிறது. We will be invoking Sec. 26 without mercy. Mercilessly we will be invoking Section 26.

திருவிடை மருதூர் மருத்துவமனை.

678—(*வினா எண் 2352)— **திரு. பு. இராசாங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. இராசாங்கம் : தலைவர் அவர்களே, திருவிடை மருதூர் தாலுக்கா அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இருப்பினும் அங்கேயிருக்கிற மகப்பேறு மருத்துவமனை 20 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அதற்கு உரிய வசதிகள் செய்யப்படாமல் இருக்கிறது. அரசு இந்த நிலையை பரிசீலித்து வசதிகளைச் செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் இப்போது 16 படுக்கைகள் இருக்கின்றன. சராசரியாக நாள்தோறும் 15 உள் நோயாளிகள் அங்கே அனுமதிக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல் ஆண்டுதோறும் நாம் பட்ஜெட்டில் அதற்காக எவ்வளவு ஒதுக்கி வருகிறோம் என்றால் 1984—85 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 700 ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம். 10 ஆயிரத்து 500 ரூபாய்க்கு மருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்கலாம்.

திரு. பு. இராசாங்கம் : தலைவர் அவர்களே, அங்கே மூன்று மருத்துவ அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உட்கார கூட இடமில்லாமல், இடவசதி சரியான முறையில் இல்லை. இதையும் அரசாங்கம் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையில் 3 மருத்துவ அதிகாரிகள், 2 நர்சிங் ஸ்டாப், ஒரு மினிஸ்டீரியல் ஸ்டாப், பாரா மெடிக்கல் ஸ்டாப் நான்கு பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இடம் போதாது என்கிற குறைபாடு நம் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நிதிநிலையை ஒட்டி அதை விஸ்தரிப்பதற்குரிய கருத்தை நாம் பிறகு யோசிக்கலாம்.

திரு ஆர். ஈஸ்வரன் : தலைவர் அவர்களே, வாசுதேவ நல்லூர் தொகுதியில் புளியங்குடியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு ஏற்கெனவே அந்த ஊரிலுள்ள மக்கள் 3 ஏக்கர் நிலத்தை வழங்கி இருக்கிறார்கள். இப்போது கட்டிடம் கட்டுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடை மருதூர் மருத்துவமனையைப் பற்றியதாகும். உறுப்பினரை தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[1985 ஜூலை 16

குடும்பக் கட்டுப்பாடு.

604—(*வினா எண் 980)— திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1984 ஆம் ஆண்டு முடிய குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எந்த மாவட்டம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி முதன்மையாக வந்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே,(அ) குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தமிழகத்தில் துவக்கப் பட்ட ஆண்டான 1956 முதல் 1983–84 நிதியாண்டு முடிய 42,45,501 அறுவை சிகிச்சைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் தகுதி வாய்ந்த தம்பதியர் களில் 46.2 சதவீதத்தினர் குடும்பநலத் திட்டத்தைக் கடைப் பிடித்து வருவதன் மூலம் தமிழகத்தில் இம்மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது.

(முற்பகல் 9–40)

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத் திலே முன்னணியில் இருப்பதை நேற்றைய தினம் மெரினா கடற் கரையில் பேசிய மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் பாராட் டியிருக்கிறார்கள். அகில இந்திய அடிப்படையை எடுத்துக் கொண்டால் தமிழகம், பர்சென்டேஜ் வரிசைப்படி எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலை வர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், நாம் 1977 ஆம் ஆண்டிலேயிருந்து படிப்படியாக முன்னேறிக் கொண்டு இருக்கிறோம் ; 1977–78 ஆம் ஆண்டு 31.9 சதவீதம் 1978–79 ஆம் ஆண்டு 78.2 சதவீதம்; 1979–80 ஆம்ஆண்டு; 55.9 சதவீதம்; 1980–81 ஆம் ஆண்டு 76.2 சதவீதம்; 1981–82 ஆம் ஆண்டு 103.4 சதவீதம்; 1982–83 ஆம் ஆண்டு 91.2 சத வீதம்; 1983–84 ஆம் ஆண்டு 124.5 சதவீதம்; 1984–85 ஆம் ஆண்டு 110 சதவீதம். நம்முடைய இலக்கை விட நாம் சென்ற, 4, 5 ஆண்டுக் காலத்தில் நல்ல வகையிலே முன்னேறிக் கொண்டு இருக்கிறோம். அது மட்டுமல்லாமல், அகில இந்திய ரீதியாக எடுத்துக் கொண்டால், 1971—81 என்று 10 ஆண்டுக் காலத்தை எடுத்துக் கொண்டால், அதாவது இந்த டெசினியல் பாப்பு லேசன் எஸ்கெலேசன் என்று இந்த 10 ஆண்டுக் காலத்தில் எவ்வளவு ஜனத்தொகை பெருகியிருக்கிறது என்றால், தமிழகத் தில் 17.23 சதவீதம் தான் ஜனத்தொகை பெருகியிருக்கிறது. அகில இந்திய ரீதியில் 24.42 சதவீதமாக இது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1985 ஜூலை 16]

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் தொகையில், இந்து, கிறித்துவர்கள், என்று மத வாரியாக ஒவ்வொரு மதப் பிரிவினரும் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களில் சதவீதம் என்ன என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மத வாரியாக என்னிடம் புள்ளி விவரம் இல்லை. என்றாலும், நான் இதிலே நேரடியாகக் கவனம் செலுத்துவதன் காரணமாக ஒரு நல்ல செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை எல்லா மதத்தவரும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், நெல்லை மாவட்டத்தில் கிறித்துவர்கள் ஜாஸ்தியாக இருக்கின்ற பகுதி களிலே இந்த குழந்தைகள் பிறப்பு விகிதாச்சாரம் குறைவாக இருக்கிறது. இந்த 10 ஆண்டுக் காலத்தில், தமிழகத்தில் 17.23 சதவீதம் என்று இருந்தாலும், கூட, நெல்லை மாவட்டத்தில் 11.2 சதவீதமாக ஏறியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். ஆகவே எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் இதை ஏற்றுக் கொள்கிறார்கள். எனவே நாம் எல்லா வகையிலும், அங்கே வருகின்றவர்களை அரவணைத்துக் கொண்டு செல் கிறோம். அவர்களுக்கு நாம் என்ன வைத்தியம் செய்கிறோம். என்ன சிகிச்சை செய்து கொண்டு இருக்கிறோம் என்பதைப் பொறுத்து இருக்கிறது. ஆகவேதான் டாக்டர்கள் எல்லோரை யும் நல்லவகையில் வரக் கூடியவர்களை கவனிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிற திட்டத்தில், அரசு அலுவலர்கள், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டின்படி 1 அல்லது 2 குழந்தைகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு அரசு, உத்தியோகங்களிலே முன்னுரிமை வழங்கி, பதவி உயர்வு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு திட்டம் இல்லை என்றாலும் கூட அரசுத் துறையிலே இருப்பவர்கள் அரசாங்கச் சிப்பந்திகள், காவல் துறையினர் எல்லோருமே, நல்ல வகையில் இந்தத் திட்டத் தில் நாட்டம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூலை 16

வால்பாறை காப்பித்தோட்ட கழிவு நீர்.

605—(*வினா எண் 1073): **திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வால்பாறை பகுதியில் உள்ள காப்பித் தோட்டங்களிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் நிலங்கள் பாதிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பகுதிகள் பாதிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) காப்பித் தோட்டங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவு நீரால் நிலங்கள் பாதிக்கப்படுவதாக அரசுக்கு இது வரை தகவல் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

மணலி தொழிற்சாலை கழிவு நீர்.

606—(*வினா எண் 1874): **திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலி தொழிற்சாலைகளில் ஏற்படும் கழிவு நீர், நிலத்தடி நீரையும், குளம் குட்டை ஆகியவைகளிலே உள்ள தண்ணீரையும் மாசுபடுத்தி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தளநாயகர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மணலி வருகின்றபோது, சுற்றுப் புறச் சூழல் மாசுபட்டு விட்டதாக பல மனுக்கள் கொடுத்திருக்கிறோம். அதன் மீது நடவடிக்கை எடுத்து வருகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அங்கே நுழைகின்ற போது, அம்மோனியா சல்பேட் வாடை அதிகமாக வருகிறது. அதனால் போபால் போன்ற ஒரு நிகழ்ச்சி ஏற்படக் கூடிய ஒரு அச்சம் இருக்கிறது. அங்கே கெமிக்கல் கம்பெனிகள் தற்போது நிறைந்து வருகின்றன. அப்படி நிறைந்து வருகின்ற காரணத்தால், அங்கே எழுகின்ற புகை பக்கத்திலே உள்ள குளங்களிலே உள்ள தண்

1985 ஜூலை 16]

ணீரை மாசுபடுத்தி, அதன் மூலமாக 2, 3 எருமை மாடுகள் கூட இறந்து விட்ட அந்த நிகழ்ச்சியைக் கூட நாங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே இதைத் தடுக்கின்ற வகையில் அரசு ஈடுபட்டு ஆவன செய்யுமா என்பதை அமைச்சர் பெருமகனாரிடம் இருந்து கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் அதிகமாக கழிவு நீர் வருவதற்கு இங்கே மூல காரணமாக முக்கியமாக இருக்கக் கூடிய தொழிற்சாலைகள் 6 ஆகும். அவை பின்வருவன :—

M/s Kothari Chemicals, Manali,
M/s Madras Petro Chemicals, Limited,
M/s Madras Refineries, Limited,
M/s Indian Organic Chemicals,
M/s Shri Ram Fibres Limited,
M/s Madras Fertilisers Limited.

ஒவ்வொரு கம்பெனி மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது, என்ன என்ன ஆலோசனைகள் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டு இருக்கின்றன என்ற விவரங்கள் என்னிடம் தற்போது இருந்தாலும் இப்போது அதற்கு நேரம் இல்லாத காரணத்தால் அதைச் சொல்ல இயலவில்லை. ஆனால், அவைகளின் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். அது மட்டும் அல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்கு இந்த விஷயங்களைக் கொண்டு வந்த பிறகு கூட நான் அதற்காக ஒரு உயர்மட்டக் குழுவை அதிகாரிகள் கொண்ட குழுவை குறிப்பாக இந்த Pollution Control Board Chairman Thiru Gangadharajs, I.A.S. அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அனுப்பி என்ன என்ன நாம் செய்ய வேண்டும் என்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் First of all identify the areas affected and then take immediate remedial measures என்ற வகையில் நாம் அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தளநாயகர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் பெருமான் அவர்கள் குறிப்பிட்ட தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அதிக கழிவு நீர் வருகின்ற செய்திகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலைகளில் இருந்து வருகின்ற அந்த கழிவு நீரை பக்கத்தில், அருகில் இருக்கின்ற 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பக்கிங்காம் கால்வாயில் கொண்டு போய் சேர்த்தால் அந்தத் தொழிற்சாலைகள் உள்ள பகுதியும் பாதிக்காமல் அந்த பகுதி மக்களையும் பாதிக்காமல் இருக்கும். பக்கத்திலேயே 8 கிலோ மீட்டர் தொலைவிலேயே சென்னை மாநகர் இருக்கிறது. ஆகவே, சென்னையையும் பாதிக்காமல் இருக்க அந்தப் பகுதியில் இருந்து வருகின்ற கழிவு நீரை

[1985 ஜூலை 16

பக்கிங்காம் கால்வாயில் சேர்க்கின்ற வழியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமான் அவர்கள் ஏற்படுத்துவார்களா என்று அறிய வரும்புகிறேன்? மேலும் அவர்கள் விரைவான செயலை தொடங்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கழிவு நீரைப் பொறுத்த வரையில் நாம் 2 விதமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். முதலில் அந்த கழிவு நீரில் இருக்கக்கூடிய Biological Oxygen Dem nd Content நாம் குறைக்க வேண்டும். சாதாரணமாக 600லிருந்து 800 வரை அந்த கண்டென்ட் இருக்கும். அதை 100க்கு கொண்டு வரவேண்டும். அவர்களும் முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் இன்னும் 30க்கு அதை கொண்டு வந்து விட்டால் எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் இருக்கும். வவசாயத்திற்குப் பயன்படுகிற நீராக அந்த அளவுக்கு அதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்குச் சரியாக இருக்கும். அந்த வகையில் B.O.D. Biological Oxygen Dem nd Cohtent ஐ குறைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அது மட்டும் அல்லாமல் இந்த கழிவு நீரை எந்த இடத்தில் விட வேண்டும் letting out in which pl ec என்ற வகையில் நாம் சில நிபந்தனைகளை சொல்லியிருக்கிறோம். அதனை கொஞ்சம் பாதுகாப்பான இடமாக மட்டும் அல்லாமல் பெரிய குழியை வெட்டி அந்த இடத்தில் கழிவுநீரை விட்டால் அது காற்றோடு கலந்து Biological Oxygen Dem nd content குறையும், என்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த யோசனையும் நிச்சயமாக நாம் ஏற்றுகொள்கிறோம். அந்த யோசனையின் பேரில் கூட நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் சொல்லத் தயாராக இருக்கிறோம்,

நாய்க்கடி மருந்து.

607— (*வினா எண். 2218)— திரு. வி. எஸ். டி. சம்சல் ஆலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாய்க்கடி மருந்துகளை எல்லா அரசு மருத்துவமனைகளிலும் இருப்பு வைக்க அரசு செய்துள்ள ஏற்பாடுகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் வெறி நாய்க்கடி மருந்து போதுமான அளவு கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட மருத்துவ அலுவலரும், மருத்துவ அலுவலரும் வெறிநாய்க்கடி மருந்தை பெறுவதற்கு நிலையான முன் பணம் வழங்கப்பட்டுள்ளது.

1985 ஜூலை 16]

திரு. வி. எஸ். டி. சம்கல் ஆலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் உள்ள மக்கள் தான் இதனால் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் அந்த மாதிரி மருந்தை வைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய வரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் வைக்க வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறோம். இப்போது நம்முடைய Tot l requirement என்று வரும்போது, மொத்தம் D.M.E., Control-ல் இருக்கக்கூடிய அந்தப் பகுதிகளில் 7,08,266 per annum—மும், அதேபோல் D.M.S. Control-ல் இருக்கக்கூடிய அந்தப் பகுதிகளில் 10,18,000 C.C. per annum-மும் என்ற வகையில் நமக்குத் தேவை ஏற்படுகிறது. அது மட்டும் அல்லாமல் சென்ற ஆண்டு மட்டும் டி. எம். ஈ. கண்டிரோலில் இருக்கக்கூடிய பகுதிகளில் 72,547 பேருக்கு இந்த வெறிநாய்க்கடி ஊசியை போட்டு இருக்கிறார்கள். டி. எம். எஸ். கண்டிரோலில் இருக்கக்கூடிய பகுதிகளில் 55,380 பேருக்கு இந்த வெறிநாய்க்கடி ஊசியை போட்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 9—50)

இதிலே 135 ப்ளஸ் 24, மொத்தம் 159 நோயாளிகள் இறந்து இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் கூட, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தின் அடிப்படையிலே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரெப்ரிஜிரேட்டர் இருக்கிறது. அங்கே வைக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம்.

விருதுநகர் மாவட்ட மருத்துவமனை.

608— (*வினா எண். 3797)— திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். எத்தனை படுக்கைகள் அதிகப்படுத்த உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 50 படுக்கைகள்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை இந்த ஆண்டு எடுத்து அதை விரிவுபடுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 16

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ப்ரோப்பசல் ஸ்டேஜிலே இருக்கிறது. பார்ட்-2 ஸ்கீமில், 15 இலட்சம் ரூபாய் என்று மதிப்பிட்டு இருக்கிறோம். வெகு விரைவில் அது செயல்படுத்தப்படும்.

நெல்லுக்குக் கூடுதல் தொகை

679—(* வினா எண். 938)— திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரும்புக்குக் கூடுதல் தொகை வழங்குவதுபோல் நெல்லுக்கும் கூடுதல் தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கரும்புக்கு ஒவ்வொரு ஆண்டும் முத்தரப்பு மாநாடு கூட்டி அப்போது விலையை நிர்ணயம் செய்கிறார்கள். அது கூட கடந்த இரண்டு ஆண்டுகளாக நடக்கவில்லை. அது போலவே, நெல்லுக்கு ஒவ்வொரு ஆண்டும் உற்பத்திச் செலவு அதிகமாகிக் கொண்டே இருக்கிறது; ஆனால் விலை நிர்ணயம் செய்யப்படுவதில் விவசாயிகளுக்கு சரியான முறையில் நிர்ணயம் செய்யவில்லை. அதனால், தஞ்சாவூரிலே நெல் கொடுப்பவர்களுக்கு ஒரு குவின்டாலுக்கு 30 ரூபாய் போனஸ் என்று கொடுக்கப்படுகிறது. ட்ரை ஏரியாவுக்கும், பாதிக்கப்பட்ட ஏரியாவுக்கும் போனஸ் கொடுக்க வேண்டும் என்பதோடு நெல்லுக்கும் ஒவ்வொரு ஆண்டும் விலை நிர்ணயத்தை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு மத்திய அரசுதான் விலை நிர்ணயம் செய்கிறது. மாநில அரசு, ஒவ்வொரு ஆண்டும் என்ன விலை கொடுத்தால் விவசாயப் பெருமக்களுக்கு உதவியாக இருக்கும், பயன் உள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையிலே பரிந்துரை செய்கிறது. ஆனால் மத்திய அரசுதான் இறுதியாக முடிவு எடுத்து நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். தஞ்சாவூர் பகுதியிலே, அதாவது டெல்டா பகுதியிலே மட்டும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிற அரிசி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாகவும் தஞ்சாவூர் மாவட்டத்திலும், மற்ற இடங்களிலும் நேரடி கொள்முதல் மூலமாகவும் வாங்கப்படுகிறது. அங்கே மட்டும் குவிண்டாலுக்கு, ரூபாய் 15-யோடு, உரம் மற்றும் இடு பொருட்கள் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. அந்தத் திட்டம் கூட 31—5—1985-வுடன்

1985 ஜூலை 16]

விடுபட்டு விட்டது. இந்த ஆண்டு நெல்லுக்கு அதிகமான விலையை விவசாயப் பெருமக்களுக்குத் தரவேண்டும் என்ற அடிப்படையிலே மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டு இருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வது மத்திய சர்க்கார்தான் என்று சொன்னார்கள். ஆண்டுதோறும் ஏ.பி.சி. என்று சொல்லக்கூடிய விலை நிர்ணயம் செய்யக்கூடிய அமைப்பு நாம் சொல்வதைக் கேட்பது இல்லை. இருந்தாலும், நம்முடைய தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி செய்வதற்கு அதிகமான செலவு ஏற்படுகின்றது. தண்ணீர் இறவை, டீசல் செலவு, கரண்ட் செலவு போன்றவற்றின் மூலமாகத்தான் நாம் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதோடு, கரும்புக்கு மத்திய சர்க்கார் நிர்ணயம் பண்ணிய விலையை விட மாநில சர்க்கார் கூடுதலாக சென்ற ஆண்டு கொடுத்ததாகச் சொன்னார்களே, அதே போல நெல்லுக்கும் சப்சிடைஸ் பண்ணி கூடுதலாகக் கொடுக்க இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை நிர்ணயக் குழு நாம் சொன்னதைக் கேட்பது இல்லை என்று சொன்னார்கள். நாம் சொன்னால் கேட்கமாட்டார்கள். ஆனால், மத்திய சர்க்கார் சொன்னால் அவர்கள் நிச்சயமாகக் கேட்பார்கள் என்ற அடிப்படையிலேதான் மாநில அரசு, ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 184.75 தரவேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்து இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னேன். தஞ்சாவூர் பகுதிகளிலே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நேரடியாகக் கொண்டு வந்து நெல் கொடுக்கிறபோது அவர்களுக்கு மட்டும், அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு, அந்தப் பகுதியிலே மட்டும் 15 ரூபாய் 5-வது மாதம் வரை தரப்பட்டது. அந்தத் திட்டத்தை மேற்கொண்டு தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கவோ, அந்த மாவட்டத்திலேயே விரிவாக்கவோ அரசின் பரிசீனையில் இல்லை.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நெல்லுக்கு ஒவ்வொரு ஆண்டும் விலை நிர்ணயம் செய்வதிலே, கரும்பைப் பொறுத்தவரையில் முத்தரப்பு மாநாடு கூட்டுவதுபோல, விவசாயிகளும், அரசு தரப்பிலும் கூடி அவர்களுக்கு ஆகக்கூடிய இடுபொருள் செலவுகளை எல்லாம் ஒன்று சேர்த்துக் கணக்கிட்டு அந்த விலையைக் கொடுக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

[1985 ஜூலை 16

இரண்டாவது, மத்திய அரசைப் பற்றிச் சொன்னார்கள். எனக்கு பதில் அளிக்க வேண்டியது இந்த மன்றத்திலே இருக்கிற அமைச்சர் பெருமக்களும், இந்த அரசும் தானே தவிர வேறு யாரும் அல்ல. நீங்கள் விவசாயிகளுக்கு இந்த அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று எழுதி மத்திய அரசைக் கேட்டு வாங்க வேண்டியது உங்கள் கையில் தான் இருக்கிறது. ஆனால் இந்த முத்தரப்பு மாநாடும் 3 ஆண்டுகளாகக் கூட்டப்படவில்லை. கரும்புக்கு அந்த அந்த ஆண்டு விலை நிர்ணயம் செய்கிற மாதிரி நெல்லுக்கும் செய்தால், அவர்களுக்கு உதவியாக இருக்கும். விவசாயக் கிடங்குகளில் அரசுக்கு யார் யார் கொண்டு வந்து கொடுக்கிறார்களோ, அந்த விவசாயிகளுக்கு ஒரேமாதிரியாக போனஸ் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, கரும்பு விலை நிர்ணயம் செய்வது பற்றி மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்களிடத்திலே தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசு, மாநில விவசாயத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே விவசாயத் துறை செயலாளர் மற்றும் பல்வேறு நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு, விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய ஒரு விலையை நிர்ணயம் செய்து, அந்த அடிப்படையிலே தான் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. இப்போதும் விவசாயிகளுக்கு நெல்லுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையை கணக்கில் எடுத்துத்தான், நான் ஏற்கனவே சொன்னமாதிரி மத்திய அரசுக்கு நிர்ணயம் செய்திருக்கிறது. இதிலே மத்திய அரசு நிர்ணயிக்கிற விலைக்கு மாறாக, மாநில அரசு விவசாய மக்களுக்குத் தருவதிலே பல்வேறு விதமான சங்கடங்கள் இருக்கின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், மத்திய ரிசர்வ்வங்கி, மத்தியஅரசு நிர்ணயம் செய்திருக்கும் விலைக்கு அதிகமாக விவசாயப் பெருமக்களுக்குத் தருவதை உற்சாகத்தோடு வரவேற்பதில்லை. அப்படி வரவேற்காததோடு மட்டுமல்லாமல், விவசாய மக்களுக்குக் கடன் தருவதிலும் பலவிதமான சங்கடங்கள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மத்திய அரசு விவசாயப் பெருமக்களுக்கு கட்டுபடியாகக்கூடிய விலையைத் தரவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு அமைச்சரவர்கள் கடந்த ஆண்டு குவிண்டாலுக்கு ரூ. 15 என்ற அளவில் விவசாயப் பெருமக்களுக்கு ஊக்க போனசாகத் தந்திருப்பது இந்த ஆண்டு கொடுப்பதற்கில்லை என்பது போன்ற பதிலைச் சொன்னார்கள். கோதுமைக்கு உற்பத்திச் செலவு குறைவாகவும், நெல்லினுடைய உற்பத்திச் செலவு அதிகமாகவும் இருக்கிற போது, மத்திய அரசு கோதுமைக்கு விலையை அதிகமாகத் தரும்; ஆனால் அதை விட அதிகமாக உற்பத்திச் செலவு ஆகிற நெல்லுக்கு உரியவிலையைத்தருவதில்லை. இதை மனதிற்கொண்டு மத்திய அரசை நம்முடைய அரசு அணுகி, விவசாயப் பெருங்குடி

1985 ஜூலை 16]

மக்களுக்கு அதிகமாக விலை கிடைக்க அல்லது வேறுவிதமான போனஸ் என்கிற அடிப்படையிலே கொடுக்க, இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்கிற பல்வேறு நிறுவனங்கள் 15 விழுக்காடு, 20 விழுக்காடு போனஸ் கொடுக்கிறதே, அதே போன்று, தமிழகத்திலே உற்பத்தியைப் பெருக்க அக்ரிகல்சுரல் இண்டஸ்ட்ரீஸ் என்ற வகையில் விவசாயிகளுக்கு 20 சதவிகித போனஸ் வழங்குகின்ற வகையிலே விவசாயிகளை ஊக்குவிக்க இந்த அரசு முன்வருமா அல்லது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, டெல்டா பகுதிகளிலே குறுவை நெல் கொள்முதல் ஆகிற போது, ஒரு குவிண்டாலுக்கு ரூ. 15 என்ற வீதத்திலே உரம் மற்றும் இடுபொருள்களை மானியமாக வழங்குகின்ற திட்டம் ஏற்கனவே மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நவீன அரிசி ஆலைகள்.

680—(*வினா எண் 1611)— **திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போது உள்ள நவீன அரிசி ஆலைகள் எத்தனை ?

(ஆ) இந்த எண்ணிக்கையை அதிகரிக்க திட்டமிடப்பட்டு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, (அ) சென்ற ஆண்டு இறுதி வரை நம் மாநிலத்தில் 2,419 அரிசி ஆலைகள் நவீனமயமாக்கப்பட்டன.

(ஆ) ஆம்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தனியார் நவீன அரிசி ஆலைகள் அமைக்க அரசாங்கத்திடமிருந்து கொடுத்திருக்கிறார்களா ? எத்தனை பேர்களுக்கு இது வரையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புவதோடு, இந்த ஆண்டில் எங்கெங்கே நவீன அரிசி ஆலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 16

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 17,581 அரிசி ஆலைகள் இருக்கின்றன. அதிலே 2,419 அரிசி ஆலைகள் நவீன மயமாக்கப்பட்டிருக்கின்றன. இதிலே நவீன அரிசி ஆலைகள் 13, அரசாலே நடத்தப்படுகிறது. இந்த ஆண்டிலே ஒவ்வொன்றும் இரண்டு கோடி ரூபாய் அளவில் ஆறு இடங்களில், ஆறு மாவட்டங்களில் அமைக்கப்பட இருக்கின்றன. தனியார் மனுக்களைப் பொறுத்த வரைக்கும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் குறைந்த செலவில் நவீன அரிசி ஆலைகளை அமைக்கின்ற திட்டத்தினைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதைப்பற்றி அரசினிடத்தில் ஏதேனும் விவரங்கள் இருக்கின்றனவா ? அவைகளை அமைப்பதற்கு அரசு ஏதேனும் மானியம் கொடுக்குமா ? புதிய கண்டுபிடிப்பு பற்றி மாவட்ட வாரியாக அரிசி ஆலை அதிபர்களுக்கு அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி ஆலைகளை நவீனமாக்க வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய கருவிகளுக்குச் சுமார் 10,500 ரூபாய் வரையில் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் ஆகிற செலவில் 50 சதவீதம் மானியமாகவும்—50 சதவீதத்தில் பாதியை மாநில அரசும் மீதியை மத்திய அரசும் தருகிறது—மீதியுள்ள 50 சதவீதத்தை அரிசி ஆலைகளை நிறுவுகின்றவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற இந்த அடிப்படையில் அரிசி ஆலைகள் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்னும் ஆறு நவீன அரிசி ஆலைகளை மாவட்டத்திற்கு ஒன்றாக அமைக்க இருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்த நவீன அரிசி ஆலைகள் எந்தெந்த மாவட்டங்களில் எப்பொழுது நிறுவப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2-ம், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் 6-ம் ஆக 8. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வருகிற இரண்டும் ஐந்து ஆண்டுகளிலேயும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஆறு என்பது இந்த ஆண்டிலும் துவங்கப்படும். இடங்களைப் பொறுத்தவரையில் தஞ்சாவூர் மாவட்டமாக இருக்காது ; ஏற்கெனவே உள்ள 7 நவீன அரிசி ஆலைகளும் அங்கேதான் இருக்கின்றன. எனவே, இல்லாத மாவட்டங்களில் இப்பொழுது இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. மாவட்டமும் இடமும் பின்னால் அறிவிக்கப்படும்

1985 ஜூலை 16]

திரு. எ. தெய்வநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சுமார் 2,400 அரிசி ஆலைகள் நவீனமயமாக்கப்பட்டன என்று கூறினார்கள். ஆனால் இன்றைக்கு நவீன மயமாக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்படும் அரிசி ஆலைகள் வெறும் ஷெல்லரை மட்டும் வைத்துக் கொண்டு, நவீன அரிசி ஆலை என்று சொல்லி அதிகாரிகளிடத்திலிருந்து சர்ட்டிபிகேட் வாங்கி விடுகிறார்கள். ஆனால் சிலர், ஷெல்லர், எலிவேட்டர், பாடி கிளீனர் ஆகிய இவைகள் அனைத்திற்கும் இலட்சக் கணக்கான ரூபாய்களை முதலீடு செய்து நவீனமய மாக்கப்பட்ட அரிசி ஆலை என்று சான்றிதழ் வாங்கியிருக்கிறார்கள். இதற்கும் அதற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நவீன மயமாக்கப்படுவதற்கு கீழ்க் கண்டவை பொருத்தப்பட வேண்டும். —

நெல் சுத்தம் செய்யும் கருவி;

நெல் உமி நீக்கும் கருவி, அதாவது இரப்பர் உருளை, ஷெல்லர் ;

நெல் பிரிக்கும் கருவி.—இந்த மூன்று கருவிகளும் பொருத்தப்பட்டால் அது நவீனமயமாக்கப்பட்ட அரிசி ஆலை என்று கணக்கிடப்பட்டு அதற்காக சான்றிதழ் வழங்கப்படும். இதற்காத்தான் 10,500 ரூபாய் ஆகும் என்பதைச் சுட்டிக் காட்டினேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப் போன்று வேறு ஏதாவது தவறுகள் இருந்தால் அதுபற்றிய தகவல் தந்தால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஜெயங்கொண்டத்தில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகள்.

681—(*வினா எண் 1360) **திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் கோட்டாட்சி அலுவலகம் முன். தேங்கிக் கிடக்கும் ரூபாய் 2 கோடி கைத்தறித் துணிகளை அரசு கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யக் கோரி மறியல் போராட்டம் நடத்தி வருவது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற அரசின் செயற்திட்டமென்ன ?

[1985 ஜூலை 16

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தேங்கியுள்ள ரூ. 1.92 கோடி மதிப்பில் கோ-ஆப் டெக்ஸ் ரூ. 74.84 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்துள்ளது. மேலும் 25-1-1985 முதல் 9-5-1985 வரை நடைபெற்ற 31-வது அகில இந்திய கைத்தறி இரு வார விழாவின்போது இப் பகுதியில் ரூ. 61.55 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகியுள்ளன.

திரு. ரூ. சுப்பராயன் : பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில் ருடந்தோறும் அடிக்கடி கைத்தறித் துணித் தேக்கத்தால் கூட்டுறவு நிறுவனங்களும், வேலையிழந்த தொழிலாளர்களும் பாதிக்கப்படும் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. எனவே, இதற்கு நிரந்தரமான தீர்வு அளிக்கக்கூடிய ஆக்கப்பூர்வமான மாற்று வழிமுறைகளைப் பற்றி அரசு சிந்திப்பதற்கான முறையில் பல்வேறு கைத்தறி நெசவாளர் சங்கங்களை அழைத்து கருத்தறிந்து, ஒரு முடிவெடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கைத்தறி உற்பத்தியாளர்களுடைய சங்கப் பிரதிநிதிகள், தலைவர்களை, இதுவரையில் இரண்டு முறை தமிழக அரசே கூப்பிட்டு, நேரடியாகக் கேட்டிருக்கிறது. மைய அரசிலே பணி புரிகிறவர்களுக்கு, மாநில அரசிலே பணி புரிகிறவர்களுக்குக் கொடுக்கிற கிரெடிட் சேல்ஸ் போல் கொடுக்க மைய அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அத்துடன், மைய அரசு இராணுவ இலாகா வாங்குகிற துணிகளில் 10 சதவீதம் அல்லது 20 சதவீதமாவது கைத்தறித் துணிகளுக்கு ஒதுக்கவேண்டுமென்றும் கேட்கப்பட்டிருக்கிறது. இரண்டும் அனுமதிக்கப்பட்டால் தமிழ் நாட்டில் கைத்தறித் துணியே தேங்காது.

அனகாபுத்தூரில் நெசவாளர் குடியிருப்பு.

682— (*வினா எண். 2736)—திரு. எல்ல. இராசாமாணிக்கம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி அனகாபுத்தூரில் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

1985 ஜூலை 16]

திரு எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி அனகாபுத்தூரில் 2,000 நெசவாளர் குடும்பங்கள் வாழ்கின்றன. மொத்த மக்கட்தொகையில் 75 விழுக்காடு உள்ளார்கள். அவர்களுக்கு வருகிற நிதி ஆண்டிலாவது வீடு கட்டும் திட்டத்தை விஸ்தரிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக அரசிடம் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டமிருக்கிறது ; தனியாக வாரியம் அமைக்கும் யோசனை கூட பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் நெசவாளர்களுக்கு வீடு கட்ட இடம் பார்த்துக் கொடுத்தால் நிச்சயமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதே அனகாபுத்தூரில் ஏழை, எளிய நெசவாளர்கள் பலர் பன்னெடுங்காலமாக புறம்போக்கு நிலங்களில் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். அதையாவது பட்டா செய்ய கைத்தறி துறை, வருவாய்த் துறைக்கு சிபாரிசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் நலிந்த பிரிவினர் என்று அரசு அறிவித்து இருக்கிறது. யார், யார் அப்படி புறம் போக்கில் குடியிருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் பட்டியல் கொடுத்தால், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வருவாய்த் துறை மூலம் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

கைத்தறி நெசவாளர் பாதுகாப்புச் சட்டம்

512—(*வினா எண். 154): திரு. பொ. உத்திராபதி, திரு கு. சுப்பராயன் மற்றும் திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் எத்தனை தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர் ?

(ஆ) இச் சட்டம் அமுலாக்கப்படுவது எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : கைத்தறி நெசவாளர் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து சில தனியார் கைத்தறித் துணி உற்பத்தியாளர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்திருந்த ரிட்மனு 27-4-1984 அன்று தள்ளுபடி யாகி விட்டது. தீர்ப்பின் நகல் பெற்று, அந்தச் சட்டத்தை அமுல்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1985 ஜூலை 16,

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரிடம் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு மட்டுமே இந்தச் சட்டம் பொருந்துகிறதா ? அதை கூட்டுறவுத் துறையிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கும் விஸ்தரிக்கிற திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : .மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-வது ஆண்டு, கைத்தறி நெசவாளர் பணி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்தச் சட்டம் தனியார் துறையில் வேலை பார்க்கிற கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் பொருந்தும், கூட்டுறவுத் துறையிலே பணி புரிகிற நெசவாளர் களுக்குப் பொருந்தாது என்று திட்டவட்டமாக சட்டத்திலே இருக்கிறது. அப்படிக் கூட்டுறவுத் துறைக்கு விதிவிலக்கு இருப்பது தவறு என்றுதான் சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்கு தொடரப்பட்டு, வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் அது செல்லும் என்று கூறி இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே உள்ள நெசவாளர்களுக்கு இந்தச் சட்டம் தேவையில்லை என்று சொல்வதற்குக் காரணம், கூட்டுறவுத் துறையிலே நெசவாளர் களுக்கு, 1981-ஆம் ஆண்டு சட்டத்திலே கொடுக்கப்பட்ட பல சலுகைகளை, நலன்களை, தனியாகச் சட்டம் இயற்றி அரசு கவனித்து வருகிறது.

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் கைத்தறி நெசவாளர்களுக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நாம் பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறோம். அதே போல், தனியார் துறையில் உள்ளவர் களுக்கும் இந்தச் சட்டத்தைப் போல, சீர்திருத்தம் செய்து, அமுலுக்குக் கொண்டு வரப்படுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே கூட்டுறவு அமைப்பின் கீழுள்ள நெசவாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு வேலை பாதுகாப்பு, குறைந்தபட்ச ஊதியம், போனஸ் போன்ற வசதிகள் அளிக்கப்பட்டு வரு கின்றன. ஆகவேதான் இந்த 1981 ஆம் ஆண்டு சட்டத்தை அவர்களுக்கு விஸ்தரிக்க வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. கு. சுப்பராயன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டத்தில் உரிய திருத்தம் செய்து தனியார் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் கூட்டுறவுத்

1985 ஜூலை 16]

துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் அந்தச் சட்டம் பொருந்துகின்ற வகையில் ஏற்பாடு செய்வார்களா ? அது மட்டு மல்லாமல் தனியார் துறையில், இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போதே அதனுடைய அனுகூலங்களைப் பெற முடியாத அளவுக்கு அந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் உரிய பலன் பெற, சட்டத்தை நல்ல முறையில் நடைமுறைப்படுத்த அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, தனியார் துறையில் உள்ளவர்கள்தான் 192 வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றத்தில் போட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் இதய தெய்வம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த 1981 ஆம் ஆண்டு சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வராமல் தடுத்துவிட்டார்கள். நீதிமன்றம் இப்போது தீர்ப்பு அளித்திருக்கிறது. கைத்தறி இயக்குநர் தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு பணி பாதுசாப்பு, மற்றுள்ள நலன்கள் பாது காப்பு ஆகியவைகளுக்கு நடவடிக்கை எடுப்பார்.

டாக்டர் தே. குமாரதாஸ்: தலைவரவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிற கைத்தறி ஆடைகளை அரசு கொள்முதல் செய்யாத காரணத்தால் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பல சொசைட்டிகளில் உள்ள தொழிலாளர் கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டு மென்றால் வாழைத்தோட்டம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கைத்தறித் துணி தேக்கத்தினால் அந்த தொழி லாளர்கள் பணி இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் அந்த சொசைட்டி முன்னாலே உண்ணா விரதம் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது அரசு குறைந்தபட்சம் 10 இலட்சம் ரூபாய்க்கான துணிகளைக் கொள்முதல் செய்தால் அவர்களுக்கு வேலை கிடைக்கும். அவர்களுக்கு உணவு கிடைக்கும் என்ற அடிப்படையில் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆகவே, அந்த சொசைட்டியிடமிருந்து துணிகளை உடனடியாகக் கொள்முதல் செய்து, அவர்களுக்கு வேலை கொடுக்க வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இருந்தாலும் அது சம்பந்தமாக மனு கொடுத்தால் நிச்சயம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

விசைத் தறிகள்.

513—*(வினா எண். 1695)—திரு கே. ஆர். கணபதி; திரு ஜே. ஹேமச்சந்திரன் ; திரு எம். செல்லபுத்து, மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1984-85-ல் புதிதாக விசைத்தறிகள் போடப்பட்டிருக்கிறதா ?

[1985 ஜூலை

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு போடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு கே. ஆர். கணபதி : தலைவரவர்களே, புதிய விசைத் தறிகளை அமைக்க அரசு எவ்வளவு நிதி ஒதுக்கி செயல்படுத்த இருக்கிறது என்பதையும் நடப்பாண்டில் புதிய விசைத்தறிகள் அமைக்க அரசு தயாராக இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மத்திய அரசு 5-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிதாக விசைத்தறிகளை அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை வைத் திருந்தாலும் பலர் அதிகாரபூர்வமில்லாத தறிகளை இலட்சக் கணக்கில் போட்டுவிட்டார்கள். அதை அங்கீகரிக்கும்போது 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டில் 700 விசைத் தறிகளை அமைக்க மைய அரசு ஒதுக்கியிருக்கிறது. ஒரு சங்கத்திற்கு அதாவது ஒரு வளாகத்திற்கு 50 விசைத்தறி என்ற அளவில் கிட்டத்தட்ட 28 இலட்சம் ரூபாய் செலவில் 14 பவர் லூம்ஸ் காம்பிளக்ஸ் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு கே. ஆர். கணபதி : தலைவரவர்களே, புதிய விசைத் தறி அமைப்பதால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமா ? தென்னாற் காடு மாவட்டத்தில் புதிய விசைத்தறிகளுக்கு அனுமதி உண்டா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, புதிதாக ஒன்றும் திட்டம் இல்லை. ஏற்கெனவே மைய அரசு அனுமதித்த திட்டமாகும். தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டு இடங்களில், மணலூர்பேட்டை, காடம்புலியூர் ஆகிய இடங்களில் விசைத்தறி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, கைத்தறித் துறையினுடைய கொள்கைக் குறிப்பில் ஏறத்தாழ 90,000 விசைத்தறிகள் அன்-ஆதரைஸ்டாக தமிழ்நாட்டில் புகுத்தப் பட்டன என்று சொல்லப்பட்டதே, 1984-85-ஆம் ஆண்டில் விசைத்தறி அனுமதிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஆனால் நடைமுறையில் ஏறத்தாழ 2 இலட்சம் விசைத்தறிகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. இப்படி ஆதரைஸ்டாக புகுத்தப்பட்ட வசைத்தறியாளர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

1985 ஜூலை 16]

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரப்பூர்வமில்லாத விசைத் தறிகள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும் உள்ள அதிகாரம் மத்திய அரசினிடத்தில்தான் இருக்கிறது. தற்போது மத்திய அரசு அறிவித்திருக்கின்ற புதிய ஜவுளிக் கொள்கைப் பிரகாரம் அதிகாரபூர்வமல்லாத விசைத்தறிகள் கூட கட்டாய மாகப் பதிவு செய்து கொண்டு இயங்கலாம் என்று சொல்லப் பட்டிருக்கின்றது.

திரு எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத் தறி புகுத்துவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவ்வாறு வசைத்தறிகளைப் புகுத்துவதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகின்றது. அதைத் தடுத்து நிறுத்தி கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக்க என்ன திட்டத்தை அரசு வைத் திருக்கின்றது ? விசைத்தறி தஞ்சை மாவட்டத்தில் எங்கெங்கு போடப்படுகின்றன என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறிகள் அதிகமாகத் துவக்கப்படுவதால் கைத்தறி பாதிக்கப்படும் என்று உணர்ந்து தான் மாநில அரசும், மத்திய அரசும் கைத்தறி நெசவாளர் களைப் பாதுகாக்க பல பாதுகாப்புச் சட்டங்களை ஏற்படுத்தி வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் புதிதாக விசைத்தறி வளாகம் ஒன்று எட்டுப் புலிக்காட்டில் நிறுவ நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகின்றது.

திரு. கே. பாலாஜி : பேரவைத் தலைவர் அவர்களே, கைத் தறிக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற ரகங்களை விசைத்தறியிலே இன்றைக்கு நெய்கிறார்கள். அதைப்பற்றி அரசு அறியுமா ? அப்படி என்றால் அந்த விசைத்தறியாளர்கள்மீது அரசு நட வடிக்கை எடுக்குமா ? கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக் கின்ற வகையில் இந்த விசைத்தறிகளைக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட இதுவரையில் 133 வழக்குகள், கைத்தறி துணிக்கென்று ஒதுக்கப்பட்டு இருக்கின்ற ரகங்களை விசைத்தறி யாளர்கள் அரசின் கட்டுப்பாட்டையும் மீறி நெய்ததன் காரணத் தால் தொடுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசின் டெக்ஸ் டைல்ஸ் கமிஷனர்தான் அதுபற்றிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அதை எதிர்த்தும் சென்னையில் தடை வாங்கினார்கள். நல்ல வேளையாக இப்போது அந்தத் தடை ரத்து செய்யப்பட்டிருக் கின்றது. எனவே, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெசவுத் தொழிலை நவீனப்படுத்துவதற்கு உரிய வகையில் விசைத்தறிகளை நெசவாளர்களும் வாங்க அவர்களுக்குக் கடன் உதவி செய்ய அரசு முன்வருமா ?

[1985 ஜூலை 16

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி இன்னும் அரசு முடிவு எடுக்கவில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் உள்ள எட்டுப் புலிக்காட்டில் கைத்தறி வளாகம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வளாகம் என்ன நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படுகின்றது? அதன் மூலம் அங்கே எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, 50 வகைத்தறிகள் அந்த வளாகத்தில் ஏற்படுத்தப்படும். அதற்கான செலவு 27 இலட்சம் ரூபாய் ஆகும். மத்திய திட்டக்குழு தாட்கோ மற்றும் ஐ. ஆர். டி. பி. நிதியுதவி செய்கின்றன.

நிலவள வங்கிக் கடன்கள்

683— (வினா எண். 342) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நிலவள வங்கிகளில் பெறப்பட்ட கடன்களை 31—3—1985ல் திருப்பிக் கட்டிவிடுவோருக்கு அபராத வட்டியில் இருந்து விலக்கு அளிக்கும் சலுகையை சம்பா தாளடி விளைச்சல் பொய்த்துவிட்ட படியால் மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிக்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31—3—1985-க்குள் நிலவள வங்கியில் பெறப்பட்ட கடனைக் கட்டிவிட்டால், அதாவது அந்தக் காலத்திற்குள் கட்டிவிட்டால் அபராத வட்டியிலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கின்றார்கள். அதற்காக இந்த அரசு எத்தனை ரூபாயைச் செலவு செய்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சலுகையின் மூலம் 93,364 கடன்காரர்கள் ஏறத்தாழ 3.21 கோடி ரூபாய் அளவுக்குப் பயன் அடைந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் அளவுக்குச் சலுகை அளிக்க செலவு செய்துள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியானால் இதற்காக அரசிடமிருந்து பெறப்பட்ட மானியத்தொகை எத்தனை கோடி ரூபாய்?

1985 ஜூலை 16]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசினிடத்திலே இருந்து அவ்வாறு மானியமாகத் தரப்பட்ட தொகைதான் 3.21 கோடி என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து பருவமழை பாதித்து வருகின்ற காரணத்தால் வேளாண் பெருமக்கள் பெற்றிருக்கின்ற கடனுக்கு வட்டிகளைத் தள்ளுபடி செய்யவேண்டும்; அசலைச் செலுத்துவதில் ஐந்தாண்டு தவணை கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் இந்த மன்றத்தில் பல்வேறு முறைகளில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. அரசால் நியமனம் செய்யப்பட்டிருக்கின்ற விவசாய உயர்மட்டக் குழுகூட இந்தமாதிரி பரிந்துரை செய்திருப்பதாக நான் அறிகிறேன். அரசாங்கம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு கூட்டுறவுத் துறையிலே வேளாண் பெருமக்களிடமிருந்து அண்மைக் காலத்தில் கடன் பாக்கி எல்லாம் வசூல் ஆகி இருக்கின்ற காரணத்தால் அரசாங்கம் அறிவிக்க இருக்கின்ற சலுகைகளை விரைந்து அறிவிக்க முன்வருமா? எப்போது அறிவிக்கும்? என்னென்ன சலுகைகளை அறிவிக்கும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—20)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபோது, விவசாய உயர் மட்டக் குழு சொன்ன பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பரிந்துரை செய்யாமலேயே நிறைய சலுகைகளை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். விவசாய உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளை நாங்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறோம் எதை எதை ஏற்றுக்கொள்ளலாம் என்ற ஆய்வு முடிந்த உடனேயே வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில வள வங்கிகளில் விவசாயிகள் கடன் வாங்கினால் குறிப்பாக 5 ஆண்டுகளுக்கு முன் 10 ஆயிரம் கடன் வாங்கினால், அது 5 ஆண்டுகள் கழித்து, வட்டிக்கு வட்டி என்று சேர்ந்து 7 ஆயிரம் 8 ஆயிரத்திற்கு வளர்ந்து கொண்டே போகிறது. இப்படி இதனால் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருத்தி. ஆகவே விவசாயிகள் வாங்கக் கூடிய கடன்களிலே தொடர் வட்டியைத் தள்ளுபடி செய்து, குறுகிய காலக் கடன்களை நீண்டகாலக் கடனாக மாற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்வதோடு, சிறிய விவசாயிகளுக்கு வட்டியை முழுமையாக தள்ளுபடி செய்யவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 16

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் எல்லாம் அந்தந்தப் பகுதிகளிலே முன் உதாரணமாக இருந்து, கடன்களை சரியான நேரத்திலே கட்டி இருக்க வேண்டும். (குறுக்கீடு) சரியாக கட்டியிருந்தால் கூட்டு வட்டி போட்டு வந்திருக்க முடியாது. நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு முன் உதாரணமாகத் திகழ வேண்டும் என்பதுதான். அத்தோடு அவர்கள் சொல்லிய அந்தக் கருத்துக் களையும் அரசாங்கம் ஆய்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்களைப் போன்றவர்கள் எல்லாம் ஒழுங்காக கட்டிக் கொண்டு தான் வருகிறோம். ஆனால் மேலே 1 வாரம், 10 நாள் ஆனாலும்கூட அதற்கு காம்பவுண்ட் இன்டிரஸ்ட் போட்டு விடுகிறார்கள், அது அநியாயம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டம் என்று இருப்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனியாக இல்லை. எல்லா விவசாயிகளுக்கும் என்று தான் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆர். நியாகராசன் : தலைவர் அவர்களே, விவசாயிகள் விஷயத்திலே அந்தப் பணத்தைக் கட்டினால் அரசிலே சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். இருந்தாலும் வட்டி, வட்டிக்கு தண்ட வட்டி என்று கட்டவேண்டியிருப்பதனால்தான், ஆயிரம் ரூபாய் வாங்கியிருந்தால்கூட, அதுவும் 5 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கியிருந்தால், இப்போது அது 5 ஆயிரமாக உயர்ந்து விடுகிறது. ஆகவே இப்படி வட்டிக்காரர்கள் வசூல் செய்கிற மாதிரி அரசாங்கமே கேட்டுக் கொண்டிருந்தால் விவசாயி களால் எப்படிக் கட்ட முடியும் ? எத்தனையோ வழிகளில் உதவி செய்கிற இந்த சர்க்கார், எத்தனையோ பேர்களுக்கு விவசாயிகளுக்கு இந்த விஷயத்தில் சலுகை கொடுத்தால் என்ன ? விவசாயிகள் எந்தக் காலத்திலும் அரசை ஏமாற்றியது கிடை யாது. ஏமாற்றக் கூடிய இனமே அல்ல விவசாயிகள் இனம். ஆகவே, ஒரிஜினலாக இருக்கிற வட்டியைக் கொடுக்கத் தயாராகத் தான் இருக்கிறோம். ஆனால் தண்ட வட்டி, தண்டவட்டி என்று போடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டு (மணி யடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அளவோடு விளக்கம் போதும். இதற்கு மேல் வேண்டாம்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, எப்படி விவசாயிகளிடத்தில் நாங்கள் வசூல் செய்கிறோமோ,

1985 ஜூலை 16]

அது போல நாங்கள், மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கிற கட்சியின் அரசாங்கம் நடத்துகிற நாபாட் நிறுவனத்திடம் இருந்துதான் வாங்கி, விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். அவற்றை சரியான காலத்தில் கொடுக்காவிட்டால், இங்கே எப்படி வாங்கப்படுகிறதோ, அதே மாதிரி வட்டிக்கு வட்டி அவர்கள் எங்களிடமிருந்து வசூல் செய்யக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் விவ சாயிகளுக்கும் வட்டிக்கு வட்டி வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இவைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் களுக்குத் தெரிந்ததுதான். உயர் மட்டக் குழு, இவற்றை யெல்லாம் சேர்த்துத்தான் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதிலே எந்த எந்த வழிகளைப் பின்பற்றலாம் என்று அரசாங்கம் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற கூட்டுறவுக் கடன் களில் 125 கோடி விவசாயிகளிடமிருந்து பாக்கியிருந்தால் அதில் ஏறத்தாழ 40 கோடி ரூபாய் தஞ்சை மாவட்டத்திலிருந்து வசூலாக வேண்டியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாவட்டங்களைப் போல அல்லாமல், விளைச்சல் குறைச்சலாக இருக்கிறது. நெல்லுக்கு கொடுக்கின்ற விலையும் குறைவாக இருக்கிறது. கோவை, சேலம் மாவட்டத்தில் விலையும் அதிகம், விளைச்சலும் அதிகம். ஆகவே அதைக் கருத்தில்கொண்டு, அத்தோடு அபராத வட்டி மட்டும் 12 கோடி ரூபாய் வருகிறது, இந்த 40 கோடிக் கடனுக்கு. ஆகவே, இது குறித்து முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற அந்த ஏழை விவசாயி களின் வாட்டத்தைப் போக்கிட நாட்டம் கொண்டுள்ள இந்தத் துறை அமைச்சர் அந்த வட்டியைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் விளைச்சல் சரியாக இல்லை, தண்ணீர் வரவில்லை யென்று சொல்கிறார்கள். அவர்களே அப்படிச் சொல்வார் களானால் எங்களைப் போன்ற வறட்சியான மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ன சொல்வது என்று தெரியவில்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை நாம் கவனத்தில் கொள்ளலாம். அரசாங்கத்தில் வழங்கப் பட்டிருக்கிற சலுகையால் 22.33 கோடி அளவிற்குத் விவசாயிகள் பயனடைவார்கள் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் சலுகைகளை அறிவித்த பின்னாலும்கூட விவசாயிகள் அந்தச் சலுகைகளை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளாத தால் தான், ஏறத்தாழ 3.71 கோடி அளவிற்கு தான் விவசாயி கள் சலுகைகளைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் எந்தச் சலுகையைக் கொடுத்தாலும் சலுகை கொடுக்கிற நேரத்திலே இன்னும் சலுகைகள் வருமென்று

நினைக்கிறார்களேதவிர, அந்தச் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு அதைக்கட்டுவதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : தலைவர் அவர்களே, அரசாங்கம் கூட்டுறவுக் கடனை வசூல் செய்வதில் எனக்கு எந்த விதமான மன மாச்சரியமும் இல்லை. ஆனாலும்கூட என்னுடைய தொகுதியில் பெருமளவில் விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் சாத்தனூர் அணை நீர்ப் பாசனத்தை நம்பித் தான் விவசாயம் செய்துக் கொண்டு வருகிறார்கள். இரண்டு ஆண்டுக் காலமாக அதிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் விடப்படவில்லை. ஆகவே இதுபோன்ற தண்ணீர் விடப்படாத பகுதிகளுக்கு கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்யும் போது பரிவு காட்டப்பட்டு, தள்ளி வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கடனைத் தள்ளிவைப்பதைப் பொறுத்த வரையில் என்னுடைய துறையில் செய்ய முடியாது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் மூலமாக அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தத் துறையிலிருந்து குறிப்பு வருமானால் அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) சென்னை கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் குறித்து.

திரு. கு. சுப்பராயன் : தலைவர் அவர்களே, சென்னைக்கு குடிநீர் வழங்குவதற்கு அரசால் அறிவிக்கப்பட்ட கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் குறித்து முன்னுக்குப் பின் முரணாக தகவல்கள் வருகின்றன. ஆந்திராவிலிருந்தும், கர்நாடக மாநிலத்திலிருந்தும் அப்படிப்பட்ட தகவல்கள் வந்திருக்கின்றன. அதேபோல நேற்றைய தினம் பத்திரிக்கையாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது நம்முடைய பாரதப் பிரதமர் இராஜிவ் காந்தி அவர்கள் அளித்த பதில்கூட நம்பிக்கையூட்டுகிற அளவில் இல்லை. இதன் காரணமாக மக்கள் மத்தியிலே கடுமையான அதிருப்தி நிலவுகிறது. அறிவிக்கப்பட்டு ஏழு ஆண்டுக் காலத்திற்குப் பிறகு துவங்கப்பட்டு இரண்டு ஆண்டுக் காலமாகியும் திட்டப்பணிகள் சுணக்கமாக இருக்கின்றன. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்ற அவநம்பிக்கையில்

சென்னை நகரத்து மக்கள் இருப்பதன் காரணமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசின் சார்பாக இது குறித்து விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பணிகள் நடைபெறுவதில் தயக்கமோ, தாமதமோ, தடையோ, சிக்கலோ எதுவும் இல்லை. தமிழக அரசு இந்தப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. அதைப் போலவே ஆந்திர மாநில அரசும் இதற்கான தலைமைப் பொறியாளரை நியமித்து அவர்களும் இந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இளம்பியிருக்கிற சில சந்தேகங்களை நீக்குகிற வகையில் தான் இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அதற்கு பிறகு திரு. சுப்பராயன் அவர்கள் இன்றைக்கு கேட்டிருக்கிற கேள்விக்கு நேற்றைக்கே இந்தியத் தலைமையமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள் என்றே தான் கருதுகிறேன். இதிலே சிக்கல் இருக்குமானால் தீர்த்து வைக்கப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நம்பிக்கையூட்டுகிற பதிலாகத்தான் நாம் கொள்ளவேண்டுமே தவிர அதிலே அவநம்பிக்கை கொள்வதற்கு எந்தக் காரணமும் இல்லை என்றே கருதுகிறேன். சிக்கல் எதுவும் இதிலே வராது என்றும் நம்புகிறேன். கிருஷ்ணா நதிநீர் நிச்சயமாக தமிழகத்திற்குக் கிடைக்குமென்று உறுதி அளிக்கிறேன்.

(ஆ) செங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளருக்கு உறுப்பினர் எழுதிய கடிதம்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் ஒரு பெண்மணி செங்குன்றம் போலீஸ் நிலையத்தில் துன்புறுத்தப்பட்டதாக தகவல் கிடைத்தது. என்னுடைய தொகுதியைச் சார்ந்த பகுதி அது. ஆகவே அந்த இன்ஸ்பெக்டருக்கு நான் ஒரு கடிதம் எழுதி என்னுடைய அலுவலகத்தில் பணிசெய்கிற கலைச்செல்வன் என்ற பையன் மூலமாக செங்குன்றம் போலீஸ் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்தக் கவரில் 'வி. பி. சிந்தன், எம்.எல்.ஏ.,' என்ற சீல்போடப்பட்டிருந்தது. மேலும் ஜானகிராம், இன்ஸ்பெக்டர், பெர்சனல் என்றும் எழுதியிருந்தேன். ஆனால் அவர் அந்தக் கடிதத்தை வாங்கி கிழித்துப்போட்டுவிட்டு, அந்தப் பையனையும் அடித்து, 75 செக்ஷனில் போலீஸ் வழக்குப் போட்டு சிறைக்கு அனுப்பி இருக்கிறார். ஆகவே இந்த நிலையில் இதுதான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தமிழக அரசினுடைய காவல் நிலையங்களில் கிடைக்கக்கூடிய மதிப்பா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–30.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப் பற்றி எழுதிக் கொடுங்கள். I will take up the issue with the Leader of the House. Hon.

(இ) அரசு மருத்துவமனைகளில் மருந்து களவாடப்பெறுவது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : பேரவைத் தளநாயகர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். திருவொற்றியூர் நகரத்தில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனை மற்றும் ஸ்டான்லி மருத்துவமனை, பொது மருத்துவமனைகளில் இருந்து களவாடப்படுகின்ற மருந்துகளை நம்முடைய தமிழக அரசு பார்த்துப் பிடித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல தண்டனை கொடுத்திருப்பதற்காக நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும்?

(ஈ) மூலக்கேள்வியும் அதற்கான விடையும்கூட சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு அளிப்பது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கேட்கப்படுகின்ற துணைக்கேள்விகளும், அதற்காக வழங்கப்படுகின்ற பதில்களும் ரிப்போர்ட்டிங் செக்சனில் முறையாகவும், சிறப்பாகவும் டைப் அடிக்கப்பட்டு, 24 மணி நேரத்திற்குள் எங்களுக்குத் தரப்படுகின்றது. ஆனால் இந்த மன்றத்திலே நாங்கள் கேட்கின்ற மூலக் கேள்விகளுக்கான விடைகள் எங்களுக்கு மன்றத்திலே தெரிவிக்கப்பட்டாலும், அவைகள் எழுத்து வடிவத்திலே உறுப்பினர்களுக்குத் தரப்படுவதில்லை. நான் விசாரித்த அளவிலே கிட்டத்தட்ட சைக்லோஸ்டைல் காப்பிகள் 50 எடுக்கப்பட்டு, அந்தக் கேள்விகளுக்கான பதில்கள் இந்த மன்றத்திற்கு அனுப்பப்படுவதாகத் தெரிகிறது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவற்றைப் பற்றி எல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

(உ) சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்குச் சலுகைகள்.

டாக்டர் ந. மாதிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்காக தமிழக அரசு வழங்குகின்ற பல்வேறு சலுகைகளுக்காக, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும்? There must be some proceedings pending before the House-இன்னும் பிசினசே ஆரம்பிக்கப்படவில்லை.

3. அவை உரிமை மீறல் பிரச்சினை.

தினகரன் மற்றும் முரசொலி நாளிதழ்கள் மீதும், மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி மீதும், தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 2-7-1985 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் மா. சின்னராசு அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையை, தினகரன்

மற்றும் முரசொலி நாளிதழ்கள் மீதும், மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள் மீதும், எழுப்ப என் அனுமதியைக் கேட்டு, பேரவையில் அதுபற்றிய விளக்கம் அளித்தார்கள். சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் பெற்ற பிறகு, எனது தீர்ப்பை அளிப்பதாக நான் அறிவித்தேன். தினகரன் மற்றும் முரசொலி நாளிதழ்களின் ஆசிரியர்களுக்கும் மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்களுக்கும் விளக்கம் கேட்டு, கடிதங்கள் எழுதப்பட்டன.

மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள், தன்னுடைய விளக்கத்தில் தாம் பேசியது என்ன என்பதை மீண்டும் குறிப்பிட்டு விட்டு, சாராய ஏஜென்டுகளுக்காக மனுக்களைக் கொடுத்தார்கள் என்று தெரிய வருகிறது, அது உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது என்றுதான் நான் அந்த நிகழ்ச்சியில் பேசியிருக்கிறேன், இதில் எதுவும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கவுரவத்திற்கு மாசு கற்பிக்கும் உள்நோக்கம் எனக்கு இல்லை. மாறாக சட்டமன்ற உறுப்பினர்களை மதித்து, அடிக்கடி முதல் அமைச்சர் அவர்கள் சட்டமன்றங்களுக்கு வரவேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வாதாடி இருக்கிறேன் என்பதுதான் எனது பேச்சின் சாரமாகும். எனவே எனது பேச்சில் எந்தவித உரிமை மீறலும் இல்லை என்று கூறியிருக்கிறார்கள்.

தினகரன் நாளிதழ் ஆசிரியர், மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பேசியதாக 28-6-1985-இதழில் வெளியிட்டுள்ள செய்தி என்று பிரச்சனைக்குரிய செய்தியைக் கூறிவிட்டு, முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் சட்டசபைக்கு வருவதையே தவிர்க்கிறார் என்பதையும், என்றாவது ஒருநாள் அவர் வரும்போது, அதனை ஒரு முக்கியமான வாய்ப்பாகக் கருதி மனுக்களைக்கூட சட்டசபையிலேயே எம்.எல்.ஏ.-க்கள் கொடுக்க வேண்டிய நிலைமைகள் உருவாகி இருப்பதையும் சுட்டிக்காட்டி, மாண்புமிகு மேலவை உறுப்பினர் பேசியதை தினகரன் வெளியிட்டுள்ளது, இது ஒரு நாளிதழின் கடமையே தவிர, அதில் எந்தவித உள்நோக்கமும் இல்லை. மாண்புமிகு மேலவை உறுப்பினரவர்கள் பேசியதன் விவரம் முழுமையாக 29-6-1985 முரசொலியில் வெளியாகியிருக்கிறது. தினகரன் 28-6-1985 இதழில் அந்தப்பேச்சின் சுருக்கமே வெளியிடப்பட்டுள்ள காரணத்தால், சாராய ஏஜென்சி மனுக்களை அ.தி.மு.க. எம்.எல்.ஏ.-க்கள் கொடுத்தார்கள் என்று தெரிகிறது என்பது போல அமைந்துவிட்டது. அது உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது என்று மாண்புமிகு மேலவை உறுப்பினர் அந்தப் பேச்சில் குறிப்பிட்டு முரசொலியிலும் வெளியான அந்தப் பகுதி தினகரனில் இடம் பெறாமல் போய்விட்டது. மேலும், தற்கால தமிழகத்தில் சாராயக் கடைகள் பலரும் நடத்தி வருகிற சட்ட ரீதியான ஒரு தொழில் ஆகும், ஆகவே சட்டப் பேரவையையோ, சட்ட

மன்ற உறுப்பினர்களையோ, இழிவுபடுத்தும் நோக்கத் துடன் அந்தச் செய்தி வெளியிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள்.

முரசொலி ஆசிரியர், மாண்புமிகு மேலவை உறுப்பினர் அவர் கள் பேசியதை முரசொலியில் வெளியிட்டுள்ளபடி குறிப்பிட்டு விட்டு, தினகரன் நாளிதழ் ஆசிரியர் கூறிய காரணங்களையே மறுபடியும கூறி விட்டு அதாவது சாராய ஏஜெண்டுக்கான மனுக்களைக் கொடுத்தார்கள் என்று செய்தி வருகிறது, அது உண்மையோ பொய்யோ தெரியாது என்று தான் அந்த நிகழ்ச்சி யிலே மாண்புமிகு மேலவை உறுப்பினர் அவர்கள் பேசியிருக்கி றார்கள்.

அதிலே எதுவும் சட்டமன்ற உறுப்பினர்களின் கௌரவத் திற்கு மாசு கற்பிக்கும் உள்நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அதனை வெளியிட்ட எங்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் களின் கௌரவத்திற்கு மாசு கற்பிக்கும் உள்நோக்கம் எதுவும் கிடையாது. சட்டமன்ற உறுப்பினர்களை மதித்து அடிக்கடி முதலமைச்சர் சட்டமன்றங்களுக்கு வர வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்காக மாண்புமிகு மேலவை உறுப்பி னர் அவர்கள் வாதாடியிருப்பதைத் தான் வெளியிட்டிருக்கி றோம். எனவே, நாங்கள் வெளியிட்டுள்ள அந்தச் செய்தியில் எந்தவிதமான உரிமை மீறலும் இல்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறோம் என்றும் கூறியிருக்கிறார்.

இந்த மூன்று விளக்கங்களிலிருந்தும், பேசப்பட்ட பொருளும் வெளியிடப்பட்ட பொருளும், இங்கு குறிப்பிடப்பட்டது போலவே உள்ளது என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. தாம் அவ்வாறு பேசியது உண்மை என்று மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கூறி யிருக்கிறார். அவர் பேசியதைத்தான் தாங்கள் வெளியிட்டுள்ள தாகப் பத்திரிகைகளும் கூறியுள்ளன.

பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் என்ன கொடுத்தார்கள் என்ப தற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. மேலும், அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் பேசுகை யில் ''அன்று சட்டமன்றத்தில் முதல்வரிடம் நாங்கள் மட்டு மல்ல காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்களும், ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களும், பெரியவர்கள், உறுப்பினர்கள் பலரும் மனுக்களைக் கொடுத்தார்கள். அவை, என்ன என்று தெரியாமலே ஏதோ சாராய ஏஜன்சி வாங்குவதற்காக சட்ட மன்ற உறுப்பினர்கள் மனுக் கொடுத்தார்கள் என்று சொல்லு கிறபொழுது அது எவ்வளவு தூரம் நம்மைக் கேவலப் படுத்துவதாக இருக்கிறது என்று அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக் கப்பட்ட மனுக்கள் என்ன என்பது குறித்து தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனாலும், ஒரு முன்னாள் முதலமைச்சர், பல வருடங் கள் இந்தப் பேரவையில் உறுப்பினராக இருந்தவர், தற்சமயம் மேலவை உறுப்பினராக இருப்பவர் ''சாராய ஏஜண்டுக்கான மனுக்களைக் கொடுத்தார்கள் என்று செய்தி வருகிறது. அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது'' என்று கூறுவதைத் பொருத்தமான கூற்றாக எடுத்துக்கொள்ள இயலாது. தனக்கு உண்மை என்று நிச்சயமாகத் தெரியாத ஒன்றை பேரவை உறுப்பினர்களைக் குறித்துச் சொல்லும்போது, இப்படிக் கூறுவது பேரவை உறுப்பினர்களது கௌரவத்தைப் பாதிக்கும் என்பது முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். எனவே, தெரிந்தே வேண்டுமென்றே உறுப்பினர்களுக்குக் களங்கம் கற்பிக்கும் நோக்கத்துடன் கூறப்பட்டது என்று கருத இடமிருக்கிறது. இது பேரவையின் உறுப்பினர்களின் உரிமை யைப் பாதிப்பதாகும். ஆயினும் மாண்புமிகு திரு மு. கருணாநிதி அவர்கள் மேலவை உறுப்பினர் என்பதாலும் பேரவை மற்றும் மேலவை ஆகியவற்றின் சுமுகமான உறவைக் கருதியும் பாராளுமன்ற மரபுகளை ஒட்டியும், இப்பிரச்சினை குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.

பத்திரிகைகளைப் பொறுத்தமட்டில், முரசொலி நாளேட்டின் ஆசிரியர்; நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். எனவே, இப்பேரவை யில் அவர் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்க இயலாது. 1984 ஆம் ஆண்டு பேரவைத் தலைவர்கள், மேலவைத் தலைவர்கள் மாநாடு பம்பாயில் நடந்த போது இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டு ஒரு அவையின் உறுப்பினர் வேறொரு அவையின் உரிமை மீறியதாகப் பிரச்சினை எழுந்தால், அப்போது அப்பிரச்சினை குறித்து உரிமை மீறல் எழுப்பப்பட்ட அவையின் தலைவர், அந்த உறுப்பினர் எந்த அவையின் உறுப்பினராக இருக்கிறாரோ அந்த அவையின் தலைவருக்கு அனுப்பி அவர் மீது நடவடிக்கை எடுப்பது தான் சரியான முறை என்று கருத்து தெரிவிக்கப் பட்டது.

ஆகவே, முரசொலி நாளிதழின் ஆசிரியர் திரு. மாறன் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால், அவர் மீது எழுப்பப்பட்டுள்ள உரிமை மீறல் குறித்த பிரச்சினையை நாடாளுமன்றத் தலைவருக்கு எழுதி, தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

'தினகரன்' நாளிதழ் ஆசிரியர் சம்பந்தப்பட்ட வரையில் இந்த அவையே உரிமை மீறல் குறித்த பிரச்சினையில் நட வடிக்கை எடுக்கலாம் என்பதால் அவை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பப் பேரவையில் தீர்மானம் கொண்டு வரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூலை 16

திரு .மா. இன்னரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 2–7–1985 அன்று நான் இந்தப் பேரவையில் தினகரன், முரசொலி, பத்திரிகைகளின் மீதும், முன்னாள் முதலமைச்சர் இந்நாள் மேலவை உறுப்பினர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மீதும் எழுப்பிய உரிமைப் பிரச்சினை மீது தாங்கள் இன்று 16–7–85 அன்று அளித்த தீர்ப்பினை தொடர்ந்து தினகரன் நாளிதழில் 28–6–85 பிரசுரத்தில் நான் குறிப்பிட்டு இருந்த வாசகங்கள் காரணமாக நான் எழுப்பிய உரிமைப் பிரச்சினையை இந்தப் பேரவையின் உரிமைக் குழுவின் ஆய்வுக்கும் நடவடிக்கைக்கும் அனுப்ப இந்தப் பேரவை தீர்மானிக்கிறது. "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று இப்பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற்றது. (குறுக்கீ .....

(முற்பகல் 10–40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் தீர்ப்புக்குப் பின்னாலே விவாதம் கிடையாது.

திரு. க. அன்பழகன் : சபாநாயகர் இப்படி முறைகேடாக நடக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன முறைகேடு என்கிறீர்கள் ? தீர்ப்பைப் படித்துவிட்டேன். (குறுக்கீடு) தீர்மானம் முடிந்துவிட்டது. இது எல்லா உறுப்பினர்களும் சம்பந்தப்பட்டது. விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) தயவு செய்து வேறு மாதிரி நீங்கள் நினைக்க வேண்டாம். இது எல்லா உறுப்பினர்களுக்கும் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதால் பாதுகாப்பதற்காகத்தான் நான் அந்த முடிவு எடுத்தேன். Please do not mistake me.

திரு . க. அன்பழகன் : சபாநாயகர் அவர்களே, நான் எழுந்திருந்தபோது, தீர்மானத்தை அவர் முன் மொழிகிறார். அதற்குப் பின்னாலே பேசலாம் என்ற கருத்துப்பட தாங்கள் என்னை உட்காரச் சொன்னீர்கள், தீர்மானத்தை முன் மொழிந்த வுடன் நான் எழுந்திருந்து பேசுவதற்கு முன்னால் தாங்கள் வேகமாக இப்படிக் கொண்டு வந்து நிறைவேற்றுவது எங்களை அவமதிப்பது ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு கொடுத்ததனாலே அது ஃபைனல்.

திரு. க. அன்பழகன் : என்னை நீங்கள் உட்காரச் சொன்ன போது மறுபடியும் அனுமதிக்க இருப்பதாகத்தானே அர்த்தம் ?

1985 ஜூலை 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அப்படி நினைக்க வேண்டாம், இது ஒரு ப்ரொஸீடிங்ஸ். இதிலே ஒரு இன்டரப்ஷன் இல்லை என்ற நோக்கத்திலே தான் உட்காரச் சொன்னேன்

திரு. க. அன்பழகன்: என்னை உட்காரச் சொன்னபோது எந்த எண்ணத்தில் உட்காரச் சொன்னீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மேட்டரில் 'டிபேட்' வேண்டாம் என்றுதான்.

திரு. க. அன்பழகன் : டிபேட் இல்லாமல் எப்படி முடியும்? சபாநாயகர் சொல்லிவிட்டால், அதற்கு மேல் டிபேட்டே கிடையாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லா உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

திரு. க. அன்பழகன் : நானும் ஒரு உறுப்பினர். நானும் சம்பந்தப்பட்டு இருக்கிற காரணத்தால்தான் எழுந்து நின்றேன். நான் உறுப்பினர் இல்லை என்றால் சொல்லுங்கள். போய்விடுகிறேன்.

MR. SPEAKER: Please don't take it as a prestige issue.

திரு. க. அன்பழகன் : சபாநாயகர் அவர்கள் தன்னுடைய விருப்பப்படி தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, கருத்துத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்காத காரணத்தால் நான் வெளியேறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களையும் சேர்த்து எல்லா உறுப்பினர்களுடைய கௌரவத்தையும் பாதுகாப்பதற்காகத்தான் நான் இருக்கிறேன். (குறுக்கீடு, கூச்சல்) நான் எதைச் செய்தாலும், சொன்னாலும், நீங்கள் இப்படிச் செய்யலாமா ? எதற்காக, யாருக்காக சொன்னேன் ? ஐ அம் நாட்கன்சென்ட். இந்த மாதிரி மூத்த உறுப்பினர் நீங்கள் எனக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். (குறுக்கீடு, கூச்சல்) இப்படி நடக்கலாமா ? இந்த இடத்திலிருந்து தீர்ப்பு கொடுத்தால் நீங்கள் எப்படி நடப்பீர்கள் என்று பார்க்க வேண்டும். எனவே, நீங்கள் வேறு மாதிரி எண்ணம் கொள்ள வேண்டாம். நான் மனசாட்சியோடு தான் இந்தத் தீர்மானத்தைப் படித்தேன். படிக்கும் போது மூட்டெயில்ட்-ஆகவே படித்தேன்.

திரு. க. அன்பழகன் : தாங்கள் எடுக்கிற முடிவை நாங்கள் மாற்ற முடியாது. தங்கள் முடிவை மறுப்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு ஆலோசனை சொல்லக் கூட, வாய்ப்பு இல்லாமல், எழுந்திருந்த என்னை உட்காரச் சொல்லிவிட்டு, தீர்மானம் முன் மொழியட்டும் என்று சொன்னீர்கள். தீர்மானம் முன் மொழிந்தவுடன் தாங்கள் வாக்கெடுப்புக்கு விடுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது சொல்லுங்கள்; உங்களுடைய ஆலோசனையை நான் வரவேற்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றி யதற்குப் பின்னாலே, சொல்கிற ஆலோசனைக்கு என்ன மரியாதை கிடைக்கும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தை சொல்லலாமா ? இது என்னுடைய பிரச்சினையா ? இது அவை சம்பந்தப்பட்டது. தீர்ப்பு கொடுத்ததனாலேதான் இதிலே டிபேட் வராது என்று சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானம் அவையிலே நிறைவேற்றப்பட்டு விட்டது. நிறைவேற்றப்பட்டதாகத் தாங்கள் அறிவித்து விட்டீர்கள். நான் சொல்கிற ஆலோசனைக்கு தாங்களே கூட உரிய பயன் அளிக்க முடியாது என்ற நிலையில் நான் பேசுகிறேன். எந்த ஒரு உரிமைப் பிரச்சினையாக இருந்தாலும் அது தங்களுடைய மேலான தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என்பதிலே எனக்கு ஒன்றும் மாறுபாடு இல்லை. அவை உறுப்பினர்களுடைய கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும் என்பதிலே எங்களுக்கும் அக்கறை உண்டு. இந்தத் தீர்ப்பைத் தாங்கள் கூறுகின்றபொழுது மூன்று பேர் சம்பந்தப்பட்டவர்களுக்கு மூன்று விதமான தீர்ப்புகளை வழங்க வேண்டிய நிலைமைக்குத் தாங்கள் ஆளாகியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) தாங்கள் சொன்ன தன் விளக்கம் எல்லாம் தெரியும். ஒன்றும் புரியாமல் நான் இங்கே இத்தனை வருஷங்களாக இல்லை. மூன்று விதமான தீர்ப்புகள் — நியாயப்படி, இன்னும் சொல்லப்போனால் மற்ற சட்ட மன்றங்களினுடைய உரிமைகளைத் தாங்கள் மதிக்கக் கடமைப்பட்டவர் என்ற முறையிலே வழங்கியிருக்கிறீர்கள்.

மேலவை உறுப்பினர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மீது சொல்லப்படுகின்ற இந்தக் குறைக்கு உரிமைக் குழுவினுடைய தீர்ப்புக்கு நேரடியாக விடப்பட முடியாத காரணத்தால் அந்த மேலவைத் தலைவர் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்றும், அதைப் போல நாடாளுமன்ற உறுப்பினரைப் பற்றி அந்த மேலவைத் தலைவர் பரிசீலிக்க வேண்டுமென்றும், தினகரன் ஆசிரியர் மீது இந்த அவையினுடைய உரிமைக் குழு அழைத்து விசாரிக்க வேண்டுமென்ற முறையிலே யும் தாங்கள் இங்கே தீர்ப்பை வழங்கி, அது தீர்மானமாகவும் இங்கே வந்திருக்கிறது.

இந்தப்பிரச்சினையில் அவர்கள் தந்திருக்கின்ற விளக்கம், இந்த அவைக்கு இழுக்கு விளைவிப்பதை அவர் கருதியோ, திட்டமிட்டோ செய்யவில்லை என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது, இன்னும் சொல்லப்போனால் அது உண்மையோ பொய்யோ என்று சொல்லி விட்டாலே, இப்படிப் பேசப்படுகிறது உண்மையோ பொய்யோ என்று சொன்னாலே அதன்மீது உள்ள களங்கம் நீங்குகிறது. அப்படிச் சொன்னதற்குப் பின்னாலேகூட, அந்த அடிப்படையிலே பத்திரிகையிலே வருகின்ற செய்தி, ஒருவர்

ஒரு மணி நேரம் பேசுகின்ற செய்தி ஒரு 15 நிமிடப் பேச்சைத் தான் பத்திரிகையிலே வெளியிட முடியுமே தவிர, அவரவர் பத்திரிகையிலே முழு அளவில் வெளியிடுவதைப் போல பத்திரிகையில் வெளியிடப்பட முடியவில்லை. எனவே, தினகரன் பத்திரிகையில் வந்த ஒரு செய்தி தவறாக வந்து, முழு அளவில் வராத காரணத்தாலே தவறு ஏற்பட்டது என்ற அளவிலேயும், பேசிய பேச்சில் களங்கம் கற்பிக்கின்ற நோக்கம் இல்லாமல், இப்படியும் பேசப்படுகிறது என்று சொல்லப்பட்ட காரணத்தால் அதிலே களங்கம் கற்பிக்கிற நோக்கம் இல்லை என்பதையும் தங்களுக்கு எழுதிய பதிலிலேயே களங்கம் கற்பிக்கவோ, சட்டமன்ற உறுப்பினருடைய தகுதியைக் குறைக்கவோ எதும் நான் நினைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டதற்குப் பின்னால், இதையே தாங்கள் உரிமைப் பிரச்சனையாக ஆக்கி இந்தப் பிரச்னை குழுவுக்குச் செல்ல வேண்டுமென்று கருதுகின்ற கருத்துக்கு, முடிவுக்குத் தாங்கள் வருவீர்களேயானால், இதைவிடப் பெரிய பிரச்சனைகளுக்கு, இதைவிடப் பெரிய சிக்கலான பிரச்சனைகளுக்கு . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே, நான் பேச வில்லை என்று சொல்லி விட்டால் பரவாயில்லை. அதிலே, வேண்டுமென்றே, உரிமைப் பிரச்னை எழாது என்று எனக்கு எழுதுகிறார்கள் மூன்று பேரும். ஒரு கட்சி சார்பு என்று நினைக்க வேண்டாம். நீங்கள் அதை நினைக்காமல் இருந்தால் என் பேச்சை ஒத்துக் கொள்வீர்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேலெழுந்த வாரியாக உரிமை மீறல் இருக்கிறது என்று தாங்கள் கருதினால் அதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம். தாங்கள் அனுப்பு வதற்குப் பதிலாக இந்தப் பிரச்சனையை எழுப்பிய உறுப்பினர் மூலம் தாங்கள் அதைச் செய்திருக்கின்றீர்கள். உரிமைக் குழு என்பது சட்ட மன்றத்திலே உள்ள அனைத்துத் தரப்பாரும் சேர்ந்து இயங்குகின்ற ஒரு குழு. அங்கே இதைப்பற்றி விளக்கமாக, விளக்கமாகப் பேசுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆகையினாலே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறுவது சரியாக ஆகாது. சாதாரணமாக மேலெழுந்தவாரியாக வருகின்ற பொழுது அங்கே விளக்கமாக எடுத்துப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அடுத்து, சட்டமன்றத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. அந்தச் சம்பவத்தைப் பற்றி நோக்கம் கற்பித்துப் பேசுவது என்பதுதான் அதிலே இருக்கின்ற குறைபாடு. மனு கொடுக்கிறார்கள். முதலமைச்சர் வரவில்லை, ஆகையினாலே இங்கே தான் மனுக்கள் கொடுக்கின்றார்கள் என்று சொல்வது வேறு. ஒரு சம்பவம் நடைபெறுகிறது. அந்தச் சம்பவத்திற்கு உள்நோக்கம் கற்பித்துச் சொல்லி அதிலே மீண்டும் சந்தேகத்தையே வலியுறுத்துகின்ற வகையிலேதான் அந்த விளக்கம் அமைந்திருக்கின்றது. ஆகையினாலே

[திரு. ச. இராமச்சந்திரன்] [1985 ஜூலை 16

தான் பேரவைத் தலைவரவர்கள் மேலெழுந்தவாரியாக இத் தகைய உரிமை மீறல் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்து அதை உரிமைக் குழுவிற்குத்தான் தருகிறார்கள். சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி எந்தவிதமான தண்டனையையும் நாம் தரவில்லை. உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது. உரிமைக் குழு அதைப் பரிசீலிப்பதற்கு முழு வாய்ப்புண்டு. உரிமைக் குழுவிலே எல்லாக் கட்சியினரும் இருக்கிறார்கள். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போல, அதிலேயும் மேலவைக்கு யாரைப்பற்றி அனுப்ப வேண்டுமோ அதை மேலவைக்கும், நாடாளுமன்ற மேலவைக்கு யார் பொறுப்போ அங்கேயும், அதைப் போல முறைப்படி இதிலே செய்யப்பட்டு இருப்பதினால் மேலும் விவாதம் செய்வது தங்களுடைய தீர்ப்புக்குப் பிறகு விவாதம் செய்கின்ற ஒரு தவறான முன்மாதிரியாக அமையும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50.)

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்புவது குறித்து எனக்குப் பெரிய மாறுபாடு இல்லை. அந்தக் குழு விசாரிக்கட்டும். ஆனால் இதிலே ஏற்படுகின்ற பிரச்சினைகள் என்னவென்றால், அந்தக் குற்றச்சாட்டை நான் அப்படித்தான் சொன்னேன் என்று சொல்கின்றவர்களும், நாட்டிலே இருக்கின்றார்கள் ; நான் அந்த நோக்கத்தோடு சொல்லவில்லை என்கின்ற கருத்தும் வருகிறது. இந்த இரண்டுக்கும் இடையிலே, உரிமைக் குழுவிலே ஒரு பிரச்சனையை விடுவதற்கும் முன்னால், அதுவும் பத்திரிகை ஆசிரியர்—

..(குறுக்கீடு)

நான் சொல்லி முடித்து விடுகிறேன். தினகரன் பத்திரிகை ஆசிரியர், நிருபரிடமிருந்து வந்த முழு பேச்சில்லாத ஒரு பகுதியை வெளியிட்டியிருக்கிறேன், அதனால் ஏற்பட்ட விளைவு என்பதை தினகரன் பத்திரிகை சார்பாகத் தெரிவிக்கிற பொழுது, அதை விவாதித்துக் கொண்டிருக்கிற பொழுது, அப்படிப்பட்ட பிரச்சனை

.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு வருத்தம் கூட தெரிவிக்கவில்லை ; வருத்தம் தெரிவித்திருந்தால் விட்டிருப்பேன். அந்த அளவுக்கு வரும்போது என்ன செய்வது ? நேரடியாக விளக்கத்தைக் கேட்டதன் நோக்கமே அதுதான். அதாவது சொல்லட்டும் என்பது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசுகின்ற பொழுது ஒரு களங்கத்தைச் சுமத்திவிட்டு அது உண்மையோ, பொய்யோ என்று சொல்வதன் மூலமாக அந்தக் களங்கம் நீங்கிவிடுகிறது என்பதைப் போல் தெரிவித்தார்கள். அது எப்படி நீங்கும் எனறு எனக்குத் தெரியவில்லை. ஒரு குற்றச்சாட்டை நானே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது சுமத்திவிட்டு,

1985 ஜூலை 16] [டாக்டர் கா. காளிமுத்து]

அது உண்மையோ பொய்யோ என்று பேசினால், பேசுவதனுடைய சாமர்த்தியத்தை வேண்டுமானால் காட்டுமே தவிர, அந்த உள் நோக்கத்தை அது நிச்சயமாக நீக்காது. ஆகவே, அதிலே சந்தேகம் மீண்டும் வலியுறுத்தப்படுகிறதே தவிர, நீக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சொல்லப்படுகிறது சொல்லப்படுகிறது என்றுதான் இந்த நாட்டிலே குற்றச்சாட்டே தொடங்கியது. இந்த நாட்டிலே குற்றச் சாட்டுகளை, மிகப் பெரிய அளவிலே சொல்லப்படுகிறது சொல்லப்படுகிறது என்ற அந்த ஒரு சொல்லால், தொடங்கினார்கள். இங்கேயும் சொல்லப்படுகிறது என்றுதான் கலைஞர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே, சொல்லப் படுகிறது என்று .....

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஆகவே, குற்றச் சாட்டை அவர்கள் ஒத்துக் கொண்டதாகத்தான் அதற்குப் பொருள்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருவண்ணாமலையில் காலரா நோயினால் பலர் பாதிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், ம. ஆபிரகாம், கே. எம். தங்கமணி, கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து ஆகியோர் "திருவண்ணாமலையில் இந்த வாரம் காலரா நோயினால் 7 பேர் இறந்தும் பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளதாயும், காலரா நோய் தமிழகம் முழுவதும் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதாலும் திருவண்ணாமலையிலும் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதி நிறைந்த பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாத ஆரம்பத்தில் திருவண்ணாமலை, போளூர் போன்ற இடங்களில் காலரா ஏற்பட்டு அதனாலே 7 பேர்கள் திருவண்ணாமலையிலும் 4 பேர்கள் போளூரிலும் மறைந்ததாகத் தகவல் வந்தது. அது மட்டும் இன்றி, உள் நோயாளிகளாக, திருவண்ணாமலையில் 52 பேர்களும், போளூரில் 36 பேர்களும் அனுமதிக்கப் பட்டார்கள் என்றும் அவுட் பேஷன்டுகளாக, புற நோயாளிகளாக, குழந்தைகள் 24 பேர்களும், பெண்கள் 135 பேர்களும், ஆண்கள் 139 பேர்களும் மருத்துவ சிகிச்சை பெற்றார்கள் என்றும் தகவல் வந்திருக்கிறது.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1985 ஜூலை 16

நான்கூட இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் இந்த இரண்டு இடங்களிலே ஏற்பட்டு, மீண்டும் பரவ வாய்ப்பிருக்கிறது என்பதற்காக, அரசு எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில், தமிழகம் முழுவதும் பரவுவதைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில், ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டு இருந்தேன். அதற்கு அடையாளமாக, இன்று காலையிலே, நாட்ராம்பள்ளியிலே கூட பரவியிருப்பதாகவும் 3 பேர்கள் மாண்டு இருப்பதாகவும், அது மட்டும் அல்லாமல், களமண்டியிலே—போளூர் ஏரியா—3 பேர்கள் மாண்டிருப்பதாகவும், எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. ஆகவே, இந்த நோய் காலரா நோய்தானா அல்லது வேறு ஏதாவது நோயா, இப்படி இறப்புகள் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பது ஆராய்ச்சிக்குப் பிறகுதான் தெரிய வரும். நான் அறிந்த மட்டில், கிணறுகளுக்கூட, சம்பந்தப்பட்டவர்கள் பயன்படுத்துகிற தண்ணீர் போன்ற வைகளை எல்லாம் அனுப்பியிருப்பதாக எனக்குத் தகவல். இந்தக் காலரா நோய் ஆண்டுக்காண்டு, நம்முடைய தமிழ்நாட்டிலே, ஒவ்வொரு கால கட்டத்திலே விஜயம் செய்து கொண்டிருந்தது. பலரைக் கொன்று கொண்டிருந்தது. ஆகையினாலே, அப்போதைய சர்க்கார் எல்லாம் முன்கூட்டியே தமிழகத்திலே சொல்வார்கள், ஆடி மாதத்திலே காலரா பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, எனவே முன் கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மருத்துவத் துறை முறையாக நடவடிக்கை எடுத்து தடுத்து வந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

ஆனால் இப்போது நாம் பார்க்கிற போது முறையான நடவடிக்கை மருத்துவத் துறையில் எடுக்கப்பட்டிருக்குமானால் வட ஆற்காடு மாவட்டத்தில் இதைப் போன்ற இறப்புகளைத் தடுத்து இருக்கலாம். என்னுடைய வருத்தமெல்லாம் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால்தான் இப்படிப்பட்ட இறப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை ஒரு குற்றச் சாட்டாகவே சொல்ல விரும்புகிறேன்.

மேலும் இதுதான் முதல் முறையாக இந்த அவையிலே பேசப்படுவது அல்ல. ஒவ்வொரு முறையும் அவை கூடும், அவ்வப் போது காலரா வந்து போகும். அது பற்றி நாம் பேசுவோம். இப்படி வரும் என்று தெரிந்து முன் கூட்டியே தடுப்பு நடவடிக்கை எடுக்காமல், வந்த பின்னால், பலரைக் கொன்ற பின்னால் இப்படி நடவடிக்கையில் இறங்குவது ஒரு நல்ல சர்க்காருக்கு அழகல்ல என்பது என்னுடைய கருத்து. நாங்கள் சென்னையில் கூட சொல்வோம். ஆடி மாதம், அதாவது ஆகஸ்ட் முதல் இந்த நோய் வரும். இப்போது ஒரு மாதத்திற்கு முன்னாலே வந்து இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டம் முழுவதும் இந்த நோய் பரவி இருக்கிறது. முறையான சிகிச்சை கூட இல்லை என்று தகவல் வந்திருக்கிறது. இங்கொன்றும் அங்கொன்றுமாக வெறும் ஊசி மட்டும் போடுகிறார்கள். மற்றபடி மருத்துவத் துறையில்

1985 ஜூலை 16] [திரு. ப. பொன்னுரங்கம்]

நல்ல முறையில் முறையான சிகிச்சை கூட இல்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதனால்தான் நாட்ராம்பள்ளி, போளூர் போன்ற இடங்களில் இதைப் போன்ற சாவுகள் தொடருகின்றன என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

அது மட்டுமல்ல, அங்கே சென்று பார்த்த டாக்டர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது என்ன தெரியுமா? இது காலரா அல்ல. காலரா நோயால் அவர்கள் இறந்துவிடவில்லை. அங்கு சென்று பார்த்த டாக்டர்கள் இப்படி கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் 13,000 பேர்களுக்கு காலரா நோய் தடுப்பு ஊசி போடப்பட்டது என்று அரசாங்கத் தரப்பில் சொல்லப்படுகிறது. காலரா இல்லை என்று சொல்வி, காலரா நோய் பரவாமல் தடுக்க தடுப்பு ஊசி போடப்படுகிறது என்று சர்க்கார் தரப்பில் சொல்லப்படுகிறது. காலரா இல்லை என்றால் ஏன் காலரா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்? எனவே அவர்கள் சொல்வதில் உண்மை இல்லை.

காலரா நோய் கண்டவர்களுக்குக் கூட இந்த அரசாங்கம். முறையான சிகிச்சை அளிக்கவில்லை, தடுப்பு நடவடிக்கை எடுக்க வில்லை என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடிய து. முறையான தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால் போளூர், திருவண்ணாமலையில் வந்ததோடு இது நின்று இருக்கும். ஏனோ தானோ என்று நடவடிக்கை எடுத்த காரணத்தால் நாட்ராம்பள்ளிக்கும் பரவியிருக்கிறது. வேறு பகுதிகளுக்கும் பரவக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டம் முழுவதையும் இது கொள்ளை கொண்டு விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது). கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டும். 11 பேர் செத்தார்கள். இன்று காலையில் இன்னும் 6 பேர் செத்திருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. அரசாங்கம் எடுக்கிற நடவடிக்கையின் இலட்சணம் இது. எனக்குக் கிடைத்த தகவல்களைச் சொல்கிறேன்.

போளூர் மருத்துவ மனையில் இருக்க வேண்டிய டாக்டர்களின் எண்ணிக்கை 6. அந்த 6 டாக்டர்களில் இப்போது பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் 4 டாக்டர்கள் தான். இப்படிப்பட்ட நெருக்கடியான கால கட்டத்தில் கூட காலி இடத்தை நிரப்பாமல், மருத்துவ மனையில் தேவையான மருந்து இல்லாமல், முறையான சிகிச்சை அளிக்காமல் ஏனோ தானோ என்று இருப்பதால் தான் இந்த காலரா நோய் வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை மாவட்டங்களுக்கும் பரவக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி விரைவாகப் பரவி வருவதற்கு காரணம் இந்த அரசாங்கத்தின் கையாலாகாத்தனம் தான் என்று என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1985 ஜூலை 16

மேலும் இது போன்ற நிலைமை வராமல் இருக்க வேண்டும். வந்த நோய்க்கு உடனடியாகத் தடுப்பு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். நோயைத் தடுத்து நிறுத்த அரசு உரிய நடவடிக்கை, போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும். இது போன்ற பல்வேறு பிரச்சனைகளை விரிவாகப் பேச வேண்டி இருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் காலரா, போளூரில் காலரா; தலைவாசலில் காலரா என்று தமிழ் நாடு முழுவதும் வேகமாக காலரா நோய் பரவி வருகிறது. திருவண்ணாமலையில் 7 பேர் பலியாகி இருப்பதாகவும் ஆஸ்பத்திரியில் 52 பேர் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது. கிளாம்பூர், வேட்டவலம் ரோடு, இராமலிங்கனார் நகர் ஆகிய பகுதிகளுக்கும் தீவிரமாக காலரா நோய் பரவியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

(முற்பகல் 11-00)

போளூரிலே நான்கு பேர் இறந்திருக்கிறார்கள். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் 12 பேர்கள். புற நோயாளிகளாக குழந்தைகள் 72 பேர்களும், பெண்கள் 135 பேர்களும், ஆண்கள் 130 பேர்களும் அங்கே சிகிச்சை செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதைப்போலவே தலைவாசலில் உள்ள அரிசனத் தெருவில் ஒருவர் இறந்திருக்கிறார். 20 பேர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக சட்டமன்ற உறுப்பினர் திருமதி இராசாம்பாள் அவர்கள் இங்கே தகவல் தந்திருக்கிறார்கள். போளூரில் வடாற்காடு மாவட்டத்தில் உள்ள காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் நேரிலே சென்று அந்தப் பகுதியிலே பார்வையிட்டு இருக்கிறார்கள்

திருவண்ணாமலையைப் பொறுத்த வரையில் அங்கே பரவி யுள்ள காலரா நோய் பற்றி அப்பகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் நேற்றைய தினம் என்னிடத்தில் தொலைபேசியில் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். திருவண்ணாமலையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சொந்த ஊர் அது என்பது தெரிந்த விஷயம். அந்தப் பகுதியில் எல்லாம் காலரா நோய் வெகு வேகமாகப் பரவி எத்தனையோ பேர்கள் செத்திருக்கிறார்கள் என்று சொன்னால், விஞ்ஞானமும் மருத்துவமும் வளர்ந்துகொண்டு வருகின்ற இந்த நாட்களில் இவ்வளவு கொடுமையான வகையில் சாவுகள் வருவது என்பது மிகவும் துர்பாக்கியமானது.

அங்கே தற்கால நிவாரணமாக ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்திருந்தால் அந்தச் சாவுகளைத் தடுத்திருக்கலாம் என்று நான் நம்புகிறேன். செத்தவர்களில் ஒருவரைக்கூட நம்மால் திருப்பித் தர முடியாத நிலையில் இருக்கிறோம். அந்த நிலை யில் இந்த அரசு இப்படி இத்தனை உயிர்களைப் பலி வாங்கி இருக்கின்றது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இப்படிப் பட்ட சாவுகள் இனிமேலும் தமிழகத்தில் ஏற்படாத வகையில் நாம் அப் பிரச்சினை குறித்துப் பேசவேண்டி இருப்பதால் இந் தப் பிரச்சினையின் அவசர முக்கியத்துவத்தைக் கருதி இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு இப் பிரச்சினை குறித்து விவாதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலும், போளூர் என்ற இடத்திலும் காலரா நோயால் பாதிப்பு ஏற்பட்டதன் காரணத் தால் 11 பேர் இறந்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக் கின்றது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் ஒரு சில தகவல்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். 52 பேர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக— அதாவது மருத்துவ மனையில் இன்-பேஷன்ட் என்ற முறையில் அட்மிட் பண்ணப் பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறார்கள். வேட்டவலம், இராமலிங்க நகர் போன்ற இடங்களைச் சேர்ந்த 74 குழந்தை களும், 135 ஆண்களும், 135 பெண்களும் அவுட்-பேஷன்ட் என்ற முறையில் அங்கே சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய செய்தி என்ன வென்றால் மருத்துவர்கள் இதனைக் காலரா அல்ல என்று மறுத் திருக்கிறார்கள் என்பதாகும். ஆனால் அதே நேரத்தில் 13,000 பேர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது என்றும் சொல் லப்படுகிறது. இவ்வாறு தடுப்பூசி போடுவதை முன்னாலேயே செய்திருந்தால் இந்த 11 பேர்களும் இறந்திருக்க மாட்டார்கள்; அவர்களைப் பாதுகாத்திருக்க முடியும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொது சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் இன்று சேனிட்டரி கன்டிஷன் மெய்ன்-டெய்ன் பண்ணுவதில் அது ரொம்ப மோசமான நிலையைக் கையாண்டு வருகின்றது என்று நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலும் கூட இன்று அனேகமாக நம் அனைவருக்கும் தெரியும். பத்திரிகை யில் கூட வந்திருக்கின்றது. இன்டியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளில் கட்டுரை கூட எழுதப்பட்டிருக்கின்றது. கொசுக்களின் தொல்லை இன்று சென்னை நகரத்தில் வளர்ந் திருக்கின்றது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன நட வடிக்கையை இந்தச் சுகாதாரத் துறை எடுத்திருக்கின்றது என் பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூலை 16

அதுமட்டுமல்ல. சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் என்னால் நேரடியாகச் சொல்ல முடியும். அவர்களிடத்திலே இப்படிப்பட்ட பிரச்சினைகளைக் கொண்டு சென்றபோது பல இடங்களில் காலதாமதத்தை அவர்கள் ஏற்படுத்துகிறார்கள். போதுமான அளவுக்கு, அதாவது காலாகாலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கையை அவர்கள் எடுத்துக்கொள்வதில்லை. ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் மருதங்கோடு என்ற இடத்தில் ஒரு ஹைஸ்கூல் இருக்கின்றது. அங்கே ஏறத்தாழ ஆயிரத்திற்கு அதிகமான மாணவ, மாணவியர் படிக்கிறார்கள். அங்கே ஒரு லெட்ரின் இருக்கின்றது. அங்கே இருப்பவர்கள் அந்த லெட்ரின் காரணமாக பல தொல்லைகளை அடைந்து வருகிறார்கள். ஆகவே இதிலிருந்து எங்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என்று மனு கொடுத்து 3 வருடங்கள் ஆகியும் இன்னும் அந்த பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட், எந்த அளவுக்கு என்ன பாதுகாப்பு கொடுக்க வேண்டுமோ, அல்லது எந்த முறையில் அதைச் சீர்திருத்தியிருக்க வேண்டுமோ, அந்த முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. இதை ஒரு எடுத்துக் காட்டிற்காக நான் சொன்னேன்.

ஆகவே இந்த பப்ளிக் டிபார்ட்மெண்ட்டைப் பொறுத்தவரையில் சானிடரி கண்டிஷன்களின் காரணமாக பாதிப்பு ஏற்படக்கூடிய நிலையில், என்னென்ன நடவடிக்கைகள், முன் எச்சரிக்கை என்ற முறையில், பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற முறையில், எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அந்த முறையில் எடுத்துக் கொள்வதில்லை. அதேபோல இப்படிப்பட்ட பிரச்சினைகள் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படக்கூடிய நேரத்தில் அதிலே என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அதையும் காலா காலத்தில் எடுக்காமல் காலதாமதம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற காரணத்தினால் தான்—இது போன்ற—தற்போது திருவண்ணாமலையிலே போளூர் என்ற இடத்தில் இப்படி 11 பேர்கள் காலரா நோயினால் இறந்திருக்கிறார்கள். அது காலரா நோய் அல்ல என்று மருத்துவர்கள் கூறினாலும், 11 பேர்கள் இறந்திருக்கிறார்கள். 13 ஆயிரம் பேர்களுக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டிருக்கிறது.

காலரா அல்ல என்றால் அது மாதிரி வேறு ஒரு முக்கிய மான நோயினால் இறந்திருக்கிறார்கள் என்பது சந்தேகம் இல்லை. ஆகவே இந்த நேரத்திலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்படியாக நான் வேண்டிக் கொள்வது என்னவென்றால், இந்த பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட் சானிடரி கண்டிஷன்களைப் பொறுத்தவரையில் காலாகாலத்திலே முன் நடவடிக்கை

1985 ஜூலை 16] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

எடுக்க வேண்டும். ஆகவே அவைபற்றி விரிவான முறையில் விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகராட்சிப் பகுதியில் 23–6–1985-லிருந்து 15–7–1985 வரை வாந்தி பேதி நோய் ஏற்பட்டு மொத்தம் 401 பேர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 9 இறப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த நோய் குறித்து கீழ்க் கண்ட காரணங்கள் தெரிய வருகின்றன :—

(1) முன் எப்பொழுதும் இல்லாத வகையில் மாம்பழங்களின் பெருக்கத்தினால் ஏற்பட்ட ஈக்களின் பெருக்கம்.

(2) தூய்மையற்ற குடிதண்ணீரை மக்கள் பயன்படுத்துவதால்.

(3) பழுதடைந்த கழிவறைகளிலிருந்து, மலக் கழிவு நீர் மேற்புறம் திறந்திருக்கும் பைப்புகளின் வழியாக வெளியேறுதல்.

இந்நோயிலிருந்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து சுகாதாரக் கல்வி பிரிவு அச்சடித்த பிரதிகளை பொது மக்களுக்கு விநியோகம் செய்துள்ளது.

திரைப்பட அரங்குகளில் விளம்பரம் மூலம் காய்ச்சிய நீரைக் குடிக்கவும், சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவும், இலவச தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளவும்; திறந்த பைப்புகளின் அருகில் பள்ளம் தோண்டப்பட்டு Pit tanks என்று சொல்வார்கள், அப்படி தோண்டப்பட்டு அமைக்கப்பட்டுள்ள குழாய்களின் மூலம் கிடைக்கும் தூய்மையற்ற தண்ணீரை மக்கள் குடிக்க வேண்டாம் என்றும்-சில நேரங்களில் தண்ணீர் வரவில்லை என்று, இதிலே குழாய் இறக்கி தண்ணீரை எடுத்துப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அப்படி எடுக்கின்ற தண்ணீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தகைய குழாய்களை எல்லாம் உடனடியாக மூடும்படியாகவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

அதோடு நோய் தடுப்பிற்குத் தேவையான மருந்துகள் இருப்பில் இருக்கின்றன. 99,800 மக்கள் தொகை உள்ள அந்த நகராட்சியில் இதுவரை 14,899 நபர்களுக்குக் காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 51 பேர்களின் மலம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் யாருக்கும் காலரா நோய் ஏற்படுவதாகத் தெரியவில்லை. In 51 cases motion Examination was conducted. தக்க சூழ்நிலையில் நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

[டாக்டர் எச்.வி. ஹண்டே] [1985 ஜூலை 16

வேலூர் வட்டார உதவி இயக்குநர் இப்பகுதிக்கு சென்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு, தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். திருவண்ணாமலைப் பகுதி, தற்போது பொதுச் சுகாதார பணியாளர் கண்காணிப்பில் உள்ளது. நிலைமை கட்டுக்குள் உள்ளது. போளூரில் 79 பேர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டு போளூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 15-7-1985 அன்றைய நிலவரப்படி 13 நபர்கள் மட்டும் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். இறப்பு எதுவுமில்லை. வேலூர், வாணியம்பாடி, ஆம்பூர் பகுதிகளில் இந்த நோய்த் தடுப்பு நடவடிக்கை பொதுச் சுகாதார அலுவலர்களால் எடுக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடிபார்வையில் மாவட்ட சுகாதார அலுவலர்கள், செயல் அலுவலர்கள், நகரப் பஞ்சாயத்துக்கள் ஆகியோர் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்த நோய் மேலும் பரவாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 11—10)

மாநிலம் முழுவதும் உள்ள நிலைமை அச்சம் தரும் வகையில் இல்லை. வயிற்றுப் போக்கு நோயால் 1985-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் மாநிலம் முழுவதும் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 606. அதிலே இறந்தவர்கள் எண்ணிக்கை 15. சென்ற 1984-ம் ஆண்டு ஜூன் மாதம் 616 நபர்கள் பாதிக்கப்பட்டதிலே 16 பேர்கள் இறந்தார்கள். காலரா நோயால் மாநிலத்தில் ஜூன் 1985-ல் 82 பேர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதிலே 69 பேர்கள் சென்னை நகரத்தைச் சேர்ந்தவர்கள். இறப்பு ஒன்றுமில்லை. நிலைமை கட்டுப்பாட்டிற்குள் உள்ளதால் சபையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டாம் என்று தெரிவித்து, அதற்கு முன் இன்னொரு விஷயத்தைத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்குமென்று நம்புகிறேன்.

நாம் எந்த அளவிற்குச் சுறுசுறுப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்றால், நல்வாழ்வுத் துறை செயலாளர் அவர்களிடம் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கின்ற நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இதில் நேரடியாக கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதுகுறித்த குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பின் ஒரு பகுதியை மட்டும் நான் படிக்கிறேன்.

1985 ஜூலை 16] [Dr.H.V Hande]

"I visited both Vellore and Ambur towns on 6-5-1985, accompanied by the District Health Officer, Vellore. Hereagain I have particular mention to make about the environmental background of these towns. Vellore, Ambur, Tiruppattur, Peranampet areas are now much better. This year, due to breeding of flies coupled with the arrival of large scale of mangoes, this problem has arisen recently. The District Health Officer, Vellore and the Municipal Commissioners concerned have already taken adequate measures to prevent the further extension of the epidemic.

On 6-5-1985, I visited— I mean the Collector—Vaniambadi town, Muslimpur, Govindapuram, Kamarajapuram areas, where concentration of people is dense and checked the sanitary conditions prevailing in these places. I also visited the Government Hospitals where the concentration of people is dense and checked the sanitary conditions prevailing in these places. I also visited the Government hospital at Vaniambadi where at present 10 persons were affected and recciving treatment.

I visited the house of Selvi Sabi Bai, one of the affected persons who is making good progress after treatment at the Government hospital. I also visited the house of another affected person by name Arunachalam.

எனவே பல்வேறு வகையில் நமக்குச் செய்தி கிடைத்தவுடனே, கலெக்டரிடம் டெலிபோனில் தொடர்பு கொண்டு பேசிவிட்டு, செக்கரட்டரி அவர்களிடத்தில் உடனடியாக போர்க்கால நடவடிக்கையாக இதனை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொன்னதின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதனைக் கட்டுப்படுத்தி இருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அச்சத்தை இங்கே வெளிப்படுத்தி இருந்தாலும் கூட, நிலைமைகளைக் கட்டுக்குள் அடக்கி இருக்கிற காரணத்தால், எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிற காரணத்தால், அவையினுடைய இதர நடவடிக்கைகளை மேலும் ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

5. அறிவிப்பு.

மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. 1985-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985).

2. 1985-ம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளை கையகப் படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1985).

3. 1985-ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 39/1985).

6. கவன ஈர்ப்பு.

(அ) வேளச்சேரியிலுள்ள டி. அண்ட் எச். எலக்ட்ரோட்ஸ் நிறுவனம் கதவடைப்பு செய்துள்ளது.

திரு. சா. துரைசாமி : துணைத் தலைவர் அவர்களே, சென்னை வேளச்சேரியில் உள்ள டி அண்ட் எச். எல்க்ட்ரோட்ஸ் அண்டு கம்பெனி அங்கு பணிபுரியும் சுமார் 130 தொழிலாளர்களுக்குக் க்டந்த இரண்டு மாதகாலமாக ஊதியம் வழங்காமலும் 1—7—1985 முதல் கதவடைப்பு செய்துள்ளதாலும், அங்கு பணிபுரியும் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை, வேளச்சேரியிலுள்ள டி.அண்ட்.எச். எலக்ட்ரோட்ஸ் என்னும் நிறுவனத்தில் வெல்டிங் பணி (Welding wo ks) நடைபெறுகிறது. சுமார் 118 தொழிலாளர்கள் நிறுவனத்தில் பணிபுரிகின்றனர். சென்னை, செங்கல்பட்டு, ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன் என்னும் சங்கம் நிறுவனத்தில் இயங்குகிறது.

நிர்வாகம் தனது 29—6—1985 நாள் அறிவிப்பில் 14—3—1985 அன்று நிர்வாகம் அரசுக்குக் கொடுத்த மூடுதல் அறிவிப்பின்படி நிறுவனம் 1—7—1985 முதல் மூடப்படும் என்று அறிவித்தது. தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய நட்ட ஈட்டுத் தொகையும் அனுப்பப்பட்டது என்று நிர்வாகம் அதில் தெரிவித்தது. அதன் படி 1—7—1985 முதல் நிறுவனம் மூடப்பட்டது. கீழ்க்கண்ட காரணங்களுக்காக நிறுவனம் மூடப்பட்டதாக நிர்வாசம் தெரிவித்தது :—

1. நிறுவனம் தொடர்ந்து 4 ஆண்டுகளாக நட்டத்தில் இயங்கி வருகிறது.

2. நிர்வாகச் செலவுகளை (தொழிலாளர்கள் ஊதியம் உட்பட) சமாளிப்பதற்கு பண வசதியில்லை.

3. நிதி உதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வரவில்லை.

4. வியாபாரத்தில் போட்டி காரணமாக விற்பனையில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

தொழில் தகராறு சட்டப்பிரிவு 25-எப் எப். ஏ-ன்கீழ் நிர்வாகம் 30-3-1985 அன்று நிறுவன மூடுதல் பற்றி ஒரு அறிவிப்பு கொடுத்துள்ளது. தொழிற்தகராறு சட்டப்பிரிவு 25-ன் கீழ் நிறுவனத்தை மூட அனுமதி கோரி நிர்வாகம் அரசுக்கு விண்ணப்பித்துள்ளது, அந்த விண்ணப்பத்தில் சில குறைபாடுகளிருந்ததால் அது நிர்வாகத்திற்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளது.

நிறுவன மூடுதல்பற்றி எழுப்பப்பட்ட தொழிற்தகராறில் சென்னை, முதல் தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சுவார்த்தைகள் நிலுவையிலுள்ளன. இப்பேச்சு வார்த்தைகளின்பொழுது தொழிலாளர்களுக்கு 1985 மே மற்றும் ஜூன் மாத சம்பளம் வழங்கப்படவில்லை என்று சங்கம் தெரிவித்தது. நிறுவனம் மூடுவது பற்றிய அறிவிப்பினை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று நிர்வாகத்திடம் துணை ஆணையர் கேட்டுக் கொண்டதில், சுமார் 103 லட்சம் வரை நட்டம் ஏற்பட்டதால் நிறுவனத்தை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று நிர்வாகம் தெரிவித்தது. துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் இன்னும் முடிவுறவில்லை. இத்தொழிற் தகராறை பேச்சு வார்த்தைகள் மூலம் சுமுகமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவா அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருப்பதைப் போல பேச்சு வார்த்தை முடியாத ஒரு சூழ்நிலையில் சட்டவிரோத கதவடைப்பை அந்த நிர்வாகம் மேற்கொண்டு இருக்கிறது. அது மாத்திரம் அல்ல, அங்கே 11 ஆண்டுக் காலமாக தடைபெற்றுக் கொண்டு வருகிற அந்தத் தொழிற்சாலை நஷ்டத்திலே இயங்கிக் கொண்டு இருக்கிறது என்ற அந்த சூழ்நிலையைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இது ஒரு தவறான தகவலாகும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தொழி

[திரு. சா. துரைசாமி] [1985 ஜூலை 16

வளர் நலத்துறை ஆணையாளர் அவர்களும், தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் பங்கு பெற்ற ஒரு குழுவை அமைத்து, அந்தத் தொழிற்சாலை நஷ்டத்திலே இயங்குகிறதா அல்லது லாபத்திலே இயங்குகிறதா என்ற உண்மைகளைக் கண்டறியவும், இன்றைக்கு தொழிலாளர்களுக்கு ஏற்பட்டு இருக்கின்ற அந்த இன்னல்களை நீக்கவும், அந்த நிர்வாகத்தை நடந்திக் கொண்டு இருக்கின்ற நிர்வாகிகளில் ஒரு சிலர் செய்த தவறின் காரணமாக அங்கே ஏற்பட்டு இருக்கின்ற உண்மை நிலையை மாற்றி, ஒரு தவறான தகவலை அரசுக்கும் உரிய முதலாளிகளுக்கும் தந்து கொண்டு இருக்கிற அந்தச் சூழ்நிலையைக் கண்டறிந்து, இன்றைக்குச் பாதிக்கப்பட்டு இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரண நடவடிக்கை எடுக்கின்ற வகையில் துரிதமாக அந்த நிர்வாகத்தைத் திறக்கவும், அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. துரிதமாக அது முடிய தக்க ஏற்பாடு செய்து, பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன, அந்தக் கருத்துக்களை எல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டு, ஒரு சுமுகமான தீர்வு காண அரசு முயலும்.

திரு. சா. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்புக்கு நன்றி. ஆனால் அவர்கள் பேச்சு வார்த்தை முடியாத ஒரு சூழ்நிலையில் சட்டவிரோதமாக கதவடைப்பு செய்திருக்கிறார்கள். செய்தது மாத்திரம் அல்ல, 103 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொல்லி, நாங்கள் கம்பெனியை லாக்-அவுட் செய்துவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இதிலே ஒரு துரித நடவடிக்கையாக உடனடியாக 15, 20 நாட்களுக்குள்ளாக ஒரு தீர்வு ஏற்படுகின்ற வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் இன்றைக்குத் தொழிலாளர்களைக் காப்பாற்ற எடுத்துக்கொண்டு இருக்கிற நடவடிக்கைகளின் விளைவாக துரிதமாக ஒரு மாதத்திலே திறக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம் நாசரேத் குடிநீர் திட்டத்தின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்குவது

திரு. எஸ். என். ராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " நாசரேத் குடிநீர்த் திட்டத்தின் மூலம் தேவையான குடிநீர் கிடைக்காததால் அப்பகுதிவாழ் மக்கள் படும் இன்னல்கள் குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1985 ஜூலை 16]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டம், நாசரேத் பேரூராட்சி மக்களுக்கு சு. 24.95 லட்சம் மதிப்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தால் நிறைவேற்றப்பட்டுள்ள குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடிநீர்த் திட்டம் 27-2-1985 முதல் பேரூராட்சியின் பராமரிப்பில் இருந்து வருகிறது. இக்குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் இரண்டு நீர் உறிஞ்சு கிணறுகள் அமைக்கப்பட்டு அவற்றிலிருந்து நீர் 3 குதிரைத் திறனுள்ள மின் நீரேற்றுகள் மூலம் நீர் சேகரிக்கும் பொதுத் தொட்டிக்குக் கொண்டு வரப்படுகிறது. பின்னர், 200 மி.மீ. விட்டமுள்ள கல்நார் குழாய்கள் மூலம் 7,690 மீ. நீளத் திற்கு 20 குதிரைத் திறனுள்ள மின் நீரேற்றுகள் மூலம் உந்தப் பட்டு 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் நிரப்பப்படுகிறது. அங்கிருந்து குடி தண்ணீர் 12.386 கி.மீ. நீளமுள்ள பகிர்மானக் குழாய்கள் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி நாசரேத் பேரூராட்சியின் மக்கள் தொகை 14,302. நாசரேத் குடிநீர்த் திட்டத் தின் மூலம் தற்போது பொதுமக்களுக்கு நாள் ஒன்றுக்கு 4 லட்சம் லிட்டர் குடிநீர் 38 பொதுக் குழாய்கள் மூலம் வழங்கப்படுகிறது. தினமும் காலையில் 3 மணி நேரமும் மாலையில் 2 மணி நேரமும் இக்குழாய்கள் மூலம் நீர் வழங்கப்படுகிறது. நாசரேத் பேரூராட்சி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 11-20)

திரு. எஸ். என். ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 27-2-1985-ல் பேரூராட்சிகளுக்கு உரிய பராமரிப்புக்கு வழங்கப் பட்டதாக சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் கடந்த 31-1-1985 ஆம் தேதி அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் உகம்சந்த் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் என்ற சாரணத்திற்காக நானும், அங்கே சென்று, அந்தக் குடிநீர் திட்டத்தை திறப்பதற்கு ஒரு விழா வைத்திருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ அவசர காரியமாக சென்னைக்கு வந்துவிட்டபடியால் அவர்கள் இல்லாது நாங்கள் 3 பேர்களும் சேர்ந்து இந்தத் திட்டத்தைத் திறந்து வைத்துவிட்டு, அங்கே பெரிய நீர்த் தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் வருவதற்கான பைப்புகள் சரியான முறையில் இல்லை, அதை உடனடியாகச் சரி செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்துவிட்டு வந்தோம். இன்று

[திரு. எஸ்.என். இராமசாமி] [1985 ஜூலை 16

யானைப்பாலம் என்ற இடத்தில் அந்த பைப்புகள் வந்து வளை வாக இருப்பதாகவும், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் எடுக்கும் அந்த யானைப்பாலத்தில் உடைப்பு ஏற்பட்டு ஏற்கனவே தெருக்களுக்கு வந்து கொண்டு இருந்த லைன்களும் கெட்டு விட்டு அங்கே தண்ணீர் வர முடியாத நிலை ஏற்பட்டி ருக்கிறது. ஆகவே, தெருக்களில் 38 குடிநீர் பைப்புகள் இருந்து வந்தன. உடைந்த பைப்புகளை உடனடியாக மாற்றி புதிய பைப்பு களை அமைத்து குடிநீர் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கின்ற குறிப்புகளைக் கவனத்தில் எடுத்து அவை களை நீக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என் பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாசரேத் நகராட்சியைப்பொறுத்த வரையில் 15 ஆயிரம் மக்கள் தொகை அந்த நகராட்சியில் இருப் பதன் காரணமாக 500 வீடுகளுக்கு உடனடியாக குடிநீர் வேண் டும் என்று நகராட்சியில் பணம் கட்டப்பட்டு இருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்த வீடுகளுக்கு குடிநீர் கொடுப்பதற்கு அரசு நட வடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி தொடங்கப்பட்டு இருப்பதாக தகவல் தெரிவித்து இருக்கிறார்கள். தொடர்ந்து அந்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

7. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனிவகை முறைகள்) திருத்த சட்ட முன் வடிவு 1985.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்:

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

1985 ஜூலை 16]

(ஆ) நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்.

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம்செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த உச்ச வரம்பு சட்டத்திற்காக கொண்டு வந்து இருக்கக் கூடிய இந்தத் திருத்தச் சட்டத்தை நான் அறிமுக நேரத்திலேயே அரசு இதை திரும்பப்பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற என்னு டைய ஆட்சேபனையையும் எதிர்ப்பையும் மார்க்சிஸ்டு கம்யூ னிஸ்டு கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டு இருக்கக்கூடிய காரண நோக்க விளக்க உரைகள் பொருந்தக் கூடியவையாக இல்லை. 1961 ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட காலத் திலேயேஇந்த அறக் கட்டளைகளுக்கு இருக்கக்கூடிய நிலங்களுக்கு பூராவும் வரம்பு கட்டவேண்டும் என்று சொல்லப்பட்டது.

இருந்தாலும் இந்த பொது அறக் கட்டளைகளுக்கும், பப்ளிக் டிரஸ்டுகளுக்கும் அவர்கள் நிலங்கள் வைத்துக்கொள்ளலாம் என்று அதிலே திருத்தம் செய்யப்பட்டு பல்வேறு முறைகளிலே நிலத்தை மாற்றி வைத்துக்கொள்ளுவதற்கான வகைகள் பூராவும் செய்யப்பட்டு இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் இருக்கக் கூடிய பல்வேறு கல்வி நிறுவனங்கள், குறிப்பாக அண்ணாமலை பல்கலைக் கழகம் போன்றவைகள், அதேபோல தஞ்சைமாவட்டத் தில் இருக்கின்ற பூண்டிகல்லூரி; குப்பம்கல்லூரி; மாயவரத்தில் இருகின்ற ஏ.வி.சி. கல்லூரி போன்ற கல்லூரிகள் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை தங்களுடைய கல்வி நிறுவனங்கள் டிரஸ்டு என்ற பெயரிலே வைத்துக்கொண்டு அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையையும் ஏற்படுத்தி நாட் டில் மிகப்பெரிய வறுமைக்கும், வேலைவாய்ப்பும் இல்லாமல் இருக்கக்கூடிய கிராமப்புற மக்களின் துன்பத்தை போக்குவதற்கு உபரி நிலங்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு சூழ்நிலைகளை ஏற் படுத்தவேண்டும். அதற்கு அடிப்படையாக இருப்பது இந்த பப்ளிக் டிரஸ்ட் என்று சொல்லக்கூடிய பொது அறக் கட் டளைகள் நிலங்களை வைத்துக்கொள்ளலாம் என்பதை அதற்கு ஒரு அளவு வைத்து கொள்ளலாம் என்ற நிலையை மாற்றி, அதுவே இந்த அளவுக்கு நிலம் கிடைக்க முடியாத அளவுக்கு நிலைமை களை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே, நேற்று கூட நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் எங்கே குறிப்பிடும்போது பினாமி நில ஒழிப்புச் சட்ட
வந்து நிறைவேற்ற இருக்கிறே

[திரு கோ. வீரய்யன்] [1985 ஜூலை 16

பட்ட ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு கொண்டு வந்து இருக்கக் கூடிய இந்தச்சட்ட முன்வடிவு அரசின்அடிப்படைத் கொள்கைக்கே மாறாக, நான் இந்த நேரத்தில் அரசிடமிருந்து அவை முன்னவர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளவிரும்புவது சபைத் தலைவர் அவர்கள் மூலமாக, நில சீர்திருத்தத்தின் கொள்கையை அரசு கைவிட்டுவிட்டதா ? .. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆய்வுக்கு வரும்போது, விரிவாகப் பேசுங்கள், அறிமுக நிலையிலே எதிர்க்கிறபோது, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு மாறுதலாக இருக்கிறதா, முன்னுக்குப் பின் முரணாக எது இருக்கிறது என்று மட்டும் தான் சுருக்கமாகப் பேசவேண்டும் சிக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. கோ. வீரய்யன் : குறிப்பாக, இந்த நில உச்சவரம்புச் சட்டத்தில் அரசியல் சட்டத்தினுடைய நோக்கம் என்பதை நிறை வேற்றுவதற்குத் தான், குடியிருக்க இருக்கக்கூடிய நிலங்களை எடுத்து, நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிப்பதற்காகத் தான் உச்சவரம்பு விதிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாக, மேலும் பப்ளிக் டிரஸ்டுகளுக்கு நிலத்தினை வாங்குவதற்கு—விளை நிலம், பப்ளிக் டிரஸ்டுக்கு தேவை இல்லாதது—கட்டிடங்கள் கட்டுவதற்கு, அந்த நிர்வாகங்கள் வைத்துக் கொள்வதற்கான நிலங்களுக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை; கல்வி நிறுவனங்களோ அல்லது மருத்துவ நிறுவனங்களோ, அதற்கு தனியாக விவசாய நிலங்களை பப்ளிக் டிரஸ்ட் என்ற முறையில் வைத்துக்கொள்வதற்கு வகை செய்யக்கூடியதை, அதாவது இருக்கக்கூடிய அந்த அனுமதியையே ரத்து செய்யவேண்டிய நேரத்தில், அதற்கு மேலும் நிலம் வாங்கிக் கொள்ளலாம் என்ற வகையில் செய்யக்கூடியதை, இந்தச் சட்டத் திருத்தத்தை அவை முன்னவர் அவர்கள் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டு, இதை நான் ஆரம்பத்திலேயே எதிர்க்கிறேன்.

திரு. சு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்களால் இங்கே முன் மொழியப்பட்டு இருக்கிற தமிழ்நாடு நிலச்சீர்திருத்த, சட்ட முன் வடிவை நான் நுவக்கக் கட்டத்திலேயே கடுமையாக எதிர்க்கிறேன். இந்த மாநில அரசு, தான் இது வரையிலும் சொல்லி வந்த கொள்கை அறிவிப்புகளிலிருந்து முற்றாக தடம் புரளுகிற முறையிலேயும், நிலங்களைத் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்கக்கூடிய போர் வழிகள் ஏமாற்றுவதற்குரிய, சரியான சந்து பொந்துகளை உருவாக்கித் தருகிற முறையிலேயும் தான் இந்தச் சட்ட முன் வடிவு முன் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே அதற்கான காரணமாக மாநில அரசின் தரப்பிலே சொல்லப்பட்டிருக்கிற விஷயம், நம்ப முடியாத நகைப்புக்குள்ளான விஷயம் ஆகும். இப்படி. கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்தலை தடலை தான் நாங்கள் சொல்லமுடியும்? அறிமுக ஸ்டேஜிலே பேசும்போது, விரிவாகப் பேச முடியாது (குறுக்கீடு) கன்சிடரேஷனுக்கு வரும் போது தான், 'ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்'லே அரசின் தரப்பிலே

1985 ஜூலை 16] [பேரவைத் துணைத் தலைவர்]

சொல்லி இருப்பது சரியா தவறா என்றும் விவாதிக்க வேண்டும். அப்போஸ் பண்ணுகிற நேரத்திலே அரசியல் அமைப்புச் சட்டத் திற்கு இன்ன காரணத்தினால் விரோதமாக இருக்கிறது என்று தான் பேச வேண்டும். இனிமேலாவது, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் கடுமையாக இதனை கடைப்பிடிக்க வேண்டும். நிறைய பில்கள் இருக்கின்றன. இப்போதே மணி 11-30 ஆகி விட்டது. சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

திரு. சு. சுப்பராயன் : துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து நான் சொல்லி முடித்து விடுகிறேன். ஏன் எதிர்க்கிறேன் என்பதற்கான காரணத்தினை சொல்ல விரும்புகிறேன். அரசின் தரப்பிலே சொல்லப்பட்டிருப்பது, கல்வி நிறுவனங்களுக்கு இடப் பற்றாக்குறை இருப்பதாக முறையீடுகள் அரசுக்கு வந்திருப்பதால் இந்தச் சட்ட முன் வடிவு கொண்டு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பல்வேறு துறைகளில் ஆயிரக் கணக்கான முறையீடுகள் அரசுக்கு வந்திருந்தும் அந்த முறை யீடுகளை எல்லாம் கவனிக்க விரும்பாத அரசு, இந்த முறை யீடுகளில் இவ்வளவு அக்கறை செலுத்துவது நிலப்பிரபுக்களை பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு என்ற நிலையி லிருந்து நான் இதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி விரிவாக இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது விவாதிக்க லாம் என்றாலும் கூட, தமிழ்நாடு நிலச் சீர்திருத்த உச்சவரம்புச் சட்டம் அப்படியே தான் இருக்கிறது. அது முற்றிலும் மாறவும் இல்லை. தடம் புரளவும் இல்லை. ஆனால் அத்தகைய கருத் துக்களிலே, அந்தச் சட்டத்திலே சில பல விதிவிலக்குகள் தர லாம் என்றும் இருக்கிறது. நாம் சிறந்த நோக்கத்தின் அடிப் படையில் கொண்டு வருகிறோம். கல்வியினுடைய விரிவாக்கம், மருத்துவமனையினுடைய விரிவாக்கம் ஆகியவற்றிலே இப்போது சட்டத்திலே இடம் இல்லாத அந்தக் காரணம் இருக்கிறது.

ஆகவே, பொதுப் பொறுப்பாட்சி என்றால் எல்லோருக்கும் தந்து விடுவது அல்ல. எவ்வளவோ பேர் விதிவிலக்குத் தர வேண்டும் என்று கோருகிறார்கள். ஆயிரக்கணக்கானவர்களுக்கு நாம் மறுத்துக் கொண்டிருக்கிறோமே தவிர, எல்லோ ருக்கும் தருவது இல்லை. நிபந்தனைகளின் அடிப்படையில் தான் அது எல்லாம் நடைபெறும். நல்ல நோக்கத்தை நிறை வேற்றுவது என்ற நோக்கத்தில் தான் கொண்டு வரப்படு கிறதே தவிர, சட்டத்தைக் குலைக்கவேண்டும் என்றோ அல்லது நிலப்பிரபுவுக்கும், இதற்கும் சம்பந்தமோ இல்லை. அவர்களுடைய நில உச்சவரம்புச் சட்டம் அப்படியே தான் இருக்கிறது. அவர்களைப் பொறுத்த என்ன கட்டுத்திட்டம் இருக்கிறதோ, அது அப்படியே தான் இருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 16

ஆகவே, கல்வித் துறை, மருத்துவத் துறையினுடைய விரிவாக்கம், சில பொறுப்பாட்சித் தன்மைகள் பொது நன்மைகள் கருதி, பொது மக்கள் நன்மை பெறுகிற வகையில் அமையுமானால் அப்படிப்பட்டவர்களுக்கு நிபந்தனைகளுடைய அடிப்படையில் தான் தரப்படுகிறது. அவற்றை எல்லாம் விரிவாக விவாதத்தில் எடுத்துச் சொல்லலாம் என்று கூறி, இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

(முற்பகல் 11.30.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1985.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. வி. பி. சிந்தன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே நான் இதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பார்க்கின்றபொழுது, Public charitable or religious trust or industrial undertaking to apply to the State Government for permission to sell the vacant land for certain purposes அப்படி ஆரம்பிக்கப்படுகிறது. மத ஸ்தாபனங்கள், பொது நிறுவனங்கள், தொழிற்சாலைகள் இவர்களுடைய நிலங்களை விற்பனை செய்யும் அதிகாரத்தை—இன்றைய சட்டப்படி அதிகாரம் இல்லை, அவர்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்கினால் அவர்களால் எப்படி அது துஷ்பிரயோகப் படுத்தப்படும் என்ற விளக்கத்திற்குள்ளே நான் போகவில்லை. நிச்சயமாக

1985 ஜூலை 16] [திரு வி. பி. சிந்தன்]

இந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. கல்லூரி கட்டுவதற்கு நிலம் இல்லை.; நேற்று ஐ.பி.எஸ், ஐ.ஏ.எஸ். மாணவர்களுக்கு இடம் பற்றிப் பேசும்பொழுது மதிப்பிற்குரிய அமைச்சர், கேட்ட உறுப்பினரைப் பார்த்து இடம் எங்கேயாவது தேடிக் கொடுப்பீர்களா என்று கேட்டார்கள், நான் மிகப் பணிவன்போடு வேண்டிக்கொள்கிறேன், சென்னை நகரத்திலேயும், அருகாமையிலேயும் உள்ள பெரு முதலாளிகளும் மத ஸ்தாபனங்களும் ஏராளமான மத ஸ்தாபனங்கள் கையடக்கி வைத்திருக்கிறார்கள். அந்த ஆயிரக்கணக்கான வீடுகள் உள்ள நிலத்தை விற்றால் அவர்கள் நிலை என்ன? அவர்கள் அப்புறப் படுத்தப்படுவார்கள். ஆகவே, இந்தச் சட்டமானது, அரசியல் சட்டத்தினுடைய நோக்கத்திற்கு, எந்த இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமோ அதற்கும் விரோதமானது. ஆகவே, ஆரம்ப நிலையில் என்னுடைய முழுக் கருத்தும்,

With all the force at my command I oppose it.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் முதல் சட்டத்திற்குக் கூறியபடி, இது கல்வி நிலையங்கள், மருத்துவ நிலையங்களின் விரிவாக்கங்களுக்குப் பயன்படுகின்றது என்பது மட்டுமல்லாமல், தொழில் நிறுவனங்கள் பயன்படுத்தும் வகையில் என்று போட்டிருப்பதற்குக் காரணமே, இப்பொழுதே ஒரு தொழிற்சாலைக்கு நகர உச்சவரம்பிலே மிகுதி இருக்குமேயானால் அவர்கள் எக்ஸ்பேன்ஷன் பண்ணுகிறார்கள், எக்ஸ்டென்ட் பண்ணுகிறார்கள் என்றால் இரண்டாண்டு காலம் இடம் கொடுத்து, அவர்கள் அதற்குள்ளாக விரிவாக்கம் செய்ய வேண்டும், தொழில் வளர வேண்டும், தொழிலாளர்கள் பணிபுரிய வேண்டும் என்பதற்காக இடம் தருகிறோம்; இரண்டாண்டுகளுக்குள்ளாக அதைப் பயன்படுத்தாவிட்டால் மறுபடியும் நாம் எடுத்துக் கொள்கிறோம்; அப்படிப் பயன்படுத்தாமல் இருப்பதை எடுத்துக் கொள்கிறோம். அப்படி பயன் படுத்தியவர்களுக்கு மட்டும் தருகிறோம். இப்பொழுதே அந்த விதியிருக்கிறது. இதனுடைய நிலை என்னவென்றால் சிலபல தொழிற்சாலைகள் இயங்க முடியாத அளவிற்கு வந்து, மூடப்படுகின்ற சூழ்நிலை வருகின்றபொழுது உச்சவரம்பின் கீழ் உள்ள நிலத்தை விற்று, அதிலிருந்து வருகின்ற பணத்தை வைத்துக்கொண்டு அதை நிமிர்க்க வேண்டுமென்று கருதுகிறார்கள் என்றால், அப்படிப்பட்ட நியாயமான காரியங்களுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் கொண்டுவரப்படுகிறதே தவிர, அவர

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 16

வர்களுடைய இஷ்டப்படி அவர்களுக்குத் திருப்பித் தரும் நிலை இல்லை என்பதையும், நல்ல நோக்கத்தை அடிப்படை யாகக் கொண்டு இது கொண்டுவரப்படுகிறது என்பதையும், விரி வாக விவாதம் நடைபெறுகின்றபொழுது எடுத்துச் சொல்லலாம் என்று சொல்லி இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1985.

(உ) கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு 1985.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 26/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்த சட்ட முன்வடிவையும் மொழிந்துவிடலாம்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

* 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1985 ஜூலை 16] [திரு தா. வீராசாமி]

'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு வணிக வரி அமைச்சர் அவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற கேளிக்கை வரிச் சட்ட முன்வடிவில் இருக்கிற குறைபாடுகளைச் சொல்ல நான் விழைகின்றேன். சென்னை, மதுரை மாநகராட்சிகளில் ஏற்றப்பட்டிருக்கிற, மாற்றப்பட் டிருக்கிற வரிகளை கோவை மாநகராட்சிக்கும் கொண்டு வரு வதற்காக இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பல நகரப் பஞ்சாயத்துக்களை கம்பவுன்டிங் டாக்சிலேயிருந்து மாற்றி, அந்தப்படியான வரிகளை வசூலிப்பதற்கான முறை யிலே, சில மாற்றங்களை இரண்டாம் திருத்தத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள்.

வரி விதிப்பைப் பொறுத்த மட்டில், ஒரு அரசாங்கம் செவ் வனே செயல்படுவதற்கு வரி வசூல் அவசியம் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால், கோவை நகராட்சி 1981 ஆம் ஆண்டே மாநகராட்சியாக மாற்றப்பட்டும் 4 ஆண்டுகளுக்குப் பின்னாலே இந்த வரி மாற்றம் செய்யப்படு கிறது. இதிலே, பல்வேறு துணிக்கை கணக்குகளையும் வருமான அறிக்கைகளையும், ஆதாரங்களையும் வெளியிடுவதற்குத் தடை செய்கின்ற ஒரு வரியினை போட்டிருப்பது உள்ளபடியே நியாய மான காரணமாக இருக்க முடியாது. வரியை ஏமாற்றுகின்றவர்க ளுடைய ஆதாரங்களைச் சொல்கின்றபொழுது, அரசாங்கத் தரப்பிலே, அவற்றை பார்த்து அதிலே இருக்கிற குற்றங்களைத் தெரிந்து கொள்வதற்கு யாருக்கும் உரிமை இருக்க வேண்டும்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கேளிக்கை வரி களைச், செலுத்தக் கூடியவர்களுக்கு வசதி, வாய்ப்பாக, பலமுறை திருத்தியிருக்கின்றது. பல சின்ன கிராமங்களிலே, கம்பவுன்டிங் டாக்ஸ் என்ற பெயரிலே, அங்கே இருக்கக்கூடிய தியேட்டர் உரிமையாளர்களுக்குச் சலுகை அளிக்கக்கூடிய வகையிலேதான் இந்தச் சட்டத்திருத்தம் செய்யப்படுகிறது. 4 ஆண்டுகளாக இந்தத் திருத்தத்தைக் கொண்டு வராமலிருந்து, இப்பொழுது புதிதாக, கோவை மாநகராட்சியாகிவிட்டதைப் போல, இட ஒதுக்கீடு அடிப்படையில் கொண்டு வரப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

** 1985ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. ஆ. நடராசன்] [1985 ஜூலை 16

கோவை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், பல இடங்களில், இன்றைய தினம் இருக்கக்கூடிய தியேட்டர்கள், மிக வசதியற்று, சுகாதாரமற்ற சூழ்நிலையில் இருந்து வருவதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். வணிக வரித் துறைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வரியை அதிகமாக ஏற்றி விட்டு, வசதியைக் குறைக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். 40 ஆண்டுக் காலம், 50 ஆண்டு காலம், 60 ஆண்டு காலத்திற்கு முன்னால் கட்டப்பட்ட தியேட்டர்கள் இருக்கின்றன. இன்றைய தினம் இட வசதியைக் குறைத்து, வரியை அவர்கள் ஏமாற்றிவிட்டு, அதே நேரத்தில் கூட்டம் அதிகமாக வருகின்றபொழுது, தங்களிடத்திலே தயாராக வைத்திருக்கின்ற சேர்களைப் போட்டு, அதன் மூலம் வருமானத்தைப் பெருக்குகிறார்கள். கம்பவுண்டிங் டாக்சாலே, எவ்வளவு பேர்களை வேண்டுமானாலும் அடைத்து விடுகின்ற நிலை இருக்கிறது. அங்கே சினிமா பார்க்கின்றவர்கள் படுகின்ற துன்பத்திற்கு அளவே கிடையாது. இப்படி எல்லாம் வரிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நிலைமைகளை இன்றைய தினம் பார்க்கிறோம். இவையெல்லாம் தடுக்கப்பட வேண்டும்.

அதே போல, இங்கே ஆபாச சினிமாக்களைப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். வணிக வரித் துறைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும், இன்றைய தினம் ஒரு சினிமாவுக்குத் தன்னுடைய மனைவியோடு, குழந்தைகளோடு போய்ப் பார்க்கக்கூடிய நிலைமை இல்லாமல் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேவையானவர்களுக்கு நீங்கள் வரிச் சலுகை அளிக்கிறீர்கள். சினிமா படங்களுக்கு வரிச் சலுகை அளிக்கும் போது, அந்த வரிச் சலுகை மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால், இல்லவே இல்லை. தியேட்டர்காரர்கள் கட்டணத்தை அதிகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். வரியைப் போடுவதற்குப் பதிலாக, சினிமா கட்டணமாக ஆக்கிக்கொள்கிற நிலைமைகளைப் பார்க்கிறோம். அரசாங்கம் ஒரு படத்தைப் பார்த்து, அது அவர்களுக்கு வேண்டியவர்களுடையதாக இருந்தால், சில பேர்களுக்கு வரிச் சலுகை தருகிறார்கள். அல்லது குடிப் பழக்கத்தை எதிர்ப்பதற்கு எடுக்கப்பட்ட படம் என்று காரணம் காட்டி வரிச் சலுகை தருகின்றபொழுது, வரிச் சலுகை மக்களுக்குப் போகிறதா என்றால் இல்லை. அவர்கள் கட்டணத்திலே புதிதாக ஏற்றி, ஏறிய கட்டணத்திலே வாங்கிக் கொள்கிற நிலைமைகளைப் பார்க்கிறோம். இந்த நிலைமைகளை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல் அபராதங்கள் போடுவதற்குப் பதிலாக, வட்டி என்று சொல்லிப் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அபராதம் என்ற பெயரால் எவ்வளவு வேண்டுமானாலும் போடலாம். ஆனால் வட்டி என்பது ஒரு குறிப்பிட்ட அளவிலே தான் இருக்க முடியும். எனவே, அதை அபராதம் என்றே வைப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆ. நடராசன்]

1985 ஜூலை 16]

சினிமா சென்சாரைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் அது மத்திய அரசிடம் இருக்கிறது. மாநிலத்தினுடைய நாகரீகத்தையும் தன்மையையும் பார்த்து, நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அந்த சினிமா சென்சார் போர்டில் இருந்தால்தான் அதற்கேற்ப சென்சார் செய்ய முடியும். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிலே இடம் பெற்றிருந்தால்தான் நம்முடைய எண்ணத்திற்கு ஏற்ப செய்ய முடியும், அதனால் இந்தப் பொறுப்பு மத்திய அரசிடம் இல்லாமல் நம்முடைய மாநில அரசின் பொறுப்பிலே இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40.)

இப்போது புளூ ஃப்லிம் நாடு பூராவும் எல்லா இடங்களிலும் வந்துகொண்டிருக்கிறது. சிலர் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் குற்றவாளி ஆக்கப்படுகிறார்கள். அதே நேரத்தில் அரசுக்கு வேண்டியவர்கள், அரசைச் சேர்ந்தவர்கள் தங்கள் இஷ்டம்போல் கட்டணம் வைத்து நடத்திக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. மக்களுடைய நன்மையைக் கருதி, அதை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரி விதிப்பதால் மாநகராட்சிக்குக் கூடுதல் வருமானம் என்பதால், மாநகராட்சியில் இருக்கிற சினிமா அரங்கங்களுக்கு வரியைக் கட்டுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், அங்கே இருக்கிற கட்டணத்தை உயர்த்தினால், மக்களுடைய வசதிகளைப் பெருக்கி, அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதாக இருக்க வேண்டும்.

சில தியேட்டர்களை "குளு குளு" தியேட்டர், ஏர் கண்டிஷன் செய்யப்பட்டது என்று விளம்பரப்படுத்துகிறார்கள். உள்ளே போனால் அங்கே ஒரு 'ஸ்லைடு' போடுகிறார்கள். மின்சாரத்தடை இருப்பதால் மிகவும் வருத்துகிறோம் என்று ஸ்லைடு போட்டு, மின்சாரத்தை மிச்சப்படுத்தி, கொள்ளையடிக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் தடுக்கப்பட வேண்டும். வரியைக் கூட்டும்போது கட்டணத்தைக் கூட்டாமல் வசதிகளைக் கூட்ட வேண்டும், அந்த வகையில் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத் திருத்தத்தில் எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற களியக்காவிளை என்ற பகுதியை செலக்ஷன்கிரேடு டவுன்பஞ்சாயத்து ஆக உயர்த்தியிருக்கிறார்கள்.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1985 ஜூலை 16

அந்த களியக்காவிளை என்ற பெயரை ஆங்கிலத்தில் ஒழுங்காக, சரியாக 'களியக்காவிளை' என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால், தமிழில் எழுதும்போது கலைக்காவிளை என்று எழுதியிருக்கிறார்கள். களியக்காவிளைக்கும் கலைக்காவிளைக்கும் வேறுபாடு உண்டு. ஆகவே, களியக்காவிளை என்ற பெயரை கலைக்காவிளை என்று எழுதியிருப்பதைத் தயவுசெய்து திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது திருத்தப்படாமல் அப்படியே இருக்குமானால் நாங்கள் சட்டமன்ற கூட்டம் முடிந்து, எங்கள் மாவட்டத்திற்குள் காலை எடுத்து வைத்தால் இதைக்கூட கவனிக்காமல் தூங்கிக்கொண்டிருக்கிறீர்களே என்று எங்கள் மாவட்ட மக்கள் கோபிப்பார்கள். It is only a clerical error, it can be simply corrected and no amendment need to be brought to it. ஆகவே, அதைத் தயவு செய்து திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு திரைப்படங்கள், அதைப்போன்ற வேறுபல சாதனங்கள் எல்லாம் வியாபார நோக்கத்தோடு இலாபத்தை எதிர்பார்த்து, முதலீடு செய்யப்படுகிற தொழிலாக இருக்கின்றன. எதை மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று அறிந்து, எதைக் காட்டினால் கூட்டம் அலை மோதும், மக்கள் ஆதரவு தங்களுக்குப் பரவலாகக் கிடைக்கும் என்று கணக்கிட்டு, காட்ட வேண்டியதைக் காட்டினால்தான் இன்றைக்குத் திரைப்படங்களில் அப்படிக் காட்டினால் தான் இலாபம் கிடைக்கும் என்ற அடிப்படையில் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. அதை நாமும் உணர்ந்திருக்கிறோம்.

ஆனால் இன்றைக்கு திரைப்படங்களில் வழக்கறிஞர்கள், நீதிமன்றங்களை எல்லாம் கிண்டல் செய்கிற, கேலி செய்கிற காட்சி வருகிறது. அப்படிப்பட்ட காட்சிகள் கண்டிக்கப்பட வேண்டியவை. அப்படிப்பட்ட காட்சிகளை வெளியிடுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று இந்த மன்றத்தில் நாம் பேசுகிறோம்: அதைப்போன்று காவல் துறையைக் கேலி செய்தால், கிண்டல் செய்தால், தண்டிக்கப்பட வேண்டும் என்று இங்கே பேசப்படுகிறது. அதைக் கண்டித்து, பத்திரிகைகளுக்கு செய்தி கொடுக்கிற காவல்துறை உயர் அதிகாரிகள் கூட இப்படிப்பட்ட காட்சிகளைத் தயாரிப்பவர்கள் கருங்காலிகள், அதற்குத் துணையாக இருப்பது கருங்காலித்தனம் என்று சொல்கிறார்கள். வழக்கறிஞர்கள், நீதிமன்றங்கள், காவல் துறை போன்றவை பற்றி திரைப்படங்களில் கேலி செய்வது, கிண்டல் செய்வதை எல்லாம் கண்டிக்கிற இந்த நாட்டு மக்கள் மதச்சார்பான சில கருத்துக்களை

1985 ஜூலை 16] [திரு. வை. பாலச்சந்திரன்]

திரைப்படங்களில் சொல்லி, மதத்தினுடைய அடிப்படையைக் கிண்டல் செய்வது, கேலி செய்வது என்று வருகிறபோது அதைக் கண்டிக்காமல் இருப்பது ஜனநாயகத்தை மதிக்கின்ற போக்காக இருக்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எந்தத் திரைப்படமாக இருந்தாலும், பொதுவாகச் சொல்லப் போனால் எந்த மதமாக இருந்தாலும், மதத்தைத் தொட்டுக் காட்டி, அதைக் கண்டித்து, கிண்டல் செய்து, கேலி செய்து, அதைத் தட்டிப் பார்ப்பதன் மூலம் நாட்டு மக்கள் அதை விரும்பி, ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கிவிட முடியும் என்று நம்புகிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் இங்கே பெரும்பாலானவர்கள் எல்லாம் இந்துக்களாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் இந்து மதத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கானவர்களைக் கிண்டல் செய்கின்ற வகையில் திரைப்படங்களிலே கருத்துக்களைச் சுட்டிக் காட்டுகின்ற வகையில் திரைப்படங்களைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதை நான் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நகரப் பகுதியாக இருந்தாலும், கிராமப் பகுதியாக இருந்தாலும்....

திரு. வி. பி. சிந்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதங்களிலே இருக்கின்ற சில ஊனங்களைச் சுட்டிக் காட்டுகின்ற வகையில் திரைப்படங்கள் இந்த நாட்டில் அதிகப்படியாக வருவது நல்லதுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது உங்கள் கருத்து. அவர்களுடைய கருத்தை அவர்கள் சொல்கிறார்கள். எனவே இங்கே பேசுகின்றபோது சட்ட முன்வடிவிலே சம்பந்தப்பட்ட வகையிலே பேசினால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் புரையோடிப் போய் இருக்கின்ற குறைபாடுகளை திரைப்படங்கள் சுட்டிக் காட்டுகின்ற வகையில் வருமேயானால் அப்படிப்பட்ட திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை முழுமையாக எங்கள் இந்து முன்னணி இயக்கம் ஏற்றுக்கொள்ளவும், வரவேற்கவும் தயாராக இருக்கின்றது. ஆனால் இந்துக்களைப் புண்படுத்தியே ஆகவேண்டும்; இந்து மதத்தைப் புண்படுத்தியே ஆகவேண்டும் என்ற வக்கிரத்தின் அடிப்படையில் அந்த ஆசையின் அடிப்படையில் அப்படிச் செய்தால் அதற்கு ஆதரவு தருகின்றவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அதுபற்றி அங்கே பேசப்படுகின்ற வாய்ப்பு அங்கே ஏற்படுகின்ற அளவில் செய்தால் அதை இந்து முன்னணி இயக்கம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1985 ஜூலை 16

இன்றைக்கு நகரப் பகுதியாக இருந்தாலும் அல்லது வேறு பகுதிகளாக இருந்தாலும் கடைகளின் முன்னால் வியாபாரம் நடக்கவேண்டும் என்பதற்காக சிலரை நிறுத்தி வைத்து அங்கே செல்கின்றவர்களை எல்லாம் 'வாருங்கள், வந்து பாருங்கள்' என்று சொல்லி கடைக்கு அழைத்து பொருட்களைக் காட்டி விலை போகாத சரக்குகளை எல்லாம் விலை போக வைக்கின்ற வகையில் நடப்பதைப் பார்க்கிறோம். இது ஒரு வியாபார உத்தி என்பதை அனைவரும் அறிந்திருக்கிறோம். அதுபோன்று திரைப்படங்களின் முன்னால் தியேட்டர்களின் அருகில் அரை குறை ஆடையில் முக்கால் நிர்வாணத்தில் படங்களை வைத்து, அவை வாய்பேசாத நிலையிலும்கூட ரசிகர்களைத் திரையரங்குக்கு வருக, வருக என்று அழைக்கின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்ற காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். சாலையோரங்களிலும், திரையரங்குகளின் அருகிலும் இப்படிப் பட்ட முக்கால் நிர்வாண படங்கள் வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அவற்றைக் குடும்பத்தோடு சென்று பார்க்க கண் கூசுகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே அப்படிப்பட்ட படங்கள் வைக்க இந்த அரசு அனுமதி கொடுக்கக் கூடாது என்பதை, சமுதாயத்தில் ஒழுக்கக்கேடு வரக்கூடாது என்ற கொள்கை உடைய இந்து முன்னணியின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாகர் கோவிலில் உள்ள திரையரங்குகளிலும், வேறு இடங்களில் உள்ள திரையரங்குகளிலும் உள்ளே போய் அமர்ந்திருந்தால் மண் சுவர் சரிந்துவிடும் என்ற நிலையில் பயந்துகொண்டு அமரவேண்டிய நிலைமை இருக்கின்றது. அங்கே நின்று பார்ப்பதை விட இருந்து பார்ப்பது என்பது மிகவும் கடினமான காரியம் ; அந்த அளவுக்கு அங்கே இருக்கைகள் இருந்து கொண்டிக்கின்றன. மேலும் அங்கே மின் விசிறிகளும் கிடையாது ; இருந்தாலும் அவற்றை ஓடவிட மாட்டார்கள் என்ற நிலைதான் இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட போக்கை இந்த அரசு மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை இந்து முன்னணி சார்பாக வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இரண்டு சட்டங்களை கேளிக்கை வரி சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு சட்டம் பஞ்சாயத்துக்களிலும், டவுன்களிலும் இந்தச் சட்டத்தினுடைய ஜூரிஸ்டிக்ஷனைக் கொண்டு வருவதற்காக உள்ள சட்டம். இன்னொரு சட்டம் கோவை மாநகரத்திற்கு இந்தச் சட்டத்தை விஸ்தரிப்பது சம்பந்தமான ஷரத்துக்களோடு கொண்டுவரப்பட்ட சட்டம்.

1985 ஜூலை 16] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். டவுன் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் ஒரு சிலவற்றில் வருவாய் உயர்ந்திருக்கின்ற காரணத்தால் அவை செலக்ஷன் கிரேட் பஞ்சாயத்துக்களாக மாற்றப்படுகின்றன. அந்தப் பஞ்சாயத்துக்களில் எல்லாம் இந்த வரி ஏற்பாட்டை கூடிய வகையில் இந்தச் சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கிறதா ?

(முற்பகல் 11-50)

ஏனென்றால் இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே, அதிகமான வரி ஒரு பக்கத்திலே வாங்கக்கூடிய நேரத்தில், அந்த இடங்களில் இருக்கக் கூடிய தியேட்டர்களிலே அப்படிப் பட்ட வசதிகள் செய்யப்படுகின்றவா என்பதை நாம் பார்த்தாக வேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஒரு சில இடங்களிலே இருக்கக்கூடிய சினிமா தியேட்டர்களிலே, அதிலே நகரங்களிலே இருக்கிற ஒரு சில சினிமா தியேட்டர்களைத் தவிர, கிராமங் களிலே இருக்கக் கூடிய சினிமாத் தியேட்டர்களிலே, தேவை யான வசதிகள், போதுமான அளவுக்கு மக்களுக்கு கொடுக்கப் படுவதில்லை. நல்ல பெஞ்சுகளைக் கூட புரொவைட் பண்ணு வது இல்லை. நகர்ப்புறங்களிலே பார்ப்போமேயானால், அவர் களுக்காக செய்து தரப்படுகின்ற சேனிடரி கண்டிஷன்கள் கூட மிக மோசமாக இருக்கின்றன.

இன்றைக்கு சில பகுதிகள் செலக்ஷன் கிரேடு பஞ்சாயத் துக்களாக மாறிவிட்டன என்ற காரணத்தினாலே, அங்கே இருக்கக்கூடிய தியேட்டர்களைப் பொறுத்தவரையில், வசதி களும், வாய்ப்புகளும் அதிகப்படப் போகின்றனவா என்றால் இல்லை. ஆனால் குறைந்த நேரத்தில் இப்படிப்பட்ட வரி விதிப்பின் காரணமாக, இந்த வரிச்சுமையின் காரணமாக, மக்கள் அங்கே அதிகமான கட்டணத்தைச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம்தான் ஏற்படுகிறது. இன்றைக்கு ஒரு பக்கத்திலே என்ன பார்க்கிறோம் என்றால், தியேட்டர்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இதற்கென்று ஏற்கனவே சில விதிமுறைகள் இருக்கின்றன. அதிலே மருத்துவ மனைக்குப் பக்கத்திலே தியேட்டர்கள் கட்டக்கூடாது என்று ஒரு விதி இருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உத்தனேரி என்ற இடத்தில், உத்தனேரி ஹாஸ்பிடல் என்ற ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனைக்குப் பக்கத்திலே ஒரு முதலாளிக்குத் தியேட்டர் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் குறிப்பிட்ட கணிப் பின் அடிப்படையில், தியேட்டர்கள் கட்டக்கூடிய நேரத்தில் எங்கெங்கு கட்டப்பட வேண்டும் என்பதையெல்லாம் குறித்து நாம்ப் விதிமுறைகளை வரையறுக்க வேண்டும். பொது மக்களுக்குப் பெரிய அளவுக்குச் சிரமங்கள் கொடுக்காத நிலையிலே இருக்கும் இடங்களில் கட்டப்பட வேண்டும்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூலை 16

குறைந்தபட்ச வசதிகள் செய்யப்பட வேண்டும். குறைந்தபட்ச சுகாதார வசதிகளைச் உயர்த்தி கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட வசதிகள் பல கிராமப்பகுதிகளிலே இருக்கக் கூடிய பல தியேட்டர்களில் இருப்பது இல்லை.

குறிப்பாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய களியன் சாவடி என்ற கிராமத்தில் உள்ள தியேட்டர்களைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட வசதிகள் செய்யப்படவில்லை. ஆனால் என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் இரண்டாம் திருத்தச் சட்டத்தின் உள்ளே அது வரப்பட்டதன் காரணமாக, அந்த ஊர் மக்கள் அதிகமான கட்டணத்தைக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

இன்னொரு விஷயத்தில் நான் சுட்டிக் காட்டவிரும்புவது இன்று தியேட்டர்களிலே உள்ள நிர்வாகத்தினர் திருட்டுத் தனமாக டிக்கட்டுகளை அடித்து—ஒரு குறிப்பிட்ட கணக்கை, சரியான டிக்கட்டுகள் கொடுத்த கணக்கை மட்டும் அரசுக்குக் காட்டி விட்டு, கணக்கிலே கொண்டு வரப்படாத முறையிலே திருட்டுத் தனமாக சில டிக்கட்டுகளை அடித்துக்--கொடுத்துக் கொண்டு கொள்ளை லாபத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குச் சில அதிகாரிகளும் உடந்தை என்று தெரிகிறது. இது குறித்து எந்த அளவுக்கு இந்த இலாகாவினுடைய அல்லது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இப்படி பல இடங்களில் நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக கிராமப் பகுதிகளில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு இலாகா என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை அரசு கவனிக்க வேண்டும். அதற்குத் தகுந்த முறைகளிலே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதுவும் இப்படி அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாயைத் தடுத்து—திருட்டுத்தனமாக டிக்கட்டுகள் அடித்து அதன்மூலம் உரிய வருவாய் அரசுக்குக் கிடைக்காமல் இருக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகளில் ஈடுபடும் தியேட்டர் நிர்வாகத்தினரின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டும் அல்ல, அதற்கு உடந்தையாக யாராவது அந்த இலாகாவைச் சார்ந்தவர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இந்தத் தியேட்டர்களிலே திரைப்படங்களைத் தயாரித்து திரையிடுவதற்காக அளிக்கப்படக்கூடிய நேரத்திலே, பகுத்தறிவுக் கொள்கையை வலியுறுத்தக்கூடிய முறையிலே உள்ள படங்களைத் தயாரிப்பதற்கு உள்ள ஒரு ஏற்பாட்டையும் அரசு செய்ய வேண்டும். பெரியார்

1985 ஜூலை 16] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

பகுத்தறிவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு அரசு என்ற காரணத்தினால் இன்றைக்கு அந்தக் கொள்கைகளை பிரச்சாரம் செய்யக்கூடிய முறையிலே படங்களைத் தயாரிப்பதற்குள்ள நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும்.

இன்னொரு விஷயம் நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இன்றைக்கு சென்சார் போர்டு என்று ஒரு ஸ்தாபனம் வைக்கப்பட்டிருக்கிறது. அது படங்களில் வரக்கூடியவைகளைத் தணிக்கை செய்கிறது. எந்த அளவிற்கு ஆபாசமான காட்சிகளை அது சென்சார் பண்ணுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் பல படங்களில் அப்படிப்பட்ட காட்சிகள் வந்து கொண்டிருக்கின்றன.

அதேபோல இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இன்றைக்கு சினிமா சுவரொட்டிகளை ஒட்டுகிற நேரத்தில் பல ஆபாச சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. இதனைத் தடை செய்வதற்காக ஒரு சென்சார் போர்டை நாம் தனியாக ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு சினிமா தியேட்டர்களின் சொந்தக்காரர்கள், படங்கள் மக்களை அட்ராக்ட் பண்ண வேண்டுமென்பதற்காக, விளம்பர நோக்கத்தோடு விளம்பரங்களைச் செய்கிறபோது அரைநிர்வாணப் போஸ்ட்டர்களை ஆபாச போஸ்டர்களை தெருக்களில் ஒட்டிவருவதை நாம் பார்க்க முடிகிறது. ஆகவே இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புவது, இப்படிப்பட்ட சுவரொட்டிகளை, சினிமா சம்பந்தமான சுவரொட்டிகளை ஒட்டுவதை, வெளியிடுவதைத் தடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க மேலும் ஒரு சென்சார் போர்டு தேவைப்படுகிறது. திரைப் படங்களை சென்சார் பண்ணுவது என்பது மட்டுமல்லாமல், சுவரொட்டிகளை சென்சார் பண்ணுவது என்பது ஒரு முக்கிய மான தேவையாக அமைந்திருக்கிறது.

எனக்குத் தெரிந்தவரையில் இதுசம்பந்தமாக இந்த அரசு ஒரு சட்டத்தைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியதாகவும், மத்திய அரசின் அனுமதி கிடைக்காததால் இன்னும் சட்டத்தை நிறைவேற்ற முடியாமல் இருந்து கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. அப்படி இருக்குமானால் நிச்சயமாக இந்த அரசு மத்திய அரசை அணுகி அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவரையில் ஏதேனும் குழுக்களை அமைத்து இப்படிப்பட்ட சினிமா சுவரொட்டிகளைக் கட்டுப்படுத்துவதற்கான முறைகளில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரியினுடைய இரண்டாவது, மூன்றாவது சட்டத்திருத்தங்களைப் பற்றி இந்த அவையிலே ஆராய்ந்துகொண்டிருக்கும்போது, நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில முக்கிய கருத்துக்களை முன்வைக்கலாமென்று கருதுகிறேன்.

ஒரு குழந்தைக்கும் இன்னொரு குழந்தைக்கும் இடையே போதிய இடைவெளி வேண்டுமென்று வெளியே இருக்கிற போர்டுகள் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில், ஒரு அமெண்ட்மெண்டிற்கும் இன்னொரு அமெண்ட்மெண்டிற்கும் இடையே கூட தகுந்த இடைவெளி விடுவது சாலச்சிறந்ததாக இருக்குமென்று நான் கருதுகிறேன். இந்த மாமன்றத்திலே சமீபத்தில் கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் ஒரு அமெண்ட்மெண்ட் அமலாக்கப்பட்டது. அந்தச் சட்டத்திலே நான் பேசுகிறபோது ஒரு கருத்தை வெளியிட்டேன். இராமநாதபுரம் பிரிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, பிரிக்கப்பட்ட பகுதிகள் இராமநாதபுரம் மாவட்டத்தின் பகுதிகளாக இருந்தனவென்ற குறையை நான் சுட்டிக்காட்டியபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே இதற்கான திருத்தத்தைக் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு மீண்டும் கேளிக்கை வரிச்சட்டம் திருத்தப்படுகிற இந்த நேரத்தில் கூட அந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்படவில்லை. இதனை எண்ணுகிறபோது அரசு இயந்திரம் செயல்படுகிறதா என்ற எண்ணம் கூட என் போன்றவர்களுக்கு ஏற்படுகிறது. ஏற்கனவே 2, 3 திருத்தங்களைக் கொண்டு வந்ததற்குப் பிறகு ஒரு நடைமுறை பிரச்சினையை திருத்துவதற்கு வழி செய்யப்படவில்லை. இன்றைக்கு 4, 5, 6 என்று அமெண்ட்மெண்டுகள் அதிகப்படுத்தப்பட்டு இந்த அவையின் நேரம் வீணடிக்கப்படுகிறதோ என்று எண்ணும்போது உள்ளபடியே என் போன்றவர்களுக்கு மிகுந்த மனவருத்தத்தை அளிக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12—00.)

அடுத்தபடியாக கேளிக்கை வரி மூன்றாவது சட்டத் திருத்தத்தை நாம் உற்றுநோக்குகிற போது அதிலே தரப்பட்டிருக்கிற செய்திகள் சில எனக்கு அதிர்ச்சியூட்டுவதாகவே அமைந்திருக்கின்றன என்று சொன்னால் அது ஆச்சரியப்படுவதற்கில்லை. செக்ஷன் 1-ல் "This Act may be called the Tamil Nadu Entertainments Tax (Third Amendment) Act, 1985 என்று சொல்லிவிட்டு, இரண்டாவது பிரிவிலே Section 2(i) says that 'Section 6 shall be deemed to have come into force on the 26th December 1977" என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நாம் தீட்டுகின்ற இந்தச் சட்டமானது இன்றிலிருந்து எட்டு ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததாகக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

இதைத் தூக்கி எறிந்து சாப்பிடுவதைப் போன்று, அடுத்த உட்பிரிவிலே, Section 2 (ii) says that 'Section 7 shall be deemed to have come into force on the 1st April 1970. அதாவது இந்த இரண்டாவது பிரிவை, செக்சன் 7-ஆனது 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள்—முட்டாள்கள் தினம் என்று சொல்லப்படுகின்ற அந்த நாளிலேயிருந்து—முதல் இது அமுலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டும் என்று அந்தப் பிரிவு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. இன்னும் சொல்லப் போனால் இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே இருந்து கொண்டு, இந்தச் சட்டத்தை நாம் இயற்றுகின்ற நேரத்திலே இது என்றைக்கிலிருந்து பின்னோக்கி அமலுக்கு வருகிறதோ, அன்றைக்கு எனக்கு—சட்டமன்ற உறுப்பினராக இருந்தும்—ஓட்டுப் போடுவதற்குக் கூடிய வயதாகவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், கிட்டத்தட்ட 15 ஆண்டுகள், retrospective effect கொடுத்து இந்தச் சட்டத்தை பின்னோக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டாக சட்டம் கொண்டுவர உரிமை இருக்கிறது என்பது எனக்குத் தெரிந்த சட்ட விஷயம்தான். ஆனால் சில தவிர்க்க முடியாத காரணங்களாலே, 1, 2 ஆண்டுக் காலத்திற்கு மாத்திரம் ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து சட்டம் போடுவதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஆனால் 15 ஆண்டுக்காலம், 20 ஆண்டுக் காலம், 8 ஆண்டுக்காலம் என்று ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்துப் போடுவதற்கு என்ன அவசியம் வந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏன் என்றால், இந்த Statement of Objects and Reasons என்பதிலே பின்னாலே கொடுத்து இருக்கிறீர்கள். நான் திரும்பத் திரும்பப் படித்தேன். 15 ஆண்டுக் காலமாக பின்னோக்கி இருக்க வேண்டும் என்று, ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டாகப் போடவேண்டிய அவசியம் என்ன வந்தது? இந்தச் சட்டசபையில் 15 ஆண்டுக்காலமாக, இந்தச் சட்டத்தை இயற்றாததால் என்ன குடிமுழுகிப் போய்விட்டது என்பதை Statement of Objects and Reasons-ல் சொல்லியிருக்கிறார்களா? திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன். இங்கே சொல்லியிருக்கிறார்கள். Decision has also been taken to provide that the option permitted under Section 5-B shall continue to be in force to long as the proprietor is eligible to pay tax and has not withdraw this option. Another decision taken is to provide for assessment of entertainments tax on legal representatives, etc. of the deceased proprietors of entertainment houses—

[திரு டி. ஆர். வெங்கடரமணன்] [1985 ஜூலை 16

என்று நாங்கள் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம் என்று ஒரு தலைபட்சமாக அழுத்தந்திருத்தமாக சொல்லப்பட்டாலும் கூட, இப்படி 15 ஆண்டுகாலம் 8 ஆண்டுக்காலம் என்று பின்னோக்கி, ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டாக எதற்காகக் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்கிறேன். இந்தச்சட்டங்கள் போடும்போது The House has not been taken into confidence. இது எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, கண்டிப்பாகச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1985 ஆம் ஆண்டிலே நாம் பேசிக் கொண்டு இருக்கிறோம். அப்படி இருக்கும்போது 15 ஆண்டுக் காலம் பின்னோக்கி இந்தச் சட்டத்தைச் செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது? அப்படி என்றால், 15 ஆண்டுக் காலமாக இந்தச் சட்டம் செயல் படாமல் இருந்த போது, இந்தச் சட்டத்தினுடைய பாலிசியை எவ்வாறு இந்த மன்றத்திலே இது ஏற்படுத்தும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதே போல், இன்னும் சொல்லப் போனால், இன்கம் டாக்ஸ் அசசியாக இருப்பவர் 8 ஆண்டுக் காலத்திற்கு மேலாக ஒரு அசசியினுடைய அசஸ்மெண்ட் ரீ-ஓப்பன் செய்ய முடியாது என்று ஒரு புரவிசன் இருக்கிறது. அதற்கும் தாண்டி 15 ஆண்டுக் காலம் என்று சொல்லக் கூடிய இந்தச் சட்டம், more than one and a half decade எதற்காக பின்னோக்கி அமுல் செய்யப்பட வேண்டும் என்பதனுடைய அவசியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக இந்த அவைக்கு விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இதிலே சொல்லியிருக்கிற கருத்துக்களைப் பார்க்கும்போது, Objects permitted under this Act- என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டப்பிரிவு 5-ஏயைப் பார்க்கிறபோது இந்த சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்ற கருத்தை நாம் உற்று நோக்க வேண்டியிருக்கிறது. இந்த Option to pay tax என்று சொல்லி விட்டு, இப்போது இருக்கிற செக்சனிலே The option permitted under the Section shall continue to be in force till the end of the financial year in which such option is permitted என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஒருவர் ஒரு காம்பவுன்டிங் டாக்சுக்காக ஒரு வருடம் எடுத்துக் கொள்வாரேயானால், அந்த ஆப்சன் என்பது மாற்றாத வரையில், தொடர்ந்து இருக்கும் என்று ஏகப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகள் பலவாறாக இருக்கின்றன. அந்தத் தீர்ப்புகளின் அடிப்படையில் இந்தச் சட்டம் இப்போது திருத்தப்பட வேண்டும் என்று நான் நினைக் கிறேன். அப்படி தீர்ப்புகள் இருக்கின்ற ஒரு சட்டத்தின் அடிப் படையிலே இந்தச் சட்டம் திருத்தப்படாமல், எதற்காக 15 ஆண்டுக்காலம் பின்னோக்கி இந்தச் சட்டத்தை திருத்த வேண்டும்.

1985 ஜூலை 16] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

அடுத்து செக்சன் 5ஏ-க்குப் பிறகு, இப்போது செக்சன் 5-பி நுழைக்கப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டத்தை எதற்காக 15 ஆண்டுக்காலம் நீங்கள் பின்னோக்கி அமுல் படுத்து கிறீர்கள் என்பது தெரியவில்லை.

அதே போல் Insertion of new Section 7-C என்று புதிதாக after Section 7-B, 7—C' என்று ஒரு செக்சன் வருகிறது. ஒரு அசசியினுடைய அசஸ்மெண்ட் காலத்தில் அவர் மரணம் அடைந்துவிட்டால், அவருடைய வாரிசுதாரர்கள், அந்த அசஸ்மெண்ட்டுக்கு உட்பட்டவர்கள் இறந்தவர்களுடைய சொத்துக்கள் அந்த அரசினுடைய கடன்களுக்கு வரி விதிப்பிற்குக் கட்டுப்படும் என்று அந்த செக்சன் சொல்லியிருக்கிறது.

இதுவும் சாதாரண அடிப்படை சட்ட அறிவு உடைய யாருமே ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கருத்துதான். இதையும் எதற்காக 15 ஆண்டுகள் பின் நோக்கி அமல் நடத்த வேண்டும் என்று தெரியவில்லை.

அடுத்தபடியாக செக்ஷன் 10 என்று ஒன்று கொடுத்து இருக் கிறார்கள். "Certain contraventions, etc. not to be offences" என்று போட்டு இருக்கிறார்கள். நீங்கள் இவ்வாறு பின் நோக்கி ஒரு சட்டத்தை அமுல் செய்ய வேண்டும் என்று சொல்வதால் அந்த இடைப்பட்ட 15 ஆண்டுக் காலத்தில் இந்தச் சட்டத்தை மதிக்காதவர்கள் அல்லது அந்தச் சட்டத்தின்படி நடக்காதவர் கள் எல்லாம் தப்பு செய்தவர்களாகத்தான் சட்டத்தினுடைய கண்ணுக்குத் தோன்றுவார்கள். ஆகவே அவ்வாறு தோன்று வதைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் செய்கின்ற ஒரு தவறு இரண்டாகப் பெருகி, இரண்டு மூன்றாகி, இப்படிப் பெருகி, அப்படி தப்பு செய்தவர்கள் எல்லாம் தப்பு செய்தவர்கள் அல்ல என்று இந்த மன்றமே அவர்களுக்கு ஒரு சர்டிபிகேட் கொடுக்கும் வகை யில் செக்ஷன் 10-ஐ போட்டு இருக்கிறீர்கள். திரும்பத் திரும்ப இப்படி செக்ஷன்களைப் போட்டு என்ன நோக்கம் என்று கூட தெரியாமல் இந்தச் சட்டத்தை இயற்றினால் அதனால் யாருக்குப் பயன்? நம்முடைய சட்டமன்றத்தின் பொன்னான நேரம்தான் வீணாகிறது. தப்பு செய்பவர்களுக்கு நாம் உடன்படுகிறோம். தப்பு செய்கின்றவர்களுக்கு சப்பைக் கட்டு கட்டுவதற்காக செக்ஷன் 10-ஐப் போட வேண்டியிருக்கிறது. இதை விடுத்து இன்றைய தினம் இந்தத் தேதியிலிருந்து இந்தச் சட்டம் அமலுக்கு வரும் என்று சொல்லியிருந்தால் என்ன குடியா மூழ்கிப் போய் விட்டப் போகிறது என்று தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கூறியிருக்கின்ற கருத்துக்களை அதில் உள்ள நேர்மையான, நியாயமான வாதங்களை எடுத்துக் கொண்டு இந்த ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் என்பது ஒரு Extraordinary right given to Legislature அது அதிகப்படியாக உபயோகிக்கக்

கூடாத ஒன்று. தவிர்க்க முடியாத சமயங்களில், தவிர்க்க முடியாத நேரங்களில் சில முக்கியமான சந்தர்ப்பங்களில் பின்னால் செய்து விட்டு அசெம்பிளி கூடாத சமயத்தில் செய்து விட்டு பின்னால் ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட் ஆக போடுவதும் எல்லாம் வழக்கமாக செய்வதுதான். ஆனால் அதற்காக ஒட்டு மொத்தமாக 8 ஆண்டு காலம், 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டு காலம் என்று ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து இந்தச் சட்டத்தை கொண்டு வருவதை நான் கடுமையாக ஆட்சேபிக் கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

நான் சினிமா பற்றி பேசவில்லை, போஸ்ட்டர் பற்றி பேச வில்லை, இதில் உள்ள சட்ட விளக்கங்களைப் பற்றி நான் பேசிக் கொண்டு இருக்கிறேன். சினிமா, போஸ்ட்டர், சென்சார் பற்றி பேசுகிறவர்களுக்கு டைம் கொடுக்கிறீர்கள். நான் சட்ட நுணுக்கங்களைப் பற்றி பேசுகிறேன். என்னை உட்காரச் சொன்னால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்த உறுப் பினர் பேசியதைப் பற்றி நீங்கள் குறை சொல்லக்கூடாது. நீங்கள் சீக்கிரமாகப்பேசி முடியுங்கள். இன்று 8 சட்ட முன் வடிவுகள் இருக்கின்றன.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக இதிலே பிரிவு 9-ஐ எடுத்துக்கொண்டால் அதில் Prohibition of disclosure of particulars produced before the entertainment tax authorities என்று ஒரு செக்ஷன் இருக்கிறது. இந்த செக்ஷனுடைய மூல செக்ஷன் எது என்று நான் யோசித்துப் பார்த்தபோது IndianIncometax Act பிரிவு 137 Disclosure of information prohibited என்று முதலில் இருந்தது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக சுட்டிக் காட்டுவார்கள் என்ற காரணத் தால்தான் அதை நான் எடுத்துப் பார்த்தேன். வரி செலுத்து பவர் என்பவர்கள் சாதாரண குடிகளில் இருந்து எந்த விதத் திலும் மாறுபட்டவர் அல்ல. அவர்களும் சாதாரண மக்கள் தான். அவர்களைப் பற்றிய விவரங்களுக்கு மட்டும் எந்த விதமான பாதுகாப்பும் தேவையும் தரப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று இன்றைக்குப் பாராளுமன்றத்தில்மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லப்பட்டதன் காரணமாக இன்றைக்கு செக்ஷன் 137 of the Indian Incometax Act சட்டத்திலிருந்து 1-4-1964 முதல் விலக்கப்பட்டு விட்டது. அதன் பிறகு பிரிவு 138 என்று கொண்டு வரப்பட்டு disclosure of information respecting the assessees என்ற ஒரு புதிய செக்ஷனைக் கொண்டு வந்து அதிலே உட்பிரிவு 1-பி படி Section 138(1) (b) where a person

makes an application to the Commissioner in the prescribed form fort any information relating to any assessee in respect of any assessment made under this Act or the Indian Incometax Act 1922, on or after the 1st day of April 1960 the Commissioner may, if he is satisfied that it is in the public interest so to do, furnish or cause to be furnished information asked for in respect of that assessment only and his decision in this behalf shall be final and shall not be called in question in any court of law. என்று எந்த ஒரு அசசீயைப் பற்றியும் யார் வேண்டுமானாலும் எந்த விவரத்தை வேண்டுமானாலும் பப்ளிக் இண்டரஸ்ட்டு என்று சொல்லப்படுகிற அந்தத் பொது நோக்கத்தில் கேட்கலாம் என்று Indian Incometax Act-லே இருக்கிறது. ஒரு திரைப்பட கொட்டகையை நடத்துகிற ஒருவர் செலுத்துகின்ற வரி என்ன? அவர் செலுத்துகின்ற வரியில் என்ன ஏய்ப்பு செய்கிறார்? அவர் செலுத்துகின்ற வரியில் என்ன மோசடிகள் நடக்கின்றன என்பதை ஒரு நாளைக்குப் பொது மக்களுடைய பிரதிநிதியோ அல்லது ஒரு சட்ட மன்ற உறுப் பினரோ அந்த அதிகாரியிடம் கேட்டு அதை வைத்துக் கொண்டு சட்டமன்றத்தில் அல்லது வேறு இடங்களில் பேசுகின்ற வாய்ப் புக்கு நீங்கள் வாய்ப்பூட்டு போடுகிறீர்கள். ஆகவே, இந்தப் பிரிவு 9 என்பது இன்றைக்கு நீங்கள் ஏற்படுத்துகின்ற இந்த 15-பி செக்ஷன்—நம்முடைய பேச்சு உரிமைக்கு விரோதமானது. இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தில் கொடுக்கப்பட்டு இருக்கிற The right to know the details அதற்கு இது விரோதமானது. ஆகவே இந்தச் சட்டம் காலத்திற்கு ஒவ்வாத ஒரு சட்டம். இந்திய அரசின் Indian Incometax Act. லிருந்து எடுக்கப் பட்ட ஒரு காலாவதியான சட்டத்தை நீங்கள் முதன் முறையாக இந்தச் சட்டமன்றத்திலே புகுத்துகிறீர்கள்.

(பிற்பகல் 12-10)

ஏற்கனவே திரைப்படத்தொழிலிலே பல தில்லுமுல்லுகள், பல மோசடிகள், பல வரி ஏய்ப்புக்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு அதிகாரிகளே உடந்தையாக இருக் கிறார்கள் என்ற பரவலான கருத்துக்கள் இருக்கும் போது நீங்கள் இந்த ஒரு பிரிவை சட்டத்திலே நுழைப்பதன் மூலமாக, மக்கள் மன்றத்தினுடைய பிரதிநிதிகளை இந்த வரி ஏய்ப்புக்களை பற்றி கேள்வி கேட்கின்ற நிலையிலிருந்து நீங்கள் பறிக்கிறீர்கள். 'தி ரைட் டு நோ—' என்பது ஒரு இம்பார்ட் டஸ்ட் ரைட். அந்த ரைட்-ஐ நீங்கள் எங்களிடமிருந்து பறித்துக் கொள்கிறீர்கள். ஆகவே, இந்தச் சட்டமானது உடனடியாக

[திரு. டி. ஆர். வெங்கடராமன்] [1985 ஜூலை 16

வாபஸ் பெறப்பட வேண்டிய சட்டம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

மாண்புமிகு திரு. தா, வீராசாமி: மாண்புமிகு சட்ட மன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழ்நாடு கேளிக்கை வரிகள் இரண்டாம் திருத்த, மூன்றாம் திருத்தச் சட்டங்களின் மீது பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய அனுபவபூர்வமான ஆலோசனைகளை, கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆலோசனைகள் கருத்துக்கள் வருங்காலத்தில், தமிழ்நாட்டில் கேளிக்கை வரி விதித்து, வசூலிக்கின்ற நேரத்தில் பயன் உள்ள வகையில் இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறி ஒரு சில கருத்துக்களை நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு கேளிக்கை வரிகள் இரண்டாம் திருத்தச் சட்டத்தில் உள்ளாட்சித் துறை, உள்ளாட்சி நிறுவனங்களை தரம் உயர்த்துகின்ற நேரத்தில் கேளிக்கை வரிவிதிப்பை மாற்றி அமைத்து, வருவாயைப் பெருக்குகின்ற வகையில் இங்கே இரண்டாம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன்.

இங்கே இணைப்புப் பட்டியல், செலக்ஷன் கிரேடு பஞ்சாயத்து முதல் கிரேடு பஞ்சாயத்து, இரண்டாம், மூன்றாம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நகரியங்கள், உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் இடம் பெறுகின்ற வகையில் அதனுடைய தரங்கள் உள்ளாட்சித் துறையால் தரம் உயர்த்தப்படும் நேரத்தில் இங்கும் திருத்தம் கொண்டு வரப்பட்டு, அதற்கேற்ப வரி விதிப்பு முதலியவைகள் எல்லாம் மாற்றம் செய்யப்பட்டு வருவாயைப் பெருக்குகின்ற வகையில்தான் இந்த இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இங்கே மரியாதைக்குரிய உறுப்பினர்கள் தங்களுடைய பல்வேறு கருத்துக்களை இந்தச் சட்ட முன்வடிவின் மேல் பேசுகிற நேரத்தில் எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக, இன்று தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் 22 முதல் நிலை பேரூராட்சிகள் இன்று தேர்வு நிலை தரத்திற்கு உயர்த்தப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

1985 ஜூலை 16] [திரு.தா. வீராசாமி]

கன்னியாகுமரி மாவட்டத்தில் களியக்காவிளை, ஆங்கிலத்தில் கஷியக்காவிளை என்றும், தமிழில் 'கலைக்காவிளை' என்றும் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அது அச்சடிப்பில் ஏற்பட்ட தவறு என்று கூறிக்கொண்டு 'களியக்காவிளை' தான் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் எந்தவிதமான குழப்பத்திற்கும் ஆட்படத் தேவை இல்லை என்பதை நான் கூறிக் கொள்ளுகிறேன்.

மதுரை மாவட்டத்தில் நான்கு ஃபர்ஸ்ட் கிரேடு டவுன் பஞ்சாயத்துக்கள், செலக்ஷன் கிரேடு பஞ்சாயத்தாக தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர் முதல் நிலை நகர பஞ்சாயத்து தேர்வு நிலை ஊராட்சியாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் நரசிங்கபுரம், பெத்துநாயக்கன்பாளையம், கொங்கணாபுரம், பந்தமங்கலம், சேந்தமங்கலம், கண்ணன்குறிச்சி, ஆட்டையாம்பட்டி, தஞ்சாவூர் மாவட்டத்தில் வல்லம், கொடவாசல், ஆடுதுறை.

திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரம், திசையன்விளை, களக்காடு, முக்கூடல், கீழப்பாவூர், சிவகிரி என்று இப்படி 22 முதல் நிலை ஊராட்சிகள் இன்றைக்குத் தேர்வு நிலை ஊராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, கேளிக்கை வரியின் மூலமாக வருவாயைப் பெறுவதற்கு இந்த இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு வேங்கடரமணன் அவர்கள் முன்பு ஒருமுறை இங்கே சட்டமுன்வடிவைக் கொண்டு வந்த நேரத்தில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் சிவகங்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். என்று கருதுகிறேன். அதற்குத் திருத்தச் சட்டம் வரும் என உறுதியளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகின்ற நேரத்தில் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். இங்கே வருவாயைப் பெருக்குவதற்காகவே வரியை உயர்த்துகின்ற நிலையை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்திலே திரையரங்குகளிலே வசதிகள் இல்லை என்பதனை இந்த நேரத்தில் பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் சொன்னார்கள். எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் போக்கப்படுவதற்காகத்தான் இந்த அரசினுடை

[திரு. தா. வீராசாமி] [1985 ஜூலை 16

நோக்கம், வரியும் உயரவேண்டும், வருவாயும் பெருக வேண்டும், அதே நேரத்தில் மக்களுக்கு சினிமா பார்க்கின்ற மக்களுக்கு வசதிகளைப் பெருக்கிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இந்த அரசு இருக்கிறது. என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொண்டு, அப்படிப்பட்ட நிலைமைகளை இந்த அரசு கவனித்து நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கூறிக் கொள் கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இங்கே தியேட்டர் உரிமையாளர்களுக்குச் சலுகை அளிக்கின்ற வகையில் இந்த இணக்க வரி முறையைக் கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். அது அல்ல இந்த அரசினுடைய நோக்கம். தியேட்டர் உரிமையாளர்களுக்கு இங்கே சலுகை அளிப்பது அல்ல இந்த அரசினுடைய நோக்கம். சினிமாத் தொழில் வளர வேண்டும்; அதன் மூலமாக அரசுக்கும் வருவாய் பெருகவேண் டும். இதுதான் இந்த அரசினுடைய நோக்கம் என்பதனை இந்த நேரத்தில் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இணக்க வரி முறை வந்த பிறகுதான் இன்றைக்குச் சினிமாத் தியேட்டர்கள் பெருகி இருக்கினறன. அரசினுடைய வருவாயும் பெருகியிருக் கிறது என்பதனை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன். அதுவும் குறிப்பாக இணக்க வரி முறையைப் புகுத்தியிருக்கின்ற பகுதிகளிலேதான் தியேட்டர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக் கிறது. என்பதனையும் அதன் மூலமாக அரசுக்குக் கிட்டத்தட்ட 1984–85 ஆம் ஆண்டு 18 கோடி ரூபாய் வருவாயாக வந்திருக்கி றது. என்பதனையும், ஆண்டுக்காண்டு இணக்கவரி மூலம் வருவாய் பெருகிக் கொண்டு இருக்கிறது. என்பதனையும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே இந்த அரசு வருவாயையும் பார்த்துக் கொள்ளும். வசதிகளையும் பெருக்கித் தர எல்லா நடவடிக்கை களையும் எடுக்கும் என்பதனை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்கிறேன்.

இங்கே ஆபாச சுவரொட்டிகளையெல்லாம் பற்றிச் சொன் னார்கள். அதையெல்லாம் இந்த அரசு முறையாகக் கவனித்து இருக்கின்ற சட்டங்களுக்கு உட்பட்டு செயல்படும் என்பதனை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். சினிமா தயாரிக்கின்றவர் களை இங்கே வற்புறுத்தி மதம், ஜாதி இப்படிப்பட்டவை களிலே கிண்டலும், கேலியும் செய்து யாருடைய மனத்தையும் புண்படுத்தாத நிலையில் இந்த அரசு பார்த்துக் கொள்ள வேண்டு மென்று இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் அப்படிப் படம் தயாரிக்கின்றவர்களைக் கட்டுப்படுத்த இந்த அரசுக்கு எந்தவித மான அதிகாரமும் இல்லை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்

1985 ஜூலை 16] [திரு தா. வீராசாமி]

படம் தயாரிக்கின்றவர்களே நல்ல கருத்துக்களைக் கொண்டு சமுதாய முன்னேற்றத்திற்குரிய நல்ல புரட்சிகரமான கருத்துக் களைக் கொண்டு, யாருடைய மனமும் புண்படாத வகையில் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமேயொழிய யாரையும் குத்திப் பேச வேண்டும், கிண்டல் செய்ய வேண்டும் என்று இல்லாத வகையில் பக்குவமாக, நாகரீகமாக, பண்பாட்டோடு கருத்துக்களை எடுத்தும் சொல்லும் முறையை வளர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையிலே படங்களைத் தயாரிக்கின்ற நேரத்திலே தான் அந்தப் படம் எல்லோராலும் விரும்பிப் பார்க்கப்படும் என்பதனையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இந்த மாமன்றத்தில் ஒன்றை நான் வைக்கக் கடமைப்பட் டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் அதைப்பற்றி இங்கே விரிவாகப் பேசினார்கள். அப்படிக் கிண்டலும் கேலியும் செய்யக்கூடிய அப்படிப்பட்ட படங்களைப் பார்ப்பதைத் தவிர்க்க நாம் சூளுரை எடுத்துக் கொள்ளவேண்டும். அதே நேரத்தில் மக்கள் மன்றத்திலேயும் இப்படி யாருடைய மனத்தையும் புண்படுத்தும் வகையிலே தயாரிக்கப்படுகின்ற படங்களை பார்க்கக்கூடாது என்ற பிரச்சாரத்தையும் செய்வ தற்கு நாம் தயாராக இருக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படிச் செய்கின்ற நேரத்தில் தான் தரமான படங்கள் வெளி வரும். நல்ல கொள்கை அடிப்படையில் கொள்கைகள் அந்தப் படத்திலே புகுத்தப்பட்டு, அதனைப் பார்த்து, சமுதாயம் திருந்துகின்ற வகையிலே, வாழ்கின்ற வகையிலே நல்ல தரமான படங்கள் வெளிவரும் என்பதனை இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12–20)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல் கின்ற நேரத்திலே இந்த மாமன்றத்திலே இந்த வரிசையிலே இருந்து, எடுக்கின்ற சினிமா படங்களைப் பற்றி நாங்கள் சொன்ன கருத்துக்கு ஆதரவாக அவர்கள் சொல்கின்றார் கள், நான் வரவேற்கின்றேன். இது மாதிரியான கேலியும் கிண்ட லும் செய்கின்ற அல்லது புண்படுத்துகின்ற தரக் குறைவான படங்களைப் பார்க்கக்கூடாது என்று சூளுரைக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அதிலே எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் சினிமா படத்திற்குப் போனதற்குப் பின்னாலேதானே எங்களுக்குத் தெரிகிறது. இம்மாதிரியான காட்சிகள் எல்லாம் வருகின்றன என்று. அதனால் நாங்கள் வலியுறுத்துவது, இதிலே அரசாங்கமே தலையிட்டு இது மாதிரியான காட்சிகளைத் தடை செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : அதையெல்லாம் தடை செய்கின்ற அதிகாரம் எங்களிடத்திலே இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆனால், நான் சொன்னது, ஒரு படத்தைப் பார்க்கின்றோம். அதிலே அப்படிப்பட்ட தவறுகள் இருக்கின்றன என்றால், அதை எடுத்துச் சொல்வதற்கு நாம் தயங்கக் கூடாது. குறிப்பாக, நாம் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியலிலே இருப்பவர்கள், பொது வாழ்விலே இருப்பவர்கள், இன்று மக்களிடம் வாக்குகளை வாங்க வேண்டுமென்ற காரணத்தினால், உண்மையில் மன உறுதியோடு உள்ளபடியே நாம் எடுத்து சொல்வோமானால் நாம் மக்களுடைய செல்வாக்கை இழந்து விடுவோம் என்று அச்சப்படுகின்ற காரணத்தினால் சொல்ல வேண்டிய நியாயமான சில உண்மைகளை சமுதாயத்திற்கு வேண்டிய அத்தியாவசியமான சில கொள்கைகளை, நாம் சொல்ல மறந்து வருகின்றோம் எனபதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில்தான் அதை நான் சொல்கின்றேன். நல்ல கருத்துக்களைச் சொல்ல வேண்டும், பக்குவமாகச் சொல்ல வேண்டும், யாரையும் புண்படுத்துகின்ற வகையிலே கிண்டலும், கேலியுமாக, தரக் குறைவாக அதை அமைக்கக் கூடாது என்பதைத் தான் இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, சினிமா படங்கள் எப்படி இருக்க வேண்டுமென்பது குறித்து, அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மத்திய சர்க்காருடைய தணிக்கைக் குழு - சென்சார் போர்டு - உறுப்பினர்கள் ஒரு படத்தைப் பார்த்து, இந்தப் படம் திரையிடத் தகுந்தது என்று ஒரு சர்ட்டிபிகேட் கொடுத்து விடுகிறார்கள். அப்படிக் கொடுத்ததற்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னதைப் போல, அதிலே ஆபாசமோ, அல்லது புண்படுத்துகின்ற கருத்தோ இருந்தால், இந்த மாநில சர்க்கார் பார்க்காதே படம் என்று உபதேசம் செய்து விட்டால் போதுமா? நாங்கள் வேண்டுமானால் அமைச்சருடைய வேண்டுகோளை ஏற்று, அதில் ஒன்றிலாவது நாங்கள் பார்க்காமலிருக்க முயற்சிக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், இலட்சக்கணக்கான மக்கள் பார்க்கிறார்களே, அதை எப்படித் தடை செய்ய முடியும்? உதாரணத்திற்குச் சொல்கிறேன், ஒரு படம் சென்னையிலே, ஸ்டார் தியேட்டரிலே ஓடியது. படத்திற்கு விளம்பரத்திற்காகச் சொல்லவில்லை. 'ஆஜ் கா எம்.எல்.ஏ.' என்று இந்தியிலே ஒரு படம் ஓடியது. அந்தப் படத்தை உங்களிலே பல பேர்கள் கூட பார்த்திருக்கலாம்.

இங்கே உரிமைப் பிரச்னை கூட வருகிறது. பயங்கரமான உரிமைப் பிரச்னைக்குரிய படம் அது. ஒரு முடி வெட்டுகிற தொழிலாளி, தேர்தலிலே நின்று வெற்றி பெறுகிறார். அவர், தேர்தல் நேரத்திலே வாக்குறுதி கொடுக்கிறார். என்ன வாக்குறுதி என்று கேட்டால், நான் வெற்றி பெற்றால், இலவசமாக 200 பேர்களுக்கு மொட்டை அடிப்பேன் என்று போட்டு, கிண்டல் பண்ணிய படம் ; மந்தை மாடுகளைப் பணம் கொடுத்தால், விலைக்கு வாங்கிவிடலாம் என்ற கருத்துக்களை எல்லாம், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இலஞ்சம் பெறுவதாக எல்லாம் சொல்கிற 'ஆஜ் கா எம்.எல்.ஏ.' என்ற படம் நீண்ட நாட்களாக ஓடியது. நான் கேட்கிறேன், சென்சார் போர்ட், மத்திய சர்க்காரே அனுமதி கொடுத்துவிட்டது. அந்தப் படத்தை நீங்கள் எப்படி தடை செய்ய முடியும் ? இன்றைக்குப் பத்திரிகைகள் மீது, மற்றவர்கள் மீது, உரிமைப் பிரச்னை கொண்டு வருகிறார்களே, இதன்மீது எப்படி உரிமைப் பிரச்னை கொண்டு வரமுடியும் ; என்ன தீர்வு என்பதற்கு அமைச்சர் பதிலைத் தருவார்களா ?

மாண்புமிகுடாக்டர் கா.காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் படத்தை ரகுமான்கான் இவ்வளவு ஆவலாகப் பார்த்ததன் மர்மம் என்ன என்பது புரியவில்லை,

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு பத்திரிகை ஆசிரியர் அந்தப் படத்தைப் பார்த்து விமர்சனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்ட காரணத்தாலே நானும் உங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் அந்தப் படத்தை அந்தப் பத்திரிகையாளருடைய செலவிலே பார்த்து, இருவரும் விமர்சித்து, பத்திரிகையிலே கூட பேட்டி வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : திரு. ரகுமான்கான் இப்படித்தான் படங்கள் எல்லாம் பார்க்கிற வழக்கமா ?

திரு அ. ரகுமான்கான் : படம் விவாதத்திற்குரியதாக இருக்கிற காரணத்தாலே—அந்தப் படம் அப்படி இருக்கிறது. ஆனால், என்னுடைய, மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் பார்க்கின்ற படமாக இருந்தாலும், நான் பார்க்கின்ற படமாக இருந்தாலும் ஒரே உணர்வோடுதான் இருக்கும் என்று நம்புகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கானுடைய இந்திக் கொள்கை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அவர் இந்திப் படம் என்று சொன்னதனால் அவரிடத்திலே இருந்து தெரிந்து கொள்வது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான். மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, கலையில், இலக்கியத்தில், கலாச்சாரத்தில், கிழக்கு மேற்கு கிடையாது. மேற்கு வங்கத்தில் ஒரு படமாக இருந்தாலும், மலையாளத்தில் ஒரு படமாக இருந்தாலும்..

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, கிழக்கு மேற்கு கிடையாதே தவிர, வடக்கு தெற்கு உண்டு.

திரு. அ. ரகுமான்கான் : மாற்றுத் தலைவர் அவர்களே, கலையைப் பொறுத்த மட்டில் வடக்கு,தெற்கு, கிழக்கு, மேற்கு எதுவும் கிடையாது. காரணம் கலாச்சாரம் என்பது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டு இருக்கலாம். உதாரணமாக கேரளத்து மக்கள் ஒரு கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதாக படம் எடுக்கிறார்கள். மேற்கு வங்க மக்கள் ஒரு கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதாக படம் எடுக்கிறார்கள். அதை ஒரு கலைக் கண்ணோட்டத்தோடு பார்ப்பது தப்பு அல்ல. அதே நேரத்தில் ஒரு மொழியினுடைய ஆதிக்கம் என்று சொல்லுகிறபோது கண்டிக்க வேண்டும். இங்கே கூட ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். 9 மாதம் தமிழ் படம் காட்ட வேண்டுமென்று. அந்தச் சட்டம் அமுல்படுத்தப்படுகிறதா என்றால் இல்லை. அரசாங்கமே அதை அமுல்படுத்தவில்லை. ஆகவே, இங்கே ஆதிக்கம் என்பது வேறு. இந்திப் படம் என்பது வேறு.

எனக்கு இந்தி பிடிக்காமல் இருக்கலாம். அதற்காக இந்தி பேசுகின்ற பெண்கள் எல்லாம் , ஆண்கள் எல்லாம் எனக்கு விரோதிகள் அல்ல. ஆகவே நான் சொல்ல விரும்புவது, ஆதிக்கம் என்பது வேறு, வேறு மொழிப் படம் பார்ப்பது கலாச்சாரத்தைப் பார்ப்பது என்பது வேறு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, இயக்கத்தினுடைய அடிப்படையிலேயிருந்து கொஞ்சம் விலகுவது எனக்கு வருத்தமாக இருக்கிறது. எந்தத் திணிப்பும் கொஞ்சம் இனிமையாகத்தான் முதலில் தலை காட்டும். கலை வடிவிலே தான் தலை காட்டும். விடக்கூடாது. மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுக்கு இப்படி எப்போது முயக்கம் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே,இன்னும்சொல்லப்போனால் கம்பருடைய காவியப் படைப்பிலேகூடமாயமானைப்பார்த்து மயங்கியது சீதை என்ற வரலாறு இருக்கிறதே தவிர இராமன் மயங்கியதாக வரலாறு இல்லை. இன்னும் சொல்லப் போனால் திராவிட இயக்கத்தின் அடிப்படை கொள்கையிலிருந்து நழுவிச் செல்கிறார் என்ற ஒரு தவறான கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற காரணத்தாலே சொல்கிறேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத்

தான் நாங்கள் எதிரிகளே தவிர, பிரிட்டிஷ்காரர்களுக்கு அல்ல என்று மகாத்மா காந்தியடிகளுடைய வாசகத்தைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்களும் சொன்னார்கள். இந்தி ஏகாதிபத்திற்குத்தான் நாங்கள் எதிரிகளே தவிர, தனிப்பட்ட எந்த மொழிக்கும் நாங்கள் எதிரிகள் அல்ல என்று சொன்னார்கள். அதே அடிப்படையில்தான் பல்வேறு மொழிகளில் வருகின்ற படங்களைப் பார்ப்பது தவறு அல்ல, ஆதிக்கம் தவறானது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இங்கே ஒரு தெளிவான விளக்கத்தைக் கேட்டு, அமர்ந்திருக்கிறார்கள். நான் முன்பே சொன்னேன். படம் தயாரிக்கும் போது நல்ல கருத்தை, நல்ல கொள்கையைக்கொண்டு தயாரிக்க வேண்டும். அதை மத்திய சென்சார் போர்டும் முறையாக சென்சார் செய்ய வேண்டும். அதற்கு மாறாக சில கருத்துக்கள் அடங்கிய படங்கள் வருமானால் நாம் அந்தப் படங்களைப் பார்த்து, பார்ப்பது மட்டுமல்லாமல் மக்களிடம் அதை எடுத்துச் சொல்லி, மக்களிடம் அப்படிப்பட்ட கருத்துக்கள் படியாத சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று சொன்னேன். அந்த அடிப்படையில் தான் இப்போதும் சொல்கிறேன், இந்த இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் கோவை மாநகராட்சியைப் பற்றிச் சொன்னார்கள். கோவை நகராட்சி இப்போது மாநகராட்சியாக ஆக்கப்பட்ட பிறகு அது 'நான்–கம்பவுண்டிங் டாக்ஸ்' திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கம்பவுண்டிங் முறை 1977-ல் கொண்டு வரப்பட்டது. அதன் பிறகு அது செலக்ஷன் கிரேடு. ஃபர்ஸ்ட் கிரேடு நகராட்சிகளுக்கு 1982-ல் கொண்டுவரப்பட்டது டது. அந்த அடிப்படையில் வரி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதன் பிறகு நோட்டிஃபை செய்த பிறகு இப்போது கோயம்புத்தூர் மாநகராட்சி 'நான்–கம்பவுண்டிங்' வரி விதிப்புக்கு அப்பால் கொண்டு வரப்பட்டு, இப்போது அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு முன்பு இருந்த சட்டத்திலே சென்னை, மதுரை என்கிற இரண்டு மாநகராட்சிகள் இருக்கின்றன. அதற்காகத் தான் இப்போது கோயம்புத்தூர் மாநகராட்சியை அதிலே சேர்க்கின்ற திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஆர். வேங்கடரமணன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டு வந்து இந்தச்சட்டமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணாக்குகின்ற சூழ்நிலை இருக்கிறது என்று வருத்தப்

[திரு. தா. வீராசாமி] [1985 ஜூலை 16

பட்டார்கள். அதை எல்லாம் உணர்ந்து தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வீணான காரியத்தை நாம் வருங் காலத்தில் செய்யக் கூடாது என்று முடிவு செய்து, அந்த அடிப் படையில் தான் இப்போது மாநகராட்சிகள் என்று உள்ளாட்சித் துறை நிறுவனங்கள் தரம் உயர்த்தப்படும்போது ஒரே மாதிரி யான, முறையான கேளிக்கை வரி விதிப்பைச்செய்து, ஒழுங்காக வரி வசூல் செய்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

இன்று கோவை, கோவையை அடுத்து சேலம், திருச்சி போன்றவை மாநகராட்சிகளாக ஆக்கப்படுமேயானால் அவற்றின் தரம் உயர்த்தப்படுமேயானால் மீண்டும் ஒரு சட்டத் திருத்தம் தேவையில்லை. தமிழகத்தில் தொடர்ந்து சட்டத் திருத்தம் கொண்டுவராமலேயே, அப்படிப்பட்ட நகரங்கள் மாநகரங்களாக மாற்றப்பட்டாலும் அவற்றிற்கு வரி விதிக்கின்ற சூழ்நிலை இந்தச் சட்டத்தின் மூலமாக உருவாக்கி இருக்கிறோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் இதனை வரவேற்று இதற்கு நன்றி தெரிவிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றது. 2, 3, 4 Theatre Tax Collection பிரிவு திருத்தம்—கோயம்புத்தூர் மாநகராட்சிபற்றியது. அடுத்து Gross Collection பற்றியது. இதிலே இருக்கின்ற நிலைமை என்னவென்று கேட்டால் இப்போது இணக்க வரி மூலமாக வரி செலுத்துகின்ற அல்லது வரியினை மதிப்பீடு செய் கின்ற நேரத்தில் குறைபாடுகள் இருக்கின்றன என்ற காரணத் தால் அதை நாம் முறையாகச் செய்ய முடியவில்லை. வரி விதிக்கின்ற லைசன்ஸிங் அத்தாரிட்டி மாவட்ட ஆட்சித் தலைவ ராக இருக்கலாம் அல்லது வருவாய்த்துறை அதிகாரியாக இருக்க லாம். அப்படி வரி விதிப்பவர்கள் அந்த லைசன்ஸைப் பார்த்து முறையாகக் கணக்கிட்டு வரி விதிப்பு செய்து அவற்றை வசூலிக் கின்ற வகையில் இந்தத் திருத்தம் இங்கே பயன்படும் என்பதைச் சொல்லிக்கொண்டு அந்த வகையில் இந்தத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த வகையில் இதற்கு முன்பு இருந்த சட்டத்தில் இடம் இல்லையா என்று கேட்டால் நிச்சய மாக இல்லை என்பதையும் அதன் காரணத்தால்தான் இப்போது கொண்டு வந்திருக்கிறோம் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[1985 ஜூலை 16 [திரு. தா. வீராசாமி]

அடுத்து தியேட்டர் உரிமையாளர்கள் விருப்ப உரிமையைத் திரும்பப் பெறாமல் இருக்கும் வரையில் 5-பி, 5-ஏ என்ற இணக்க வரி முறையின் கீழ் வரி விதிக்கப்படுகின்றனர். 5பி. என்பதன் கீழ் ஒரு வரி விதிப்பிற்கு எழுதிக் கொடுத்துவிட்டு அவ்வாறு வரி விதிக்கின்றபோது ஓராண்டுக்காலம் முடிந்து விட்டால் அவர் மீண்டும் விண்ணப்பித்து புதுப்பிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அப்படி அவர் விண்ணப்பம் செய்து கொள்ளத் தவறினால் 5-ஏ என்ற முறையில் வரி விதிக்கப்பட்டு கேளிக்கை வரி வசூலிக்கப்படும். அதனால் அவர்களுக்குப் பெருத்த நஷ்டம் வருகின்றது என்ற காரணத்தால் இப்போது அந்தத் தியேட்டர் உரிமையாளர்களுக்குநன்மைசெய்கின்ற வகை யில், நன்மை என்று சொன்னால் அவர்களுக்கு அல்ல, கலை வளரவேண்டும் என்ற ஆர்வத்தின் அடிப்படையில் இப்போது அவர் புதுப்பிக்கத் தவறினாலும் அவர், அந்தத் தியேட்டர் ஓனர், தானேமுன்வந்து நான்-1 இந்த 5-பி இணக்கவரியிலிருந்து விடு படுகிறேன், அல்லது வேறு முறைகளை மாற்றியமைத்துத் தர வேண்டும் என்று எழுத்து மூலமாகக் கொடுக்கின்ற வரையில் அவருக்கு 5-பி-யின் கீழ் இணக்க வரிதான் விதிக்கப்படும் என்பதை வகை செய்வதற்காக இங்கே திருத்தம் கொண்டுவரப்பட்டிருக் கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

அதேபோன்றுதான் தியேட்டர் உரிமையாளர்கள் இறந்து போனால் 7-சி என்ற பிரிவை — இதுபற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் கடுமையாக விமர் சனம் செய்தார்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தவறான கருத்தைச் சொல் கிறார்கள். நான் இந்தச் சட்டத்தை விமர்சிக்கவில்லை. நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் அந்தச் சட்டம் மிகவும் தேவையான சட்டம் என்று தெரிந்து அது தொடர்பான தீர்ப்புக் கள் ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்டிப் பேசினேன். நான் சொல்ல வந்தது எல்லாம் முந்தைய சட்டத்திலும் சரி, இந்தச் சட்டத்திலும் சரி மிகவும் பிற்போக் கான முறையில் 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே என்று ஏன் போடுகிறீர்கள் என்றுதான் கேட்டேன். இந்தச் சட்டம் தவறு என்று நான் சொல்லவில்லை. அந்தச் சட்டம் தேவை ; வர வேற்கத்தக்கதுதான். ஆனால் Compounding Tax 1/1983, -1983 முதல் தான் இது அமுலுக்குக் கொண்டுவரப்படுகின்றது என்கிறபோது எதற்காக 1-6-197ட-லிருந்து என்ற வகையில் 15 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் கொடுக்கிறீர்கள் என்றுதான் நான் கேட்கிறேன். சட்டமன்றத் திற்கு சட்டம் இயற்ற உரிமை இருக்கின்றது என்பதற்காக இதனை மிஸ்யூஸ் செய்யக்கூடாது என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே 7-ஐ கொண்டு வருவது— தியேட்டர் உரிமையாளர் ஒருவர் இறந்து போனால் சட்டத்தில் இடம் இல்லை அந்த வரியை வசூலிப்பதற்கு. எனவே அவருடைய வாரிசுதாரர்களிடத்திலிருந்து அல்லது உரிமையைப் பெற்றவர்களிடத்திலிருந்து அந்த வரியைப் பெறுவதற்காகத் தான் அவர்கள் விட்டுச் சென்றுள்ள அந்த சொத்தின் அளவுக்கு அந்த வரியை வசூலிப்பதற்கு இங்கே சட்டத்திலே திருத்தம் கொண்டுவந்திருக்கிறோம். அதோடு நம்முடைய மரியாதைக் குரிய திரு. நடராஜன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பெனாலிட்டி என்று தலைப்பில் இருக்கின்றது. ஆனால் முன்னமேயே ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

அதிலே பெனாலிட்டி என்பதற்குப் பதிலாக இன்டரஸ்ட் என்று ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். Belater payments என்று சொல்வார்கள். அதற்காக இந்த பெனாலிட்டிக்குப் பதிலாக அதற்கு வட்டி செலுத்த வேண்டும் என்ற வகையில் சேர்த்து, சட்டத் திருத்தம் கொண்டு வந்து, அது சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தச்சட்ட முன்வடிவிலே தலைப்பிலே பெனாலிட்டி என்றே இருக்கிற காரணத்தினாலே அதையும் இப்போது வட்டி என்று இங்கே சட்டத்திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து 9(15) (பி) : இதற்கு, முன்பிருந்த நம்முடைய சட்டத்திலே இடம் இல்லை. நம்முடைய கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் பதிவேடுகளை, அல்லது தீர்ப்பாணதினாலே வழங்கப்படுகிற தீர்ப்புகளை, அதிலே இருக்கிற கணக்குகளை எல்லாம் ரகசியமாக பாதுகாப்பதற்கு அந்தத் துறைக்கு ஆணை இடுவதற்கு, இருக்கிற சட்டத்திலே இடம் இல்லை. எனவே அந்த வகையிலே அவைகளையெல்லாம் ரகசியமாக பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்த 15(பி) கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். ஆனால் முறையாக, சட்ட விதிகளுக்கு உட்பட்டு, கேட்கப்படுகிற நேரத்திலே அவைகளையெல்லாம் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால் அவைகள் இரகசியமாகபாதுகாக்கப்பட வேண்டும். அப்படி ரகசியமாக பாதுகாக்க வேண்டிய பதிவேடுகளையும், தஸ்தாவேஜுகளையும் உண்மையாகவே இரகசியமாக பாதுகாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தான், இதனைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து 10வது பிரிவு. சேவிங் கிளாஸ். அதிலே இந்த வாரிசுதாரர்கள், பிரிவுகள் 6,-7லே கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்தங்களிலே உள்ளவர்கள் (கிரிமினல்ஸ்) தண்டனை பெறக்கூடாது என்ற காரணத்தினால்தான் சேவிங் கிளாஸ் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே 9 திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. 6 திருத்தங்கள் முன்பே உள்ள பழைய சட்டத்திற்கு திருத்தங்களாகக் கொண்டு வந்திருக்கிறோம். இரண்டு மூன்று புதியவைகள் என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்கிறேன்.

அத்தோடு நம்முடைய தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலே, இப்படி சட்டப்பிரிவுகளுக்கு பல்வேறு வழி வகை செய்யப்பட்டு இருக்கிற காரணத்தினாலும், அதையும் கேளிக்கை வரி சட்டத்திலே கொண்டு வர வேண்டும் இருக்கின்ற ஓட்டை உடைசல்கள் அடைக்கப்பட வேண்டும். அதன் மூலமாக அரசுக்கு வருவாயைப் பெருக்க வேண்டும். என்பதற்காக இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டுவந்திருக் கிறோம் என்பதையும் கூறிக் கொண்டு, மாண்புமிகு உறுப் பினர் வேங்கடரமணன் கூறிய கருத்துக்கு, 3-வது சட்டத் திருத்தப்பிரிவு 1,-2ல், அந்தச் சட்டத்தில் 6-வது பிரிவில் 26-12-77-ல் இருந்துதான் பின்னோக்கி நிற்கிறது.

ஆறாவது பிரிவு ஆப்ஷன் கொடுப்பது பற்றியாகும். தற் போதுள்ள பிரிவில் ஆப்ஷன் கொடுத்தால்.ஒரு வருடம் இருக்கும் என்று இருந்தாலும் நடைமுறையில் அப்படிக் கொடுத்த ஆப்ஷனை ரத்து செய்வதற்காக மேற்கொள்ளப்படுவதில்லை. ஆகவே இது அப்படி ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்து, நடை முறைப்படுத்தி, சட்ட ரீதியாக செயல்பெறச் செய்கிறது.. 26-12-1977க்குப் பிறகு 5(பி) 5(சி) காம்பவுண்டிங் பிரிவு, கொண்டு வரப்பட்ட நாளிலிருந்து அந்தத்திருத்தம் பின்னோக்கி செயல்பட்டிருக்கிறது.

அது போல பிரிவு 7. தியேட்டர் முதலாளிகளின் வாரிசுகளிட மிருந்து வரி வசூலிக்க வகை செய்கிறது. அதுவும் 1-7-1977 லிருந்து செயல்படுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொண்டு, 10வது சேவிங் கிளாஸ் பிரிவு, யாரையும் அதிகமாக தண்டிக்கக்கூடாது என்றும், சட்டம் அமலில் இல்லாத நாளில் யாரும் தவறு செய்தவர்களாக கருதப்பட மாட்டார்கள் என்ற நல்ல நோக்கத்தோடு தான் இந்தப் பிரிவு 10-ல் வகை செய்யப் பட்டிருக்கிறது. இவ்வளவும் சட்டப்படியும், நியாயப் பிரகார மும், நடைமுறையில் சட்டரீதியாகக் கொண்டு வந்து செயல் பட வேண்டும் என்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொண்டு, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த இரண்டு சட்டதிருத்த முன் வடிவுகளில் பேசுகிற நேரத்தில் இன்று, சினிமா தியேட்டர் களில் நடைமுறையில் இருக்கும் பல்வேறு ஒழுங்கினங்களை எடுத்துச் சொன்னார்கள்.

[திரு. தா. வீராசாமி] [1985 ஜூலை 16

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிற நேரத்தில் கள்ள டிக்கட்டுகள் அச்சடிக்கப்படுவதாகவும், அதுவும் அந்தத் துறையைச் சார்ந்த அதிகார பெருமக்களின் உறுதுணையோடு நடத்தப்படுவதாகவும், அப்படிப்பட்ட டிக்கட்டுகள் விற்கப்படுவதாகவும் அதன் மூலமாக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்றும் எடுத்துச் சொன்னார்கள்.

(பிற்பகல் 12-40).

அவர்கள் இந்த மாமன்றத்தில் அப்படிப்பட்ட நல்ல கருத்துக்களை நெஞ்சுறுதியோடு சொன்னதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த உண்மையான கூற்று இந்தத் துறைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதோடு விட்டுவிடாமல் தனிப்பட்ட முறையில் எந்தத் தியேட்டர் என்பதையும், அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய பெயர் தெரியுமானால் அதனையும் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட தியேட்டர் உரிமையாளர்கள் மீதும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் நிச்சயமாக கடுமையான நடவடிக்கையை இந்த புரட்சித் தலைவர் அரசு எடுக்குமென்பதை உறுதியாகச் சொல்லி, இந்த இரண்டு திருத்தச் சட்ட முன் வடிவுகளை நிறைவேற்றித் தரும்படி, சட்டமாக்கித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக அலுவலகங்களில் யாராவது லேட்டாக வந்தால், ஏன் லேட் என்று கேட்டால், லேட் ஆகிவிட்டது என்று பதில் சொல்வார்கள். அதைப் போலவே நான் நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு வினாவை எழுப்பினேன். எதற்காக ரெட்ராஸ்பெக்ட்டிவாக சட்டத்தைப் போட்டிருக்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ரெட்ராஸ்பெக்ட்டிவாக சட்டத்தைப் போட்டிருக்கிறோம் என்று தான் சொன்னார்கள். 26—11—1977 என்று எதற்காக அந்தத் தேதியை தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் 1—4—1970 என்று எதற்காக அந்தத் தேதியை தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டு கேள்வி கேட்டேன் ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இது குறித்துச் சொல்லி விட்டீர்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்களை இப்படித்தான் பதில் சொல்ல வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்த முடியாது, உட்காருங்கள். இப்போது வாக்கெடுப்பு.

பேரவை முன்னுள்ள கேள்வி : ''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

1985 ஜூலை 16]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 27/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

2. தகவல் கோரல்.

(ஊ) அவையிலுள்ள மைக் ஒன்று உடைந்துள்ளது குறித்து

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சபையிலே மைக்குகள் உடைந்து போனால் ஒட்டு மொத்தமாக ரகுமான்கான் தான் காரணம் என்று சொல்வதைப் போன்ற நிலைமை நீண்ட காலமாக உண்டு. இப்போது நம்முடைய மாண்புமிகு சித்தன் அவர்கள் இருக்கையின் முன்னால் இருக்கிற மைக் உடைந்து கீழே விழுந்திருக்கிறது. அது எப்படி உடைந்தது ?

திரு. என். எஸ். வி. சித்தன்: இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இதை நான் உடைக்கவில்லை, அதுவாகத் தான் உடைந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த இருக்கைக்கு நேர் பின்னாலே திரு. ரகுமான்கான் அவர்கள் தான் இருக்கிறார்கள். அதனால் உடைந்திருக்கலாம். (சிரிப்பு).

திரு. அ. ரகுமான்கான் : அவர் மைக்கைத் தொடவில்லை என்றும் அது தானாகவே உடைந்து விட்டது, அல்லது கீழே விழுந்து விட்டது என்றும் சொல்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், நம்முடைய சபையிலே இருக்கிற மைக்குகள் எல்லாம் லூசாக இருக்கின்றன. அதனால் அவைகள் கீழே விழுந்து விடுகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது சரியாகத் தான் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஏற்படுகிற சந்தேகம் இதற்கு முன்னால் அவர் அதைத் தொட்டாரோ என்று தான் சந்தேகம் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுவும் இருக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : நான் தொடவில்லை.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 33/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

* 1985 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட மு வடிவின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கையின் மீது அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்ட சில முடிவுகளுக்கு இணங்க இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு இருப்பதை நான் பார்க்கிறேன். மின் அணுவியல் தொழில் பிரிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற் காக அல்லது அந்தத் தொழில் வளர வேண்டும் என்ற எண்ணத் திலே தற்போது இருக்கும் வரியை 12 சதவீத விழுக்காட்டில் இருந்த விற்பனை வீதத்தை 10 விழுக்காடாக அரசு குறைத்து இருக்கிறது. அதுவும் 2 சதவீதம் குறைத்துவிட்ட காரணத் தாலே அந்த மின் அணுவியலினுடைய தொழில் மலர்ந்துவிடும் என்றோ அல்லது அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு அதன் மூலமாக உற்பத்திச் செலவோ, அல்லது வாங்குகின்றவர் களுக்கு அந்த விலை கணிசமாக குறைந்துவிடும் என்றோ நான் கருதவில்லை. அரசாங்கம் உள்ளபடியே அந்தத் தொழிலில் அக்கறை கொண்டிருந்தால், அந்தத் தொழில் வளரவேண்டும் என்று விரும்பியிருந்தால், இன்னும் கொஞ்சம் கூட அந்த விழுக் காட்டை, 2 சதவீதம் என்று குறைத்திருப்பதை, இன்னும் கொஞ் சம் அதிகமாக ஆக்கியிருக்கலாம் என்ற யோசனையை நான் கூற விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சாராயத்தின் மீதான விற்பனை வரியின் மீது தற்போது இருந்து வரும் வணிக வரி, 5 சதவீதத்தில் இருந்து, 25 விழுக்காடாக உயர்த்தப்பட இருக்கிறது. இந்த அரசுக்கு இப்படி சாராயத்தின் மூலமாக வருகின்ற வரியை உயர்த்துகின்ற வாய்ப்பு இருக்கக்கூடாது என்று நான் கருதுகிறேன். பொதுவாக வணிக வரியைப் பற்றிச் சொல்கிற நேரத்தில், இந்தியாவிலே தமிழகத்தில் தான் முதன் முதலாக கொண்டு வரப்பட்டது. குறிப்பாக தமிழகத் திலே மதுக் கடைகளை மூடுகின்ற காரணத்தாலே, ஏற்படுகின்ற இழப்பை ஈடு கட்டுவதற்காக வணிக வரி கொண்டு வரப்பட்டது என்பதை எல்லாம் நாம் அறிவோம். ஆனால் இந்த அரசுக்கு வணிக வரி மூலமாக ஏறக்குறைய 1,000 கோடி ரூபாய் வரியும், அதே நேரத்தில் மதுக்கடைகளை திறந்து வைப்பதாலே ஏறக் குறைய 150 கோடி ரூபாய்க்கு மேலாக வரியும் கிடைத்திருக் கிறது. பொதுவாக இந்தப் பகுதியிலே இருந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் பேசுகின்ற போதும் சரி, எங்களுக்கு ஆதரவாக இங்கே அமர்ந்து இருக்கிற இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர் பேசுகின்றபோதும் சரி, மதுக் கடைகள்

[திரு. என்.எஸ்.வி.சித்தன்] [1985 ஜூலை 16

மூடப்பட வேண்டும், அதனாலே தமிழகத்தினுடைய பொருளாதாரம் பாழ்பட்டுப் போகிறது, ஏழை எளிய மக்கள் மேலும் பாதிக்கப்படுகிறார்கள், என்பதிலே அரசாங்கத்திற்கும், முதல் அமைச்சர் அவர்களுக்கும் இரு வேறு கருத்துக்கு இடம் இல்லை. எந்தவிதமாக கருத்து வேறுபாடும் இல்லாமல், மதுக்கடைகளை மூடவேண்டும் .என்று நாங்கள் சொல்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இன்றைய தினம் அரசாங்கம் வரியை உயர்த்தி இருக்கிறது. இந்த மதுக்கடைகள் மூலமாக இந்த வரியின் மூலமாக வருகின்ற பணம் ''சின்புல் மணி'' ஒரு பாவமான பணமாகக் கருத வேண்டும். ஏழை மக்களுடைய அறிவை மழுங்கச் செய்து, அவர்களுடைய பலவீனத்தைப் பயன்படுத்தி, அதன் மூலமாக பொருளாதாரத்தை சீரழிக்கின்ற இந்த மதுக் கடைகளின் மூலமாக வருகின்ற வரியை தவிர்க்க வேண்டும் என்றும், அரசாங்கம் இந்தக் கொள்கையிலே ஒரு தீவிரமான முடிவை விரைவிலே எடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அடுத்தபடியாக வேளாண் விளை பொருள்களான மிளகாய், மஞ்சள், புளி, கொத்தமல்லி, மற்றும் மிளகு ஆகியவற்றுக்கு அரசாங்கம் பல முனை வரியிலிருந்து ஒரு முனைவரியாக 8 சதவீதம் என்று விதித்து இருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக இந்தப் பகுதியில் பேசுகின்றபோது பலமுனை வரிகள் பல கட்டங்களில் இருப்பதால் வணிகப் பெருமக்களுக்கு ஏற்படுகின்ற தொல்லைகளை நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம். நேர்மையான முறையில், நியாயமான முறையில்.....

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவின் மீது போடப்பட்ட வரியின் மீது கருத்து தெரிவிக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஏழைகளிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டு பாவகரமான அந்தப் பணத்தை செலவு செய்யக்கூடாது என்ற வகையில் கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். அதிலே யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. இன்றைக்கு மது விலக்கு தளர்த்தப்பட்டதற்குக் காரணம் பணத்திற்காக அல்ல. மது விலக்கினை நடத்தி வந்ததிலே கடந்த 7 ஆண்டுக் காலமாக இதே சட்ட சபையில் நடைபெற்று இருக்கிற பேச்சுக்களை எல்லாம் தொகுத்து வைத்து அதை ஆய்ந்து நாம் பார்ப்போமானால் ஒவ்வொரு கட்டத்திலேயும் அதை நடத்த முடியாமல் அதற்கு கடுமையான தண்டனை கொண்டு வரப்

1985 ஜூலை 16] [திரு. செ. அரங்கநாயகம்]

பட்டபோது, அந்தக் கடுமையான தண்டனையை நிறைவேற்று கிறபோது அது ஏழை மக்களை கடுமையாக பாதிக்கும் என்ற கருத்தைச் சொல்லுகின்ற நேரத்திலே இப்போது தளர்த்தப்பட்டு இருக்கிறதே தவிர, பணத்திற்காக மது விலக்கு தளர்த்தப் பட்டது என்ற அர்த்தத்திலே நாம் கருத்தைத் தெரிவிப்பது நல்லது அல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பணத்திற்காக இல்லை என்று சொன்னால் இன்றைக்கு இந்த மசோதாவே வந்து இருக்காது. பணம் அதிகமாக வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதா வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மது விலக்கு தளர்த்தப்பட்டதற்கு பணம் காரணம் அல்ல. அது வந்ததற்கு பிறகு அந்த வரியை உயர்த்து கிறோம் அல்லது அந்த வருமானத்தை பெருக்குகிறோமே தவிர மது விலக்கை தளர்த்தியதற்கு என்ன காரணம் என்றால் இந்தப் பணத்திற்காக அல்ல. அது நடைமுறைப் படுத்துவதிலே ஏற்பட்டு இருக்கிற பல்வேறு சிக்கல்கள், அது கடந்த 7 ஆண்டு காலமாக இதே சட்டமன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி நண்பர்கள் பேசிய அத்தனை கருத்துக்களையும் எடுத்து வைத்து பார்த்தாலே ஒவ்வொரு கட்டத்திலேயும் முதலில் எளிமையாக தண்டனை தரப்பட்ட நேரத்திலே சரியாக நடைபெறவில்லை என்ற குற்றம் சாட்டப்பட்டது. தவறான முறையில் சாராயம் காய்ச்சப்படுகிறது என்ற குற்றம் சாட்டப்பட்டது. பிறகு கடுமையான தண்டனை கொண்டு வரப்பட்ட நேரத்திலே இது ஏழைகளை பாதிக்கிறது என்ற குற்றம் சாட்டப்பட்டது. அப் படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் இது தளர்த்தப்பட்டு இருக்கிறதே தவிர பணத்திற்காக அல்ல. அப்படி வந்ததற்கு பிறகு இன்றைக்கு நாம் வரியை ஏற்றுகிறோம்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் பேசுகின்றபோது இங்கே சாராயத்தின் மீது போடப்பட்டு இருக்கிற வரி, வருவாயைப் பெருக்க என்று குறிப்பிட்டார்கள். இந்த அரசுக்கு மது விலக்கிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடுகிறேன். இன்று இருக்கிற சூழ்நிலையில் மது விலக்கை அமல்படுத்தும் போது கள்ளச் சாராயம் பெருகுகிறது. அது மட்டும் அல்லாமல் கள்ளச் சாராயத்தைக் குடித்து மக்கள் தங்களுடைய உயிரை அநாவசியமாக மாய்த்துக் கொள்கிறார்கள் என்ற நிலைமையும் நாட்டில் உருவாகி இருப்பதும் உங்களுக்கு நன்கு தெரியும். அதைத் தான் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்

[திரு. தா. வீராசாமி] [1985 ஜூலை 16

அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். வருவாய்க்காக இந்த வரியைச் கொண்டுவரவில்லை. ஏழை மக்கள் குடிப்பதை குறைப்பதற்காக வரி கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியோ மதுக் கடைகளை திறப்பது என்ற முடிவுக்கு வந்து ஆகிவிட்டது. ஆகவே நாம் என்ன என்ன காரணங்களைச் சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்பதை நாம் ஆராய்கிறோம். நடைமுறையிலே எதிலே சிக்கல் இல்லை. எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் சிக்கல் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் நடைமுறைச் சிக்கலைத் தவிர்த்து மக்களுக்கு நன்மை செய்வதுதான் ஒரு சோமநல சர்க்காருடைய கொள்கையாக இருக்க வேண்டுமே தவிர நடைமுறையில் எந்தச் சட்டத்தில் சிக்கல் இல்லை. சமுதாயத்தில் பல கேடுகள் இருக்கின்றன. அந்தக் கேடுகளை செய்பவர்கள் இல்லாமல் இருந்து விட்டார்களா? எவ்வளவோ உதாரணமாகச் சொல்லமுடியும். வேண்டாம் என்று பார்க்கிறேன். ஆகவே அந்த நடைமுறைச் சிக்கலை கலைந்து அதன் மூலமாக மக்களுக்கு நன்மை கிடைப்பது தான் நம்முடைய லட்சியமாக இருக்கவேண்டுமே தவிர ஒரு முடிவு எடுத்துக்கொண்டு விட்டு இன்ன காரணம் என்று சொல்லுவது, கள்ளச்சாராயம் இருக்கிறது என்ற காரணத்திற்காக வேண்டி நல்லச் சாராயக் கடை வைப்பது சரியாக, பொருத்தமாக இருக்க முடியாது. நான் இன்னும் சொல்வேன், காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது இந்தக் கஷ்டங்களை எல்லாம் தாங்கி இந்த வருவாய் இழப்பை இழந்து தானே மதுக் கடைகளை நாங்கள் மூடினோம். அதன் மூலமாக மது கடைகளை திறக்கக்கூடாது என்று உறுதியாக இருந்து, காங்கிரஸ் ஆட்சியில் பல சாதனைகளைச் செய்து இருக்கிறோம், இந்தியாவுக்கு வழிகாட்டியாக.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சியில் தான் கள்ளச் சாராயம் ஆரம்பித்து வளர்ந்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவது சரியா? என்று நான் உங்கள் மூலமாக கேட்க விரும்புகிறேன். கள்ளச் சாராயம் காய்ச்சுவது என்பது காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அதிகமாக இருந்தது என்று சொல்லுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஒரு பொறுப்பு மிக்க அமைச்சர் இந்தச் சபையில் இருந்து கொண்டு அதற்கு முன்னால் இல்லாதது போலவும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வளர்ந்தது என்று சொல்லுவதை நான் கண்டிக்கிறேன். அது வருந்தத்தக்கது. கள்ளச் சாராயம் எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. வள்ளுவர் காலத்தில் இருந்து இருக்கிறது.

1985 ஜூலை 16]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் சொன்னேன். வள்ளுவர் காலத்தில் இருந்தது காங்கிரஸ் காலத்தில் எப்படி இல்லாமல் போயிருக்கும். மது விலக்கு என்று யார் காலத்தில் இருந்தாலும் கள்ளச் சாராயம் இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அப்படிச் சொல்லுங்கள்; காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் என்று எப்படிச் சொல்ல முடியும்? (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தான் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டது. அது கொண்டு வரப்பட்டதற்குப் பிறகு கள்ளச்சாராயம் என்பது பெருகி வருகிறது. (குறுக்கீடு).

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச்சாராயம் என்பது எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தான் இருந்தது என்று சொன்னதைத் தான் நான் மறுக்கிறேன். அது எப்போதும் இருந்து கொண்டிருக்கும். கள்ளச்சாராயம் இருந்த காரணத்தினாலேயே மதுக் கடையை திறந்து விடுவது என்பது சரியான வாதமாக இருக்காது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சமா பாதகங்களில் மது என்பது ஒன்று. மது, மாது, சூது, கொலை, கொள்ளை போன்ற பஞ்சமா பாதகங்கள் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்குக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு சபையின் தளநாயகர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கள்ளச்சாராயம் இருந்தது என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அது இருக்கட்டும். நாம் தான் கண்டித்துவிட்டோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஐயத்திற்கு அவர்களே பதில் சொல்லிவிட்டார்கள். அந்தக் காலத்திலிருந்து இருந்து கொண்டிருக்கிறது என்று. நாம் மதுவையும் சூதையும் நியாயப்படுத்தவில்லையே, அதைத் தடுக்கத் தானே செய்கிறோம்? அதைப் போல, இதையும் தடுக்க வேண்டும் என்பது தான் என்னுடைய வாதம்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஜூலை 16

அதைப் போல, வேளாண் விளை பொருள்களுக்கு இந்த அரசாங்கம் பல முனை வரியிலிருந்து விலக்கு கொடுத்து ஒரு முனை வரியாக மாற்றி இருக்கிறார்கள். நான் அதை வரவேற் கிறேன். ஆதே மன்றத்தில் பலமுறை பேசுகிற நேரத்தில் பல முனை வரியினை மாற்றி ஒரு முனை வரியாக ஆக்கவேண்டும் என்று குரல் கொடுத்து இருக்கிறோம். நான் பேசுகிற நேரத்தில் கூட, அண்மையிலுள்ள பாண்டிச்சேரி மாநிலத்தில் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, பாண்டிச்சேரி சிறிய மாநிலம் என்ற முறையில் தான் பதில் சொன்னார்களே தவிர அந்த நியாயத்தை அன்றைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பல இனங்களிலே ஒரு முனை வரியாக ஏற்று இருக்கிறோம். ஒரு சில இனங்களிலே தான் பல முனை வரியாக இருக்கிறது. அவைகளையும் மாற்றி, ஒரு முனை வரியாக ஆக்கினால் உள்ள படியே, அரசுக்கும், அதிகாரிகளுக்கும், வணிகர்களுக்கும் மக் களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளு கிறேன்.

அதே நேரத்தில், இப்படி 8 சதவிகிதமாக உயர்த்துகிற கார ணத்தினாலே,—அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் சொல்ல லாம், பலமுனை வரியாக பல கட்டத்திலே இருக்கிற வரியை ஒரு முனை வரியாக மாற்றுவதால், அரசுக்குச் சேர்கின்ற வருவாய் குறைகிறது என்ற முறையிலே அவர்கள் பதில் சொல்லலாம்.

8 சதவிகிதமாக இருக்கிற காரணத்தால், இன்னும் வரி ஏய்ப்பு பெருகுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தால் வரி விகிதத் தைக் குறைப்போமேயானால், நிச்சயமாக வரி பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

வரி விகிதத்தை உயர்த்திக் கொண்டே போவதால், வருவாய் உயர்ந்து விடும் என்று சொல்லிவிடமுடியாது. அதே நேரத்தில் வரியைக் குறைத்து விதிப்போமேயானால், தவறு செய்கிறவர்கள் கூட, கொஞ்சம் பணம் தானே, இதற்காக தவறு செய்யவேண் டுமா, மறைக்க வேண்டுமா என்று மக்கள் மத்தியிலே எண்ணம் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே 8 சதவிகிதம் என்பதைக் கூட இன்னும் கொஞ்சம் மறு பரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் குறைக்கலாம்.

அதே நேரத்தில் வேளாண் விளைபொருளுக்கு, சமையலுக்கு பயன்படுகிற வெந்தயம், ஏரகம் போன்றவைகளுக்குக் கூட பல முனை வரி இருப்பதாக அறிகிறேன். இதே இனத்தோடு சேர்ந்து அவற்றிற்கும் ஒரு முனை வரியாக விதிப்பதற்கு அரசாங்கம் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், வெள்ளைப் பூண்டுக்கு பல முனை வரி இருந்து கொண்டிருக்கிறது. அது மருந்துக்கு பயன்படுகிற பொருளாகவும், சமையலுக்குப் பயன்படுகிற பொருளாகவும். அழுகுகின்ற தன் மையிலே இருக்கிற காரணத்தாலும், அவர்கள் வரி விலக்கு கேட் டுக் கொண்டு இருக்கிறார்கள். பல்வேறு சமயங்களில் இந்த மன்றத்திலே அதை வலியுறுத்தி வந்திருக்கிறோம். ஆகவே, அதற்கு வரி விலக்கு கொடுக்க அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வணிக வரித்துறையிலே அட்வான்ஸ் டாக்ஸ் வாங்குகிற முறை இருக்கிறது. பிப்ரவரி, மார்ச் மாதம்-அதிகாரிகள் போய் வியாபாரிகளைப் பார்த்து, 'பணத்தைக் கொடுங்கள், பணத்தைக் கொடுங்கள்' என்று அதிகமாக, வரி செலுத்துகின்றவர் களின் மத்தியிலே தொல்லைப் படுத்துகின்ற நிலை இருக்கிறது. அதனால், அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஆதாயமும் இருப்ப தாகக் கருதவில்லை. அடுத்த மாதம் வருவதை இந்த மாதம் வாங்குகிறீர்கள். இந்த மாதம் விட்டால் நிச்சயம் அடுத்த மாதம் வரும்.

துறை அதிகாரிகள் இதில் அதிகமாக ஈடுபடுகிற காரணத் தால் வழக்கமாகச் செய்கிற பணிகளும் குறைவதோடு, அதிமாகத் தொல்லைப்படுத்துகின்ற காரணத்தால், அட்வான்ஸ் டாக்ஸ், வரி வாங்குகிறதே தேவைதானா என்பதையும் அரசாங்கம் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் வணிகர்கள் சில நேரங்களில் வரி செலுத்துகிற போது, தவணை வாங்குகிற போது 24 சதவிகிதம் ஆக வட்டி விகிதம் போடுகிறார்கள். அரசாங்கம் வட்டிக் கடை நடத்து கின்ற முறையில், அரசாங்கத்தின் போக்கு இருக்கக்கூடாது. அந்த 24 சதவிகிதம் என்ற வட்டி மீது இருக்கின்ற தொகைக்கு வசூலிப்பதை குறைத்து வசூலிக்கவேண்டும் என்று சொல்லி, இந்த அளவில் என் உரையை முடித்து அமர்கிறேன்.

[பிற்பகல் 1-00]

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பொது விற்பனைவரிச் சட்டமுன்வடி வின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருசில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விழைகின்றேன். 1985 ஆம் ஆண்டு மூன்றாம் சட்டத் திருத்தத் தில் விற்பனை வரி பற்றி இன்றைய தினம் வந்திருக்கிறது. முத லாவதாக, சாராயத்திற்கு 6 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் எத்தனை சதவீதம் வேண்டுமென்றாலும் உயர்த்திக்கொள்ளுங்கள், நாங்கள் அதை வேண்டாமென்று சொல்லவில்லை. அரசுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் பெருமானமாக வருவதை நாங்கள் என்றைக்கும் ஏற்றுக்கொள் கின்றோமே தவிர அதை மறுக்கவில்லை.

[திரு. அ. பிரணவநாதன்] [1985 ஜூலை 16

ஆனால் இந்த 25 சதவீதமாக உயர்த்தப்படுவது யாரைப் பாதிக்கிறது என்பதைப் பற்றி தயவு செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும். 6 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக சாராயத்திற்கு உயர்த்தப்படுகின்ற பொழுது, நீங்கள் வருங்காலத்திலே நியமிக்க இருக்கின்ற ஏஜண்டுகள் இருக்கின்றார்களே, அவர்கள் அத்தனை பேர்களும் ஒரு பாட்டிலிலே 100 மில்லியிலிருந்து நீங்கள் கேட்கின்ற எத்தனை சதவீதத்தை உயர்த்தப் போகிறார்கள் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

சாதாரண ஏழை எளிய மக்கள், குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டவர்கள், குடித்துக் குடித்துத் துன்பப்பட்டு குடும்பங்களை இழந்து தெருவிலே நிற்கின்றார்களே, அப்படிப்பட்ட ஏழை எளிய மக்கள்தான் தொடர்ந்து சாராயம் குடிக்கின்றார்களே தவிர நடுத்தர மக்கள், பணக்கார மக்கள் ஆகியவர்கள் பல்வேறு உயர்ந்த ரகங்களைச் சாப்பிட்டு வருகிறார்கள். ஆகவே, பாதிக்கப்படுவது ஏழைகள்தான். 100 மில்லி இன்றைக்கு 2 ரூபாய் 50 காசு என்று விற்கப்படுவது 3 ரூபாய் 50 காசு அல்லது 4 ரூபாய் என்ற அளவிற்கு விற்கின்ற நிலைமைக்கு வந்துவிடக் கூடும். எனவே, இன்றைக்குக் கேட்டுக்கொண்டிருக்கின்ற ஏழை எளிய குடிகாரர்கள் மீண்டும் தங்கள் இல்லங்களிலே இருப்பதைக் களவாடிக் குடிக்கின்ற அளவிற்கு வளர்ந்து விடக்கூடும். ஆகவே, பல இலட்சம் ஏழை எளிய குடிகார மக்களை மேலும் கீழ்த்தரமான பாதாளத்திற்குக் கொண்டு போகும் திட்டம்தான் இப்படி 25 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கின்ற நிலைமை என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

அதற்கு மாறாக பெரிய பணக்காரர்கள், வாய்ப்பு வசதி உள்ளவர்கள் பிராந்தி, விஸ்கி போன்ற உயர்ந்த ரகக் குடிகளைக் குடித்துக்கொண்டு வருவதாகத் தகவல் தெரிகிறது. ஆகவே இதை வேண்டுமானால் குறைத்து, பணக்கார வர்க்கம் அருந்துகின்ற மதுவிற்கு 100 சதவீதம், 150 சதவீதம் என்று ஏற்றினால் கூட அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சாராயத்திற்கு உயர்த்துவதால், கிராமங்களிலே உள்ள குடிகாரர்களெல்லாம் கள்ளச் சாராயத்தை ஒவ்வொரு குடிசையிலேயும் காய்ச்சி அவர்களே குடித்துக் கொண்டிருப்பார்கள். அதனால் நீங்கள் நினைக்கின்ற அளவிற்கு விற்பனைகூட இல்லாமல் போய் விடும். ஆகவே, மொபைல் பார்ட்டியாக, காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஒவ்வொரு கிராமத்திலேயும் வேட்டையாடச் சென்று கையூட்டு பெற்று, மிரட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே, 25 சதவீதமாக உயர்த்தியிருப்பதை நான் இந்த நேரத்தில் குறைத்திட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக எலக்ட்ரானிக்சைப் பொறுத்தவரையில் இன்றையதினம் இந்தியத் திருநாட்டிலே உள்ள பல்வேறு நிலங்களிலே இதைவிட குறைந்த அளவுக்குத்தான் போடப்பட்

டிருக்கிறது. இங்கே 12 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 2 சதவீதம் தான் இன்றைக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலே எலக்ட்ரானிக் கிஸ்டம் என்பது இந்தியத் திருநாட்டிலே வளர்ந்து வருகின்ற ஒரு தொழிலாக ஆகிக்கொண்டு வருகிறது. கர்நாடகம், பஞ்சாப், ஹரியானா போன்ற பல்வேறு மாநிலங்களில் மிகக் குறைந்த அளவிலேதான் வரி போடப்பட்டு இருக்கிறது. எனவே, இங்கே இதை 12 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைப்பதை விட, 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைத்தால் இந்தத் தொழில் மேலும் வளர்ச்சியடைய ஏதுவாகும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருமுனை வரியைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக, பலமுனை விற்பனை வரிகளையெல்லாம் நீக்கிவிட்டு, அனைத்துப் பொருட்களுக்கும் ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கினால் நல்லது என்று நான் எண்ணுகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்தவர். ஆகவே, விவசாயப் பொருள்களுக்கு அன்றாடம், ஏழை, எளிய மக்கள் பயன்படுத்துகின்ற பொருள்களுக்கு, புளி, வற்றல், கொத்தமல்லி போன்ற சாதாரண ஏழை விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற, விற்கின்ற பொருள்களுக்கு அறவே விற்பனை வரியை ஒழித்து, மிளகு போன்ற ஏனைய பொருள்களுக்கு விற்பனை வரியை இன்னும்கூட அதிகம் உயர்த்தினால் பரவாயில்லை. உணவுப் பொருள்களுக்கு முழுக்க, முழுக்க விற்பனை வரியை நீக்கிட வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை நான் எதிர்த்து அமைகிறேன்.

திரு. எஸ். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி மூன்றாம் திருத்தச்சட்டத்தின் மீது மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் 6 சதவீதம் சாராயத்திற்கு இருந்த வரி, 25 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி உயர்த்துவதன் மூலம், நீங்கள் கள்ளச் சாராயத்திற்கு வழி வகுக்கக்கூடிய ஒரு காரியத்தைத்தான் செய்கிறீர்கள் என்ற அர்த்தம்தான் இதில் தொனிக்கிறது. ஏனென்றால், 6 சதவீதம் இருந்த வரியை, 25 சதவீதமாக உயர்த்தினால் வரி கொடுக்கக்கூடியவர்கள், நல்ல சாராயத்தோடு, கள்ளச் சாராயத்தைக் காய்ச்சிக் கலந்து விற்கவும், வழிவகை செய்யுமே தவிர, உள்ளபடியே நல்ல சாராயம் கிடைக்காது. அது மட்டுமல்லாமல், வரியை ஏமாற்றத்தான் வழி வகைகள் இருக்குமே தவிர, உள்ளபடியே வரியை கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்காது. எனவே, 25 சதவீதம் உயர்த்துவது, கள்ளச் சாராயம் காய்ச்ச அதிகமான சூழ்நிலையை உருவாக்கத் தான் வழியாக அமையுமே தவிர, அது உள்ளபடியே மக்களுக்கு நன்மை பயக்காது.

[திரு. எம். செல்லமுத்து] [1985 ஜூலை 16

அது மட்டுமல்லாமல், இப்பொழுது சாராயத்திற்கு, அதிக அளவிலே வரிவிதிப்பது கள்ள மார்க்கெட்காரர்கள் அல்லது சாராய வியாபாரிகள் கொள்ளை அடிக்க வழிவகை செய்யுமே தவிர, அதனால் ஏழை மக்களுக்கு, குடிக்கக்கூடியவர்களுக்கு, எந்தவிதமான நன்மையும் இல்லை. எனவே, வரியை உயர்த்துகின்ற சூழ்நிலையைக் கைவிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய உற்பத்திப் பொருள் என்ற முறையில், மிளகாய், புளி, மஞ்சள், கொத்தமல்லி போன்ற பொருள்களுக்குப் பலமுனை வரி 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதம் உயர்த்தி இருக்கிறார்கள். கிராமத்திலும் சரி, நகரத்திலும் சரி, ஏழை எளிய மக்கள் இந்தப் பொருள்களைத்தான் அதிகமாக உபயோகிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவைமீது 8 சதவீதம் வரி விதிப்பதை நான் ஆட்சேபித்து, இந்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வந்திருக்கக்கூடிய வரி உயர்வை ஆட்சேபித்து, இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து அமர்கிறேன். வணக்கம். நன்றி.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாமீது சில கருத்துக்களைச் சொல்ல மூற்படுகிறேன். இந்த மின் அணு இயல், தொழில் பிரிவுகள் முக்கியத்துவத்தைக் கருதி 12 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடு குறைக்கப்படுவதாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் குறைத்துக் கொடுத்தாலும், முதலாளிகள், எந்த அளவுக்கு அரசாங்கம் குறைத்துக் கொடுக்கிறார்களோ, அந்த அளவுக்கு விற்பனை மூலமாக, வாங்கக் கூடிய மக்கள் தலையிலேதான் அது விதிக்கப்படுமே தவிர, உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் எவ்வளவு சலுகைகள் கொடுத்தாலும், அந்தச் சலுகைகளை அவர்கள் தான் அடைகிறார்கள். ஆகவே, அந்தச் சலுகை மக்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவுக்கு அமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–10)

அது போல், சாராயத்தின் மீதான விற்பனை வரி 6 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்தப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. அன்றைக்குக் கள்ளச் சாராயத்தைப் பற்றி, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிக்கு வந்த நேரத்தில், தமிழகத்தில் எங்கு பார்த்தாலும், கள்ளச் சாராயம் கரைபுரண்டு ஓடுகிறது. அதனால், ஏழை, எளிய மக்கள் உழைக்கிறவர்கள், வயது அதிகமாக வாழக்கூடியவர்கள், குடித்துவிட்டு, இன்றைக்குக் குறைந்த வயதிலே சாகக்கூடிய அபாயம் எல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, அதைத் தடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அதைத் மதுவிலக்கு ரத்து செய்யப்படுகிறபோது நாங்கள் எல்லாம் ஆதரித்தோம்; எங்கள் கட்சியும் ஆதரித்தது. அதில் ஒன்றும் தவறு இல்லை. ஏனென்றால் தமிழ்நாட்டில் ஒரு பெரிய தவறு நடக்கிறது. அதிலிருந்து மக்களைப் பாதுகாக்க

1985 ஜூலை 16] [திரு. பொ. உத்திராபதி]

வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நாங்களும் ஆதரவு கொடுத்தோம். உண்மை நிலை என்னவென்றால் காங்கிரஸ் ஆட்சியில் கள்ளச்சாராயம் இருந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கள்ளச் சாராயம் இருந்திருக்கிறது. மதுக்கடைகள் திறக்கப்பட்டு, மீண்டும்மூடப்பட்டது.

இந்தக் குறைபாடுகளை எல்லாம் போக்க வேண்டுமென்றுதான் மதுவிலக்கை ரத்துசெய்தோம். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? அன்றைக்கு ஒரு ரெவின்யூ வட்டத்திற்கு ஒரு கள்ளுக்கடை இருந்தது; நகரத்திற்கு ஒரு சாராயக் கடை இருந்தது. ஆனால் இதை எந்த அளவுக்கு குறைக்க வேண்டுமென்று கொண்டு வந்தீர்களோ அதற்கு மாறாக ஒரு சாராயக் கடையை எடுத்துக்கொண்டு, அதனுடைய கிளைகளாக ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு தெருவிலும் விற்பனை செய்யக்கூடிய கொடுமையான காரியம் நடக்கிறது. நகரத்தைஎடுத்துக் கெண்டாலும், ஒவ்வொரு வார்டிலும், ஒவ்வொரு சாராயக்கடை இருக்கிறது. வீட்டுக்கு வீடு வைத்து விற்கிற ஒரு குடிசைத் தொழிலாக இந்த சாராய விற்பனை இன்றைக்கு மாறிவருகிறது. இதை எடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எந்த நல்ல நோக்கத்திற்காக கொண்டுவந்தீர்களோ அந்த நோக்கம் ஈடேறாமல் அதைவிட மோசமாகப் போய்விடும். இன்றைக்கு பள்ளிக்கூடத்து மாணவன் முதல் குடிக்கிற பழக்கம் தலைதூக்குகிற அபாயம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். வருமானத்தை மட்டும் பார்க்காமல் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கள்ளுக்கடை, பஞ்சாயத்துக்கு ஒரு கள்ளுக்கடை, சாராயக்கடை என்பதைத் தடுத்து ஒரு ரெவின்யூ வட்டத்திற்கு ஒரு கள்ளுக்கடை, நகரத்திற்கு ஒன்றிரண்டு சாராய கடை என்று வைத்தால் போதும். அந்த வகையில் கொண்டு வந்தால்தான் கட்டுப்படுத்த முடியும். வருமானத்தை மட்டும் பார்த்தால் கட்டுப்படுத்த முடியாது.

இப்போது எரிசாராயம் என்ற பெயரால் என்ன நடக்கிறது. மனசாட்சியோடு உண்மையாகச் சொல்வதானால் அமைச்சர்கள் முதல் சட்ட மன்ற உறுப்பினர்கள்வரை எல்லோரும் பார்க்கிறோம், இந்த எரிசாராய கொடுமை எந்த அளவுக்குப் பெருகி இருக்கிறது என்று. பட்டுக்கோட்டை தாலுக்காவில் பார்த்தால் தெரியும். நான் ஊரைச் சொல்ல விரும்பவில்லை. அதிகாரிகள் மூலம் உங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் 'வான்' மூலம் சாராயக் கடைக்கு சப்ளை செய்துகொண்டிருக்கிறார்கள். நல்லச் சாராயம் வந்தால் கள்ளச் சாராயம் ஒழியும் என்று சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கு கள்ளச்சாராயக் கடைகள் மூலம் ஏராளமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு.பொ. உத்திராபதி] [1985 ஜூலை 16

சாராயத்திற்கு 25 சதவீதம் வரியை உயர்த்தினால் அது யார் தலையில் விழுகிறது? கிராமத்தில், நகரத்தில் உழைக்கக்கூடிய வர்க்கத்தின் தலையில்தான் விழுகிறது. அவர்கள்தான் அதிகமாக மது வாங்கிச் சாப்பிடுகிறார்கள். சாராயக் கடைக்காரர்கள் அதிக மான இலாபம் சம்பாதிக்க சாப்பிடுகிறவர்கள் தலையில் போட்டு விடுவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் எற்கனவே சொல்லியிருக் கிறார். இன்றைக்கு தமிழ்நாட்டில் இந்த மது மூலமாக தாய்க் குலம்தான் பெரிதும் பாதிக்கப்படுகிறது. தனக்கு வரக்கூடிய வருமானத்தை எல்லாம் குடித்துவிட்டு, வீட்டுக்கு வரும்போது தாக்கப்படுகிறவர்கள் தாய்மார்கள்தான். தமிழ் நாட்டில் இருக் கிற எரிசாராயம் மூலம், மது மூலம் இத்தகைய தவறு நடக்கிறது என்பதை உணர்ந்துதான் அண்ணா பிறந்த தினத்திலிருந்து மதுவிலக்கை அமல்படுத்துவேன், அதற்கான நடவடிக்கை எடுப் பேன் என்று முதலமைச்சர் சொன்னார். முதலமைச்சருடைய வாக்குறுதியை நிறைவேற்ற, எதிர்காலத்தில் இந்த மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்த, எரிசாராயம், கள்ளச்சாராயம் மூலம் கொள்ளை இலாபமடிக்கும் கும்பலைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரியாகக் கொண்டுவர வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தில் கேட்டோம்; இப்போது கொண்டுவந்திருக்கிறீர்கள். வரவேற் கிறோம். ஆனால் இன்றைக்கு வந்திருக்கிற ஒருமுனை வரி மிள காய், புளி, வத்தல், கொத்தமல்லி, மிளகு போன்ற பொருள் களுக்குத்தான். இன்னும் நற்சீரகம், பெருஞ்சீரகம், வெங்காயம், அதைப்போன்று உணவுக்குத் தேவையான மூலப்பொருள்கள் பல இருக்கின்றன. அவற்றுக்கும் இந்த ஒரு முனை வரியைக் கொண்டுவர வேண்டும். எவ்வளவுதான் வரியைக் குறைத்து மக்க ளுக்கு சலுகை அளிக்க வேண்டுமென்று அரசு விரும்பினாலும் இடையிலே இருக்கிற கொள்ளை இலாபக்காரர்களால் அந்தப் பலன் கிடைக்கவில்லை.

நாங்கள் என்னதான் வற்புறுத்தினாலும், நீங்கள் ஏதாவது நல்லது செய்தாலும் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய சுமை குறையவில்லை. அரசாங்கத்திற்கு வருமானத்தைப்பெற வரி போட்டாலும் அது சாதாரண மக்கள் தலையில்தான் விழுகிறது. எந்தப் பொருளை வாங்கினாலும் வரியை உயர்த்தி, மேலும் மேலும் இலாபம் சம்பாதிக்கிறார்கள்.

இதை எல்லாம் அமைச்சர் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டு மக்கள் எல்லோரும் வாங்கக்கூடிய சாதாரண பொருட்களுக்கு எல்லாம் விதிவிலக்கு அளித்துவிட்டு பெரிய பெரிய முதலாளிகள், அதிகமான வருமானம் பெறக்கூடியவர்கள் எந்தப் பொருட்களை வாங்குகிறார்களோ அவற்றுக்கு வரியினை உயர்த்துகின்ற வகையில் இந்த அரசு எதிர்காலத்தில் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும், அந்த வகையில் வரிசிலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு பளித்ததற்காக நன்றி கூறி அமர்கிறேன்.

1985 ஜூலை 16]

மாண்புமிகு திரு. தா. வீரசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1985ஆம் ஆண்டு மூன்றாம் திருத்த விற்பனை வரிச் சட்டத்தில் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற மூன்று இனங்களில் சாராயத்திற்கு வரி உயர்த்துவதும், வேளாண் விளைபொருட்களைப் பொறுத்தவரையில் 5 பொருட்களுக்கு பல முனை வரியிலிருந்து ஒருமுனை வரியாக ஆக்குவதும், மின் அணுவியல் கருவிகளுக்கு 12 விழுக்காடாக இருக்கின்ற வரி யினை 10 விழுக்காடாக குறைப்பதும் என்ற வகையில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவில் பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இங்கே பொருட்களுக்கு வரி குறைக்கப்பட்டுள்ளது போதாது என்று எடுத்துச் சொல்லி, மின் அணுவியல் பொருட்களுக்கு வரியினைக் குறைப்பதன் மூலம் தொழிற்சாலைகள் வளர்ந்து விடாது என்று சொன் னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைய தொழில் வளர்ச்சியில் மின்னணுவியலின் பங்கு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்துதான் இன்றிருக்கின்ற சூழ் நிலையில் அந்த மின்னணுவியல் தொழில் கருவிகள் பெருக வேண்டும், தொழில் வளர வேண்டும் என்பதற்காக இப்போது 12 விழுக்காடு ஒரு முனை வரியிலிருந்து 10 விழுக்காடு ஒருமுனை வரியாகக் குறைத்து அதிலே இப்போது நாம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். முன்பே நான் சொன்னேன். இங்கே சூழ்நிலைக்கு ஏற்ப நாமெல்லாம் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம். இந்த அரசினுடைய நோக்கம் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொழில்கள் பெருக வேண்டும்; வளரவேண்டும்; வாணிபம் பெருக வேண்டும் என்ற எண்ணத்தில் வாணிபப் பெருங்குடி மக்களுக்கு இந்த அரசு வரிவிதிப்பின் மூலம் உதவ வேண்டும், அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற அடிப் படையில் தான் வரி விதிப்புக் கொள்கையைக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ப இன்று மின் அணுவியல் கருவி களுக்கு 12 விழுக்காடு என்றிருக்கின்ற ஒரு முனை வரியினை 10 விழுக்காடு ஒருமுனை வரியாக ஆக்கி இருக்கிறோம். அண்டை மாநிலங்களில் இருக்கின்ற வரிவிதிப்பு முறைகளைப் பற்றிச் சொன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் மனநிறைவு கொள் வார்கள் என்று நான் கருதுகிறேன். தமிழ்நாட்டில் 10 விழு காடு ஒரு முனை வரியாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. கர் நாடகத்தில் 10 விழுக்காடு ஒருமுனை வரியாக இருக்கின்றது. கேரளாவில் 15 விழுக்காடு ஒரு முனை வரியாக இருக்கின்றது, மகாராஷ்டிரத்தில் 20 விழுக்காடு ஒரு முனை வரியாக இருக் கின்றது. இப்படி வரி விதிப்பதில் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்ற சூழ்நிலை இருக்கின்ற நிலையில் நம்முடைய

[திரு. தா. வீராசாமி] [1985 ஜூலை 16

அரசு மின்னணுவியல் தொழில் வளர வேண்டும், அதன் காரணமாக பல்வேறு தொழில்கள் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட வரிக்குறைப்பை செய்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண் விளைபொருட்களைப் பொறுத்தவரையில் 5 பொருட்களுக்கு பல முனை வரியிலிருந்து ஒரு முனை வரியாக கொண்டு வருகிறீர்களே என்று சொன்னீர்கள். ஆனால் இந்த அரசினுடைய எண்ணம் எல்லாம் பலமுனை வரியிலிருந்து ஒரு முனை வரியாக ஆக்கவேண்டும் எனபதுதான் என்பதை இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். காலப் போக்கில் முடிந்த வரையில் மெள்ள, மெள்ள அரசுக்கு வரு வாய் இழப்பு இல்லாத வகையில் பலமுனை வரிகளை ஒரு முனை வரியாக மாற்றி வருகின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில் 66 பொருட்களுக்கு மட்டும்தான் பலமுனை வரி இருக்கின்றது. அதையும் காலப்போக்கில் போகப் போக வருவாயைக் கருத்தில் கொண்டு பலமுனை வரியினை ஒருமுனை வரியாக ஆக்க மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி. ஆர். அவர்கள் உறுதி பூண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஆனால் அதே நேரத்தில் ஒரு வேண்டுகோள். பலமுனை வரியில், வரி ஏய்ப்பை விட ஒருமுனை வரியில் வரி ஏய்ப்பு அதிகமாக இருப்பதன் காரணத்தால்தான் இந்த அரசு யோசித்துக்கொண்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரி ஏய்ப்பினால் இந்த அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிற காரணத்தினால் நல்ல பல திட்டப் பணிகளை அல்லது சமூக நலப் பணிகளை, நிரந்தர முக்கிய திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்ற காரணத்தினால் சற்று யோசித்து காரியங்களைச் செய்ய இருக்கிறோம் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

பூண்டுக்கு வரி போடுவதைப் பற்றிச் சொன்னார்கள். பூண்டுக்கு விற்பனை வரி விதிப்பது குறித்து மேல் முறை யீட்டின் தீர்ப்பாயத்தின் மூலமாக அது வரிவிதிக்கப்பட வேண்டிய பொருள் என்று தீர்ப்பு சொல்லப்பட்டு, இப்போது அது நீதிமன்றத்தில் இருக்கிறது. அது அப்படியே இருக்கிறது. தீர்ப்பிற்குப் பிறகு நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் ஏற்கப்படலாம் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1985 ஜூலை 16] [திரு. தா. வீராசாமி]

அடுத்து சாராயத்தைப் பற்றி. கடந்த நிதிநிலை அறிக்கையிலே நடந்த விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இது குறித்து காரசாரமாக, தெளிவாக விரிவாகப் பேசியிருக் கிறார்கள். ஆகவே அதைப்பற்றி இப்போது அதிகமாகச் சொல்லப்போவதில்லை. இந்த அரசினுடைய நோக்கம் கொள்கை, மதுவிலக்கை அமல் படுத்துவது தான். ஆனால் அப் படி மதுவிலக்கை அமல் படுத்துகிற நேரத்தில் இந்த அரசுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதன் காரணமாக சமுதாயத்தில் ஏற் பட்ட ஊறுகளையும் நாம் பார்த்திருக்கிறோம். தவிர்க்க முடியாத சூழ்நிலையில்தான் இந்த மதுவிலக்கை தளர்த்தி இருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அந்த வகையில்தான் மதுவிலக்கு தளர்த்தப்பட்டு இன்றைக்கு நாம் சாராயக் கடைகளையும் திறந்து, அதற்கு வரி விதிக்கின்ற முறையிலே இருக்கிறோம்.

ஆனால் இப்படி சாராயத்திற்கு வரி விதிப்பதனால் ஏழை எளிய பாமர மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படி பாதிப்பு ஏற்படாமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளும் என்பதை யும், முன்பு வியாபாரம் செய்தவர்கள் கொள்ளை லாபம் அடித் தார்கள்; அந்த லாபத்தைக் குறைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும், இந்த அரசு கூட்டுறவு வணிகக் கழகத் தின் மூலமாக அல்லது ஏஜெண்டுகள் மூலமாக சாராயத்தை விற்க முடிவு செய்திருப்பதன் காரணமாக, இந்த வரி போடுவதால் ஏற்படும் அதிகமான பாரம், பளு, அந்த விலையில் ஏறாமல் பார்த்துக் கொண்டு, விலையை நியாயமாக நிர்ணயிக்க இருக் கிறது அரசாங்கம் என்பதையும் இந்த நேரத்திலே கூறி, இங்கே தமிழ்நாட்டில் கள்ளச் சாராயக் கடைகள் தெருக்களிலே யெல்லாம் சர்வ சாதாரணமாக இருக்கின்றன என்று மாண்பு மிகு உறுப்பினர் திரு.உத்திராபதி போன்றவர்கள் சொன்னார்கள்.

இப்போது அரசாங்கம் கொண்டு வர இருக்கிற புதிய முறைகளின் காரணமாக அப்படிப்பட்ட அவல நிலைமைகள் போக்கப்படும் என்று அவர்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன். இந்தச் சட்டத் திருத்த மூன் வடிவை சட்டமாக ஆக்கித் தரு மாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வேண்டி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1985) நிறைவேற்றப் பெற வேண் டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

8. அறிக்கை அளித்தல்.

விதி 111-இன் கீழ் அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: : பேரவை விதி 111-இன் கீழ் மாண்புமிகு மக்கள்—நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு இணங்க எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., பட்ட படிப்புகளில் பொதுத் தொகுப் பிற்கு —ஓபன் கோட்டா— 30 விழுக்காடு இடங்கள் அகில இந்திய மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டன. உச்ச நீதிமன்றத்தினுடைய 8–7–1985 ஆம் தேதி அளித்த தீர்ப்பின் படி, அகில இந்திய மாணவர்களுக்கு, நுழைவுத் தேர்வு அடுத்த ஆண்டிலிருந்து, 1986 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்படும். எனவே அகில இந்திய மாணவர்களுக்கு, மேல்நிலை வகுப்பு தேறியவர் களுக்கு 28–7–1985 அன்றும், மற்றும் பி.எஸ்.வி., பட்டதாரி களுக்கு 11–8–1985 அன்றும் நடத்த இருந்த நுழைவுத் தேர்வு கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இப்போட்டிக்கு ஒதுக்கப்பட் டிருந்த இடங்கள் தமிழ்நாட்டின் மாணவர்களுக்கு, அவர்கள் ஏற்கெனவே எழுதிய நுழைவுத் தேர்வின் அடிப்படையில் ஒதுக்கப் படும்.

7, அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி.

(எ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்ட டத்தை மேலும் திருத்தி தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை மேலும் ஒரு ஆண்டுக் காலத்திற்கு நீடிக்க வழி செய்யும் இந்தச் சட்டத் திருத்தத்தை நான் எதிர்த்து சில கருத்துக்களைத் தெரி விக்க விரும்புகிறேன்.

ஏற்கெனவே இந்த மன்றத்திலே இந்தச் சட்டத்தில் இது போன்ற திருத்தங்களைக் கொண்டு வந்த நேரத்தில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதியன்று இந்த மன்றத்திலே இருக்கிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் இந்தச் சட்டத்தை உடனடியாக மாற்றம் செய்து, மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந் தெடுக்கப்படுகிற குழு மூலமாக, மார்க்கெடிங் கமிட்டி மூலமாக இந்த நிர்வாகம் நடைபெற வேண்டுமென்று கோரிக்கை வைத் தார்கள். அப்போது அமைச்சர் அவர்கள் மக்களாட்சியில் நம் பிக்கை வைத்திருக்கிற இந்த அரசு வெகு விரைவில் சட்ட திருத்தங்களைக் கொண்டு வந்து செய்வதற்கு எந்த வகையில் சட்டத்தைக் கொண்டு வந்தால் அது ஏழை விவசாயிகளுக்கு பாதுகாப்பாக இருக்குமென்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிற தென்றும், என்ன நோக்கத்திற்காக மார்க்கெடிங் கமிட்டிகள் அமைக்கப்படுகின்றனவோ அந்த நோக்கம் ஈடேறத்தகுந்த அள விற்கு நிச்சயமாக ஆய்ந்து விரைவிலே சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டிகள் மூல மாக இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் நடைபெறும் என்றும உறுதியை அளித்தார்கள்.

---

*1985 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. மு. இராமநாதன்] [1985 ஜூலை 16

நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இப்போது அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற குறிப்பைப் பார்க்கிறபோது, ஐந்தாண்டு காலம் பொறுப்பிலே மார்க்கெட்டிங்கமிட்டி இருக்குமென்றாலும், 1977-ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் இருக்கிற மார்க்கெடிங் கமிட்டி அப்போதிருந்த நெருக்கடி நிலை காரணத்தால் கலைக்கப்பட்டது. அப்படி கலைக்கப்பட்ட பிறகு மேலும் எட்டு ஆண்டுகளாகத் திரும்பத் திரும்ப இந்தத் தனி அதிகாரிகளுடைய நிர்வாகம் நீடிக்கப்பட்டு, இப்போது ஒன்பதாவது ஆண்டு காலமாகசேர்த்து, புதிய சட்டம் கொண்டு வர நாம் மேலும் சில ஆய்வுகள் நடத்த வேண்டிய காரணத்தால் இந்தக் கால அவகாசம் தேவையென்று குறிப்பிலே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நான மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொளள விரும்புவது, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திறமையில் நான் நம்பிக்கையுள்ளவன்: ஆனால், என்ன காரணத்தினால் இந்த மார்க்கெட்டிங் சொசைட்டிகளின் தேர்தலை நடத்தாமல் இருக்கிறீர்கள் விவசாயிகளுடைய பிரதிநிதிகள் இருந்து அவர்கள் மூலமாக ஒரு தலைமையிருந்தால் தான் ஏழை விவசாயிகளுடைய விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும். ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையக்கூடிய பல பொருள்கள் இருக்கின்றன. கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பருத்தி, கடலை, மஞ்சள் என்று இருக்கின்றன. தனித்தனியாக ஒவ்வொன்றை பிரித்துச் சொல்ல விரும்பவில்லை. ஆகவே, நாடு தழுவிய நிலையில் மார்க்கெடிங் கமிட்டிகள், விவசாய மக்கள் இடைத் தரகர்களிடம் சிக்கி சீரழியாமல இருக்க, அல்லது வர்த்தக சூதாடிகளிடம் சிக்கி எந்தப் பலனும் கிடைக்காமல் அவர்கள் கஷ்டப் படுகிற நிலையில், அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக அமைக்கப்படுகின்ற இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் தொடர்ந்து தனி அதிகாரிகள் நிர்வாகத்தில் இருக்கின்றன.1977 ஆம் ஆண்டில் கோவையில் மார்க்கெடிங் கமிட்டி கலைக்கப்பட்ட பிறகு, நான்கு ஆண்டுகள் கழித்து 1981 ஆம் ஆண்டில் திருத்தம் கொண்டு வந்து இரண்டு ஆண்டுக் காலம் தேவையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சென்ற ஆண்டு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டு, நவம்பர் 10 ஆம் தேதி வரைக்கும் நீட்டிப்பு என்று சொன்னார்கள். இப்போது மேலும் ஒரு ஆண்டிற்கு கால அவகாசம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, இந்த அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அரசு. எல்லா நிலைகளிலும் தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்தைத்தான் வைத்திருக்கிறது. பல முறை இந்த மன்றத்திலே பல உறுப்பினர்களால் இது சொல்லப்பட்டிருக்கிறது. நகராட்சியானால் தனி அதிகாரிகள் நிர்வாகம், ஊராட்சி மன்றங்

1985 ஜூலை 16] [திரு. மு. இராமநாதன்]

களானால் எக்சிகியூட்டிவ் ஆபீசர்ஸ் நிர்வாகம், மாநகராட்சியானால் ஸ்பெஷல் ஆபீசர்ஸ் நிர்வாகம், மார்க்கெடிங் சொசைட்டிகள் என்றால் தனி அதிகாரிகள் நிர்வாகம் என்று இந்த அரசு வைத்திருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பிரதிநிதிகளால் நிர்வாகம் செய்வதில் நம்பிக்கையற்றுப் போய்விட்டார்களோ என்று எண்ணுகிற அளவில் தான் இப்படிப்பட்ட செயல்கள் இருக்கின்றன என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மு. இராமநாதன்: ஆகவே, நம்முடைய அமைச்சருடைய கவனத்திற்கு நான் சொல்ல வேண்டும் என்று விரும்புவது, நான் அறிந்த வரையில், இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் மக்கள் பிரதிநிதிகளால் நிர்வாகம் செய்யப்படுகின்ற அளவிற்கு சட்டத் திருத்தங்களை நிச்சயமாக ஆய்ந்து அதை எந்தெந்த வகையிலே செம்மைப்படுத்தலாம், எந்தெந்த வகையில் விவசாயிகளுக்கு பலன் உள்ளதாக இருக்கும் என்பதை ஆராயவும், 1977-லேயிருந்து 8 ஆண்டுக் காலமாக ஆராய்ந்து 9 ஆவது ஆண்டும் கேட்டு இருக்கிறார்கள். எவ்வளவு திறமை மிக்க அமைச்சர்கள், எவ்வளவு திறமை மிக்க நிர்வாகம் என்று வெளியிலே உங்களுடைய திறமையைப் பற்றி, நிர்வாகத்தைப் பற்றி பலப் படப் பேச்சுக்கள் வெளியிலே பேசப்பட்டு வருகின்றன. ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, சாதாரணமாக உள்ள மார்க்கெடிங் கமிட்டியினுடைய தேர்தலை நடத்துவதில் ஏன் இப்படி சோடை போய்விட்டீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இந்த மன்றத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், நான் விசாரித்ததிலே, என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மார்க்கெட்டிங் கமிட்டிக்கு ஒரு சட்டத் திருத்தம் வருவதிலே இவ்வளவு ஆண்டுகள் ஏன் ஆகிறது என்றால், இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதிலே ஒரு அடிப்படைச் சிக்கல், இந்தச் சட்டம் மத்திய அரசினுடைய கன்கரண்ட் லிஸ்டிலே இருக்கிற காரணத்தால் தான் மாநில அரசு எண்ணிய எண்ணியாங்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, இந்த மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த நோக்கம் நிறைவேறுகின்ற அளவிற்கு சட்டத்தைச் செம்மைப்படுத்த முடியவில்லை என்ற ஒரு தகவல் என் கவனத்திற்கு வந்தது. நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்போது தான் மத்திய அரசு, மாநிலங்களுக்கு எல்லாம் எப்படிப்பட்ட உரிமைகள் எல்லாம் வேண்டும் என்பதற்காக சர்க்காரியா கமிஷன் என்ற ஒரு குழுவை அமைத்திருக்கிறது. இந்த மன்றத்திற்கும், இந்த மன்ற உறுப்பினர்களுக்கும் நான் பணிவோடு

[திரு. மு. இராமநாதன்] [1985 ஜூலை 15

தெரிவித்துக் கொள்கிறேன், ஒரு காலத்தில் இந்த மன்றத்திலே முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்கள், இந்தி ஆதிக்கம் பற்றிய சர்ச்சை வந்தபோது, நீங்கள் ஒன்றும் பயப்படத் தேவையில்லை, என்னை மீறி இந்தி வருமானால், என்னை மீறி இந்தியிலே உத்தரவு இந்த அரசுக்கு வருமானால், அதைக் கிழித்து மூஞ்சியிலே எறிவேன் என்று சொன்னார். அந்த அளவிற்கு ஒரு உறுதியைச் சொல்லக்கூடிய வல்லமைப் பெருந்தலைவருக்கு இருந்தது. ஆனால், இந்த மாநிலத்தினுடைய சாதாரண காரணங்களுக்குக்கூட, உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், இப்போது கோட்டையில் முளைத்து இருக்கிற புல்லைச் செதுக்குவதற்குக்கூட, இந்த அரசாங்கத்திற்கு, 5 கோடி மக்கள் வாழ்கின்ற, மக்கள் பிரதிநிதிகளால் ஆட்சி நடத்தக்கூடிய இந்த அரசுக்கு புல் செதுக்குவதற்குக்கூட, இந்தக் கோட்டைக்குள், இந்த மலைமடத்திற்குள், இந்த காம்பவுண்டுக்குள் இருக்கிற புல்லைச்செதுக்குவதற்குக்கூட மத்திய அரசைக் கேட்க வேண்டிய அளவிற்கு ஒரு நிலைமை இருக்கிறது என்று சொன்னால் இந்தப் பரிதாபத்தைப் பற்றி என்ன சொல்வது? இதிலே கட்சிப் பிரச்சினை கிடையாது. இதிலே வேறு பிரச்சினை எதுவும் கிடையாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாலையில் பேச வேண்டியதை மதியத்தில் பேசலாமா, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்?

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, இது மாலையிலே பேசுகிற பேச்சல்ல. மார்க்கெட்டிங் கமிட்டி அமைப்பதில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு, மத்திய அரசினுடைய கன்கரண்ட் லிஸ்டிலே இந்தச் சட்டம் மாட்டிக் கொண்டு இருக்கிற காரணத்தால், மாநில அரசு எண்ணிய எண்ணியாங்கு கொண்டு வர முடியவில்லை என்ற சிக்கல் இருக்கிற காரணத்தால் இதிலே கூட மார்க்கெட்டிங் கமிட்டிக்கு சட்டத் திருத்தம் செய்ய, டெல்லியிலே கேட்க வேண்டுமா, மத்திய அரசைக் கேட்க வேண்டுமா என்ற பரிதாபமான நிலை இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். எனவே, மாலையாக இருந்தாலும், மக்கள் சபையாக இருந்தாலும், அல்லது இந்த மன்றமாக இருந்தாலும், நியாயமானக் கருத்தை இங்கே தெரிவிக்கலாம். அந்த அடிப்படையிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதையும் அமைச்சர் அவர்கள் மனதிலே நிறுத்தி, உண்மையான முறையிலே ஏழை விவசாயிகள் பயன்படக்கூடிய முறையில் கோவை மார்க்கெட்டிங் கமிட்டி மட்டுமல்லாது, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மார்க்கெட்டிங் கமிட்டிகள் செயல்படத் தக்க ஒரு சட்டத் திருத்தத்தை விரைவிலே கொண்டு வந்து, விவசாய மக்களுடைய கண்ணீரைத் துடையுங்கள், அதற்கான பணியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

1985 ஜூலை 16]

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாலையிலே எடுக்க வேண்டிய தை நடுப்பகலிலே எடுத்து விட்டதால், நான் சுருக்கமாக என்னுடையக் கருத்தைக் கூறலாம் என்று கூறிக்கொண்டு, இந்தக் கோவை வேளாண் விளைபொருள் சட்டம் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டாக 1977 ஆம் ஆண்டிலேயிருந்து கொண்டுவரப்பட்டு, இப்போது 9 ஆவது ஆண்டை எட்டிப் பிடிக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டுக்கும் நீட்டிப்பு வேண்டும் என்பதை விட்டுவிட்டு, ஒரு 10 ஆண்டுக் காலத்திற்கு என்று நீங்கள் காலத்தை நீட்டித்துக் கொண்டால் நல்லது என்றே நான் நினைக்கிறேன். ஏன் என்றால் மெஜாரிட்டி உங்களிடம் இருக்கிறது. எனவே, நிறைவேற்ற முடியும். இப்படி அடிக்கடி கொண்டு வருவதால், நேரமும் வீணாகிறது, சங்கடமும் இல்லாமல், காரியங்களை ஆற்ற முடியும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி 8 ஆண்டு காலமாக இதை நம்முடைய அமைச்சர் அவர்கள் நன்கு உணர்வார்கள். ஒரு தனி அதிகாரி இருந்து இந்த நிர்வாகத்தை நடத்துவதன் மூலமாக அந்த விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய பயனைவிட அந்த விவசாயிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு இருந்து அந்த நிர்வாகத்தினால் கிடைக்கக்கூடிய பயன் எந்த அளவுக்கு அந்த விவசாயிகளுக்கு அதிகம் கிடைக்கும் என்றும் அது கிடைக்க முடியாத அளவுக்கு என்ன சங்கடங்கள், சிரமங்கள் விவசாயிகளுக்கு ஏற்படுகிறது என்பதை நம்முடைய வேளாண் மைத்துறை அமைச்சர் அவர்கள் நன்கு உணர்வார்கள். இருந்தும் கூட இதை இப்படியே நீடித்துக்கொண்டு போவதற்கு இருக்கக் கூடிய சங்கடம் என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏன் என்றால் இந்தக் காலத்தை நீடிப்பதற்கு மூலச் சட்டத்தை கூட திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு மூலச் சட்டத்தின் 24/1 பிரிவு கூட மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு 9 ஆண்டுகளாக அது சென்று இருக்கிறது.

இப்படி தொடர்ந்து போய் கொண்டு இருப்பதன் விளைவாக விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சந்தை உருவாக்கப்படக் கூடிய அடிப்படை நோக்கமே அடிப்பட்டு போகிறது, விவசாயிகளின் உறுப்பினர்களைக் கொண்ட அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட டைரக்டர்களை வைத்து அது நடத்தப்பட வேண்டும் என்ற அந்த நோக்கமே இதனால் அடிப்பட்டு போய் இன்றைக்கு அந்த பாதிப்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக இன்றைக்கு கோவை மாவட்டத்தில் பருத்திப் போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடிய அந்த விவசாயிகளுக்கு தங்களுடைய பொருள்களை உரிய நேரத்தில் விற்க முடியாமல் சந்தைக்கு கொண்டு சென்றால் அதை விற்கமுடியாத நிலை ஏற்பட்டு இடைத் தரகர்களிடம் மாட்டி அவர்கள் சாக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அவர்கள் விற்பதற்கு உரிய வசதிகளை, வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை, விற்றவுடன் பணம் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தனிப்பட்ட

[திரு. கோ வீரய்யன்] [1985 ஜூலை 16

நிர்வாக அதிகாரிகளால் செய்து கொடுக்க முடியாத அலட்சியப் படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு இந்த ஊர் இல்லை என்றால் இன்னொரு ஊருக்கு மாறுதல் வாங்கிக் கொண்டு சென்று விடுகிறார்கள். ஆனால் விவசாயிகளைப் பொறுத்தமட்டில் அந்த நிலை இல்லை. அவர்களுக்கு இருக்கக் கூடிய சிரமங்கள் சொல்லமுடியாது. எனவே இந்த திருத்தத் தோடு இன்னும் ஒரு ஆண்டுக்குள்ளாகவே விவசாயிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நிர்வாகக் குழு அந்த பொறுப்பை நிர்வகிக்கக்கூடிய முறையில் அந்தத் தேர்தலை நடத்தி முடிப்பார் கள் என்ற வாக்குறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை இத் துடன் முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கோவை வேளாண்மை மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு மீண்டும் ஒரு ஆண்டு காலம் தனி அலுவலர் காலத்தை நீட்டிக்க வேண்டும் என்ற சட்டமுன்வடிவை கொண்டு வந்து இருக்கிறார்கள். அதன் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஆனால் நமது அரசுக்கு பொதுத் தேர்தலில் 3-வது முறையும் மக்கள் வாக்களித்து ஒரு மகத்தான வெற்றியை பெற்று ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அதை யாரும் பறந்து விட முடியாது. ஆனால் இந்த கூட்டுறவுத் துறை, மார்க்கெட்டிங் சொசைட்டி இன்னும் பல்வேறு அமைப்புகளுக்கு இருக்கக்கூடிய தேர்தலை நடத்தாததன் விளைவாக நிர்வாக அதிகாரிகளின் கையில் மாட்டிக்கொண்டு தவறுகளுக்கு எல்லாம் ஆளாக்கப்பட்டு அது அதிகாரிகளுக்கு மட்டும் கெட்டப் பெயர் இல்லை, அதிகாரிகளில் கூட எல்லா அதிகாரிகளையும் சொல்ல முடியாது.

நேற்று கூட நான் ஒரு நிர்வாகத்தில் ஒரு தவறு ஏற்பட்டு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் சொல்லி உடனே நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி உடனே நடவடிக்கையும் எடுத்து இருக்கிறார்கள். இப்படி எந்தத் துறையாக இருந்தா லும் தெரிந்தெடுக்கப்பட்ட அந்த அந்த அமைப்புகளின் பிரதி நிதிகள் இல்லாமல் ஒரு நிர்வாகத்தை நீட்டித்துக்கொண்டே போவதும் அந்த நிர்வாகம் மேலும் மேலும் அது தவறுகளுக்கு ஆளாக்கப்பட்டு ஊழல் பெருகி, இது ஒரு சில பேர் வாழ்வதற்கு வழி வகுக்கக்கூடிய அளவில் தான் இன்றைக்கு மார்க்கெட்டிங் சொசைட்டிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

நான் கூட சென்ற ஆண்டு நம்முடைய அமைச்சர் அவர்களி டத்தில் சொன்னேன், மார்க்கெட்டிங் சொசைட்டியில் திருச்சி மாவட்டத்தில் குறுவை நெல் கொள்முதல் செய்யும்போது அந்த மார்க்கெட்டிங் சொசைட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநி இல்லாததன் விளைவாக அந்த விவசாயிகள் விளைப்பொரு

1985 ஜூலை 16] [திரு. பொ. உத்திராபதி]

களை கொண்டு வந்து வைப்பதற்கு இடம் கொடுக்காமல் அந்தப் பொருட்களை கொள்முதல் செய்யக்கூடிய அந்த வியாபாரி களிடம் மூட்டைக்கு 2 ரூபாய், 3 ரூபாய் பெற்றுக்கொண்டு அந்த இடத்தை கொடுத்து அதிகாரிகள் லாபத்தை சம்பாதித்தார்கள். இதனால் விவசாயிகளுக்கு பாதிப்பு என்று சொல்லி அதன் பிறகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இயக்குநருக்கு தகவல் கொடுத்து, இயக்குநர் தஞ்சையில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து அதன் பிறகு அந்த சலுகை அந்த விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது. அது கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவனச் செய்தார்கள். இதை ஏன் குறிப்பிடு கிறேன் என்று சொன்னால் அந்த அந்த மார்க்கெட்டிங்சொசைட் டிலேயும் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் அதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட தவறுகளுக்கு இடம் கொடுக்காமல் சம்பந்தப்பட்ட விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களைஅ ங்கே வைப்பதற்குச் சலுகை கிடைக்கும்.

[பிற்பகல் 1-40]

இவை எல்லாம் நமது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர் களுக்குத் தெரியாமல் இல்லை. அவைகளைத் தெரிந்துகொள் ளக்கூடிய தகுதி பெற்ற அமைச்சர் அவர்கள் தான் நமதுவேளாண் மைத்துறை அமைச்சர் அவர்கள். அவர்களுக்கு நான் அதிகமாக சொல்லித் தெரிந்துகொள்ளக்கூடிய நிலையில் அவர் இல்லை. எல்லா விவரங்களும் தெரிந்து கொண்ட அமைச்சர் என்ற முறை யில் நான் கேட்டுக்கொள்வது, அப்படிப்பட்ட தவறுகளுக்கு எதிர்காலத்திலாவது இடம் கொடுக்காமல், தடுத்து நிறுத்தி விவசாயிகள் உற்பத்தி பண்ணக்கூடிய எல்லா உற்பத்தி பொருட் களுக்கும் ஒரு நியாயமான விலை கிடைக்கவும், நியாயமான பாதுகாப்பு கிடைப்பதற்கும் அமைச்சர் அவர்கள் எதிர்காலத் தில் நடவடிக்கை எடுத்து, இந்த ஓராண்டுக்குள்ளேயாவது அந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும்.

இன்னமும் காலியாக இருக்கக்கூடிய தமிழகத்தில் உள்ள சகலவிதமான மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கும் தேர்தல் நடத்தி விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கின்ற கருத்தினுடைய சாரம், தேர்தலை, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு உடனடியாக நடத்த வேண்டும் என்பது தான்.

தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே செல்வது அவ்வளவு சரி அல்ல என்கின்ற உணர்வைத் தான் அவர்கள் தங்களுடைய பேச்சிலே எதிரொலித்து

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 ஜூலை 16

இருக்கிறார்கள். நாங்கள் கேட்கின்ற தனி அதிகாரிகள் பதவி நீட்டிப்பு என்பது நிரந்தரமானது அல்ல. கோபுரத்தைக் கட்டுவதற்கு சாரம்போடுவதைபோல ஒரு தற்காலிக ஏற்பாடாகநாங்கள் இதைக் கேட்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் இராமநாதன் அவர்கள் தெரிவிக்கிறபோது இதிலே ஏன், சிரமம், ஏன் சிக்கல் ஆகிறது.....

திரு. கோ. விஜயன் : சாரம் போட்டப்பட்டுக் கொண்டு இருக்கிறதே தவிர, கோபுரம் கட்டப்பட்ட பாடு இல்லை என்பது தான் எங்களுக்கு இருக்கின்ற கவலை ஆகும்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். கட்டி முடித்த பிறகு, கலசத்தோடு உங்களுக்குக் காட்டவேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை,. ஆகவே .....

திரு. மு. இராமநாதன் : அஸ்திவாரம் போடப்பட்டிருக் கிறதா என்பது தான் பிரச்சினை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அஸ்திவாரம் இல்லா மல் கோபுரம் கட்டுவது எங்களுடைய வழக்கம் அல்ல. ஆகவே, இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன் வடிவு என்பது நம்முடைய வேளாண்விளை பொருள் அங்காடிகள் சட்டத்திலே சில அடிப்படையான மாறுதல்களை செய்கின்ற வரைக்கும், செய்யப்படுகின்ற ஒரு தற்காலிக ஏற்பாடு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. இராமநாதன் அவர்கள் குறிப்பிடுகிறபோது, உடனடியாக ஒரு ஆணையிட்டு தேர்தலை நடத்தி விடலாமே, இதிலே என்ன சிக்கல், இவ்வளவு திறமையான அமைச்சர் இதிலே சோடை போய் விட்டாரே என்ற வருத்தத்தைத் தெரிவித்தார்கள். ஆனால், நான் குறிப்பிட விரும்புவது, அதிலே தேர்தல் நடத்தவேண்டும் என்பது மட்டுமல்ல. பல்வேறு அடிப்படை மாற்றங்களை நாம் செய்தாக வேண்டியிருக்கிறது.

இந்த வேளாண் விளை பொருள் சட்டம் என்பது 1959 ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்டது. 1962-லே நடைமுறைக்கு வந்தது. அது நடைமுறைக்கு வந்ததற்குப் பிறகு தான், நடைமுறையிலே என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களின் மூலம் விவசாயப் பெருமக்கள் எப்படி பாதிக்கப் படுகிறார்கள் என்பதை நாம் அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்ள முடிந்தது. அந்த வகையிலே தான் நாம் திருத்தங்களைச் செய்திருக்கிறோம்.

1985 ஜூலை 16] (டாக்டர் கா. காளிமுத்து)

திரு. இராமநாதன் அவர்கள் குறிப்பிட்டு இருப்பதைப் போல, இது மத்திய, மாநில பொதுப் பட்டியலில் இருக்கின்ற ஒன்று, ஒருங்கு அமைவுப் பட்டியலிலே இருக்கின்ற ஒன்று. ஆகவே, நாம் சட்டத் திருத்தத்தைச் செய்கின்றபோது, அவர்களுடைய ஒப்புதலுக்காக அனுப்பி இருக்கிறோம். அவர்களும் அதிலே உள் விதிகள் சிலவற்றை சேர்க்கவேண்டும் என்கிற பரிந்துரையோடு திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே, அதிலே, தடங்கல் இல்லை.

மறுபடியும் இதிலே நாம் தேர்தலை முன்னிட்டு மட்டும் திருத்தம் செய்யவில்லை. அதிலே பணியாற்றுகிறவர்களை அரசாங்க ஊழியர்களாக அங்கீகரிக்க வேண்டும் என்ற வகையிலே திருத்தம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அதைப் போலவே, விவசாயப் பெருமக்கள் வர்த்தக சூதாடிகளிடத்திலே சிக்கி எப்படி தவிக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம், வர்த்தகர்களிடத்திலே அவர்கள் முன்னாலே பணத்தை பெற முடிகிறது. விலை குறைவாக இருக்கிற காலத்திலே கூட, அதை விற்றுவிடவேண்டிய நிலைமை விவசாய பெருமக்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

அந்த நேரத்தில் விவசாயப் பெருமக்களுக்கு இருக்கின்ற துன்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள் வணிகர்கள் என்ற நிலைமை. அதை மாற்றுகிற வகையில் விவசாயிகளுடைய விளை பொருள்களை சேமிப்புக் கிட்டங்கிகளிலே வைத்து விட்டு, அதற்குரிய கடனைப் பெற்றுக் கொள்ளத் தக்க வகையில் பற்றுச் சீட்டு அவர்களுக்கு வழங்குவது தொடர்பான சட்டத் திருத்தத்தையும் நாம் இதிலே சேர்க்க இருக்கிறோம்.

அதைப் போலவே, அதிலே செயலாளர்களாக பணியாற்று கிறவர்களுக்கு மத்திய அரசு அமைத்து இருக்கிற பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறவேண்டும் என்கிற ஒரு தகுதியையும் சேர்க்க இருக்கிறோம்.

இப்போது இருக்கிற சில சட்ட முறையில், வெளி மாநிலத்திலிருந்து இங்கே விற்பனைக்கு வரக்கூடிய முந்திரி, உளுந்து போன்றவைகளுக்கு நாம் வரிகள் போட்டாலும் கூட, தனியார் வியாபாரிகள் உயர் நீதிமன்றத்திலே ரிட் தடை வாங்கி அதன் மூலமாக வரி கட்ட முடியாத அளவுக்கு சூழ்நிலையை அவர்கள் உருவாக்கி விடுகிறார்கள். இங்கே பதப்படுத்துவதற்குத்தான் கொண்டு வருகிறோம். ஆகவே சந்தைக் கட்டணத்தை செலுத்த முடியாது என்று கொண்டு வந்து விடுகிறார்கள். ஆகவே, இந்தச் சிக்கலை நீக்கி, சந்தைக் கட்டணத்தை வசூலிப்பதற்குரிய வகையில் சட்டத் திருத்தத்தை செய்வதற்கும் நாம் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்.

(டாக்டர் கா. காளிமுத்து) [1985 ஜூலை 16

இந்த அடிப்படையிலேதான் நாம் விரிவான திருத்தங்களைச் செய்திருக்கிறோம். கடந்த டிசம்பரில் மத்திய அரசு ஒரு சட்ட முன்வடிவினை—ஒரு மாதிரி மசோதாவினை நமக்கு அனுப்பி வைத்தது. அதிலே இருக்கின்ற பொருத்தமான சில அமைப்புகளையும், விதிகளையும் நாம் சேர்த்து முறையாக எல்லாவற்றையும் கலந்துபேசி சட்டத்துறையினுடைய ஆலோசனைக்கு அனுப்பியிருக்கிறோம். சட்டத்துறையினுடைய பரிசீலனையில் அது இருக்கிறது. ஆகவே, ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது என்பது ஏதோ மணல் வீடு கட்டி விளையாடுவது போன்றது அல்ல. அது உறுதியாக இருக்கவேண்டும் ; சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்குப் போகின்ற நேரத்தில் அது நிற்கின்ற சூழ்நிலையிலே இருக்க வேண்டும் ; விடப்படக் கூடிய அறைகூவல்களைத் தாங்கக் கூடிய அளவிலே இருக்க வேண்டும். அந்த வகையிலேதான் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றோம்.

திரு. இராமநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றபோது மத்திய அரசின், பொதுப் பட்டியலிலே இருக்கின்ற காரணத்தினாலே தாமதம் இருக்கிறதோ என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். கோட்டையிலே புல் செதுக்குவதற்குக் கூட அனுமதி கேட்க வேண்டியிருக்கிறதே என்கின்ற கொள்கைக் குரலை அவர்கள் எதிரொலித்தார்கள். மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள் மாலை நேரத்தில் பேசுவதை இங்கே பேசலாமா என்று சொன்னதற்குக் காரணம், நகைச்சுவைக்காக அல்ல. இந்தப் பேச்சுக்களை 15, 20 ஆண்டு காலமாக நீங்களும் நாங்களும் பேசிப்பேசி நாவிலே தழும்பேறிப்போய் விட்டது. மாநிலத் தன்னாட்சி என்று கேட்பதற்குப் பால பாடமாகவே நாம் ஆரம்பிப்பது, கோட்டையிலே புல் செதுக்குகின்ற அதிகாரம் இருக்கிறதா என்று தான் நாம் ஆரம்பிப்பது வழக்கம். ஆனால் நீண்டகாலமாகக் கேள்வி தான் நிற்கிறதே தவிர, இன்னும் பதில் வரவில்லை. மாத்திரை தான் தீர்ந்திருக்கிறதே தவிர வியாதி போகவில்லை. ஆகவே, வியாதியைப் போக்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வோம்.

அதே நேரத்திலே, இந்தச் சட்ட முன்வடிவினை இங்கே நிறைவேற்றுவதன் மூலமாக நிச்சயமாக, நிலையான, முறையான வேளாண் பெருமக்களுக்குப் பயன்படக் கூடிய ஒரு சட்டத்திற்கு இது கட்டியம் கூறுவதாகத்தான் இருக்கும் என்பதை இங்கே, உறுதியாகத் தெரிவித்து, ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 32/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

1985 ஜூலை 16]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1985) நிறைவேற்றப் பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 17—7—1985 காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—47 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

265 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பரத்தமைத் தொழில் ஒடுக்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து சமூக நலத் துறையின் 26-2-1985-ஆம் நாளிட்ட 472 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1956 ஆம் ஆண்டு பரத்தமைத் தொழில் ஒடுக்குமுறைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 104/1956) 23(4) பிரிவின் கீழ் பேரவை முன வைக்கப் பெற்றது.)

266. 1958 ஆம் ஆண்டு (சென்னை) பரத்தமைத் தொழில் ஒடுக்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து சமூக நலத் துறையின் 26-3-1985 ஆம் நாளிட்ட 825 ஆம் எண். அரசாணையில வெளியிடப்பட்ட அறிவிக்கை (1956 ஆம் ஆண்டு பரத்தமைத் தொழில் ஒடுக்குமுறைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 104/1956) 23(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

267. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 198 -83 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வணிகத் துறைகள்) (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.



V211,31 N85
N85-13-2/4

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Harvana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.